# கல்வியியலாளன்

# KALVIYIYALALAN

வெளியீடு - 03

ஐப்பசி - 2005

- வெகுஜன ஊடகமும், சமகாலக் கல்வியும்
- இலங்கையின் பாடசாலை கல்வி - ஒரு மீள் நோக்கு
- பழந்தமிழர் கல்வி - ஒரு மீள் நோக்கு
- உயர்வினையாற்றலுக்கான ஆசிரிய முகாமை
- முன்பள்ளிக்கல்வியும், தொடர்பாடல் திறனும்
- தனியார் பல்கலைக்கழகம் தேவை, நோக்கம், பயன்
- ஆரம்ப மொழிதிறனில் பெற்றோர் வகிபங்கு
- பாடசாலை அதிபரின் போதனா தலைமைத்துவம்
- கல்வி முகாமையில் குழு உளவியல் பிரயோகம்
- யாவருக்கும் கல்வி - தெற்காசிய நோக்கு

கல்வியியல் வெளியீட்டு நிலையம் - யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

T/300/0337.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளன்

# *Kalviyiyalalan*

இதழாசிரியர்

பரராஜசிங்கம் இராஜேஸ்வரன்

கல்வியியல் வெளியீட்டு நிலையம்

யாழ்ப்பாணம்

- 2005-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இதழின் பெயர் | : | கல்வியியலாளன் |
| Name Of Journal | : | Kalviyiyalalan |
| ஆசிரியர் | : | பரராஜசிங்கம் இராஜேஸ்வரன் |
| Editor | : | Pararajasingam Rajeswaran |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| Copy Rights | : | To Editor |
| வெளியீடு | : | கல்வியியல் வெளியீட்டு நிலையம் |
| Publisher | : | Educational Publication Centre<br>257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.<br>257, Palaly Road, Kantharmadam, Jaffna. |
| பதிப்பு | : | ஸ்ரீராம் பிறின்ரேர்ஸ், கந்தர்மடம். |
| Printer | : | Sreeraam Printers, Kantharmadam. |
| விலை | : | ரூபா 300.00 |
| Price | : | Rs. 300.00 |




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியல் வெளியீட்டு நிலையம்
# தொலைநோக்கு

- எமது கல்வியியல் வெளியீட்டு நிலையம் என்ற அமைப்பினூடாக கல்வித்தர மேம்பாடு நோக்கிய செயற் கூறுகளின் ஒரு வடிவமாக கல்வியியலாளன் வருகை அமைகின்றது.

- முழுமையான அபிவிருத்திப் பரிமாணம் நிகழ்வதற்கு மையத் தளமாக இயங்காற்றல் பெறுவது கல்வி ஆகும். இதனடிப்படையில் சமகால கல்வியியல்சார் தேவையை இனம் கண்டு, சுயகற்றலில் ஈடுபடுவோர், கல்வியியல்சார் ஆய்வில் ஈடுபடுவோர், ஆசிரிய வாண்மைத்துவ மேம்பாட்டில் இணைவுகொள்வோர், வாழ்நாள் நீடித்த கல்வியை பின்பற்றுவோர், புலமைசார் அறிவின் ஊடாக ஆய்வு அணுகு முறையில் பயன்படும் வண்ணம் இவ் ஆய்வுநூல் வெளியிடப்படுகின்றது.

- கல்விஅபிவிருத்திசார் அணுகுமுறை தற்பொழுது புதிய பரிமாணத்தையும், நவீன சிந்தனையையும் அவாவி நிற்கின்றது. அவ்வாறான சிந்தனை களை மையப்படுத்தி கல்விசார் ஆய்வுத்தேடலின் தொகுப்பாகவும், பிரதேச ரீதியான விருத்தியூடாக நாட்டின் கல்வித்தர மேம்பாட்டை ஏற்படுத்தும் வகையில் கல்வியியலாளன் ஆய்வுவிதழ் வடிவமைக்கப்பட்டுள்ளது.

- வருங்காலவியல் கல்வியினூடாக புதிய கருத்துக்களை, வழிப் படுத்துநர் தன்மயப்படுத்தி, மாணவர்களின் அறிவியல் மேம்பாட்டிற்கு உதவும் வகையில் கல்வியியல்சார் கருத்தியல்களை இடம்பெறச்செய்ய, இந்நூல் வழிகாட்டுகின்றது.

- கல்வியியலாளன் வருகைக்கு ஆதரவு வழங்கிய அனைவருக்கும் எனது நன்றிகள் என்றும், அத்துடன் கல்விசார் மேம்பாட்டு ஆலோசனை களை யும், ஆக்கபூர்வமானகருத்துக்களையும், எதிர்பார்த்து நிற்கின்றோம்.

**திரு.ப. இராஜேஸ்வரன்,**
**தலைவர் / இதழாசிரியர்,**
**கல்வியியல் வெளியீட்டு நிலையம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வியியலாளன்
# Kalviyiyalalan

பிரதம ஆசிரியர்-ப.இராஜேஸ்வரன்

**வழிகாட்டுநர்கள்**

திரு.மா.சின்னத்தம்பி
தலைவர் கல்வியியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

கலாநிதி ப.புஷ்பரட்ணம்
வரலாற்றுத்துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

திரு. கே.ரீ.கணேசலிங்கம்
அரசறிவியல் சமூகவியற்றுறை,
யாழ். பல்கலைக்கழகம்

திரு.பா.தனபாலன்
உபபீடாதிபதி,
யாழ். தேசிய கல்வியியற் கல்லூரி

**ஆலோசகர்கள்**

பேராசிரியர் சபா.ஜெயராசா
பேராசிரியர் சோ.சந்திரசேகரம்
கலாநிதி த.கலாமணி
கலாநிதி மா.செல்வராஜா
கலாநிதி தி.கமலநாதன்
கலாநிதி மா.கருணாநிதி
திரு. வை.சுந்தரேசன்.
திரு. ப.கணேசலிங்கம்
திரு.எஸ்.ஆர்.சத்தியேந்திரம்பிள்ளை

## இதழாசிரியரிடமிருந்து........

கல்வியியலாளன் இவ்வருடத்துடன் மூன்றாவது வெளியீடாக உங்கள் கைகளில் வருகின்றது.

கல்வியின் புதிய மாற்றங்களுக்கு ஏற்ப அதனை அமுல்ப்படுத்துகின்ற பணியாளர்களாகிய ஆசிரியர்களின் வாண்மைத்துவ மேம்பாடு நோக்கிய செயல் உள்ளடக்கமாக கல்வியியலாளன் தனிப்பட்ட முயற்சியாளும், வழிகாட்டுநர்கள், மற்றும் ஆலோசனையாளர்களினதும், கட்டுரையாளர் களினதும்துணையினால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இவ்வாறான முயற்சியில் ஒரு பகுதியினர் ஆதரவு தருகின்ற அதே வேளை, மறுபுறம் தனிப்பட்ட ரீதியில் கல்விப் புலத்தினால் போட்டி, பொறாமை நிமிர்த்தம் என்மீது பல்வேறு அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டு வருவதுடன், வெளி யீட்டை முடக்குவதற்கான குறைபாடுகள் பேசப்படுவதையும் உணர்கின்றேன்.

படித்த கல்வி நிர்வாக அதிகார மட்டங்களே இவ்வாறான சிந்தனையுடன் நோக்குவது தமிழ்ச் சமூக கல்வி வளர்ச்சிக்கு எத்தகைய பணியை இவர்களால் ஆக்க பூர்வமாக செயற்படுத்த முடியும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது.

மேல் மட்ட அதிகார வர்க்கத் தினால் கீழ்மட்ட ஆளணியினர் அடக்கியும், பயமுறுத்தியும், நிர்வகிக்கப் படுவது சிறந்த கல்வி முகாமைத் துவத்திற்கு அத்திவாரமாக அமையாது.

**- ப.இராஜேஸ்வரன் -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆய்வாளர் விபரங்கள்

1. மா. சின்னத்தம்பி — தலைவர்
B.A, B. Phil (Hons)Dip. in .Ed, M.A (Econ) — கல்வியியற்றுறை,
M. Phil (Edu.) — யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

2. சபா. ஜெயராசா — பேராசிரியர்
B.Ed. (Cey), M.A, (Jaf)Ph. D. (Jaf) — கல்வியியற்றுறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

3. சோ. சந்திரசேகரம் — பேராசிரியர்
B.Ed. Hons (Cey), M.A. (Japan) — கல்விப்பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

4. மா. செல்வராஜா — சிரேஷ்ட விரிவுரையாளர்
B.Ed. (Hons) cey. — கல்வியியற்றுறை
M, Phil (Edu) M.Edu. — கிழக்குப் பல்கலைக்கழகம்

5. மா. கருணாநிதி — சிரேஷ்ட விரிவுரையாளர்
M.A. (cey), Ph.D — கல்விப்பீடம்
கொழும்பு பல்கலைக்கழகம்

6. பா. தனபாலன் — உபபீடாதிபதி கல்வியும் தரமேம்பாடு
B.A (cey.) Dip. in Edu. — யாழ். தேசியகல்வியியற் கல்லூரி
Dip. in .psy, m.phil (Edu)

7. நிர்மலா நல்லையா — சிரேஷ்ட விரிவுரையாளர்
B.A. (Hons) Dip. in. Edu. — யாழ் தேசிய கல்வியியற் கல்லூரி
M. Phil (Edu)

8. த. கலாமணி — சிரேஷ்ர விரிவுரையாளர்
B.Sc (Special),PGDE — கல்வியியற்றுறை
Ed. D(wollongong-Aust.) — யாழ் பல்கலைக்கழகம்

9. சே. சிவசேகரம் — பேராசிரியர்
பொறியியல்பீடம்
பேராதனை பல்கலைக்கழகம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

## ஆய்வுப்பொருளும், ஆய்வாளர்களும்


1) வெகுஜன ஊடகமும் சமகாலக் கல்வியும்.
**திரு. மா. சின்னத்தம்பி** 01-17

2) இலங்கையில் பாடசாலைக் கல்வியின் சில பிரதான அம்சங்களும் கல்வியின் உயர் நிலை நோக்குகளும்.
**பேராசிரியர். சோ. சந்திரசேகரம்** 18-30

3) பழந்தமிழர் கல்வி – ஒரு மீள் நோக்கு.
**பேராசிரியர் சபா. ஜெயராசா** 31-38

4) குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர்களை முகாமைத்துவம் செய்தல்.
**கலாநிதி. மா. கருணாநிதி** 39-47

5) முன்பள்ளிகளில் தொடர்பாடல் திறன்கள்.
**திரு. மா. செல்வராஜா** 48-72

6) தனியார் பல்கலைக்கழகங்கள் தேவை, நோக்கம், பயன்.
**பேராசிரியர் சே. சிவசேகரம்** 73-81

7) ஆரம்ப பிள்ளைப்பருவ மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கு.
**கலாநிதி. த. கலாமணி** 82-88

8) பாடசாலையை வினைத்திறனாக்களில் அதிபர்களது போதனாத் தலைமைத்துவம்.
**செல்வி. நி. நல்லையா** 89-96

9) மனிதவள கல்வி முகாமையில் நவீன அணுகு முறையாக குழு உளவியல் பிரயோகங்கள்.
**திரு. பா. தனபாலன்** 97-106

10) யாவருக்கும் கல்வி தெற்காசியாவில் ஆசிரியர்களுக்கான தேவையும் வழங்களும். 107-152




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெகுசன ஊடகமும்; சமகாலக் கல்வியும்

மா. சின்னத்தம்பி

## அறிமுகம்

தகவல்களும் சமூகஉற்பத்திகளாகி அதிகளவிலான பரவல் விளைவுகளை ஏற்படுத்தும் காலப்பகுதியாக சமகாலம் விளங்குகிறது. இருபத்தியோராம் நூற்றாண்டு தகவல் உற்பத்திகளின் உன்னதங்களையும், பாதிப்புக்களையும் கண்டு உணரப்போகின்றது.

உண்மைகள், உணர்வுகள், கருத்துக்கள், தத்துவங்கள், அறிவுறுத்தல்கள் போன்ற எல்லாவற்றையும் ஒரு தனிமனிதன் அல்லது தனிநிறுவனத்திடமிருந்து சமகாலத்தில் பெருந்தொகையான மக்களுக்கு காலதாமதமும்; அதிக தனிநபர் செலவுமின்றி கைமாற்றும் பொது ஊடகங்களே வெகுசன ஊடகங்களாகும். பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி, சினிமா, அரங்கு, இணையம் போன்ற பலவும் இவ்வாறு வளர்ச்சி பெற்று அங்கீகாரம் பெற்றுள்ளன.

நவீன வெகுசன ஊடகங்கள் வளர்ந்து வரும் நாடுகளின் கல்வியில் பாரிய பங்களிப்பைச் செய்யவேண்டியுள்ளது. அத்தகைய பங்களிப்பு, அதன் நேர்விளைவுகள், எதிர்விளைவுகள் தொடர்பான விடயங்களைப்பற்றி ஆராய்வதாக இக்கட்டுரை அமைகிறது. குறிப்பாக சமுதாயக்கல்வி, உயர்கல்வி, தொழிண்மைக்கல்வி என்பவற்றிலான நவீன வெகுசன ஊடகங்களின் சமூகரீதியில் வேண்டப்படும் வகிபங்கு பற்றி இக்கட்டுரை கவனம் செலுத்துகின்றது.

## கல்வி , ஊடகத்தொடர்பு

கல்வி சமூகங்களின் முன்னேற்றத்திற்கு அடிப்படையான காரணிகளில் ஒன்றாக விளங்கி வந்துள்ளது. அதேபோல் சமூகமுன்னேற்றத்தின் நோக்கையும், போக்கையும் கூடமாற்றியுள்ளது ஒருவரிடமுள்ள அறிவை பிறருக்கு கைமாற்றும் தூய்மையும், ஒழுங்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டதும், சமூகம் ஏற்றுக்கொண்டதுமான தொழிற்பாடு கற்பித்தல் என்று கருதப்பட்டதால் குரு அல்லது ஆசிரியன் சமூக மனிதனாக மதிப்புப் பெற்றான். வாழ்வுக்குரிய அறிவு, உணர்வு, திறன், மனப்பாங்கு என்பவற்றை செம்மைப்படுத்துவதற்காக கற்றல் அவசியமாயிருந்தது. தன்னையும், குடும்பத்தையும், சமூகத்தையும் முரண்பாடின்றி விளங்கிக் கொண்டு வாழ்வதற்காக கற்கவேண்டியிருந்தது.

கல்வி இருநபரிடையிலான தொடர்பாடல் மூலம் உருவாயிற்று. குரு தனது தெளிந்த அறிவை ஒலி மற்றும் சொற்கள் மூலம் வாய்வழியாக அவரே தெரிவுசெய்த மாணவருக்கு காதில் சொல்லிக் கொடுத்தார். தூய்மையான உன்னத அறிவு வேதமாகியது. பின்பு குழுவாக பலமாணவரை இருத்தி ஒதுதற்கு கற்றுக் கொடுத்தனர். ஓதுதலும், ஒழுகுதலும், ஒன்றாக பின்பற்றப்படும் தலங்களாக கோவில்கள் வளர்ந்தன. ஓதுதல், ஒழுங்கு, ஒழுக்கம் என்பன ஒன்றிணைந்தன. ஒலி எழுப்பிப்பாடுதல், இணைந்து ஓதுதல் என்பன குழுவாக கற்கும் நிலையை வளர்த்தன.

பின்பு ஏடுகளில் தமது தெளிந்த அறிவை - உண்மைகளையும், அனுபவங்களையும் எழுதிவைத்தனர். தாவரத்தின் காய்ந்த இலைகளில் கையினால் எழுதிய ஏடுகள் கற்பித்தலை எதிர்கால சமூகத்திற்கு கைமாற்ற உதவின. காலம், இடம், என்ற இரண்டுடனும் தகவல்கள் நகர்த்தப்பட்டன. இது பொதுமக்கள் தொடர்பாடலின் (Mass Conmumication) தொடக்க வளர்ச்சியாகும்

பின்பு ஹைடில்பேர்க் கலாசாரம் வளர்ச்சி பெற்றது. ஜேர்மனியர் நவீன அச்சு இயந்திரத்தைக் கண்டறிந்து பயன்படுத்திய போது கடதாசி நூல்கள் (Paper Books) உருப்பெற்றன. உலகின் எல்லா மூலை முடுக்குகளுக்கும் ஒரு தனிமனிதனின் அறிவுத்தேடல் பரவலாயிற்று. காலம் கடந்து அவனது சிந்தனைகள் சமூகத்திற்குப் பயன்பட்டன. புவியியல் எல்லைகள் கடந்து தனி மனிதனின் அறிவு பயன்பட்டது. உலகுக்கான தனிமனித அறிவு உருவானது. கல்வி சமூகச் சொத்துக்களில் ஒன்றாயிற்று. அச்சுத் தொழில்நுட்பம் பொது தொடர்பாடலின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாய்ச்சலாகியது. பைபிளும், திருவள்ளுவமும், திருக்குர்ஆனும், பகவத்கீதையும் எல்லா மனிதனுக்குமுரிய உயர் அறிவுப் பொக்கிஷங்களாக மாறுவதற்கு அச்சுக்கலையே உதவிற்று. நவீன போக்குவரத்துத் தொழில்நுட்பம் அதனை துரிதப்படுத்தியது. தொழில்நுட்பயுகம் அறிவையும், கல்வியையும் உலகமயப்படுத்தியது.

பின்பு 1960 களில் மேற்கு நாடுகளில் கம்பியூட்டர் கண்டறியப்பட்ட போதிலும் 1990 களில் அத்தொழில்நுட்பம் உலகமயப்படுத்தப்பட்டது. சில உயர் வகுப்பினரின் தனிப்பட்ட தேவைக்கு கணணிகள் பயன்படுத்தல் என்ற நிலைமாறி எல்லோரும் எல்லாத் தேவைகளுக்குமுரிய பொதுக் கருவியாக கணணி விரிவு பெற்றபோது கல்வியிலும் பெரிய இடத்தைப் பெறலாயிற்று. கணணிகள் ஒரு பல்துறைப் பயன்பாடுமிக்க மாயப் பெட்டிகளாக வலிமை பெற்றன. பணமுதலீடுகள், சக்தி விநியோகம், முன்பயிற்சி என்பவற்றுடன் பிணைக்கப்பட்டதாக கணணியைப் பயன்படுத்திக் கற்றல் வளர்ச்சி பெற்றது. மின்னியல் ஊடகமாக கணணி வளர்ந்தபோது தகவல்யுகமாக நிகழ்காலம் மாறியது. எல்லாவகைத் தகவல்களும் பண்டமாக (Conmodity) மாறின. இதனால் வணிகவியல் பண்பாடுகளும் விதிகளும் அதில் தாக்கத்தை ஏற்படுத்தின. கணணிக்கல்வி அதீத கவர்ச்சியுடையதாக வளர்ச்சி பெறலாயிற்று.

தொடர்பாடல் ஊடகமும் அதனுடன் இணைந்து கல்வியும் மூன்று படிநிலைகளைக் கடந்து வந்துள்ளன.

i) தனிமனிதரிடையிலான தொடர்பாடல் :- மானிடம்சார் கல்வி

ii) அச்சுமுறையிலான தொடர்பாடல் :- நூல்சார் கல்வி

iii) மின்னியல் முறையிலான தொடர்பாடல்:- கணணிக் கல்வி

இவற்றில் பின்னைய இரண்டும் இணைந்து வளர்த்தெடுத்த ஊடகவடிவமே இன்றைய வெகுசன தொடர்பாடல் முறையாகும். இந்த வெகுசன தொடர்பாடல் சமகாலக்கல்வியில் ஏற்படுத்திவரும் தாக்கங்கள் மிகவும் முக்கியமானவை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வி பற்றிய கருத்துநிலை

இலங்கை போன்ற வளர்முகநாடுகளில் கல்வி வழங்குதல் தொடர்பாக பின்வரும் எண்ணக்கருத்துக்கள் நிலவி வருகின்றன.

- ➢ கல்வி அரசினால் வழங்கப்படவேண்டிய பொதுச்சேவை
- ➢ அரசு வழங்குவதால் இலவச சேவையாக விளங்க வேண்டும்
- ➢ நாடு முழுவதற்கும் பொதுவான பரீட்சைமுறை அங்கீகாரம் பெற்றதே உண்மையான கல்வி
- ➢ கல்வி நிறுவனங்களிலிருந்து விலகும் போது கல்வியும் நிறைவடைந்து விடுகிறது.
- ➢ கல்வியைத் தொடருதல் செல்வந்தரான வெள்ளுடை உத்தியோகம் பார்க்கும் நகர்ப்புறத்தவருக்குரிய அம்சம்.

இத்தகைய கருத்துக்கள் பொதுவாக காணப்படுவன. ஆனால் கல்வி என்பது பற்றிய உண்மைத் தோற்றப்பாடு இவற்றிலிருந்து சற்று வேறுபட்டுக் காணப்படுகின்றது. கல்வி பல படிநிலைகளைக் கொண்டுள்ளன.

i) எழுத்தறிவும் அடிப்படைக்கல்வியும்.

ii) இடைநிலை அலுவலகப்பணிகளை மேற்கொள்வதற்குப் போதுமான இடைநிலைக் கல்வி

iii) இயந்திரங்கள், உபகரணங்கள் தொழில்நுட்பம் என்பவற்றுடன் தொடர்புபட்ட உடல்வலு மற்றும் திறன் சார்ந்த தொழில்சார் மற்றும் தொழில்நுட்பம் சார் கீழ்நிலை மற்றும் இடை நிலைத் தொழில் களுக்கான தொழில்நுட்பக்கல்வி.

iv) பல்வேறு அரச மற்றும் தனியார்துறை சார் அறிவுசார் (பெருமளவுக்கு) மதிப்புமிக்க பணிகளுக்கு உதவும் உயர்கல்வி அல்லது பட்டப்படிப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

v) சமூகத்திலும், நாட்டிலும் உயர் நிறுவனங்களில் சக்தி மிக்கதும் பரவல் விளைவுகளை ஏற்படுத்த வல்லமை கொண்டதுமான உயர் முகாமைத்துவ மற்றும் பணித்துறைக்கு உதவும் மிகஉயர்ந்த கல்வி அல்லது தொழிண்மைக் கல்வி.

vi) உலகரீதியில் இயங்கும் சர்வதேச பல்கலைக்கழகங்கள், ஆய்வுமையங்கள், சர்வதேசவங்கிகள், பொருளாதார நிறுவனங்கள், ஐக்கியநாடுகள் தாபனங்கள் போன்றவற்றில் நிர்வாக மற்றும் முகாமைப் பணிகளில் ஈடுபடுதற்கான சிறப்பு மிக்க அதிஉயர் சிறப்புக்கல்வி.

இவற்றில் தேசியரீதியில் எல்லா நாடுகளிலும் கல்விசார் முடிவுகளை மேற்கொள்ளும் போது அரசாங்கங்கள் கூடிய கவனம் செலுத்தும் பகுதிகளாக விளங்குபவை இடைநிலைக் கல்வியும், உயர் கல்வியும் ஆகும். மிக அண்மைக் காலங்களில் 2015இல் நிறைவேற்றப்பட வேண்டிய புத்தாயிரம் ஆண்டுக்கான இலக்கு (Millonium Development Goals - MDA) களில் எல்லோருக்கும் எழுத்தறிவு வழங்குதல் முதன்மை பெற்றுள்ளதால் எழுத்தறிவு மற்றும் ஆரம்பக் கல்வியில் கவனம் செலுத்துகின்றனர்.

தொழில்நுட்பக்கல்வி இந்த நாடுகளில் மதிப்பற்ற கல்வியாகவே நோக்கப்பட்டது. இதனை பரவலாக்கும் உறக்கமோ, நோக்கோ வளர்முகநாடுகளின் அரசாங்கங்களிடம் இருக்கவில்லை. தொழில் நுட்பக்கல்வி பற்றி இந்த நாடுகளில் உயர் கல்வியாளரிடம் நிலவிவரும் கருத்துக்களில் பின்வருவன முக்கியமானவை.

- புத்திசாலித்தனம் குறைந்தவர்களுக்கான கல்வி.
- தொழிலாளவர்க்கத்தின் பிள்ளைகளுக்கான கல்வி.
- வறிய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தொழிலாளர்களாவதற்கான கல்வி.
- பாடசாலையில் தோல்வியடைந்தவர்கள், இடைவிலகியவர்கள், மரபுவழி தேர்வு முறைகளினால் வெளிவீசப்பட்டவர்களுக்கான கல்வி
- குறைந்த சமூகஅந்தஸ்தை ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களுக்கான கல்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை மரபுவழியாக நிலவி வரும் சாதியம் பற்றிய சமூகவியல் கருத்தினால் செல்வாக்குச் செலுத்தப்பெற்ற கருத்துக்களாகும். உடல்சார், உபகரணம்சார் தொழில்கள் சாதி அடுக்கு முறையில் உயர் இடம் பெறாமையுடன் இக்கல்வி பற்றிய சிந்தனை தொடர்புடையது. இதனால்தான் இன்றுவரை மேசன்வேலை, தச்சுவேலை, உலோக வேலை, சிகை அலங்காரம் போன்றவற்றுக்கு பட்டம் வழங்கும் முறை வளர்முக நாடுகளில் ஏற்படவில்லை.

இத்தகைய பொய்யுணர்வுகள் கல்வியின் உண்மை நிலைமைகளை மறைத்துவிட்டன. சமகாலத்தில் கல்விபற்றிய புதிய சிந்தனைகள் மலர்கின்றன. இப் புதிய சிந்தனைகளைப் பயனுறுதி மிக்கதாக நடைமுறைப்படுத்துவதில் வெகுசன ஊடகங்கள் முக்கியத்துவம் பெற்று விட்டன.

## கல்விபற்றிய சமகால சிந்தனைகள்.

சமகாலத்தில் இலங்கை போன்ற வளர்முக நாடுகளில் கல்வி பற்றிய புதிய சிந்தனைகள் உருவாகியுள்ளன. உலகமயமாதல், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், சுதேச அரசுகளை நிறுவும் இளைஞர் வன்முறை அரசியல், தகவல் புரட்சியின் பரவல் விளைவுகள் போன்ற பலவும் இப்புதிய சிந்தனைகளைத் தூண்டியுள்ளன.

இப்புதிய கல்வித்தேவைகளும், சிந்தனைகளும் வெகுசன ஊடகங்களின் வலுவான வகிபங்கை வற்புறுத்தி வருகின்றன என்பது இங்கு நோக்கத்தக்கது.

## எழுத்தறிவு இயக்கம்

எழுத்தறிவு எல்லோருக்கும் வழங்கப்பட வேண்டும். 2015 இல் இது நிறைவேற்றப்பட வேண்டும். 2001 இல் கூட பள்ளி செல்லும் வயதில் பள்ளி செல்லாத சிறுவர்கள் 125 மில்லியன் காணப்பட்டனர். இவர்களில் கணிசமான பங்கினர் பெண்களாவர். ஆரம்பக்கல்வி நிறவடைவதற்கு முன்பே இடைவிலகுவோர் 150 மில்லியனாகக் காணப்பட்டனர். (Chris Melvor 2001 :4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பத்திரிகை, வானொலி தொலைக்காட்சி, அரங்குகள் மூலம் பரவலான விழிப்புணர்வை உருவாக்க முடிகிறது. பெற்றோரை மாத்திரமன்றி சமூக நிறுவனங்களையும், தொண்டு நிறுவனங்களையும் இதன்பால் ஈர்த்துக் கொள்வதற்கு வெகுசன ஊடகங்களின் உண்மை ஒத்துழைப்பு தேவைப்படுகிறது.

எழுத்தறிவற்ற, வறிய, கிராமிய பெற்றோரின் பிள்ளைகளுக்கு எழுத்தறிவு பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு கிராமங்களில் மாலைநேர வானொலிச் சேவை சனசமூக நிலையங்களில் ஏற்படுத்தப்பட வேண்டும். இதற்கு வேண்டிய நிதி, பொருட்கள், நிறுவன உதவிகளை அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்குவதற்குரிய தூண்டுதலை வெகுசன ஊடகங்களே வழங்கமுடியும்.

பத்திரிகை, வானொலி, தொலைக்காட்சி நிறுவனங்கள் தமது வளங்களில் ஒரு பகுதியை ஒதுக்கி கிராமிய மட்டத்திலான எழுத்தறிவு செயற்திட்டங்களை நடைமுறைப்படுத்த முடியும். பாடசாலை விடுமுறை காலங்களில் உயர்வகுப்பு மாணவர்களுக்கு பகுதிநேர வேலைவாய்ப்பு வழங்க இச் செயற்திட்டங்களைப் பயன்படுத்திக் கொள்ளமுடியும்.

அறுவடைக்குப் பிந்தியகால கிராமிய கலைவிழாக்களில் - அரங்குகளில் - எழுத்தறிவு விழிப்புணர்வைத் தூண்டுதற்கான முயற்சிகளில் ஈடுபடலாம். பத்திரிகைகளும், வானொலியும், தொலைக்காட்சியும் இதற்கு உதவியும், ஊக்கமும் வழங்கமுடியும்.

## தொழில் நுட்பக் கல்வி

தொழில்நுட்பக்கல்வி நாடுகளின் கைத்தொழில் வளர்ச்சியுடனும், நகர்மயமாக்கத்துடனும், சமூக அசைவியக்கத்தைத் தூண்டும் காரணிகளின் வளர்ச்சியுடனும், பிற தேசங்களுக்கான இட நகர்வுடனும் தொடர்புபட்டதாகவே தொழில்நுட்பக்கல்விபற்றி சமூகஉணர்வும், அபிப்பிராயமும் காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம் (University for vocational Technology) தொடங்கும் முயற்சிகள் ஏற்பட்டுள்ளன. உடல்சார் திறன்களுக்கும், கருவிசார் பிரயோக தேர்ச்சிகளுக்கும் அங்கீகாரம் வழங்கப்பட்டு பட்டம் வழங்குதற்கான முனைப்பு ஏற்பட்டுள்ளது. இது முக்கியமான முன்னேற்றமாகும். கட்புல மற்றும் ஆற்றுகைக் கலைகளுக்கான பல்கலைக்கழகமும் (Uneversity for visual and performing Arts) தொடங்கியுள்ளது. இதுவும் புத்தாக்கம், உடற்செயற்பாடு, புலன் விருத்தி, அழகியல் நோக்கிய திறன் வெளிப்பாடு என்பவற்றுடன் ஒன்றிணைந்ததாகும். இவ்விரண்டு பல்கலைக்கழக கற்கை நெறிகள் பற்றிய பிரச்சாரத்தை இலங்கையின் வெகுசன ஊடகங்கள் முனைப்புடன் பரப்ப வேண்டும். வெகுசன ஊடகங்கள் எதிர்காலத்தில் பின்வருவனவற்றில் கவனம் செலுத்த வேண்டும்.

i) இப்புதிய பல்கலைக்கழகங்கள், அவற்றின் புதிய கற்கை நெறிகள், பாடங்கள் பற்றி பிரச்சாரம் செய்தல் வேண்டும். பெற்றோர், மாணவர், ஆசிரியர்களிடம் தெளிவான அறிவையும், நம்பிக்கையையும் வெகுசன ஊடகங்கள் உருவாக்க வேண்டும்.

ii) இலவச விளம்பரங்களை வெளியிட இடமளித்து இப்புதிய திசைக்கு மாணவரை ஈர்க்க வேண்டும். அறிவுசார்ந்த - மனனம் செய்து பரீட்சைத் தாளில் மீளவும் ஒப்புவிக்கும் கல்வி முறைக்கு மாறாக தமது ஆற்றுகை மற்றும் செயற்பாடு மூலம் வெகுசனம் பயன்பெறஉதவும் இப்புதிய கற்கை நெறியின் நலப்பாடுகளை விளம்பரப்படுத்த வேண்டும்.

iii) இப்புதிய தொழில்நுட்ப, ஆற்றுகைக்கலைக் கற்கை நெறிகளுக்கு புதிய புலமைப்பரிசில்களை வழங்குதற்கு தமது நிதி வளங்களில் ஒரு பகுதியை ஒதுக்க முடியும்.

iv) சில சிறப்பு நிகழ்ச்சிகள், படைப்புக்களை இவைசார்பாக தயாரித்து வானொலியிலும், தொலைக்காட்சியிலும் ஒலி, ஒளி பரப்புக்கள் செய்யப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிலிருந்து - திறனுக்கும், மனனம் - செய்வதிலிருந்து ஆற்றுகைக்கும் கல்வியைத் திருப்புவதில் வெகுசன ஊடகங்கள் மிகுந்த பங்களிப்பைச் செய்யவேண்டும்.

## உயர் கல்வியும் ஊடகமும்

உயர்கல்வி சனநாயகமயப்படுத்தப்பட வேண்டும். சந்தைக்கேற்றதாக உயர்கல்வியை ஒடுக்குதல் கூடாது. உயர்கல்வி வாய்ப்புக்களை மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக அவற்றை பன்முகப்படுத்துவதும், பரவலாக்குவதும் மிகவும் அவசியமாயுள்ளது.

இதில் வெகுசன ஊடகங்களின் பங்கு வலியுறுத்தப்படுகிறது. மரபுவழியான அரச உதவியில் இயங்கும் பல்கலைக்கழகங்கள் மாத்திரம் உயர்கல்வித் தேவையை நிறைவு செய்யமுடியாது. எண்ணிக்கை அடிப்படையில் மட்டுமன்றி; கல்வித்தர அடிப்படையிலும் அரச பல்கலைக்கழகங்கள் பலவீனமாகிவிட்டன. சமூகநலக் கொள்கை தரமான கல்வியை உறுதி செய்வதுடன் இணங்கிச் செல்லவில்லை.

உயர்கல்விபற்றிய புதிய சிந்தனை வெகுசனஊடகம் வழியான கல்வியின் தேவையை வலியுறுத்துகின்றன. இவை தொடர்பாக பின்வரும் எண்ணக்கருக்கள் கவனத்திற் கொள்ளப்பட வேண்டியன.

## அறிவு இடைவெளியும் மின்னியல் ஊடகமும்

வளர்முக நாடுகள் வளர்ச்சி பெற்ற நாடுகளை விட தகவல் - அறிவு தொடர்பாக மிகவும் பின்தங்கியுள்ளன. அங்கு மிகப் பெரிய இடைவெளியுள்ளது. வளர்ச்சி அடைந்த நாடுகளில் ஏற்பட்டுள்ள கணணி மற்றும். தகவல் தொடர்பாடல் சார்ந்த இணையத்தின் (Internet) வளர்ச்சி இத்தகைய அறிவுசார் இடைவெளியை அகலப்படுத்தியுள்ளது. சில ஆதாரங்கள் இங்கு தரப்படுகின்றன.

i) ஒரு கணணிக்கான செலவு அமெரிக்கர் ஒருவரின் ஒரு மாத வருமான மாகும். ஆனால் வங்காளதேசத்து குடிமகன் ஒருவரின் எட்டு வருட வருமானமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ii) இணையத்தளங்களில் 80 சதவீதமானவை ஆங்கில மொழியிலேயே உள்ளன. ஆனால் உலகில் பத்து நபருக்கு ஒருவரே ஆங்கில மொழி பேசுபவராயுள்ளார்.

iii) எல்லா நாடுகளிலும் உள்ள கணணிகளை (ஐக்கிய அமெரிக்கா தவிர) விடவும் ஐக்கிய அமெரிக்க நாட்டில் அதிக கணணிகள் உள்ளன.

iv) தென்னாசியா உலக குடித்தொகையில் 23 சதவீதத்தைக் கொண்டுள்ளது. ஆனால் உலக இணையத்தள பாவனையாளரில் ஒரு சதவீதத்தினரே தென்னாசியாவில் உள்ளனர்.

v) ஐக்கிய அமெரிக்காவில் உள்ள ஒவ்வொரு மூன்றுபேருக்கும் ஒருவர் இணையத்தைப் பயன்படுத்துகிறார் (3:1) ஆனால் இந்தியா, பாக்கிஸ்தான், வங்காளதேசம் போன்ற நாடுகளில் 10,000 பேருக்கு ஒருவரே இணையத்தளம் பயன்படுத்தி வருகிறார்.

vi) இலங்கையில் ஒவ்வொரு 1000 பேரிலும் 3.3 பேரிடமே தனிப்பட்ட கணணியுண்டு. ஆனால் சுவிற்சலாந்தில் ஒவ்வொரு 1000 பேரில் 400 பேரிடம் தனிப்பட்ட கணணி உள்ளது.

vii). ஐரோப்பா மற்றும் வடஅமெரிக்காவில் இணையம் பயன்படுத்துவோர் குடிமக்கள் விகிதம் 1:35 ஆக காணப்படும் போது; ஆபிரிக்க நாடுகளில் இந்த விகிதம் 1:250 ஆகவே காணப்படுகிறது.

இவ்வாறு வளர்முகநாடுகள் புதிய தகவல்நுட்ப வளர்ச்சியின்மையினால் அறிவு மற்றும் தகவல் தொடர்பாக மிகவும் பின்தங்கியுள்ளன. மின்சாரவசதி வழங்கப்படாமை இதற்கு ஒரு காரணமாகும். நேபாள நாட்டில் 13% மக்களுக்கு மாத்திரமே மின்சாரவசதியுண்டு. இந்த நிலையில் எல்லோரும் எவ்வாறு இணையத்தின் வழியான உயர்கல்வியைப் பெறமுடியும்? வளர்முக நாடுகளில் தகவல் வறியவர்கள் (Information Poor) அதிகமாகி வருவதால் நவீன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயர்கல்வி வாய்ப்புக்களிலிருந்து அதிக தொலைவில் அவர்கள் உள்ளனர். வளர்ச்சியடைந்த நாடுகளில் இலக்க அறிவினால் மேலோங்கியோர் (Digital Elites) அதிகரிக்கும் போது மிக நவீன உயர்கல்வியை அதிகம் பெறுகின்றனர்.

இந்த இடைவெளியினால் வளர்ச்சியடைந்த நாடுகளில் புதிய நவீனமாதிரி உயர்கல்வி வளர்ச்சி காணப்படுகிறது. ஜேர்மனி இவ்வாறு நவீன இணைய வசதிகளை நன்கு பயன்படுத்தி புதுப்பிக்கப்பட்ட உயர்கல்வி வளர்ச்சியைப் பெற்றுள்ளது. அதற்கான குறிகாட்டிகள் சில இங்கு தரப்படுகின்றன.

1). பல்கலைக்கழகங்கள் (350) அதிக எண்ணிக்கையில் உயர்கல்வி வழங்குகின்றன. இணையத்தள பாவனையாளர்களில் 21.5% தினர் இப் பல்கலைக்கழகங்களில் உள்ளனர்.

2). இப் பல்கலைக்கழகங்களில் புதிய உலகத்தேவைகளுக்கு ஏற்றதாக கற்கை நெறிகளிலான முன்னுரிமைகள் மாற்றமடைந்து வருகின்றன. பிரபல்யமான பாடங்கள் (ஒவ்வொரு 1000 மாணவருக்கும்) பின்வருமாறு காணப்படுகின்றன.

| | |
|---|---|
| i). சட்டம், வியாபார நிர்வாகம், சமூக விஞ்ஞானங்கள் | 572 |
| ii). மொழியும் கலாசார பாடங்களும் | 399 |
| iii). பொறியியல் விஞ்ஞானங்கள் | 292 |
| iv). கணிதம், இயற்கை விஞ்ஞானங்கள் | 290 |
| v). மருத்துவம் | 94 |
| vi). கலை மற்றும் வரலாறு | 79 |
| vii). ஏனைய பாடல்கள் | 73 |

வளர்முக நாடுகளில் பாடத் தெரிவுகளில் பழைமையும், பொருத்தமின்மையும் அதிகளவில் உள்ளன. தகவல் தொடர்பாடல் மற்றும் இணையத்தள வசதிகள் பரவலாக்கப்படாமை இதற்குக் காரணமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3) வெளிநாட்டு மாணவர் உள்வருவது ஜேர்மனியில் அதிகரித்துள்ளது. ஜேர்மனிய பல்கலைக்கழகங்களில் 1999 இல் 166,000 வெளிநாட்டு மாணவர் கல்விகற்றுனர். புதிய கல்வித்தொழில்நுட்பம் குறிப்பாக இணைய வழிக்கல்வி இதனைத்தூண்டியது.

4) பல்கலைக்கழகக் கல்வியில் பின்வரும் போக்கு வளர்ந்துள்ளது.

- சமகாலத்தில் இரண்டு பட்டங்கள் பெறல்
- பலநாடுகளில் பயணம் செய்து உயர்கல்வி பெறல்.
- செயல்முறை வேலை மற்றும் செயற்திட்டங்களைப் பட்டத்திற்காக பிறநாடுகளில் மேற்கொள்ளுதல்
- தனியார் நிறுவனங்களுடன் இணைந்து தொழில் அனுபவத்தைப் பட்டத்திற்காக பெறுதல்.
- வாழ்க்கைத் தொழிலுக்கான (Career Oriented) பல்கலைக் கழகக்கல்வி பெறுதல்.
- தொழில்நுட்ப பல்கலைக்கழகப்பட்டங்களை அதிகளவில் பெறுதல்
- பட்டங்கள் பெருமளவுக்கு சர்வதேசமயப்படுத்தல் பட்டனவாயுள்ளன. (Internationalization of University Degrees)
- ஆற்றுகைக்கேற்ப பேராசிரியர்களின் வேதனம் அதிகரிக்கப்படுதல்.
- கலைத்திட்டமும், பாடங்களும், கற்கைநெறிகளும் அடிக்கடி மாற்றியமைக்கப்படுதல்
- பல்கலைக்கழகக்கல்விச் சட்டங்கள் புதுப்பிக்கப்படுதல்.
- இணையத்தளத்தின் மூலம் உசாத்துணை நூல்களைக் கற்றலும் தேர்வுகளுக்குத் தோற்றுதலும் மதிப்பீட்டுப் புள்ளிகளை அறிதலும் பெருகியிருத்தல். (Martin Spiewak 2005 : 44)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1990களில் ஜேர்மனியின் ஒருங்கிணைப்புக்குப்பின் ஜேர்மனிய உயர்கல்வி மின்னியல் மூலம் கணிசமான வளர்ச்சியை எட்டிப் பிடித்துள்ளது.

## நிகர் நிலைப் பல்கலைக்கழகங்கள்

மரபுவழியான நிறுவனம்சார் பல்கலைக்கழக கல்வியை சமூகத்தில் உயர்கல்வி பெற விரும்பும் அனைவருக்கும் வழங்குவதில் வளர்முக நாடுகள் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொண்டன. இலங்கை போன்ற நாடுகளில் மரபுவழிப் பல்கலைக்கழகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது மாணவர் அனுமதியை விரிவுபடுத்துவது என்பது தொடர்ந்து மேற்கொள்ளக் கூடியதாயிருக்கவில்லை. அவை தொடர்பாக பின்வரும் பிரச்சினைகள் அடையாளம் காணப்பட்டன.

i) அரசுக்கான உயர்கல்விச் செலவு தொடர்ந்து அதிகரித்தபோது ஏனைய சமூக நலத்துறைச் செலவுகளைக் குறைக்க வேண்டியிருந்தது. இது சமூக நெருக்கடிகளை ஏற்படுத்தியது.

ii) படிப்பு சாராத கல்விச் செலவு தனிப்பட்ட பட்டதாரி மாணவர்கள் தொடர்பாக தொடர்ந்து அதிகரித்துச் சென்றது. இதனால் சிலவகையான கற்கை நெறிகளுக்கு தெரிவுசெய்யப்படுவோர் அனைவரும் கல்வி பெற வருவதில்லை.

iii) தொழில்வாய்ப்பு பற்றிய நிச்சயமின்மை அதிகரித்தபோது வயது எல்லையும், பட்டம் பெறும் காலத்தில் அதிகரித்த நிலையில் வேலை அனுபவத்துடன் இணைக்கப்படாத மரபுவழிக்கலைத்திட்டம் பட்டதாரிகளிடையே விரக்தியை வளர்ப்பதற்கு வழிவகுத்தது.

iv) பெருந்தொகையான மாணவர்கள் தங்கியிருந்து கற்பது தொடர்பாக விடுதிகளை நிர்மாணிப்பது, பிறவசதிகளை உறுதி செய்வதிலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சினைகள் உணரப்பட்டன. இளைஞர்கள் பெரும் எண்ணிக்கையில் ஒன்று கூடுவதில் அரசியல் பிரச்சினைகளும், இளைஞர் அமைதியின்மையும் எழுந்தன. இதனைத் தவிர்க்கவும் அரசாங்கங்கள் விரும்பின.

ஆனால் மறுபுறம் உயர்கல்வியை சனநாயகப்படுத்த வேண்டும் என்ற நோக்கில் உயர்கல்வி வாய்ப்புக்களைக் குறைக்கவும் விரும்பாத நிலையில் உயர்கல்வி மாற்று உயர்கல்வி முறைகளை விரிவுபடுத்த முயலும் போது வெகுசன ஊடகங்களினூடாகவே அவற்றைச் செயற்படுத்த முடிந்தது. இந்த அணுகுமுறையில் நடைமுறைப் படுத்தப்பட்டது திறந்த பல்கலைக்கழகமாகும். இலங்கையில் 12 மரபுவழிப் பல்கலைக்கழகங்களில் 20,000 பேர் உயர்கல்வி பெற்ற போது திறந்த பல்கலைக்கழகம் 40,000 பேருக்கு உயர்கல்வி வாய்ப்புக்களை வழங்கிவருகிறது. மாவட்டரீதியில் பிராந்திய நிலையங்களை அமைத்து உயர்கல்வியை வழங்குகிறது. தபால் மூலமாக உயர்கல்வி வழங்குகின்ற இந்த முறையும் நன்கு வளர்ச்சி பெற்று வருகின்றது. எனினும் இணையத்தின் உதவியுடன் உயர்கல்வி வழங்கும் சிறந்த ஏற்பாடு நிகர்நிலைப் பல்கலைக்கழகமாகும்.

உலகில் இணையத்தினூடாக உயர்கல்வி வழங்கும் நிகர் நிலைப் பல்கலைக்கழகங்களின் முன்னோடி ஆபிரிக்க நிகர் நிலைப் பல்கலைக்கழகமாகும். (African Virtual University) உலக வங்கி 1998 ஏப்ரல் மாதத்தில் எதியோப்பாவின் தலைநகர் அடிஸ் அபாபாவில் உருவாக்கியது. செயற்கைக்கோள் தகவல் முறைசார்ந்த தொலைக் கல்விமுறை இதுவாகும். இணையத்தளவசதிகளுடன் செயற்கைக்கோள் இணைக்கப்பட்டிருக்கும். இதற்கென தனியான இணையத்தளம் (Website) உருவாக்கப்பட்டிருக்கும்.

பல் ஊடகத்தின் (Malti media) வழியாக கற்றலும் கற்பித்தலும் மேற்கொள்ளப்படும். பல நாடுகளிலிருந்தும் பெருந்தொகையான மாணவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது சொந்த இடங்களில் தொழில்புரிந்து கொண்டே பட்டப்படிப்பை இணையத்தின் வழியாகக்கற்பர். நேரடியாக விரிவுரைகளை வழங்குவதுடன் முதலிலேயே விரிவுரைகளை பதிவு செய்தும், ஒளி பரப்புச் செய்வதுண்டு. செயற்கைக் கோள் மூலமாக விரிவுரைகள் பல நாடுகளுக்கும் ஒளிபரப்பப்படும். தொலைக்காட்சிப் பெட்டி வழியாகவும் இவற்றைக் கற்றுக் கொள்ள முடியும். இவற்றுடன் உதவியாக கையேடுகளும், துணைப்பாட நூல்களும் கூட வழங்கப்படும்.

தொடக்கத்தில் 12 பல்கலைக்கழகங்கள் இதனுடன் இணைக்கப்பட்டிருந்தன. பின்பு 25 ஆபிரிக்க உயர்கல்வி நிறுவனங்களும் இதனுடன் இணைக்கப்பட்டிருந்தன. 1999இல் நிறைவான பட்டப்படிப்பை இவை வழங்கின. உலக வங்கி 1.2 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்கியிருந்தது. தொலைக் கற்பித்தல் (Tele teaching) தொலைக்கற்றல் (Tele learning) முறைகள் இதில் முதன்மை பெற்றன. கொண்டு செல்லக் கூடிய கணணி (Lap - top) யும், செல்லிடத்தொலைபேசி (Cellular - phone) தொழில்நுட்பமும் வளர்ச்சிபெற்ற போது உயர்கல்வி பரவலாக்குதல் எளிமையாயிற்று.

இலங்கையில் கனடா அரசின் உதவியுடன் இதேமாதிரியில் இணையத்தினூடாக நாடுமுழுவதுவும் தொலைக்கற்றல் நிலையங்களை (Tele learning Centres) நிறுவி குறைந்த செலவில் அதிக தூரத்திற்கு பயணம் செய்யாமல் தொழில் புரிந்து கொண்டே பட்டப்படிப்பு பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பல்கலைக்கழகங்களினுடன் இணைந்து இச் செயற்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இவை வெற்றியளிக்கும் போது மின்னியல் ஊடகம் நிச்சயமாக உயர்கல்வியை குறைந்த செலவில் சனநாயகப்படுத்த உதவும் என நம்பமுடியும்.

## பிற கல்வி ஏற்பாடுகள்.

வானொலி, தொலைக்காட்சி என்பவற்றினூடாக சமுதாயக் கல்வியை வழங்குவது இந்தியாவில் பெரியளவில் வெற்றி பெற்றுள்ளது. எழுத்தறிவைப் பரவலாக்குதல், கிராமிய பெண்களை விழிப்புணர்வும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினைத்திறனும், சுய நம்பிக்கையும் கொண்டவர்களாக்குதல், தொழிலாளர்களுக்கு புதிய தொழில்நுட்ப தேர்ச்சியை உருவாக்குதல், தொற்று நோய்கள் பற்றிய சமூக விழிப்புணர்வை வளர்த்தல் போன்ற பரந்துபட்ட சமுதாயநலன்களை வழங்கும் சமுதாயக் கல்வி மேம்பாட்டுக்கு வெகுசன ஊடகங்கள் விளைதிறனுடன் பயன்படுத்தக் கூடியன. இலங்கையில் வானொலி தொலைக்காட்சி என்பன இத்திசையில் கூடிய கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

மின்னியல் சமூகம் (e - Society) ஒன்றை வளர்ப்பதற்கான முயற்சிகள் இலங்கையில் தொடங்கியுள்ளன. வெளிநாடுகளின் உதவியுடன் நல்லாட்சி உணர்வு, சமூகப் பொறுப்பைப் பயன்படுத்தும் முறையை இச் செயற்திட்டம் ஊக்குவிக்கின்றது. எதிர்காலத்தில் இவை மேலும் வலுப்பெற்று விட முடியும்.

உயர் தொழிற்துறை சார்ந்தவர்களுக்கு வேண்டிய பயிற்சித்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு தொலைக்காட்சி, இணையம் என்பவற்றைப் பயன்படுத்துவது அதிகம் வெற்றியளிக்கும் என்று எதிர்பார்க்க முடியும்.

## முடிவுரை

வளர்முக நாடுகளில் கிராமங்களையும், முறைசார் கல்வி வாய்ப்பிலிருந்து வெளிவீசப்பட்ட சமூக வகுப்பினரும், தவறவிட்ட கல்வி வாய்ப்புக்களைப் பெறுதற்கு வெகுசன ஊடகங்களை நன்கு பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

மின்சார வசதிகளை எல்லோருக்கும் வழங்குவது, மாற்றுச் சக்தியை உருவாக்குவதும் அவசியமாகின்றது. கணணிகளை குறைந்த விலையில் எல்லோருக்கும் கிடைக்கச் செய்வதும் அவசியமாகும். கணணித் தொழில்நுட்பப் பயிற்சியை எல்லோருக்கும் வழங்குவதும் அவசியமாகிறது. இணையத்தள வசதிகளையும் பலமானதாக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இணையத்தளத்தின் வழியாக கற்பித்தல் மற்றும் கற்றல் தொடர்பான நுட்பப் பயிற்சிகள் பரவலாக்கப்படல் வேண்டும். தொலைக்கல்வி நிலையங்கள் (Tele centres) பரவலாக எல்லாப் பிரதேசங்களிலும் நிறுவப்பட வேண்டும். இயன்றளவுக்கு எல்லா உயர்கல்வி நிறுவனங்களும் இணையத்தளத்தினூடாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும். இதற்கான தொடக்க முதலீடு உயர்வாகவே காணப்படும். போதியளவுக்கு மின்னியல் ஊடகக் கல்விக்கு ஏற்ற சட்டத் திருத்தங்களும் கொண்டு வரப்படல் வேண்டும்.

இவை அனைத்தும் திட்டமிடப்பட்டு; படிமுறையில் நடைமுறைப்படுத்தப்பட்டால் எதிர்காலத்தில் வெகுசன ஊடகம் கல்வியை சனநாயகப்படுத்த பெருமளவுக்கு உதவும் என்று நம்ப இடமுண்டு.

## References


1) BROOKS. D. WILLIAM Healk.w. Robert 1993 Speech communication, Brown and Benchmark.

2) MURRAY . M MICHAEL, MOORE .L. ROY (Ed) 2004, mass communication Surjeet publication

3) DSE (Germany)
Development and cooperation
- 2/2000 – March / April
- 1/1998 January / February
- 3/2001 May / June
- 1/2002 January / February

4) Deutsch and (Germany)
- 3/2001
- 1/2005





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் பாடசாலைக்கல்வியின் சில பிரதான அம்சங்களும், கல்வியின் உயர்நிலை நோக்குகளும்

- சோ.சந்திரசேகரம் -

இலங்கை- தற்போது இயங்கிவரும் 9700 பாடசாலைகளைக் கொண்ட பாடசாலை முறையில் காணப்படும் சில அம்சங்கள் பற்றிப் பல கல்வியாளர்கள் பல்வேறு விமர்சனங்களை முன்வைத்துள்ளனர். பிரதானமாக அரசாங்கப் பாடசாலைகளின் பகுப்பு அல்லது வகைப்பாடு பகுத்தறிவு அடிப்படையிலும் தர்க்கரீதியாகவும் மேற்கொள்ளப்படவில்லை என்ற அவர்களுடைய கருத்து ஏற்றுக்கொள்ளப்படக் கூடியதாகும். சர்வதேசப் பாடசாலைகள் தனியார் பாடசாலைகள், அரசாங்கப் பாடசாலைகள், என்பது ஒரு வகையான வகைப்பாடு. 1AB, 1C, 2, 3 ஆம் வகைப் பாடசாலைகள் என்பது மற்றொரு வகைப்பாடு, இவற்றை விட தமிழ், சிங்கள, முஸ்லிம் பாடசாலைகள் என்றொரு வகைப்பாடும் உண்டு. மேலும் சில பாடசாலைகள் மகாவித்தியாலயங்கள், மத்திய மகாவித்தியாலயங்கள் என்றும் அழைக்கப்படுகின்றன. பாடசாலைகள் பற்றிய இக்குறிப்பின்படி இலங்கையில் உள்ள பாடசாலைகள் ஒரு அடிப்படையான தத்துவத்தின்படியோ அல்லது ஒரு கொள்கையின் அடிப்படையிலோ வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை என்பது தெளிவாகும்.

மற்றொரு உதாரணம் தேசியப்பாடசாலைகள். தேசியப்பாடசாலைகள் மத்திய அரசாங்கத்தின் கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ்வருவன. ஆரம்பகாலத்தில் வகுக்கப்பட்ட நியதிகளின்படி 1AB வகைப் பாடசாலைகள் மட்டுமே தேசியப் பாடசாலைகளாக வருவதற்குரிய தகுதிகளைப் பெற்றிருந்தன. ஆனால் சில 1C வகைப் பாடசாலைகளும் அரசியல் நிர்ப்பந்தம் காரணமாக தேசிய பாடசாலைகள் என்ற அங்கீகாரத்தைப் பெற்றுள்ளன. மேலும் நாட்டில் உள்ள 500க்கும் மேற்பட்ட 1AB பாடசாலைகள் அனைத்தும் தேசிய பாடசாலைகள் என்ற அந்தஸ்தைப் பெறவில்லை,அவற்றில் பல இன்னும் மாகாணசபைகளின் கட்டுப்பாட்டின் கீழேயே உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதனா மொழி அடிப்படையில் பாடசாலைகள் சிங்கள மொழி மூலப் பாடசாலைகள், தமிழ் மொழிப்பாடசாலைகள் என்று வகுக்கப்பட்ட போதிலும் சில பாடசாலைகளில் சிங்கள மொழிப்பிரிவும், தமிழ் மொழிப் பிரிவும் காணப்படுகின்றன. அதே வேளையில் இன அடிப்படையில் சிங்களப் பாடசாலைகள், தமிழ்ப்பாடசாலைகள், முஸ்லீம் பாடசாலைகள் என்ற முறையிலும் பாடசாலைகளை வகைப்படுத்தப்பட முடியும். அதே வேளையில் இலங்கையில் உள்ள பாடசாலைகள் பல மத அடிப்படையிலான அடையாளங்களையும், பெயர்களையும் கொண்டு விளங்குகின்றன. சமயப் பெயர்கள் பாடசாலைகளின் பெயர்களுடன் இணைக்கப்பட்டும் அல்லது ஒரு சமயத்துக்குரிய பெரியார்கள், சமயத்துக்குரிய புனித தலங்களின் பெயர்கள் (லும்பினி, நாலந்த) என்பவற்றைக் கொண்டும் பல பாடசாலைகள் விளங்குகின்றன. ஆனால் அதிகாரபூர்வமாக இவ்வகையான சமய அடிப்படையிலான வகைப்பாடு இல்லாவிட்டாலும், பெரும்பாலான மாணவர்களின் சமயத்தைச் சார்ந்தவரே அதிபராக இருத்தல் வேண்டும் என்ற ஒரு ஏற்பாடும் உண்டு.

கல்வியை நவீனமயப்படுத்தும் செயற்பாட்டில் பாடசாலைக் கல்வியில் சமய நிறுவனங்களின் செல்வாக்கு படிப்படியாகக் குறைக்கப்பட்டது. நீண்ட கால போராட்டத்தின் பின்னர் ஒரு சமயத்தை அச்சமயம் சாராத பிள்ளைகளுக்குக் கற்பிப்பதைத் தடுக்கும் “மனச்சான்று வாசகம்” இலங்கை அரசால் நிறைவேற்றப்பட்டது. 1961ம் ஆண்டுச் சட்டப்படி அரசாங்க உதவியைப் பெற்றுவந்த சமய நிறுவனங்களின் பாடசாலைகள் அரசாங்கத்தால் பொறுப்பேற்கப்பட்டன. சமயபாடம் தவிர்ந்த ஏனைய பாடங்கள் யாவும் உலகியல் அறிவை உள்ளடக்கமாகக் கொண்டவை. உயிரியல் பாடத்தில் வரும் பரிணாமக் கோட்பாட்டைக் கற்பிக்க சமயரீதியான எதிர்ப்பு எதுவும் காட்டப்படுவதில்லை. ஆனால் பொருளாதாரத்தில் மிக முன்னேறிய நாடான ஐக்கிய அமெரிக்காவில் கூட பல பாடசாலைகளில் இக்கோட்பாட்டைக் கற்பிப்பதில் தயக்கம் காட்டப்படுகின்றது. உயிரியல் ஆசிரியர்கள் சில பாடசாலை நிர்வாகத்தினருக்கு அஞ்சி இவ்விடயத்தைத் தவிர்த்து விடுகின்றனர்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில பாடசாலைகளில் மனிதனின் தோற்றம் பற்றிய சமயக் கருத்துடன் இக்கோட்பாடும் சேர்த்துக் கற்பிக்கப்படுகின்றது.

இலங்கையில் ஒரு புறம் சமயச்சார்பற்ற தன்மை நிலைநாட்டப்பட்டு வந்தாலும்; பல பாடசாலைகள் தமது சமய தனித்துவ அடையாளத்தைப் பேணுவதில் அக்கறை செலுத்துகின்றன. இலங்கையில் அதற்கான சட்டரீதியான தடை எதுவுமில்லை. சில பாடசாலைகளில் சகல இனமாணவர்களும் பயிலுகின்றார்கள். பல்வேறு மதங்களைச் சார்ந்த மாணவர்களுக்கு அவரவர் சமயம் கற்பிக்கப்படவும் ஏற்பாடுகள் உண்டு.

## குடியேற்ற ஆட்சிக்காலப் பாடசாலை ஏற்பாடுகள்.

ஆங்கிலேயர் ஆட்சிக்காலத்திலேயே இவ்வகையான வேறுபடுத்தப்பட்ட, ஒருசீர்த்தன்மையற்ற பாடசாலை முறை உருவாவதற்கான அடித்தளம் இடப்பட்டது. கோல்புறுக் குழுவினரின் (1831) கல்விச்சீர்திருத்தங்கள் காரணமாக நாட்டில் ஆங்கிலப்பாடசாலை முறையொன்று தோன்றியது. ஆங்கிலம் கற்ற அரச ஊழியர்களின் தேவையை நிறைவு செய்ய இப்பாடசாலை முறை உதவியது. மோர்கன் குழுவினர் (1867) இந்நாட்டில் வாழும் சாதாரண மக்கள் விவேகத்துடன் வாழ்க்கையை நடத்துவதற்கான அறிவை சுயமொழி மூலமான ஆரம்பக்கல்வி மூலமே வழங்க முடியும் என்று கருதி சுயமொழிப் பாடசாலைகளின் (தமிழ், சிங்கள) வளர்ச்சிக்குத் தேவையான பரிந்துரைகளை வழங்கினார். இதனால் 19ஆம் நூற்றாண்டிலேயே மொழி அடிப்படையில் வேறுபடுத்தப்பட்ட பாடசாலை முறையொன்று தோற்றம் பெற்றது.

ஆங்கிலப் பாடசாலைகள், சுயமொழிப் பாடசாலைகள் (தமிழ், சிங்கள மொழிப்பாடசாலைகள்) என்பவற்றோடு சிறுதொகையான இரு மொழிப்பாடசாலைகளும் (ஆங்கிலத்துடன் ஒரு சுயமொழி) அக்காலத்தில் இயங்கிவந்தன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு மொழி அடிப்படையில் மட்டுமன்றி சமயரீதியாகவும் பாடசாலைகள் அமைக்கப்பட்டிருந்தன. போர்த்துக்கேயர் காலக் கத்தோலிக்க பாடசாலை மரபு, ஒல்லாந்தர், பிரித்தானியர் கால புரட்டஸ்தாந்து சமயப் பாடசாலை மரபு 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பௌத்த பிரமஞான இயக்கம், ஆறுமுகநாவலர், பின்னர் சுவாமி விபுலானந்தர், சித்திலெப்பை போன்றோர் தோற்றுவித்தனர்.

**அட்டவணை I**

**மொழி வகைப்படி இலங்கைப் பாடசாலைகள் (1939)**

| பாடசாலைகள் | ஆண்டு - 1939 | வீதம் (%) |
|---|---|---|
| ஆங்கிலப்பாடசாலைகள் | 336 (80000) | 6.5% |
| இரு மொழிப் பாடசாலைகள் | 74 (18000) | 1.5% |
| சுயமொழிப் பாடசாலைகள் | 4701(74000) | 92% |

மேற்கண்ட அட்டவணையில் அடைப்புக்குறிக்குள் சேர்ந்து பயின்ற மாணவர் தொகை தரப்பட்டுள்ளது. ஆங்கிலேயர் காலத்தில் பாடசாலை மாணவர்களின் பெரும்பாலானவர்கள் சுயமொழிகளிலேயே கல்வி பயின்றமை குறிப்பிடத்தக்கது (சுயமொழிகளில் பயின்றவர்கள் 89%, ஆங்கிலமொழியில் பயின்றவர்கள் 11%)

மற்றொரு முக்கிய அம்சம் நாட்டிலிருந்த ஆங்கிலப் பாடசாலைகள் பல்வேறு சமய நிறுவனங்களினால் நடத்தப்பட்டமையாகும். மொழி அடிப்படையில் மட்டுமன்றி, சமய அடிப்படையிலும் பாடசாலைகள் வெவ்வேறாக இயங்கின. இந்நிலை நாடு சுதந்திரமடைந்த பின்னரும் நீடித்து நிலவுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை II**

**சமய வகைப்பாடி ஆங்கிலப் பாடசாலைகள் (1925)**

| சமயப்பிரிவு | தொகை |
|---|---|
| 1. அமெரிக்கன் மிஷன் | 10 |
| 2. ஆங்கிலிக்கன் | 50 |
| 3. கத்தோலிக்க சமயம் | 65 |
| 4. வெஸ்லியன் | 20 |
| 5. பௌத்த சமயம் | 25 |
| 6. பிற | 15 |
| **மொத்தம்** | **185** |

பௌத்த சமய இயக்கங்களும் பௌத்தர்களுக்கு ஆங்கிலக் கல்வி வாய்ப்புகளை வழங்கும் வகையில் பல ஆங்கிலப்பாடசாலைகளை நிறுவியமை குறிப்பிடத்தக்கது (கொழும்பு - ஆனந்தா, கண்டி - தர்மராஜா, பதுளை - தர்மதூத கல்லூரி) இந்துக்களும் இவ்வாறான பல ஆங்கிலக்கல்லூரிகளைத் தோற்றுவித்திருந்தனர். (யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, தெல்லிப்பளை மகாஜனக்கல்லூரி).

இவ்வாறு மொழி, சமயம், கலாசாரம் என்பவற்றின் அடிப்படையில் பிளவுபட்டுக்காணப்பட்ட பாடசாலை முறையானது தேசிய ஒருமைப்பாட்டின் வளர்ச்சிக்கும், தேசிய அபிவிருத்திக்கும் உதவவில்லை, ஒரு புறம் ஆங்கிலப் பாடசாலைகள் உயர்கல்வி, மற்றும் தொழில் வாய்ப்புக்களையும், சமூக, பொருளாதார அந்தஸ்தையும் வழங்கின. மறுபுறம் சுயமொழிகளில் பயின்ற பெரும்பாலான மாணவர்களுக்கு இவ்வாறான வாய்ப்புக்கள் மறுக்கப்பட்டன. ஆங்கிலக்கல்வியும், சுயமொழிக்கல்வியும் இருவகையான கலாசாரக் குழுக்களை உருவாக்கின. சாதி, சமயம், இனம், மொழி, பிராந்தியம் என்ற அடிப்படையில் பிளவுபட்டுக் கிடந்த இலங்கை சமூகம் ஆங்கில மொழி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்றோர், சுயமொழிகற்றோர் என்ற புதிய இரு கலாசார மொழிக் குழுவினரைப் பெற்று மேலும் பிளவுபட்டது. ஆங்கிலேயரின் இராஜதந்திரக் கொள்கை இலங்கையர்களை இன அடிப்படையில் பிரித்து ஆண்டமை (Divide and rule) தெரிந்த விடயம், அவர்களுடைய கல்விக் கொள்கை ஒவ்வொரு இனத்தையும் மொழியடிப்படையில் பிரித்தாள உதவியது.

சுதந்திரத்தின் பின்னரும் இலங்கையின் பாடசாலை முறையானது தொடர்ந்து வெவ்வேறு பாடசாலை வகை (Type) என்ற முறையிலும், மொழி அடிப்படையிலும், நிர்வாகக் கட்டுப்பாட்டு அடிப்படையிலும் பிளவு பட்டுக் காணப்படுகின்றது.

பாடசாலைகளில் உள்ள வகுப்புகளின் (தரங்களின்-Grade) அடிப்படையில் பாடசாலைகள் பின்வமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன.

1. 1AB வகை - (க.பொ.த.உ/நி விஞ்ஞான வகுப்புகளைக் கொண்ட பாடசாலைகள் 5.9% (587)
   (பெரும்பாலும் நகர்ப்புறப்பாடசாலைகள் )
2. 1C வகை (க.பொ.த.உ/நி கலை வர்த்தக வகுப்புக்களைக் கொண்டவை 40.8% (1860)
   (பெரும்பாலும் கிராமப்புறப் பாடசாலைகள்)
3. 2ஆம் வகை க.பொ.த. சா/நி வகுப்புகள் வரை 36.7% (3877)
   (சாதாரண வகுப்பினருக்கானவை)
4. 3ஆம் வகை - 1-5 ஆந் தரங்கள் வரை (சிறிய பாடசாலைகள், கிராமப் புறங்களிலும் உள்ளூர் பகுதிகளிலும் இயங்குபவை 39% (3960)
   (தரவு - 1997)

இவ்வரசாங்கப் பாடசாலைகளில் பல மத்திய அரசின் கட்டுப்பாட்டில் கொண்டுவரப்பட்டு ஆந்தஸ்து உயர்த்தப்பட்டு தேசிய பாடசாலைகள் என அழைக்கப்படுகின்றன. திட்டவட்டமான நியமங்களின் அடிப்படையில் இவை தரம் உயர்த்தப்படவில்லை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை விட பல்வேறு சமய நிறுவனங்களைச் சார்ந்த தனியார் பாடசாலைகளும் காணப்படுகின்றன. இவை அரச கல்வி முறைக்கு வெளியே இயங்குபவை. சில பாடசாலைகளுக்கான ஆசிரியர் சம்பளங்களை அரசாங்கமே வழங்கிவருகின்றது.

எந்த விதமான கல்வி அமைச்சின் கட்டுப்பாட்டுக்குள்ளும் வராது, கம்பெனிகள் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட பல சர்வதேசப் பாடசாலைகளும் தற்போது விரிவடைந்து வருகின்றன. இப்பாடசாலைகள் வெளிநாட்டுப் பாடசாலைப் பாடஏற்பாட்டைப் பயன்படுத்தி ஆங்கில வழியில் கல்வி வழங்கி வருகின்றன. தற்போது உள்ளூர் பரீட்சைகளுக்கு (க.பொ.த.சா/நி, க.பொ.த. உ/நி) மாணவர்கள் தோற்றவும் அனுமதி வழங்கப்படுவதாகத் தெரிகின்றது.

இப்பாடசாலைகளில் வழங்கப்படும் ஆங்கில வழிக்கல்வியின் காரணமாக, தெரிவுசெய்யப்பட்ட அரசாங்கப் பாடசாலைகள் சிலவற்றில் விஞ்ஞானம், கணிதம் முதலிய பாடங்களையாவது ஆங்கிலத்தில் போதிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. சில பிரபல்யமான பாடசாலைகள் ஆரம்பவகுப்பு முதல் ஆங்கில வழிக்கல்வியை வழங்கி வருகின்றன.

**அட்டவணை III**

**இலங்கையின் பாடசாலைகள் தொகை, 2001**

| பாடசாலைகள் | எண்ணிக்கை |
|---|---|
| அரசாங்கப் பாடசாலைகள் | 9565 |
| தேசிய பாடசாலைகள் | 322 |
| தனியார் பாடசாலைகள் | 78 |
| பிரிவேனாக்கள் | 583 |
| மொத்தம் | 10548 |

(புள்ளி விபர கையேடு - 2002, ஆதாரம் - புள்ளிவிபர மதிப்பீட்டுத் திணைக்களம்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**அட்டவணை IV**

**பாடசாலை வகைப்படி பாடசாலைகளின் தொகை, 2001**

| இல | பாடசாலை வகை | எ-கை |
|---|---|---|
| 1. | 1AB வகைப் பாடசாலைகள் (க.பொ.த. உ/த விஞ்ஞான வகுப்புடன்) | 548 |
| 2. | 1C வகைப் பாடசாலைகள் (க.பொ.த. உ/த கலை, வர்த்தகவியல் வகுப்புக்களுடன்) | 1844 |
| 3. | 2ஆம் வகைப் பாடசாலை (தரம் 10 வரை அல்லது 6-9 தொடக்கம் 11 ஆந்தரம் வரை) | 4030 |
| 4. | 3ஆம் வகைப் பாடசாலைகள் (வகுப்புகள் 1-6 அல்லது 1-5 வரை) | 3429 |

(இலங்கையின் பொருளாதார சமூக புள்ளி விபரங்கள்,
மத்திய வங்கி, 2002)

தற்போதைய பாடசாலை முறையின் மற்றொரு அம்சம் சிறிய பாடசாலைகள் தொடர்ந்து மேலும் சிறிய பாடசாலைகளாகவும், பெரிய பாடசாலைகள் மேலும் பெரிய பாடசாலைகளாகவும், மாறிக் கொண்டு வருவதாகும். இன்று நாட்டில் காணப்படுகின்ற 9800 பாடசாலைகள் எந்த வகையிலும் - மாணவர் தொகை, அடிப்படை வசதிகள் என்பவற்றைப் பொறுத்தவரையில் சமமானவையல்ல. இவற்றில் 2757 பாடசாலைகளில் 100க்கும் குறைவான மாணவர்களே பயிலுகின்றனர். 27.8 சதவீதமான பாடசாலைகள் இப்படிப்பட்டவையாகும் (2001), 1981 இல் இப்பாடசாலைகளின் தொகை 2249 ஆக மட்டுமே இருந்தது (23.6%) ஆனால் இரு தசாப்த காலத்தில் இப்பாடசாலைகளின் தொகை அதிகரித்து விட்டது. பிறப்பு வீதம் குறைந்து வருவதும், பெற்றோர்கள் வசதி மிக்க பெரிய பாடசாலைகளை நாடுவதும் இதற்குப் பிரதான காரணங்களாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே 1500 மாணவர்களுக்கு அதிகமானவர்களைக் கொண்ட பாடசாலைகளின் தொகை 1981இல் 191 ஆக இருந்து, 2001இல் 494 ஆக அதிகரித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இனரீதியாக நோக்குமிடத்து நாட்டில் உள்ள பாடசாலைகளில் 72% சிங்களப் பாடசாலைகள், 21% தமிழ்ப்பாடசாலைகள், 7% முஸ்லீம் பாடசாலைகள், 1 சதவீதமான பாடசாலைகளிலேயே இரு மொழிப் பிரிவுகளும் காணப்படுகின்றன. (2001).

சமூக வகுப்புரீதியாக நோக்குமிடத்து பிறநாடுகளில் இருப்பது போலவே இலங்கைப் பாடசாலைகளும் நாட்டிலுள்ள சமூக வகுப்பு முறைமையைப் பிரதி பலிப்பதாகவே வளர்ச்சி பெற்றுள்ளன. ஒரு புறம் விரிவாக வழங்கப்படும் கல்வி வாய்ப்புகள், இலவசக்கல்வி, கிராமப்புறங்களில் அமைந்துள்ள இடைநிலைப் பாடசாலைகள் (1AB, 1C பாடசாலைகள்) பின்தங்கிய வகுப்பினரின் சமூக நகர்வுக்கு உந்து சக்தியாக விளங்கும் என்று கூறப்படுகின்றது. மறுபுறம் பின்தங்கியவர்களுக்கென்று 2ஆம் 3ஆம் வகைப்பாடசாலைகளும் அமைந்துள்ளன. இவ்வகைப் பாடசாலைகளில் பின்தங்கிய பிரிவினரின் பிள்ளைகளே அதிகமாகக் காணப்படுகின்றனர். அவ்வாறே தனியார் பாடசாலைகளும், சர்வதேசப் பாடசாலைகளும் வசதியானவர்களின் பிள்ளைகளுக்கே உரியவை இந்நிலையில் கல்வி முறையானது சமூக வகுப்பு வேறுபாடுகளைக் குறைப்பதற்கு உதவாது அவ்வேறுபாடுகளை வலுப்படுத்தி, நிரந்தரத்துவப்படுத்தும் பணியையே செய்கின்றன. என்ற நவமாக்ஸியவாதிகளின் கருத்தில் உண்மை இல்லாமல் இல்லை. அவர்களுடைய நோக்கில், கல்வியின் பணி சமமான கல்வி வாய்ப்புகளினூடாக சமத்துவ சமூகமொன்றின் உருவாக்கத்துக்கு வழிகோலுவதல்ல, முதலாளித்துவ சமூகங்களில் பாடசாலைக் கல்வியானது வர்க்க பேதங்களைக் கொண்ட சமூக அமைப்பைத் தொடர்ந்து மீளுருவாக்கம் செய்வதில் வெற்றி கண்டுள்ளது. இலங்கை நிலைமைகளில், கொழும்பில் வறியவர்கள் வாழும் பகுதிகளில் வசதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்த சிறிய பாடசாலைகள் ஏராளமாகக் காணப்படுகின்றன. பிரபல்யமான கொழும்புப் பாடசாலைக்கு அருகிலும் இத்தகைய பாடசாலைகள் காணப்படுகின்றன.

இதற்கு அப்பால் சமய அடிப்படையில் பிரிவு பட்டுக் காணப்படும் பாடசாலை முறையொன்றையும் இலங்கையில் காணலாம். பாடசாலைகள் தேசிய அரச கட்டுப்பாட்டுக்குள் வந்த போதிலும் அவற்றில் பல சமயப்பிரிவுகளைச் சார்ந்த பௌத்த, இந்து, கிறிஸ்தவ, முஸ்லீம் பாடசாலைகளாக விளங்குவதும் குறிப்பிடத்தக்கது. ஒரு காலத்தில் முழுக்கல்வி முறையுமே சமயநிறுவனங்களின் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டிருந்தன. மேற்கு நாடுகளில் கிறிஸ்தவ மடாலயங்களும், கீழை நாடுகளில் இந்து ஆதீனங்களும், பௌத்த சங்கமும், விகாரைகளும், இஸ்லாமிய மதரசாக்களும் கல்வித்துறையைத் தமது பொறுப்பில் வைத்திருந்தன. கல்வித்துறையின் நவீன மயமாக்கம் பற்றி ஆராய்ந்தவர்கள் சமயச்சார்பற்ற கல்வி, அரசு கல்வித்துறையைப் பொறுப்பேற்றமை, சமயக்குரவர்கள் அன்றி பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், பல்கலைக்கழகப் பட்டதாரிகள் ஆசிரியர்களாக வந்தமை, தேசிய பாட ஏற்பாடு என்னும் அம்சங்களை கல்வித்துறை நவீனமயமாக்கத்தின் அம்சங்களாக இனங்கண்டனர். இப்பின்புலத்தில் இலங்கையில் இன்னும் பாடசாலைகள் சமய அடிப்படையில் பிரிவுபட்டுக் காணப்படுவது ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

இன்றைய கல்வி முறையானது பொதுப் பரீட்சைகளை நோக்காகக் கொண்டு வளர்ச்சி பெற்றுள்ளமையால் பாடசாலைகளும் இந்நோக்கையே கருத்திற் கொண்டு இயங்குகின்றன. ஒரு தனிப்பட்ட பாடசாலையின் பரீட்சைப் பெறுபேறுகளே அப்பாடசாலையைப் பொதுமக்கள் மத்தியில் பிரபல்யம் அடையச்செய்கின்றன. இதன் காரணமாகப் பாடசாலைகளுக்கிடையே ஆரோக்கியமற்ற போட்டி நிலை தோன்றியுள்ளது என்றும்; விளையாட்டு மற்றும் இணைப்பாடச் செயற்பாடுகளிலும் இப்போட்டி நிலை உக்கிரமடைந்து வருகின்றது என்றும் தெரிகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைகள் இவ்வாறு இன, மொழி, சமய மற்றும் சமூக வகுப்புரீதியாகப் பிளவுபட்டுக்கிடப்பது குறித்து இருவகையான நிலைப்பாடுகள் கற்றறிவாளர் மத்தியில் நிலவுகின்றன.

1) ஒரு சாரார் தேசிய ஒருமைப்பாட்டு உணர்வுகளுக்கும், தேசிய ஐக்கியத்துக்கும் முன்னுரிமை வழங்குகின்றவர்கள். இத்தகைய இலட்சியம் உயர்வானது என்றும் பாடசாலைக் கல்வி அதனை அடையும் வகையில் புனரமைக்கப்படல் வேண்டும் என்று கருதுபவர்கள் 19 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவில் பிரிந்து கிடந்த சிறிய அரசுகளை ஒன்றிணைத்து தேசிய அரசுகள் தோன்றியபோது, இப்பின்புலத்திலேயே மதநிறுவனங்களின் பொறுப்பிலிருந்த கல்வி முறைமை தேசிய அரசுகளின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டது. கல்வி முறையினூடாக அரசுக்குக் கீழ்ப்படிவுள்ள பிரஜைகளை உருவாக்கலாம் என்ற கருத்து ஐரோப்பாவில் வலுப்பெற்றது. "நான் நாட்டில் காணவிரும்புவதை முதலில் பாடசாலைகளில் அறிமுகம் செய்வேன்" என அப்போது நெப்போலியன் கூறியிருந்தான். பிஸ்மார்க் காலத்து பிரவுயாவில் தான் இவ்வாறான நோக்குகளுடன் தேசியக்கல்வி முறையொன்று உருவாக்கப்பட்டது. வளர்ந்தோர் சரியென்று கருதும் விழுமியங்கள், சமூகநியமங்கள் என்பவற்றைக் கல்வி முறையினூடாக இளந்தலை முறையினருக்கு வழங்கி அவர்களைச் சமூகமயப்படுத்துவது தான் கல்வி, சமூகத்தின் தொடர்ச்சியான உறுதிப்பாட்டுக்கு மிக அவசியமானது என்பது ஜேர்மன் நாட்டு சமூக வியலாளர் Emil Durkheim இன் சிந்தனை.

தென்கிழக்காசிய நாடுகளான மலேஷியா, மியன்மர், தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளில் இவ்வாறான தேசிய ஒருமைப்பாட்டு நோக்கங்களுக்காகக் கல்வி முறை பெரிதும் பயன்படுத்தப்பட்டது. இப்பின்புலத்தில் இந்நாடுகளில் வாழ்ந்த சீனச் சிறுபான்மையினரின் சீன மொழிப்பாடசாலைகளின் வளர்ச்சி ஊக்குவிக்கப்படவில்லை. இப்பாடசாலைகள் தேசிய ஒருமைப்பாட்டுக்குச் சொந்தமாகவும் நாட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றற்ற சத்திகளின் வளர்ச்சிக்குத் தூண்டுகோலாகவும் அமையும் எனக் கருதப்பட்டமையால் இந்நாடுகளின் கல்வி முறையில் பிற கலாசாரங்களுக்கும், மொழிகளுக்கும் சீன மற்றும் இந்தியத்தமிழ். சிறுபான்மையினர்கள் தமது தாய்மொழியில் ஆரம்பக்கல்வியை மட்டுமே பெறமுடியும். அதன் பின் இடைநிலைக்கல்வி, உயர்கல்வி என்பவற்றை மலேசிய மொழியிலேயே பெறமுடியும். சுருங்கக்கூறின் தேசிய ஒருமைப்பாடு, தேசிய ஐக்கியம் என்னும் இலக்குகள் முன்னுரிமை பெறும் போது, சிறுபான்மையினரின் தாய்மொழிக்கல்வி உரிமை பாடசாலைகளை நடாத்தும் உரிமை என்பன மறுக்கப்படுகின்றன.

இலங்கையின் பாடசாலை முறைமை பற்றி இக்கட்டுரையின் முற்பகுதியில் எடுத்துக் கூறப்பட்ட அம்சங்கள் குறித்து இலங்கை ஆய்வாளர்கள் மத்தியில் நிலவும் கருத்துக்கள் பின்வருமாறு

- இலங்கைப் பாடசாலை முறைமை இனம், மொழி மற்றும் சமய அடிப்படையில் பிளவுபட்டிருப்பதனால் இந்நாடு தேசியக்கல்வி முறையொன்றை உருவாக்குவதில் தோல்வி கண்டுவிட்டது.
- இன்று இந்நாட்டில் காணப்படும் பிரதான சமூகங்களுக்கிடையே நிலவும் முரண்பாடுகள், மோதல்கள் என்பவை உருவாவதற்குக் கல்வி முறையின் பங்களிப்பும் உண்டு. சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்தக் கல்வி முறை தவறிவிட்டது. “ஒன்றாகக் கூடி வாழ்தல்” என்னும் கல்வியின் நோக்கு கல்வி முறையினால் முற்றாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை.
- கல்வியின் நோக்கு கல்வி முறையினால் முற்றாகக் கருத்திற் கொள்ளப்படவில்லை.
- பாடசாலை முறையில் காணப்படும் பிளவுபட்ட தன்மை நாட்டையே பிரிக்கும் (Dividednation) நிலைக்கு இட்டுச் சென்று விட்டது.
- பல்வேறு சமூகப்பிரிவினரிடையே பரஸ்பர புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்கான சமூகநியாயத்தன்மை வாய்ந்த கல்வி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறையொன்று உருவாக்கப்படல் வேண்டும். பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த இளந்தலை முறையினர் மத்தியில் ஒத்துழைப்பையும், பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தி அவர்களுக்குக் கல்வியில் சமவாய்ப்புகளை வழங்கும் வகையில் பாடசாலை முறை மறுசீரமைப்புக்குள்ளாக வேண்டும்.

இப் பின்புலத்தில் 1996ஆம் ஆண்டில் யுனெஸ்கோவிடம் சமர்ப்பிக்கப்பட்ட Delors அறிக்கையில் எடுத்துக் கூறப்பட்ட கல்வியின் நான்கு தூண்கள் பற்றி இவ்விடத்துல் குறிப்பிட வேண்டும். அறிவு பெறக் கற்றல், செயலுக்கான கற்றல், வாழக்கற்றல் என்பவற்றோடு "கூடி வாழக்கற்றல்" (learning to live together) என்ற நான்காவது "கல்வித்தூண்" இலங்கை நிலைமைகளில் இன்று பிரதானமானதாக உள்ளது. பிறமக்களைப் பற்றிய புரிந்துணர்வு, ஒருவரில் ஒருவர் தங்கி இருத்தலை (Interdependence) வரவேற்றல், கூட்டாகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்தல், பிணக்குகளைத் தீர்க்கவும் முகாமை செய்யவும் கற்றல் போன்ற வழிமுறைகளினூடாகவே சமாதானத்தையும், பன்மைத்தன்மையையும், பரஸ்பர புரிந்துணர்வையும் ஏற்படுத்தமுடியும் என்ற Delors அறிக்கையின் கருத்து ஆழ்ந்து நோக்கத்தக்கது.

**கல்விச் செய்திகள்**

**த**ரம் 1 மாணவர்களின் அனுமதியின் 5000 தொடக்கம் 50,000 ரூபா வரை அதிபர்களினால் டொனேசன் வசூலிக்கப்பட்டு வருகின்றன.

ஆசிரியர்களின் உள்ளக இடமாற்றம், மற்றும் நியமனங்களில் பழிவாங்கல்களும், அநீதிகளும் அதிபர் மற்றும் கல்வி அதிகாரிகளினால் மேற்கொள்ளப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் மனிதஉரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளன.

*- யாழ் நிருபன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழந்தமிழர் கல்வி - ஒரு மீள் நோக்கு

சபா . ஜெயராசா

பழந்தமிழகம் முழுவதற்கும் பொதுவான ஒரு கல்வி முறைமை நிலவியது என்று "கூட்டுமொத்தப்படுத்தல்" (To Talising) சாத்தியமற்றது. சமூக நிரலமைப்புக்கும், பொருள் சார்ந்த அதிகார நிரலமைப்புக்கும் ஏற்றவாறு கல்வி முறைமை பன்முகப்படும் தன்மை கொண்டதாகவே இயக்கமுறும். சமூகக் கட்டுமானத்தின் இயல்புக்கு ஏற்றவாறு அமையும் ஒரு காப்புவடிவமே கல்வியாதலால் அது சமூக ஏற்றத்தாழ்வுகளைப் பாதுகாக்கும் இயக்கமுள்ள அரணாக அமையும்.

சமூகத்தின் ஏறுநிரலாக்கத்துடன் இணைந்ததாக கல்விச் செயல் முறை வலுவடைந்து செல்லும் பொழுது வரன்முறையான கல்வி அல்லது நியமமானகல்வி (Formal Education) மேலோங்கியோருக்கு உரியதாகவும், வரன்முறை சாராக்கல்வி சமூக அடிநிலை மாந்தர்க்குரியதாகவும் வளர்ச்சியுற்ற கோலங்களைக் காணமுடியும். வேட்டையாடலும் பூர்விகமந்தை மேய்த்தலும் நிகழ்ந்த தமிழகத்தில் எளிமையான பொருளுற்பத்தி முறைமையை மீள்உற்பத்தி செய்வதற்குரிய பார்த்துச் செய்தல் என்ற கற்பித்தல் முறை (Watch help method) மேலோங்கியிருந்தது. தமிழகத்திலே குறுநில அரசுகள் தோற்றம் பெற்று வளர்ச்சியடைய பொருள்வழியாக ஆதிக்கம் பெற்ற சமூக நிரலமைப்பு வளர்ச்சியுறத் தொடங்கியது.

சமூக ஏறுநிரலமைப்பின் வளர்ச்சி உடல்உழைப்பு, உளஉழைப்பு என்பவற்றுக்கிடையே வேறுபாடுகளை ஏற்படுத்தியதுடன், உள்ளத்து இயக்கத்தினாற் பெறும் இன்பம் உடலியக்கத்தாற் பெறும் இன்பத்திலும் பார்க்க மேலானதாக உணர்த்தப்பட்டது.

"உவப்பத்தலை கூடி உள்ளப்பிரிதல்
அனைத்தே புலவர் தொழில்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற குறள் (392) உள நிலை இன்பத்தை ஒரு வகையிலே சுட்டுவதாக அமைந்தது.

அதிகார முறைமைக் கேற்பமக்களை நெறிப்படுத்துவதற்குக் கல்வி கருவியாக்கப்படுதல் கல்வி வரலாற்றிலே காணப்படும் ஒரு சிறப்புப்பண்பாகவுள்ளது. ஒடுக்கப்படுவோர் ஒடுக்கு முறைமையை ஏற்று இசைந்து வாழ்வதற்குரிய வற்புறுத்தல்கள் அறிக்கை நிலையிலே முன்னெடுக்கப்படும்.

"எவ்வது உறைவது உலகம் உலகத்தோடு
அவ்வது உறைவது அறிவு"

என்ற குறள் (426) நடத்தை இசைவாக்கலின் வற்புறுத்தலாயிற்று.

சுருங்கிய நிலமானியக் கட்டமைப்பிலிருந்து பூர்வீக வர்த்தக நடவடிக்கைகள் படிப்படியாக வளர்ச்சியடையத் தொடங்க, விரிந்த உலகு பற்றிய கல்வித் தரிசனம் வளர்க்கப்படலாயிற்று. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்றவாறான புதிய சமூகப் புலக்காட்சிகள் வளர்க்கப்படலாயின. சமூகநோக்கில் விரிந்த தரிசனம்,

"பற்பல நாடும் பழுதின்றிப் பாங்குடைய
கற்றதின் காழ் இனியது இல்"

என்ற இனிய நாற்பத்தினால் (2) மேலும் புலப் படுத்தப்படும்.

கல்வி வளர்ச்சியோடு சமாந்தரமாக நிகழும் மேம்பாடாக ஆசிரியத்துவ வளர்ச்சி ஏற்படுகின்றது. சமூக இயல்பின் குறிகாட்டலும், தெறிப்பும் ஆசிரியத்துவத்தாற் புலப்படுத்தப்படும். குலக்குழு நிலையில் மூத்தோரும், முதியோரும், சடங்குகளை நெறிப்படுத்துவோரும் அறிவுக்கையளிப்பில் மேலோங்கியிருந்தனர்.

கல்வி வளர்ச்சியின் ஒரு சிறப்பான பரிமாணம் ஆசிரியத்துவ வளர்ச்சியாகும். சமூக முரண்பாடுகளின் தெறிப்புக்கள் ஆசிரியத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவத்திலும் காணப்படும் ஆசிரியத் தருக்க நிலையான சிந்தனை வளர்ச்சியோடு இணைந்தது. இந்நிலையில் பழந்தமிழகத்தில் ஆசிரியர் கணக்கர் என அழைக்கப்பட்டனர்.

"இத்திறம் தத்தம் இயல்பினிற்காட்டும்
சமயக் கணக்கருந்தந்துறை போகிய
அமயக் கணக்கரும்"

மணிமேகலை - 1:12-14:

முரண்பாடுகளை விளக்கவும், விளங்கவும் முயன்ற ஆசிரியர்கள் உலகியல் அழுத்தங்களில் இருந்து விடுபட்டு, பிரபஞ்சத் தேடலை நாடினர்.

"செஞ்ஞாயிறுச் செலவும்
அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்
பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்
வளிதிரி தரு திசையும்
வறிது நிலை இயகாயமு மென்றிவை
சென்றளந் தறிந்தோர்."

(புறம் - 30)

பயிர்ச் செய்கை நிலைபேறு கொண்ட மருத நிலத்தில் வரன் முறையான கல்வியை உள்ளடக்கிய ஆசிரிய நெறிப்பாடு வளரலாயிற்று. மருத நில உற்பத்தியில் தண்ணீர் சிறப்பார்ந்த இயற்கை வளமாயிற்று. நீர்மை என்பது ஆசிரியத்துவ இயல்புக்குரிய எண்ணக்கருவாக வலியுறுத்தப்பட்டது. ஆசிரியத்துவப் பண்புகளும், ஒழுக்கமும் நீர்மை என்ற எண்ணக்கருவால் விளக்கப்படலாயிற்று.

கணக்கிடலும், அலகிடலும் ஆசிரியத்துவத்தின் உயர்ந்த பண்புகளாயின. கணக்கிடல் என்ற எண்ணக்கரு தருக்க முறைமையை வலியுறுத்துவதாயிற்று. தமிழ் மரபில் ஆசிரியர்கள் கணக்கர் என்ற பெயரால் அழைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இத்திறம் தத்தம் இயல்பினிற் காட்டும்
சமயக் கணக்கரும் தந்துறைபோகிய
அமயக் கணக்கரும்"

என்றவாறு மணிமேகலை அடிகள் (1:12-14) சுட்டிக்காட்டுகின்றன. அறிவு மேம்பாடு ஆசிரியத்துவத்தில் வலியுறுத்தப்படும் ஒரு சிறப்புப் பண்பு. "தரங்குறைந்த மனிதரால் உரைக்கப்படும் மெய்ப்பொருள் மாணவரால் உள்வாங்கப்படமாட்டாது" என பிராமணக்கல்வி முறையில் குறிப்பிடப்படுதல் (Mookerji, R.K, Ancient Indian Education, 1972, P.101) ஜாதி முறைமையோடு இணைந்த ஆசிரியத்துவத்தைச் சுட்டிக்காட்டுகின்றது. வரன் முறையான கல்விசார்ந்த ஆசிரியத்துவம் சமூகநிரலமைப்பின் உயர் அடுக்குகளோடு இணைந்திருந்தமைக்கு இது சான்றாகவுள்ளது.

சமூக அடுக்கமைப்பின் உயர்நிலைப் பிரிவினரிலிருந்தே நியமமான கல்விக்குரிய ஆசிரியத்துவம் உருவாயிற்று ஒளி, விளக்கு, சுடர், சுனை, கற்பகதரு, பொழில், அருவி, கார், முகில், வாணர், என்றவாறான ஆசிரியர்களுக்குச் சூட்டப்பட்டன. இலக்கணம், இலக்கியம், சமயம், தருக்கம், நீதிநூல், வானநூல், சோதிடம் முதலாம் அனைத்து அறிவுத்துறைகளும் ஆசிரியர்களிடத்து நிறைந்திருத்தல் வேண்டும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

கல்வி என்பது ஆற்றலைப் பெருக்கும் வலிவாகக் கருதப்பட்டது. கல்வியில் முன்னேற்றம் பெறுதல் ஆற்றலில் முன்னேற்றம் பெறுதலாகக் கருதப்பட்டது. இந்நிலையில் கல்வி வளம் என்ற கருத்து மேலோங்கியது. சமூக முரண்பாடுகள் கல்விக்குரிய முரண்பாடுகளாக உட்புக கல்விச் செயற்பாடுகளிலே "துருவப்பாடுகள்" ஏற்படலாயின. அதாவது, ஒருபுறம் ஆன்மிக நோக்கு முனைப்பெடுக்க மறுபுறும் உலகியல் நோக்கு மேலெழுந்தது. கல்விக்குரிய தெய்விக நோக்கின் வலியுறுத்தல் அறிவின் மூலவூற்றாக இறைவனே விளங்குகின்றான் என விளக்கியது. "ஆதியில் அருந்தமிழ் அகத்தியர்க் குணர்த்திய மா தொருபாகன்" என்பது மேற்கூறிய விளக்கத்தை மீளவலியுறுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அறியாமை அறிவகற்றி அறிவினுள்ளே அறிவுதனை அருளினான்" (குருஞான சம்பந்தர், சிவபோகசாரம், 282) என்பதும் மேற்கூறிய கருத்தின் இன்னொருபரிமாணமாயிற்று.

இதன் தொடர்ச்சியும் வளர்ச்சியுமாக இயற்கையை மாற்றி யமைப்பதற்கான கல்வி இயற்கையுடன் இசைந்து வாழ்வதற்கான கல்வி என்ற இருமைப்போக்குகள் முனைப்படைந்தன. இயற்கையை மாற்றியமைப்பதற்கான கல்வி உலகியலை முதன்மைப்படுத்தி மனிதனை இலக்குப் பொருளாக்கிற்று. இயற்கையோடு இசைந்த கல்வியில் இறை உன்னதங்கள் வலியுறுத்தப்பட்டன. இயற்கையோடு இணைந்த கல்வியில் அருவநிலைச் சிந்தனைகளும், கல்வி வளர்ச்சியின் இன்னொரு பரிமாணம் அருவமாக்கல் அறிவு (Abstract Knowledge) என்பதன் வளர்ச்சியாகும்.

அருவமாக்கல் எண் அடிப்படையிலும், எழுத்தடிப்படையிலும் வளர்ச்சியுற்றது. அறிவு அருவமாக்கலைத்தூண்ட எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும் என விளக்கப்படலாயிற்று.

ஆசிரியத்துவத்தின் வளர்ச்சியை மானிடவியலாளர் சடங்குகளுடன் தொடர்புபடுத்தி விளக்குவர். வளப்பெருக்கச் சடங்கு, கொடுமைகளை விரட்டும் சடங்கு, மனித விருத்தியை அங்கீகரித்து நெறிப்படுத்தும் சடங்கு என்றவாறு சடங்குகளை முன்னின்று நடத்தியோர் அறிவு வல்லாளராக, ஆசிரியர்களாக முகிழ்த்தனர். ஆசிரியர்கள் நிறை மொழி மாந்தர்களாகவும் அவர்களது உரை மந்திரமாகவும் கருதப்பட்டது.

"நிறை மொழிமாந்தர்
ஆணையிற் கிளர்ந்த
மறை மொழி தானே மந்திரமென்ப"

(தொல்காப்பியம் - 178)

இயற்கையை மாற்றியமைப்பதற்கான கல்வியில் உருவ நிலைச் சிந்தனைகளும் மேலோங்கப் பெற்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூக நிரலமைப்பின் இயல்புக்கேற்றவாறு கல்வி நிறுவன ஒழுங்கமைப்பும் வளர்ச்சியுறலாயின. உயர் கல்விக் கூடங்கள் பொதுவாக சமூக நிலையில் உயர்ந்தோருக்கு உரியவையாக அமைந்தன. சங்கம் என்பது அரசர்களது அரவணைப்பில் இயங்கிய உயர்கல்விக் கூடமாகும். அரசர்களைத் தவிசாளர்களாகக் கொண்டு இயங்கிய சங்கம் சான்றோரை உறுப்பினர்களாகக் கொண்டிருந்தது. பிற்காலத்தில் வளர்ச்சி பெற்ற மடாலயங்கள் உயர்கல்வி நிறுவனங்களாகத் தொழிற்பட்டன. சோழப் பேரரசின் வளர்ச்சிக்கும், மடாலயங்களின் வளர்ச்சிக்குமுள்ள தொடர்புகளை ஆராயும் பொழுது உயர் கல்விக்கும், சமூக அடுக்கமைப்பில் உயர்ந்தோருக்குமுள்ள தொடர்புகளை அறிந்து கொள்ளமுடியும்.

தமிழகத்தில் இயங்கிய நிலாப் பள்ளிக்கூடங்களும், பட்டறைப்பள்ளிக்கூடங்களும், (ஜெயராசா,சபா,தமிழர் உளவியலும் கல்வியும், 2001, ப. 209) சமூகத்தின் அடித்தளத்து மக்களுக்குரிய கல்வி அனுபவங்களை வழங்கின. நிலாப்பள்ளிக்கூடங்களில் ஆசிரியர் வீட்டு முற்றத்திலே கூடிய சமானிய மக்களுக்கு புராணக்கதைகளையும் உயர்ந்தோரது அனுபவங்களையும் செவி வழியாகக் கற்றுக் கொடுத்தனர். இது ஒருவகையான நிலாப்பள்ளிக்கூடம். இன்னொரு வகையான நிலாப்பள்ளிக்கூடம் உடற்கல்வியுடன் இணைந்ததாக அமைந்தது, படையாட்சிகளைக் கற்றல், வாட்பயிற்சி, வேல்எறிதல், சிலம்படி, முதலியவை குருவின் இல்லமுன்றிலே நிலாக்காலங்களிலே கற்பிக்கப்பட்டன. அழகியல் சார்ந்த நிலாப்பள்ளிக்கூடங்கள் மூன்றாவது வகையாக அமைந்தன. குருவின் இல்லத்தில் இராக்காலங்களில் ஆடல், பாடல், கூத்து, கருவி இசை, முதலியவற்றைக் கற்கும் அமைப்புக்களும் காணப்பட்டன.

பட்டறைப்பள்ளிக்கூடங்கள் மரவேலை, உலோகவேலை, முதலியன இயங்கும் இல்லங்களிலே இடம்பெற்றன. அனுபவமுள்ள மூத்தோரிடமிருந்து இளையவர்கள் தொழில்சார் அனுபவங்களைச் செயல் முறையாகக் கற்றுக் கொண்டனர். இங்கே ஆசிரியர் "மூப்பர்" என அழைக்கப்பட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழகத்திலே காணப்பட்ட திண்ணைப்பள்ளிக் கூடங்கள் எக்கால கட்டத்திலே தோற்றம் பெற்றவை என்பது திட்டவட்டமாக அறியப்படவில்லை. இவை மேலைப்புலப் பள்ளிக்கூட ஒழுங்கமைப்புக்குச் சமாந்தரமாகத் தோற்றம் பெற்ற தாய்மொழிவழிக் கல்வி ஒழுங்கமைப்பு என்று கொள்ள இடமுண்டு.

திண்ணைப் பள்ளிக் கூடங்களும், நிலமானிய சமூக அமைப்பின் உயர்ந்தோராகிய விளைநிலமுடையோருக்குரிய கல்வி ஒழுங்கமைப்பு ஆயிற்று. இங்கே ஆசிரியரது கல்விச் சேவைக்குப் பயனீடாக தானியங்களே வழங்கப்பெற்றன. பயிர்ச்செய்கை மரபு வேட்டையாடல் மரபுக்கு முரணாக அமைந்தது. வேட்டையாடல் மரபில் கொல்லல் நியாயமாகக் கற்பிக்கப்பட்டது. பயிர்ச் செய்கை மரபிலே கொல்லாமை ஓர் உயர்ந்த விழுமியமாகக் கற்பிக்கப்பட்டது. பயிர்ச் செய்கைப் பண்பாட்டிலே தோன்றிய திண்ணைப் பள்ளிக்கூடங்களில் மிகவுயர்ந்த விழுமியமாக கொல்லாமை வலியுறுத்தப்பட்டது.

சமூக நிரலமைப்பின் வளர்ச்சி அறிவின் அமைப்பிலும் தாக்கங்களை ஏற்படுத்தியது. எழுத்துவடிவில் அமைந்த அறிவு உயர்ந்தோருக்கு உரியதாயிற்று. வாய்மொழி வடிவில் அமைந்த அறிவு தாழ்ந்தோருக்கு உரியதாயிற்று.

எழுத்துவடிவில் அமைந்த அறிவைக் கட்டிக்காக்க இலக்கணவிதிகள் உருவாக்கப்பட்டன. இலக்கணங்கள் மீறப்பட முடியாதவை என்ற வற்புறுத்தல்களும் மொழியப்பெற்றன. எழுத்தறிவுக்குச் சொந்தமான உயர்ந்தோருக்கே உலகம் உரித்தானதாகக் கூறப்பட்டது.

உயர்ந்தோரின் அங்கீகாரம் பெறுதலும், நூல்வழிக் கூறியவற்றை மறுப்பின்றி ஏற்க வேண்டும் என்ற வற்புறுத்தல்களும் எழுந்தன.

"ஆயிர முகத்தா னகன்ற தாயினும்
பாயிர மில்லது பனுவலன்றே"
"எப்பொரு ளெச் சொலினெவ்வாறு யர்ந்தோர்
செப்பினரப்படிச் செப்புதன் மரபே"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற நன்னூல் பாயிரம் மேற்கூறிய கருத்தை மீள வலியுறுத்தும்.

சமூக வளர்ச்சியின் பன்முகமாகிய இயல்புகள் கல்வி இயக்கத்திலும் பன்முகமாகிய தெறிப்புக்களை ஏற்படுத்துதல் பழந் தமிழர்களின் கல்விமரபை ஆராயும் பொழுது தெளிவாகின்றது. ஒடுக்குதல், ஒடுக்கப்படுதல் என்ற பண்புகளுக்குக் கல்வி முறைமை துணைநிற்றலும் பழந் தமிழர்களது கல்விச் செயற்பாடுகளை ஆராயும் பொழுது மேலுயர்ந்து வருகின்றது.

## References


1. புறம்
2. திருக்குறள்
3. தொல்காப்பியம்
4. கலித்தொகை.
5. மணிமேகலை
6. நன்னூல்
7. Mookerye (1972) Ancient Indion Education, delhi motilor Banarsidars
8. Pillai J.K (1972) Educational System of the Ancient Tamils Tinnevely, The South India, Saiva siddhanta works publish ing society
9. Subramaniam S.V. and mahadevan, V.R (ed) (1986) Hentage of the Tamils Education and vocation madras, Inteval Institute to Tamil studies




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர்களை முகாமைத்துவம் செய்தல்.

மா. கருணாநிதி

பாடசாலைச் செயற்பாடுகளின் வெற்றிக்கு பாடசாலைகளில் கிடைக்கும் மனித மற்றும் பௌதீக வளங்களின் திட்டமிட்ட பயன்பாடு அடிப்படையாக அமைகிறது. குறிப்பாக ஆசிரியர்களினதும், ஏனைய பணியாளரதும் ஒத்துழைப்பு இங்கு முக்கியமாகக் கருதப்படுகின்றது. கல்விமுறைமையைப் பொறுத்தவரையில் குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர்களுக்கு உதவும் பொருட்டுப் பாடசாலைகளிலே பல்வேறு நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய தேவை அதன் முகாமைத்துவத்தின் முன்னுள்ள பொறுப்பாகும். ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் அவர்களுடைய தொழின்மை மேம்பாடு கருதி நிறுவன அடிப்படையிலான ஆசிரியர்கல்வி, குறுங்கால மற்றும் நீண்டகாலப் பயிற்சிகள், செயலமர்வுகள் எனப் பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன ஆயினும் இத்தகைய முயற்சிகளின் விளைவுகள் ஆசிரியரின். வினையாற்றலில் எதிர்பார்த்த பலாபலன்களை தராத நிலைமைகள் பெரிதும் அவதானிக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர் வினையாற்றலில் காணப்படும் சிறந்த விடயங்களையும் அல்லாதனவற்றையும் அறிந்துகொள்வதற்கு ஆசிரியர் ஆற்றும் பணிகள் பற்றிய மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுகின்றன. சிறந்த வினையாற்றலுடன் கூடிய ஆசிரியர்கள் கூட சில விடயங்களில் அல்லது சில சந்தர்ப்பங்களில் மற்றையோரிலும் பார்க்க குறைந்தமட்டத்தில் வினையாற்றலை வெளிப்படுத்துகின்றனர். என்ற காரணத்தினால், குறைந்த வினையாற்றல் கொண்ட ஆசிரியர் (Poorly Performing teachers) என்ற சொல்லால் பொதுவாக எல்லா நிலைகளிலும் செயற்படுமாற்றல் குறைந்தவர்களை அல்லது திருப்தியற்ற முறையில் செயற்படுபவர்களைக் கருதும். (Brair Fidler and Tessa atton, 1999) ஒர் ஆசிரியர் தனது பணிகளிலே தேர்ச்சியுடையவரா அல்லது இல்லையா எனக் கண்டறிவதற்குப் பல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மதிப்பீட்டுத் திட்டங்கள் நடைமுறையிலுள்ளன. ஆயினும் தேர்ச்சியை மட்டும் அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யும் பொழுது, அவை வினையாற்றல் பற்றிய முடிவுகளை முழுமையாக வெளிக் கொணர்வதில்லை. ஏனெனில் ஏற்றுக் கொள்ளக்கூடிய தராதரங்களுக்கு ஏற்றவாறு ஆசிரியரின் செயற்பாடுகள் இடம் பெறுவதற்கு வேறு பல காரணங்கள், வாய்ப்புகள் உள்ளனவா என்பதையும் கவனத்திற் கொள்ள வேண்டும். ஆசிரியர் ஒருவர் தமக்கு இட்ட பணிகளை எவ்வளவு தூரம் திருப்திகரமாகச் செய்துமுடிகிறார் என்ற விடயத்தினை ஏனைய ஆசிரியர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தலும் அத்தியாவசியமானது.

குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஒர் ஆசிரியர் ஏனையவரிலும் பார்க்க எப் பொழுதும் குறைந்து காணப்படுவார் எனவும் கூற முடியாது. குறிப்பாக பெரிய பாடசாலைகளிலே நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் சேவையாற்றும் பொழுது பெரும்பாலானவர்கள் தேர்ச்சியுடையவர்களாக இருக்கவேண்டும் என எதிர்பார்க்கும் பொழுது, ஒரு சில ஆசிரியர்கள் இவ்வகையினராக இருக்கக்காணலாம்.

குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர்களை இனங்காண்பதற்கு பல்வேறு வழிமுறைகள் உதவுகின்றன. அவற்றுள் முக்கியமானவை சில பின்வருமாறு.

i). பாடசாலைப் பரிசோதனை
ii). பெற்றோர் தெரிவிக்கும் முறைப்பாடுகள்
iii). பரீட்சைப் பெறுபேறுகளில் காணப்படும் இடைவெளி
iv). குறித்த ஆசிரியருக்கு உள்ள பிரச்சினைகள்.
iv). ஏனைய ஆசிரியரின் அவதானங்கள்.

இலங்கையிலே பாடசாலை மட்டத்தில் அதிபர்கள் மேற்கொள்ளும் மேற்பார்வையும், அவதானங்களும் கலந்துரையாடல்களும் இத்தகைய ஆசிரியரை இனங்காண்கின்றன. அடுத்த கட்டத்தில் வலய மற்றும் கோட்டக் கல்விக் காரியாலயங்களின் குழுமுறைப்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிசோதனைகள் உதவுகின்றன. ஆயினும், மேற்கூறிய விடயங்கள் திட்டமிட்ட முறையில் ஒழுங்காக நடைபெறுதில்லை. மேற்பார்வை மற்றும் அவதானங்களின் போது. கண்டறிந்தவற்றை மேற்பார்வை செய்யும் உத்தியோகத்தர்கள் அழுத்தமாக எடுத்துக் கூறுவது குறைவு. குறைபாடுகள் வெளிக்கொணரப்படாத போக்கு நிலவுகிறது. மறுபக்கத்திலே குறைபாடுடையவரைத் திருத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் குறைவு. அவ்வாறு எடுக்க முற்படும் சந்தர்ப்பங்களில் அரசியல் மற்றும் வெளியார் தலையீடுகள் தடையாக அமைந்துவிடுகின்றன. இதனால் மேற்பார்வை மற்றும் பரிசோதனைகளின் பயன்பாடு எதிர்பார்த்த பலாபலன்களைத் தருவதில்லை.

ஐக்கிய இராச்சியத்தில் விசேட பாடசாலைப் பரிசோதனைகளில் ஈடுபடும் உத்தியோகத்தர்கள் பாடசாலைகளில் இடம் பெறும் பணிகள் பற்றி ஒருவாரகாலம் தொடர்ச்சியாக அவதானிப்புகளை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிப்பார்கள் (Brain fidler 1999) இவர்களுடைய அவதானங்கள் பின்வரும் விடயங்களை உள்ளடக்கியதாக இருக்கும்.

i). பாடசாலையில் வழங்கப்படும் கல்வியின் தராதரம்
ii). மாணவர் கல்வியடைவுகளின் தராதரம்
iii). பாடசாலைக்கு வழங்கப்படும் நிதியை முகாமைத்துவம் செய்தல்.
iv). மாணவர் ஒழுக்கம், சமூக கலாசார விருத்தி

இவற்றோடு குறிப்பாக ஆசிரியரின் கற்பித்தல் செயற்பாட்டை மேற்பார்வை செய்யும் பொழுது, அவர்களுடைய கற்பித்தலின் தராதரம், கற்பித்தல் நடைபெறும் பொழுது மாணவரின் பதிற்குறி (Response) குறிப்பிட்ட ஆசிரியர் கற்பிக்கும் பாடங்களில் பாடசாலை மட்டத்திலும் தேசிய மட்டத்திலும், மாணவரின் அடைவுகள் என்பவற்றோடு ஆசிரியரின் தொழின்மை முன்னேற்றங்களும் கவனத்திற் கொள்ளப்படுகின்றன.

மேற்கூறிய விடயங்களின் அடிப்படையில் தயாரிக்கப்படும் அறிக்கைகள் ஒவ்வொரு ஆசிரியருக்கும் அறிவிக்கப்படும். குறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர், தலைமை ஆசிரியரின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றார். மேலும் இந்த அறிக்கையிலே குறைந்த தராதரத்தில் உள்ள பாடங்கள் பற்றிய விமர்சனங்களும் இடம் பெறுகின்றன.

குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர்களை இனங்காண்பதற்கு ஓர் ஆசிரியரின் கற்பித்தல் பற்றியும், ஏனைய பணிகள் பற்றியும், பெற்றோர் தெரிவிக்கும் முறைப்பாடுகளும் முக்கியமான அளவுகோலாக உள்ளன. இவை பெரும்பாலும் மாணவரின் அடைவுகளில் ஆசிரியரின் செயலாற்றல் போதாமை, மாணவரின் நடத்தைகளில் ஆசிரியரின் கவனமின்மை என்றவகையில் அமைகின்றன. கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் தற்போதைய கற்பித்தலில் குறைபாடுகள் நிலவுகின்றன என்ற கருத்தினைப் பெற்றோர் கொண்டிருப்பதும் இதற்குக் காரணமாகலாம். ஆயினும் இன்றைய பெற்றோர் தமது பிள்ளைகளின் கல்வியில் கூடுதலான அக்கறையும், விழிப்புணர்வும் கொண்டுள்ளனர். பிள்ளைகளின் கல்விபற்றிப் பேசுவதற்கான உரிமையையும் வெளிப்படுத்துகின்றனர். தாம் எடுக்கும் முயற்சி, கல்விச்செலவு ஆகியவற்றுக்கு ஏற்ப பிள்ளைகளின் அடைவுகள், முன்னேற்றங்கள் இருக்க வேண்டும் என்பதை விரும்புகின்றனர். அது மட்டுமன்றி மிகவுயர்ந்த எதிர்பார்ப்புகள், அபிலாசைகளுடன் பிள்ளைகளைப் பாடசாலைகளுக்கு அனுப்புகின்றனர்.

மேற்கூறிய பின்னணியில் பெற்றோர் தெரிவிக்கும் முறைப் பாடுகளுக்கு விடையளிக்க வேண்டிய பொறுப்பு பாடசாலைகளுக்கு உண்டு. இதில் கவனம் செலுத்தாத, பாராமுகமாக இருக்கும் பாடசாலைகள் நன்மதிப்பை இழந்து விடக்கூடும்.

இலங்கையில் விசுவரூபம் எடுத்துள்ள முக்கியமானதொரு பிரச்சினையாகப் பாடசாலைகளைத் தெரிவுசெய்தலைக் குறிப்பிடலாம் - பாடசாலைகள் பொதுப்பரீட்சைகளில் பெறும் பெறுபேறுகளை அடிப்படையாகக் கொண்டு இத்தகைய தெரிவுகள் இடம் பெறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறுபக்கத்தில் ஆசிரியரின் வினைத்திறனை அறிந்துகொள்வதற்கும் பொதுப் பரீட்சைகளின் பெறுபேற்றுப் பகுப்பாய்வுகள் உதவுகின்றன. க.பொ.த (உ.த), க.பொ.த (சா.த), ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சைகள் இங்கு முக்கியத்துவம் வாய்ந்தவை. இவ்வாறான பரீட்சைப் பெறுபேறுகளைத் தீர்மானிப்பதிலே ஏனைய அக, புறக் காரணிகள் செல்வாக்குச் செலுத்தினாலும் நேரடியான கவனத்துக்கு உள்ளாவோர் ஆசிரியரே.

இவற்றோடு, ஓர் ஆசிரியரின் வினையாற்றல் குறைபாட்டினை அவருடன் சேர்ந்து பணியாற்றும் ஆசிரியரின் மதிப்பீடுகள் மூலமும் கண்டறியலாம். குறைபாடுகளைக் கண்டறிவதற்குச் சக ஆசிரியரின் மதிப்பீடுகள் முக்கியமானவையாக இருந்தாலும், இலங்கைப்பாடசாலைகளில் இவை ஊக்குவிக்கப்படுதல் குறைவு.

ஆசிரியர்கள் குறைந்த மட்டத்திற் செயற்படுவதற்குப் பல காரணிகள் அடிப்படையாக உள்ளன. இக் காரணிகள் தனியாள் சார்ந்தவையாகவும், நிறுவனம் சார்ந்தவையாகவும் அமைகின்றன. பாடசாலைகளில் ஆசிரியருக்கு வழங்கப்படும் வேலைகளும், அதற்குரிய சந்தர்பங்களும் ஆசிரியரால் எவ்வாறு கையாளப்படுகிறது என்பதனைப் பொறுத்து வினையாற்றல் தீர்மானிக்கப்படுகின்றது. (Everard + Geoffrey morris 1996) முதலில் தனியாள் சார்ந்த காரணிகளை நோக்கும் பொழுது அகவயமாக அல்லது புறவயமாக அமைகின்றன. தொழில்சார் நடத்தை சார்பாக உள்ளன. மேலும் குறிப்பிட்ட ஆசிரியரின் தொழிற்றிருப்தி, செயல்முறைகளுடன் கூடிய தொழில்நுட்பப் பிரச்சினைகள், பாடசாலையிலே ஏனைய ஆசிரியருடன் கொண்டிருக்கின்ற உறவுகள், ஊடாட்டங்கள், தன்னைத் தானே முகாமைத்துவம் செய்யும் திறன் என்பன முக்கியமானவை. பாடசாலைக் காரணிகள் என்றவகையில், அதிபரின் போதனாதலைமைத்துவம், பாடசாலை வளப்பயன்பாடு, கற்பித்தல் கலாசாரம், கற்பித்தல் திட்டங்களுக்கு வழங்கப்படும் உதவிகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம், இவை வாய்ப்பாக இல்லாத சூழலில் வினையாற்றல் குறைவாக இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறைந்தமட்ட வினையாற்றல் கொண்டவர்கள் மீது கவனமெடுக்க வேண்டியவர், நடவடிக்கை எடுக்க வேண்டியவர் யார் என்பது முதலில் எழுகின்ற வினாவாகும். இந்தப் பொறுப்பு முக்கியமாகப் பாடசாலையின் தலைவர் / அதிபரைச் சாருகின்ற போது அவர் சிக்கலான நிலைமைக்கு உள்ளாகின்றார். எனினும், குறிப்பிட்ட ஆசிரியர் பற்றி நேரகாலத்துடன் நடவடிக்கை எடுக்காவிட்டால் அதனால் வரக்கூடிய பாதிப்புகளுக்குப் பாடசாலையே பொறுப்பினை ஏற்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறது. ஒரு நடவடிக்கையைப் பகிரங்கமாக எடுப்பதில் அதிபர் எதிர்நோக்கும் பிரச்சினைகள், மற்றும் எத்தகைய நடவடிக்கை எப்பொழுது எடுத்தல் வேண்டும் என்னும் விடயங்களில் அதிபர் புத்திசாலித்தனமாகச் செயற்படுதல் வேண்டும்.

பாடசாலையைப் பொறுத்தவரையில் ஆசிரியரை முகாமைத்துவம் செய்வதற்கு மிகப் பொருத்தமான நிறுவன ஒழுங்கமைப்பு ஏற்படுத்தப்படுதல் வேண்டும். இவற்றுள் குறைந்த மட்டத்தில் வினையாற்றுவோரைக் கண்காணிப்பதற்கான ஏற்பாடுகளை உள்ளடக்குதல் வரவேற்புக்குரியது.

கலைத்திட்ட வரைவாளர்கள் வகுத்துக் கொடுக்கும் கொள்கைகள், இலக்குகளுக்கு அமையவே ஆசிரியர்களின் செயற்பாடுகள் பொதுவாக இடம்பெறுகின்றன. குறைந்த மட்டத்தில் செயற்படுவோருக்குப் பொதுவான இலக்குகள் வாய்ப்பாக இல்லாவிட்டால், அவற்றுக்கு மேலதிகமாக ஒவ்வொரு பாடசாலையும் தமது ஆசிரியர்களுக்கான விசேட இலக்குகளை வகுத்துக் கொண்டு ஊக்குவிப்புகளை வழங்குதல் வேண்டும். ஆசிரியர் தொழிலில் புதிதாகச் சேரும் பொழுது நன்றாகச் செயற்பட்டு காலப்போக்கில் சில காரணங்களால் குறைவாகச் செயற்படுவோரும் உள்ளனர். இதற்குரிய காரணங்களை அதிபர்கள் ஆராய்ந்து, அதற்கேற்ப மாற்றங்களைச் சிந்தித்தல் அவசியமானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில ஆசிரியர்களைப் பொறுத்தவரையில், அவர்களது வினையாற்றலில் குறைபாடுகள் நீண்டகாலமாக நிலவிவந்துள்ள போதும் அக்குறைபாடுகள் அண்மையிலேயே முகாமைத்துவத்தினால் அறியப்பட்டிருக்கலாம். ஆசிரியர் வினையாற்றல் பற்றிய பதிவேடுகள் பேணப்படாத பாடசாலைகளில் இத்தகைய நிலைமைகள் உருவாவது இயல்பு. பாடசாலைகளில் ஆசிரியர் பற்றிய பதிவேடுகள். பேணப்பட வேண்டுமென வலியுறுத்தப்படுகின்ற பொழுதும் அதில் கவனம் செலுத்தும் அதிபர்கள் மிகக் குறைவு.

பாடசாலைகளில் உள்ள சகல பணிகளும் திருப்திகரமாக மேற்கொள்ளப்பட் வேண்டும் இது சகல ஆசிரியர்களுக்கும் ஏற்புடையது. ஒரு பணியை மேற்கொள்ளும் போது அப்பணியில் குறைகள் காணப்படவில்லையெனில் அப்பணியைத் தொடர்வதில் பிரச்சினையில்லை. பாடசாலைகளைப் பொறுத்தவரையில் வெவ்வேறு நிலைகளில் பணிகளையாற்ற முற்படும் பொழுது, சிறந்த மட்டத்தில் வினையாற்றியவர்களும் குறைந்த மட்டத்தில் செயற்படும் வாய்ப்புண்டு இலங்கையின் கல்விமுறையைப் பொறுத்தவரையில், அடிக்கடி ஏற்படும் கலைத்திட்ட மாற்றங்களின் போது, புதிய அறிமுகங்கள் பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன. தாம் முன்பு ஆற்றிய பணிகளிலும் பார்க்கப் புதிய பணிகளை ஆற்ற வேண்டும் எனப் பணிக்கப்படும் பொழுது, அவ்வாறான நிபந்தனைகளின் கீழ் அனுபவம் மிக்க ஆசிரியர்களும் உயர்தராதரத்தில் செயலாற்ற முடியாத நிலை தோன்றுகிறது. உதாரணமாக பாடசாலைத் தளநிலைக் கணிப்பீடு நடைமுறைப்படுத்தப்படும் இக்காலகட்டத்தில் நீண்டகால அனுபவம் உள்ள ஆசிரியர்கள் நன்கு செயற்பட முடியாதவர்களாக இருக்கின்றமையைக் காணமுடிகின்றது.

பாடசாலைப் பணிகள் சில மிகக்கடினமான கூறுகளைக் கொண்டிருக்கின்றன. இத்தகைய பணிகள் சில காலத்தின் தன்மையினால், மேலும் அழுத்தங்களுக்கு உள்ளாகின்றன. பாடசாலை முகாமைத்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவமானது பொருத்தமான மாற்றுவழிகளை ஏற்படுத்தமுடியாமற் போனால், குறைந்த மட்டத்திலான செயலாற்றல்களைக் கட்டுப்படுத்த முடியாத நிலை தோன்றுகிறது. பாடசாலைகளின் ஒழுக்கப் பெறுமானங்கள் சிதைவடைவதனால், பாடசாலைக்கல்வி நிலையில் ஏற்படும் பாதிப்புகள் ஆசிரியர் வினையாற்றலையும் கட்டுப்படுத்துகிறது. பாடசாலைகள் ஆசிரியரின் வகைசொல்லும் பண்பினை அதிகரிக்கும் வகையில் செயற்பட வைத்தல் வேண்டும். வகை சொல்லுமியல்பு குறைந்து செல்லும் பொழுது அது குறிப்பிட்ட ஆசிரியரை மட்டுமன்றி, ஏனைய ஆசிரியரையும் பாதிக்கும் சூழ்நிலை தோன்றலாம். ஆசிரியர் ஆற்றுகின்ற பணிகளின் வெற்றி தோல்விகளைப் பாடசாலை முகாமைத்துவம் உடனுக்குடன் வலியுறுத்தும் பொழுது வகைசொல்லும் இயல்பும் அதிகரிக்கின்றது.

ஆசிரியர் ஒவ்வொருவரும் நடத்தப்படும் விதமும் வினையாற்றலின் வெற்றி தோல்விகளுக்கு காரணமாகின்றன. இச்சந்தர்ப்பத்தில் ஓர் அதிபர் ஆசிரியர்களுடன் கொண்டிருக்கும் தொடர்புகள், வேலைகளைப் பகிர்ந்தளிக்கும் விதம் பொறுப்புக்களைப் பகிரும் முறை, வெகுமதி மற்றும் தண்டனை வழங்குவதில் நடுவுநிலைமை பேணுதல், தொழின்மை அபிவிருத்திக்கான ஊக்குவிப்பு பயிற்சிகளில் பங்குபற்றச் செய்தல் போன்றவை முக்கியமானவை. இவை அதிபரின் தலைமைத்துவத்துடன் தொடர்புடைய விடயங்களாகும். இத்தகைய காரணிகளுடன் குறைந்த மட்டத்தில் வினையாற்றும் ஆசிரியர்களுடன் உள்ள தொடர்பினை அதிபர் நாள்தோறும் அவதானித்து வருதல், திட்டமிட்ட ஒழுங்குமுறையான மேற்பார்வை, கலந்துரையாடலும் ஆலோசனை வழங்குவதும் நன்மைகளை ஏற்படுத்தும்.

நல்ல முறையில் செயலாற்றிவந்த ஆசிரியரில் திடீரென மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை அதிபர் காண்பாராக இருந்தால் அதற்குரிய காரணங்களை உடன்தேடியறிதல் வேண்டும். இதற்கு ஆசிரியரிடத்தில் உண்டாகும் மன அழுத்தங்கள், குடும்பப் பாதிப்புகள், சமூகப் பாதிப்புகள், உளவியற் பாதிப்புகள் போன்றவை அடிப்படையாக இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகையவர்களுக்கு தகுந்த உதவிகளை வழங்கும் மனவியல்பு அதிபரிடம் காணப்படுதல் வேண்டும். மேலும் ஆசிரியர்கள் சிலர் குறைந்த மட்டத்தில் வினையாற்றுபவர்களாக இருக்க வேண்டும் என்பதும் நியதியல்ல. ஆயினும், நோய்வாய்ப்பட்டவர்கள், உணர்ச்சி வசப்படுபவர்கள், விரைவில் கோவப்படுபவர்கள், மற்றவர்கள் மீது குறைகள் காண்பவர்கள், தமக்கு எவ்வித அதிகாரமும் இல்லையெனக் கருதுபவர்கள், பொறுப்புகளை ஏற்க மறுப்பவர்கள், எவ்வித பொறுப்புமின்றி இருப்பவர்கள் எதிலும் எதிர்மறையான சிந்தனைப் போக்குடையவர்கள், பாடசாலை முகாமைத்துவத்துக்குச் சவாலாக இருப்பவர்கள் இவையாவற்றையும் கருத்தில் கொண்டு குறைந்த மட்டத்திலான வினையாற்றலைச் சீர செய்ய முற்படுதல் பயன்தரும்.

## References


1. ALLAN, C ORNSTEIN (1995) Strategies for Effective Teaching, Brow and Bench markers, USA.

2. BRAIN FIDLER et al (1999) Poorly perfor – Ming Staff in schools; capability competence and motivation, routledge, London and Newyork

3. EVERARD, K.B AND GEOFFREY MORRIS (1996) Effective school management. Paul Chapman publishing Ltd, London.

4. FONTANA DAVID (1995) psychology for Teachers Macmillan, London.


**கல்விச் செய்தி**

"ஊடகமும் தொடர்பாடல் கற்கையும்" பாடம் 2007 இல் நாடளாவியரீதியில் பாடசாலைகளில் தரம் 10,11க்கு கல்வியமைச்சினால் அறிமுகம் செய்யப்படுகின்றது.

*– யாழ் நிருபன் –*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்பள்ளிகளில் தொடர்பாடல் திறன்கள்

மா.செல்வராஜா

**சா**தாரணமாக நாம் ஏனையவருடன் தொடர்பாடல்களை ஏற்படுத்திக் கொள்வதற்கு ஊடகமாகப் பேச்சு மொழியையே பயன்படுத்துகின்றோம். இதன் மூலம் எமது சிந்தனை, உணர்வு, கருத்து, செய்தி, எச்சரிக்கை போன்றவற்றை வெளிப்படுத்துகின்றோம்.

நாம் பயன்படுத்தும் சொல்சாராச் செயல்கள், முகபாவனைகள் போல், இசை, அசைவு, நாடகம், கவிதை, நடனம் முதலியனவும் ஒருவருடன் ஒருவர் தொடர்பாடல் கொள்ளும் வழிமுறைகளாகும். இங்கு கதை, நாடகம், பாடல், தாளலயம், உரையாடல் என்பன மூலம் எவ்வாறு மொழித் திறன்களை விருத்தியாக்க முடியும் என்பதை நோக்குவோம்.

## மொழி எழுத்தறிவூடாகத் தொடர்பாடல்.

மொழியில்லாமல் எம்மால் சிந்திக்க முடியாது. மொழி சிந்தித்தலுக்கான ஒரு கருவியாகும். குழந்தைகளோ பேசப்பழகாத பருவத்தில் தாய் முதலியோருடன் முகபாவனை, ஓசைகள் என்பவற்றினூடாகத் தொடர்பாடலை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர். குழந்தை தன் வாழ்வின் முதல் சில வாரங்களிலிருந்தே முதியவர்களின் ஈடுபாட்டுக்குப் பதில் ஈடுபாட்டைக் காட்டுதலுண்டு என பவர் (Bower - 1977) முதலிய அறிஞர்கள் கருதுகின்றனர்.

பாலர் பள்ளிக்கு வரும் குழந்தைகளில் பெரும்பாலானோர் எளிமையான அறிவுறுத்தல்களை விளங்கிக் கொள்கின்றனர். ஒரு குழந்தை தனது முதல் மூன்று வயதுக் காலத்தில் கற்றுக் கொள்ளும் மொழியின் அளவு மிகக் கணிசமானதாகும். மற்றும் குழந்தைகள் முன்பள்ளிக்கு வருகின்ற போதே பல்வகைத் தன்மை கொண்ட அனுபவங்களையும், அறிவையும் உடன் கொண்டு வருகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தோடு கருத்துக்களையும், விளக்கங்களையும் மேம்படுத்திக் கொள்கின்றனர். எனினும் அவர்கள் எதிர்கொள்ளும் பல வருடங்களுக்கும் அவர்களைப் பொறுத்து மொழி வளர்ந்து கொண்டேயிருக்கின்றது. கரேல் சொம்ஸ்கி (Carol Chomsky - 1969) குறிப்பிடுவது போல் ஒன்பது வயதிற்கூட சில பிள்ளைகள் சில வகை வசன அமைப்புக்களில் இடருறுகின்றனர்.

அதிகமான முன்பிள்ளைப் பருவத்தினர் சொல் சாராத முகபாவங்களையே மேற்கொள்கின்றனர். அப்போது அவர்கள் தமது கருத்துக்களைச் சொற்கள் மூலம் வெளிப்படுத்த முயல்வதைத் தவிர்த்து, சுட்டிக்காட்டியோ அல்லது முதியவர்களை நாடியோ நிற்கின்றனர். இவர்களது பேச்சு முதிர்ச்சி அற்றதாக காணப்படும்.

சொற்புணர்ச்சி தெளிவற்றிருக்கலாம். பேசும்போது, ஓசைகளைப் பிரதியீடு செய்யலாம். 'கார்' என்பதைத் 'தார்' எனக் கூறலாம் 'நான் இதைச் செய்வேன்' என்பதை 'எனக்கு இதைச் செய்வேன்' எனலாம். இறந்தகால வினைச் சொல்லைப் பயன்படுத்த வேண்டுமென்ற அவசியத்தை உணர்ந்திருந்தாலும் எதிர்கால வினைச்சொல்லைப் பயன்படுத்துதல் குறைவாகவே இருக்கும்.

இலக்கண விதிகள் மிகைப் பொதுமையாக்கலுக்கு உட்படும் தன்மை காணப்படும். இதனால் பொருத்தமற்ற வினைச்சொற்கள் ஒழுங்கமைக்கப்படுகின்றன. அவர்களது சொற்சேகரிப்பினுள் பிரதிப்பெயர் முன் இடைச் சொல், வினையுரிச் சொல் என்பவற்றின் அறிமுகத்துடன் பேச்சு முதிர்ச்சித் தன்மை பெறத் தொடங்கும்.

பெண் குழந்தைகள் பரந்த சொற்களஞ்சியத்தை லாவகமாகப் பயன்படுத்துவர். இருந்த போதிலும் குழந்தைகள் செவிமடுக்கும் பின்னால் 'மேல்', 'கீழ்' போன்ற சொற்களை வெறுமனே போலச் செய்யாமல் இருப்பதனையும், இச் சொற்களின் உண்மையான பொருள் விளக்கத்தைப் பெற்றுள்ளனர். என்பதையும் ஆசிரியர்கள் சரிபார்த்துக் கொள்ளல் வேண்டும். பொருத்தமான சந்தர்ப்பங்களில் பொருத்தமான சொற்களை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவர்கள் பயன்படுத்துவதாகத் தென்பட்டாலும், அவற்றின் அடிப்படை எண்ணக்கருக்களை உண்மையாக விளங்கிக் கொள்ளாமலிருக்கலாம். அவை தெளிவுபடுத்தப்பட வேண்டும்.

குழந்தைகளிடம் முதிர்ச்சியின்மை காணப்பட்டாலும் நான்கு வயதுக் குழந்தைகளால் சொற்றொடர்களைப் பயன்படுத்தவும், வினைச்சொற்களின் காலங்களை மாற்றவும், தெரிவு செய்யவும் முடியும். இதன் பயனாக முன்பள்ளிகளில் குழந்தைகளின் காலம் பூர்த்தியாகும் பருவத்தில், கலந்துரையாடலின்போது உரையாடல்களை ஆரம்பிக்கவும், தொடரவும் முடிவதுடன் பிழையான விளக்கம் ஏற்படுகையில் தமது கருத்துக்களைத் தெளிவுபடுத்திக் கூறவும் முடிகிறது.

சில கல்வியியளாளர்களால் முன்பள்ளிக் குழந்தைகளின் பேச்சானது அகமையமானது எனக் கூறப்படுவதுடன்' அவர்களால் கேட்போரின் கருத்தியல்பைக் கவனிக்க முடிவதில்லை என நீண்ட காலமாகக் கருதப்பட்டு வந்தது. ஆயினும் முழுமையாகச் சாதிக்க முடியாவிட்டாலும் கூட கேட்போரின் உளநோக்கின் அடிப்படையில் குழந்தைகள் தமது மொழியை வடிவமைக்க முயல்கின்றனர். என்பது வகுப்பிலுள்ளோர்க்குத் தெரியவருகின்றது.

பீற்றர்சன் (Menig - Peterson - 1983) என்பவர் விபரிக்கப்பட்ட நிலைமை பற்றிய கேட்போரின் அறிவை சில மூன்று, நான்கு வயதுக் குழந்தைகள் கருத்தில் கொள்கின்றனர் என எடுத்துக் காட்டியுள்ளார். அது மாத்திரமன்றி, பேசுபவரதும் கேட்போரினதும் உள இயல்புகளுக்கு இடையே வேறுபாடுகள் உள்ளன என்பதையும், முன்பள்ளி முடிவுக்காலப் பிள்ளைகள் சிலர் உணர்ந்து கொள்கின்றனர் எனவும் தெரிகிறது.

பேசுதலிலும் செவிமடுத்தலிலும் குழந்தை பெறுகின்ற பயிற்சியின் அளவிலேயே மொழிவிருத்தி தங்கியுள்ளது. மொழியறிவை விருத்தியாக்குவதற்கும், சொந்த அனுபவங்களைச் சிந்தித்து விளக்கமளிப்பதற்கும் சிறந்த முதியோருடன் இடைவினையாற்றல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவசியம். ஒவ்வொரு குழந்தைகளும் வெவ்வேறுபட்ட மொழியனுபவப் பின்னனியுடனேயே பள்ளிக்கு வருகின்றது. ஆயினும் வகுப்பறையில் மொழியைக் கையாள்வதற்கு வேண்டிய நம்பிக்கைக் குறைவோடும், அதற்கான திறன்கள் குன்றியும் சில குழந்தைகள் காணப்படுகின்றனர்.

வகுப்பில் தெளிவாகப் பேசமுடியாது இடருறும் குழந்தைகள் மொழியாட்சியில் தாம் கொண்டுள்ள திறனைப் புலப்படுத்தும் உரையாடல்களில் வீட்டிலுள்ளபோதே ஈடுபட முடியுமென கோர்டன் வெல்ஸ் (Gordon well - 1987) பிரிஸ்டலில் நடாத்திய ஆய்வு மூலம் கண்டறிந்தார்.

இதேபோல பாலர் பள்ளியில் இடம்பெறுவதாகக் கருதப்படுவதிலும் பார்க்க கூடியளவான உரையாடலும், கற்றலும் வீட்டில் நடைபெறுவதாக, முப்பது குழந்தைகள் மேல் மேற்கொண்ட ஆய்வின் மூலம் கியூயெஸ் (Hughes - 1984) என்பவரும் கண்டறிந்தார்.

குழந்தை இரைச்சல் நிறைந்த வகுப்பறையைவிட, உளச்சலனமற்ற வீட்டுச் சூழலில் அதிக சுதந்திரத்தோடு கதைக்க விரும்புகின்றது. ஆயினும் மிகக் குறைவான மொழியாற்றலுடன் பாலர் பள்ளியில் சேர வரும் பல குழந்தைகள் இன்னும் உள்ளனர். இவ்வாறான குழந்தைகளுக்கு வகுப்பறையில் முதியோர் முக்கிய பங்களிப்பினை வழங்க முடியும்.

குழந்தைகளின் கற்றலுக்கு தாங்குதளம் ஒன்றை வழங்குவதில் மூத்தோரின் பங்களிப்பின் முக்கியத்துவத்தினை புறூனர் (Bruner) வைகொட்ஸ்கி (Vyotsky) போன்றோர் தெளிவாகக் காட்டியுள்ளனர். இதே விடயத்தை ஹயூயெஸ் (Hughes - 1997) என்பவரின் ஆய்வும் தெளிவாகக் காட்டுகின்றது.

இவ்வாய்வின் போது விவாதத்தில் பங்குபற்றுமாறு குழந்தைகள் அழைக்கப்பட்ட நிலையில், கருத்துள்ள கலந்துரையாடல்கள் உருவாகியதைக் கண்ணுற்றார். வகுப்பறை ஆசிரியர்களின் இடைவினை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயல்புகளுக்கும் உதவியாளர், பெற்றோர், முதியவர்களின் இடைவினை இயல்புகளுக்குமிடையே கணிசமான வேறுபாடுகள் காணப்பட்டதையும் கண்டார். குழந்தைகள் சுயமாகக் கற்றலில் செயல் துடிப்போடு பங்குபற்றுகின்றனர். ஆயினும் அக்கறையுள்ள ஒரு முதியவரின் உதவியால் இது மேலும் மேம்படலாம்.

குழந்தைகள் மீது ஆசிரியர் அக்கறை காட்டும் போது குழந்தைகளின் நெறிப்படுத்திய பேச்சு மீது அவர்களின் கவனம் குவியுமென ஹயூயெஸ்ஸின் ஆய்வு காட்டியது. பாலர் நிலையத்தில் பணிபுரியும் தாதிமார்கள் குழந்தைகளுக்கு அதிக பயன்தரக்கூடிய "தாங்குதளத்தை" வழங்கியிருந்தனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

மொழி விருத்தியை ஊக்குவிப்பதைப் பொறுத்து செவிமடுத்தல் என்பது பின்வரும் அம்சங்களைக் கொண்டு காணப்படுகின்றது.

i). கேட்டலின் உடல்சார் அம்சம்
ii). கற்பவரின் கவனம்
iii). கேள்விசார் தகவலை சொற்களில் அமைக்கும் ஆற்றல்

பேசுதல் என்பது மொழித்திறன் வெளிப்பாட்டுப் பகுதியில் ஒன்றாகும். இதன் அடுத்த அம்சமாக எழுத்துக் காணப்படுகின்றது. பேச்சில் பின்பருவன அடங்குகின்றன.

i). பேச்சொலிகளின் உருவமைப்பு
ii). ஒழுங்கான கருத்துள்ள வாக்கியங்களை உருவாக்குதலின் இலக்கணப்பயன்பாட்டு ஆற்றல்.
iii) பல்வேறு தேவைகளுக்காகப் பேச்சைப் பயன்படுத்தும் திறன்.

தேசிய கலைத்திட்டம், மொழி, எழுத்தறிவு ஆகியவற்றுக்கு வழிப்படுத்தும் குழந்தைகளின் கற்றலின் விருப்புக்குரிய புலப்பாடுகள் என்பனவற்றிலிருந்து செவிமடுத்தல், பேசுதல் ஆகிய இரண்டினதும் அவசியத்தைத் தெரிந்து கொள்ளலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆரம்பப் பிள்ளைப்பருவம் பாடசாலைத் தொடர்பாடல் திறன் செயற்றிட்டத்தின் ஒரு பங்காளரான ஜோன் டவ்ப் (John Tough - 1977) என்பவர் குழந்தைகளுடனான தமது இடைவினைகளின் போது ஆசிரியர்களால் மேற்கொள்ளப்படக் கூடிய உரையாடல் உபாயத்தின் பல்வேறு வகைகளை இனம் கண்டுள்ளார். அவை பின்வருமாறும்.

1. **திசைகோட்படுத்தல்** ( இவை குழந்தைகளின் கவனத்தைக் குறித்த ஒரு தலைப்பை நோக்கிச் சிந்திக்கத் தூண்டுவன. உதாரணம் எதிர்வுகூறல் காரணங்களால் கற்பனை செய்தல், சொற்கள், வினாக்கள், கருத்துக்கள், என்பன)

2. **இயலுமாக்கல்** (குழந்தையை மேலும் கலந்துரையாடல் பக்கம் நகர்த்துவதற்கு உதவும் கருத்துக்கள். இவை பின்தொடர் உபாயங்கள், குவியும் உபாயங்கள், செவ்வை பார்க்கும் உபாயங்கள் என்பனவாக அமையலாம்)

3. **செவிமடுத்தல்** (திசை கோட்படுத்தல், இயலுமாக்கல், உபாயங்கள் குழந்தைக்கு சில சிந்தனைகளைக் கொடுக்க உதவும் போது, இவ்வகை உபாயங்கள் அவர்களுக்குத் தகவல்களை, கருத்துக்களை வழங்குகின்றன)

4. **பேணுதல்** (குளந்தைகள் தொடர்ந்து பேசுவதை ஊக்குவிக்கும் நோக்குடன் வழந்கப்படும் கருத்துக்கள் இவை. பெரும்பாலான தருணங்களில் இவை சிாித்தல் அல்லது தலையாட்டுதல் என்ற வொல் சாராதவையாக அமையலாம்.)

5. **நிறைவு செய்தல்** (குழந்தைகள் இறுதியில் உளத்திருப்தி அடைய வேண்டும் என்பதனால் உரையாடலை முடிவுக்குக் கொண்டு வரவேண்டும். ஆயினும் பின்புமொரு உரையாடலுக்கான வழிக்கு இது இடமளிப்பதாக அமைய வேண்டும்.)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைப் பருவத்தினருடனான தொடர்புகளில் இந்த உபாயங்கள் கூடிய வகையில் உதவிபுரிகின்றன என்பது கண்டறியப் பட்டுள்ளது. ஆனால் அனைத்து உரையாடல்களும் ஆசிரியரால் ஆரம்பிக்கப்பட்ட முதியவர்களுடனான உரையாடல்களின் போது அதிக அளவான பரிமாற்றங்கள் இடம்பெறுகின்றமை பல ஆரம்ப கால ஆய்வுகளால் அறியப்பட்டுள்ளன.

அதேவேளை தொடர்ந்து நீடிக்கும் பயன்மிக்க உரையாடல்கள் சோடியாகச் சேர்ந்து விளையாடுகின்ற குழந்தைகளிடமே காணப்படுகின்றனவென புறூனர் (1980) கண்டறிந்தார்.

வளர்ந்தோரைவிடவும் குழந்தைகள், சிக்கலான பிரச்சினைகளைத் திருப்திகரமாகத் தமது சகாக்களுடன் இணைந்து விளங்கிக் கொள்ளும் ஆற்றலுடையவர்களாக காணப்படுவதனால் குழந்தைகள் சிறந்த ஆசிரியர்களாகி விடுகின்றனர் என்பதற்கும் ஆதாரங்கள் உள்ளன.

பெரும்பாலும் மொழி விருத்தியை ஊக்குவிக்கும் முக்கிய காரணி வகுப்பறைச் சூழலாகும். முதியோர் எல்லாம் தெரிந்தவர் என கருதும் போதனைக்கான அணுகுமுறையிலும் பார்க்க முதியவருடன் அனுபவத்தைப் பகிர்ந்து கொள்ளும் வகுப்பறைச் சூழல். சுதந்திரமாக விளையாடுவதற்கு அதிக வாய்ப்புத்தரும். இவ்வாறு குழந்தைகள் தமது மொழிப் பிரயோகத்தில் நம்பிக்கையையும், தேர்ச்சியையும் விருத்தியாக்குவதற்கேற்ற வழிமுறைகள் ஏராளமாக உள்ளன.

## குழந்தைகளின் பேச்சு

முதியவர் ஒருவரின் கவனத்தைத் தம்பால் திருப்புவதற்காகப் பெரும்பாலான குழந்தைகள் போட்டியிடுகின்றனர் என்பது வீட்டுக்கும் பாடசாலைக்குமிடையிலான வேறுபாடுகளில் மிகப்பிரதானமான அம்சமாகும். எனவே முதியவர்களுடன் தொடர்பு கொள்ளும் போது குழந்தைகள் பேச்சில் ஈடுபடுவதிலும் பார்க்க செவிமடுத்தலிலேயே அதிக அக்கறை காட்டுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னவான போதும் தாம் பேசுவதை ஏனையவர்கள் செவிமடுப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படவில்லையெனக் குழந்தை உணருமானால் ஆசிரியர் கூறுவதைக் கவனமாகக் கேளுங்கள் எனச் சொல்லும் போது மூன்று, நான்கு வயதினருக்கு அது மனவிரக்தியை ஏற்படுத்தலாம்.

குழந்தைகளின் பேச்சு தெளிவற்றதாகவும் அதன் பொருள் மயக்கமானதாகவும் இருக்கும் நிலையில், ஒரு சுறுசுறுப்பான வகுப்பறையில் தனித்தனிக் குழந்தைகளின் பேச்சுக்குக் காது கொடுப்பதில் நேரத்தைக் கடைப்பிடிப்பது ஆசிரியருக்குக் கடினமாகவிருக்கலாம் என்னவானாலும் குழந்தைகளின் பேச்சைச் செவிமடுப்பதற்கு நேரத்தை ஒதுக்குகின்றவரும் குழந்தை சொல்வதைத் தெளிவாக விளங்கிக் கொள்பவருமான ஆசிரியர், தனது பங்களிப்பு பெறுமதி மிக்கதென ஆசிரியரால் உணரப்படுவார்.

குழந்தை உரையாடலை ஆரம்பிக்கும் போது மட்டுமன்றி முதியோர் ஒரு திறந்தவகை வினாவை வினவும் போதும் குழந்தை சொல்வதைக் கவனமாகக் கேட்டல் பொருத்தமானதும் முக்கியமானதுமான அம்சமாகும். முதியோரின் வினாவுக்கான விடை சிக்கலான கருத்து வெளிப்படுத்தலைக் கொண்டிருக்குமாயின் குழந்தைகள் விடையளிப்பதற்கு கூடிய நேரத்தையெடுக்கலாம்.

இவ்வாறான சந்தர்ப்பங்களில் அவசரப்படும் ஆசிரியர்கள் காத்திருக்காதது மட்டுமன்றித் தாமே விடையையும் கூறிவிடுகின்றனர். அல்லது பிள்ளைகளின் குழப்பத்தை மேலும் அதிகரிக்கக் கூடிய மேலதிக கூற்றுக்களைத் தெரிவித்து விடுகின்றனர். இவ்வாறான செயற்பாடுகளைக் குழந்தைகள் பல தடவைகள் எதிர்கொள்வார்களாயின் அவர்கள் அச்செயற்பாட்டிலிருந்து விலகிக் கொள்வர். அல்லது தமது மனதில் தோன்றுவதைக் கூறிவிடுவர். இவ்வாறான எந்தத் தடையும் அதாவது துலங்கலும் குழந்தையின் மொழி விருத்திக்கு உகந்ததாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழந்தை பேசுவதற்கான பொருள்

குழந்தைகளின் மொழித் தேர்ச்சியை விருத்தி செய்வதற்கான முக்கிய வழிமுறைகள் வினாக்கேட்டல், விடையளித்தல், அனுபவங் களைப் பகிர்தல், எதிர்வுகூறல், பழைய நிகழ்வுகளை மீட்டுப் பார்த்தல் முதலியனவாகும். என்ன நடக்கின்றது, நடந்தது, நடக்கும் என்பன சார்ந்த எண்ணக்கருக்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்துவதற்கு குழந்தைகள் சொற்களைக் கையாள வேண்டுமென நாம் விரும்பினால் அவர்கள் அதனைப் பற்றிப் பேசவதற்கு நாம் எதனையாவது அவர்களுக்கு வழங்க வேண்டும். இதனைக் குழந்தை பேசுவதற்கான தலைப்பு அல்லது பொருள் எனக் குறிப்பிடலாம்.

குறிப்பிட்ட பொருளில் குழந்தைகளின் கவனம் குவிக்கப்படல் வேண்டும். பொருட்களின் மீது கவனம் திருப்பப்படுவதுடன், மிகக் கவனமாக வினவுதல் மூலம் கலந்துரையாடலையும், விளக்கத்தையும் ஊக்குவிக்க வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் மூலம் குழந்தை உலக அறிவைப் பெறுவதோடு சொற்களஞ்சியத்தையும் பெருக்கிக் கொள்ள முடியும்.

கலந்துரையாடல்களுக்கான மிகச் சிறந்த தூண்டற் பொருட்களாகப் படங்கள் அமைகின்றன. படத்தின் மையக் கருத்தைக் கருத்து நிலையில் பெற்று அதனை வெளிப்படுத்துவதற்குக் குழந்தைகளை ஊக்குவித்தல் ஒரு முக்கிய அம்சமாகும். இச் செயற்பாடு கருத்துக்களமைத்தலையும் ஏனைய மக்களின் உணர்வுகளுள் பிரவேசிப்பதற்கு மொழியைப் பயன்படுத்துதலையும் உள்ளடக்கிய மொழியியல் திறன்களை கணிசமான அளவு ஏற்படுத்தவும் உதவும். மேலும் கற்பனையைத் தூண்டுவதற்குப் படங்களையும் பயன்படுத்தலாம். உரையாடுதலுக்கு மிகச் சிறந்த விடயங்களை தரக்கூடியவை பாலர்பள்ளிக்கு வெளியே கவர்ச்சியான இடங்களுக்கு மாணவர்களை அழைத்துச் சென்று மேற்கொள்ளும் தரிசனங்களாகும். இத்தகைய வெளியுலாக்களுக்கு அழைத்துச் செல்லுமுன் மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்கள் உலா நிகழ்வின் போதோ, அதன் இறுதியிலோ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படும் கலந்துரையாடல்களை விடப்பயன் குறைந்தவை களாகும்.

குழந்தைகள் தாம் பார்த்து அனுபவித்தவற்றைப் பிறருக்கு விபரித்துச் சொல்வதானது, இலாவகமாகவும், ஒன்றிணைத்தும் கருத்துக்களை வெளிப்படுத்துவதற்கும், கால ஒழுங்கு பற்றிய விளக்கத்தை வெளிக்காட்டுவதற்கும் குழந்தைகளுக்கு உதவுகின்ற உன்னத வழிமுறையாகும்.

நிகழ்வுகளைக் கால ஒழுங்குமுறைப்படி எடுத்துக் கூறுவது குழந்தைகளைப் பொறுத்தமட்டில் ஒரு சவாலாக இருப்பதோடு அது அவர்களால் வளர்த்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு முக்கிய திறனுமாகும். ஏனென்றால் இது குழந்தைகளினது தர்க்க சிந்தனையினதும், காரணம்காண் சிந்தனையினதும் ஒரு முக்கிய கூறாகவும் உள்ளது. சமூக நாடக விளையாட்டின் ஏதாவது ஒரு வடிவத்துடன் இந்த வெளியுலாக்கள் தொடர்புபடுத்தப்படுமானால் குழந்தையின் மொழிவிருத்தி மேலும் சிறப்படையும்.

அமைப்புக் கலந்துரையாடல்களாவன மொழி விருத்தியை ஊக்குவிக்கும் மற்றொரு பயன்மிக்க வழிமுறையாகும். எடுத்துக்காட்டாக "மிதத்தல்" "அமிழுதல்" என்ற சொற்களை எடுத்துக் கொள்வோம் கல்லானது நேராக நீரின் அடிக்குப் போகிறது. தக்கையோ நீரின் மேற்பரப்பில் ஆடி அலைகிறது. இதை அவதானிக்கும் குழந்தை அமிழ்தல், மிதத்தல் என்ற சொற்களின் கருத்தை இலகுவாகப் பிடித்துக் கொள்ளும்.

செயல்களையும், சொற்களையும் இணைத்தலானது, கருத்துக்களையும் எண்ணக்கருக்களையும் உருவாக்குவதற்குக் குழந்தையை ஊக்குவிக்கக் கூடிய அதிசிறப்பான உத்தியாகும். புறூனர் (1956) இதனை ""செயல் துடிப்பான சொல்லாக்கம்"" எனக் குறிப்பிடுகின்றார். தனியே செயல்களையோ, சொற்களையோ பயன்படுத்தலிலும் பார்க்க செயல்களையும், சொற்களையும் இணைத்துக் கொள்ளுதல் சிறந்ததென அவர் கருதுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரையாடல்

சிறுவர்களும் முதியவர்களைப் போல பேசுவதற்கு அதிகளவில் ஊக்குவிக்கப்படுவதனால் உண்மையான வாழ்க்கையனுபவங்களுடன் தொடர்புபட்டதாக உரையாடல் அமைய வேண்டும்.

பயனுள்ள அனுபவங்கள் பகிர்ந்து கொள்ளப்படக்கூடியதாக இருப்பதனாலேயே சிறுவர்கள் வீட்டில் அதிகமாகக் கதைக்கின்றார்கள். என்பது கண்டறியப்பட்டுள்ளது. ஆர்வத்துடனும் அக்கறையுடனும் கூடிய விடயங்கள் பற்றிப் பேசுவதற்கு அதிக வாய்ப்புக்கள் வழங்கப்படும் போது, அவர்கள் சஞ்சலமற்ற நிலையில் கருத்துக்களையும் உணர்வுகளையும் இலாவகமாக வெளிப்படுத்துகிறார்கள் (உதாரணம் குழந்தையின் பிறப்பு, வீட்டுச் செல்லப் பிராணிகள், புதிய உடைகள்)

இவ்வகையான உரையாடல்கள் பல குழந்தைகளால் தொடங்கப்படுகின்றன. இங்கு ஆசிரியர் எதிர்நோக்கும் பிரச்சினை "போதனையாளர்" என்ற நிலையிலிருந்து அனுபவங்களைப் பகிர்பவர் என்ற நிலைக்கு கீழிறங்குதலாகும். ஆசிரியர் கூறும் பதிலில் ஏற்படும் தடை அல்லது விமர்சனமானது மேற்படி உரையாடல் தொடர்வதை உடனடியாக நிறுத்திவிடக்கூடும். உரையாடலை நீடிப்பதற்கு ஆசிரியர் உரையாடல் எனும் பந்தை முன்னும் பின்னும் தள்ளும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். தேநீர் வேளை, பகற்போசனவேளை என்பன உரையாடல்களில் ஈடுபட உகந்த சந்தர்ப்பங்களாகும்.

இவ்வாறான அமைதியான தருணங்களில்தான் சிறுவர்கள் சுதந்திரமாகக் கதைக்கின்றனர். சமூக உரையாடல்கள் இன்பமான பொழுது போக்குகள் என்ற உணர்வைப் பெறுகின்றனர். முதியோர் உடன் இருக்கும் நிலையிலும் பார்க்க அவர்கள் இல்லாத நிலையில் குழந்தைகள் சோடிகளாகவோ, குழுக்களாகவோ சேர்ந்து தொழிற்படுகின்றனர். அந்நிலையில் ஒருவர் சொல்வதை மற்றவர் கேட்டுக் கொள்ளும், கற்றுக் கொள்ளும் வகையிலான கலந்துரையாடல்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகழ்கின்றன. உடையணிதல், நாடகங்களில் ஈடுபடுதல், சிறுவர் உலக விளையாட்டு போன்ற நிலைமைகளில் இவ்வகையான உரையாடல்கள் இடம் பெறுகின்றன.

ஜனரஞ்சகமான இசைப்பாடல்கள், தம்மால் உருவாக்கப்பட்ட புதிய நிகழ்வுகள் என்பவை மூலம் சிறுவர்கள் ஒலிகளையும் சொற்களையும் பரீட்சிக்க விரும்புவர். இவை அதிகமாக அவர்களின் நகைச்சுவை, வேடிக்கையுணர்வுகளை வெளிப்படுத்துகின்றன.

இதேபோல பேச்சுக் கோலங்கள், உலோக அதிர்வோசைகள் என்பனவற்றையும் பாவனை செய்கின்றனர். மேலும் புதிய புதிய வெளிப்படுத்தல்களிலும் ஈடுபடுகின்றனர். இதனால்தான் போலும் அந்நியமொழி அறிமுகத்துக்குப் பாலர் பருவமே மிகப் பொருத்தமானது என வாதிடப்படுகின்றது. இப்பருவத்திலேதான் சிறுவர்கள் எவ்வித உளத்தடையுமின்றி புதிய கோலங்களையும், ஓசைகளையும் திருப்பிக் கூறுகின்றனர். இவ்வயதினர் மொழிக்கு நன்றாகக் காது கொடுப்பர் என்பதால் மற்றவர்களின் பேச்சுக் கோலங்களையும், தொனிகளையும் அவர்கள் பின்பற்றுதலைக் காணமுடிகின்றது.

## செவிமடுத்தல் சந்தர்ப்பங்கள்

ஒரு குழந்தை பயனுள்ள தொடர்பாடலில் ஈடுபடுவதானால் ஒலிகளுக்கும் சொற்களுக்குமிடையேயுள்ள வேறுபாடுகளைக் கேட்டறியும் வகையில் மிகக் கவனமாகச் செவிமடுக்கும் ஆற்றலைக் கொண்டிருக்க வேண்டும். பல வீடுகளில் பேச்சொலி மட்டம் உயர்வாக இருப்பதனால் அங்குள்ள குழந்தைகள் செவிமடுப்பதில் இடர்படுகின்றனர். இவ்வாறான பிள்ளைகள் செவிமடுப்பதில் மாத்திரமன்றி; மௌனமாயிருப்பதன் பெறுமதியையும் தெரிந்து கொள்ள வேண்டும்.

இதற்கானவழி ஆசிரியர் நாள்தோறும் குறித்த ஒரு நேரத்தில் பிள்ளைகளோடு தாமும் எழுந்து அமைதியாக நின்று அவர்களைச் சுற்றியுள்ள ஒலிகளைச் செவிமடுக்கச் செய்வதாகும். இச்செயலால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைதி என்பதன் பொருளைக் குழந்தைகள் நன்றாக உணர்வர். இவ்வேளைகளில் அமைதியை நீங்கள் காதால் கேட்கலாம் என்று ஒரு குழந்தை ஆசிரியரிடமே கூறக்கூடும். செறிவற்ற குடிசனப் பிரதேசங்களில் வாழும் குழந்தைகளை விட சந்தடி நிறைந்த நகரப்பகுதிகளில் வாழும் குழந்தைகளுக்கு இது புதிய அனுபவமாக இருக்கும்.

பற்பல வழிமுறைகளைச் செவிமடுத்தல் திறன்களை ஊக்குவிப்பதற்காக மேற்கொள்ள முடியும். இவற்றில் பிரதானமானவை பாலர் பாடல்கள், கவிதைகள், சிறுகதைகள், என்பனவற்றைக் கேட்டலாகும். குழந்தைகள் இவற்றைத் திரும்பத் திரும்பக் கேட்பதில் இன்பமுறுவர். மேலும் செவிமடுத்தலை ஊக்குவிக்க வேண்டுமானால் இவற்றைச் சொல்லும் போது ஆசிரியர் வேண்டுமென்றே தவறுகளை விட வேண்டும். ஆசிரியர் விடும் தவறுகளை குழந்தைக்ள கண்டு பிடிக்கும் போது ஏற்படும் இன்பத்துக்கு அளவேயில்லை. மேலும் குழந்தைகளின் கவனக்குவிப்பும் வீச்சும் இச் செயற்பாட்டால் அதிகரிக்கின்றது.

குழந்தைகள் கதைகளை செவிமடுக்கும் போது கவனத்தை குவிப்பதை மாத்திரம் கற்கவில்லை. சிறந்த இலக்கியத்தை கேட்பதனால் பெறக்கூடிய இன்பத்தையும் அனுபவிக்கின்றனர். இலக்கியமானது சிறுவர்களுக்கு மகிழ்ச்சியையும் இன்பத்தையும் நல்க வேண்டும். நாம் மேற்கொள்ளும் குழந்தைகளுக்கான இலக்கியங்களை (கதைகள், பாடல்கள், நாடகங்கள்) அவற்றில் சித்தரிக்கப்படும் பாத்திரங்கள் மூலமாக எமது சமூகத்தின் விழுமியங்கள், மனப்பாங்குகளையும் கூட கையளிக்க வேண்டும்.

## விளங்கிக்கொள்ளல்

சிந்தனை செய்வதற்கு மொழி அவசியம். மொழி இல்லாமல் சிந்தனை இல்லை. மொழியும் சிந்தனையும் ஒன்றிலிருந்து ஒன்று பிரிக்க முடியாதவை. ஆசிரியரின் பிரதான பணிகளில் ஒன்று குழந்தைகள் செய்வனவற்றையும், சொல்வனவற்றையும் விளங்கிக் கொள்வதற்கு அவர்களுக்கு உதவுதலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழந்தைகள் கலந்துரையாடும் போது பொருத்தமான சொற்களைத் தான் பயன்படுத்துகின்றார்கள் என்பது போலத் தோன்றும். ஆனால் எண்ணக்கருக்களிலோ, கருத்துக்களிலோ முழுமையான விளக்கம் அவர்களுக்கு இல்லை என்பதை அவர்களின் மூலமாகத்தான் கண்டறியலாம்.

குறிப்பாக இடைவெளித் தொடர்புகளுடன் சார்ந்த சொற்களின் பயன்பாட்டின் போது இதனைக் கண்டறிய முடியும். வீட்டுக்கு அப்பால் நிகழும் செயற்பாடுகளிலும், அசைவு தொடர்பான செயலமர்வுகளின் போதும் இதில் குழந்தைகளுக்கிருக்கும் தடுமாற்றம் வெளிக்காட்டப் படுகின்றது.

குழந்தைகளின் நியமஞ்சாரா விளையாட்டு வேளைகளில் ஒட்டுக் கேட்போமாயின் விளக்கக் குறைபாட்டைச் சுட்டிக் காட்டும் வகையில் தமது சகபாடிக்கு எதையேனும் குழந்தை விளக்கிக் கூறிக் கொண்டு இருப்பதைக் காணலாம். உடனடியாக இவ்விடத்தில் குறுக்கிடல் பொருத்தமற்றதாகும். ஆயினும் சில சந்தர்ப்பங்களில் தவறான விளக்கத்தைத் தெளிவுபடுத்துவதற்கும் இக்குறுக்கீடு உதவலாம்.

வகுப்பறையில் மேற்கொள்ளும் ஆதார மொழியை இவர்களால் விளங்கிக்கொள்ள முடிகிறதா என்பதைக் காட்டக்கூடிய வகையில் அறிவுறுத்தல்களை அல்லது நெறிப்படுத்தல்களை மேற்கொள்ள வேண்டிய சந்தர்ப்பங்களை நாளாந்தம் காணலாம்.

பாலர் பள்ளியிலுள்ள ஒரு குறிப்பிட்ட முதியவருக்கு ஒரு செய்தியை கூறுமாறு வேண்டுதல் கூட குழந்தைகளின் விளக்கம் பெறும் மட்டத்தை அறிந்து கொள்வதற்கான வழிமுறையாகும். காரணம் இச் செயலானது நாம் சொன்னதைச் செவிமடுப்பதை மட்டும் கொண்டிருக்க வில்லை. அச்செய்திக்குச் சரியான விளக்கம் கொடுத்தலையும், செய்தி பெறுபவருக்கு அதனைத் தெரியப்படுத்துதலையும் கூடக் கொண்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவிமடுத்தல் திறன்கள் குறைவாக இருப்பதோ, விளக்கக் குறைபாடோ, இவையிரண்டுமே காரணமாகவிருப்பதோ கூட ஒரு செய்தி திருத்தமாக வழங்கப்படாமைக்கு ஏதுவாக இருக்கலாம். இவை மாத்திரமின்றி குழந்தை செய்தியின் விபரங்களை மறந்து விட்டமையும் காரணமாக இருக்கலாம்.

பிள்ளைகள் சிறந்த ஞாபகசக்தியைக் கொண்டிருப்பார்களாயின் தகவல்களைத் திருத்தமாக ஞாபகததில் வைத்திருப்பதற்கு உதவும் பொருத்தமான உபாயங்களை விருத்தி செய்யாமலிருக்கலாம். இப்பருவத்தினர் தாம் செவிமடுத்தவற்றை மனதில் வைத்திருக்கவும், தேவையான போது மீட்டு உணரவும் கூடியவர்கள் எனக் கருதப் படுகின்றனர்.

எளிமையான குறியீட்டு உபாயங்களைக் கற்பித்தல், தகவல்களை ஞாபகத்திலிருந்தும் குழந்தையின் ஆற்றலில் நேரான தாக்கத்தை ஏற்படுத்துமென சில கல்வியியலாளர்கள் கருதுகின்றனர். செய்தியொன்றை அவர்கள் பெறுவோனிடம் தெரிவிக்குமாறு கேட்கப்படுவதற்கு முதல் அதனைப் பல தடவைகள் திருப்பிச் சொல்ல வைத்தாலோ, அல்லது அதனை நெட்டுருச் செய்ய வைத்தலோ பயனற்ற செயற்பாடாகும். ஆயினும் செய்தியின் முக்கிய அம்சத்தைக் குழந்தை விளங்கிக் கொள்ளுமானால், அதன் பிரதான இயல்புகளை மனனம் செய்ய உதவுதல் பயனுள்ளதாயமையும். இதுவும் பாலர் பள்ளியின் நினைவின்போதே பொருத்தமானதாகும்.

## எழுத்தறிவின் வெளிப்பாடு.

எழுதப்பட்ட சொற்கள் சிறுவயதிலேயே கருத்துக்களையும், எண்ணக் கருக்களையும் குழந்தை அச்சுப் பதிப்பின் பல்வகை அமைப்புக்களையும், தானே வாசிக்கத் தொடங்குவதற்கு முன்னரேயே அறிந்து கொள்கிறது. வாசிப்பு, எழுத்து, என்பவற்றினைப் பிள்ளை ஆரம்பித்தலை "வெளிக்கிளம்பிய எழுத்தறிவு" என அழைக்கலாம். வாசிப்பு, எழுத்து என்பவற்றின் முதிர்ச்சிப் பருவம் எனக் கருதப்படுவதற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிக காலத்துக்கு முன்னதாகவே இது ஆரம்பித்து விடுகிறதென்பது இன்று ஏற்றுக் கொள்ளப்படுகின்றது. குட்மன் (Goodman - 1984) என்பவரின் கருத்துப்படி எழுத்தறிவின் வேர்கள் அவரால் குறிப்பிடப்படுகின்ற "தொழிற்படு எழுத்தறிவு" (Functional literacy) என்பதில் காணப்படுகிறது. தொழிற்படு எழுத்தறிவு உண்மை வாழ்க்கை நிலைமைகளில் காணப்படுவதுடன், உண்மையான ஒரு நோக்கத்தி னையும் நிறைவு செய்கிறது. எடுத்துக்காட்டாக. செய்தித்தாள், சமையற்குறிப்பு நூல்கள், கடிதங்கள் முதலானவற்றை நாம் வாசிக்கும் போது அவற்றைக் குழந்தைகள் காண்கின்றனர். இவ்வாறான நிகழ்வுகள் வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் குழந்தைகளின் எழுத்தறிவு விருத்திக்கு உதவுகின்றன.

வாசிப்பு, எழுத்து என்பவை சார்ந்த ஆற்றல்கள் படிப்படியாகவும், எவ்வித நியமக் கற்பித்தலின்றியும் வெளிக்கிளம்புகின்றன. சமூகத்திலுள்ள எல்லாப் பிள்ளைகளினதும் எழுத்தறிவு சார்ந்த கற்றலானது குழந்தையின் மிகச் சிறிய வயதிலேயே ஆரம்பித்து விடுகிறதென்பதைக் கடந்த காலத்து ஆய்வுகள் பலவும் எடுத்துக் காட்டுகின்றன. இது பெரும்பாலும் முதியவர்களுக்குத் தெரியாமலே நிகழ்கின்றது. "பிஸ்கட்" உண்ணும் குழந்தை அதிலுள்ள எழுத்தைப் பார்த்து அது என்னவெனக் கேட்பது அப்பிள்ளையின் எழுத்தறிவுப் பதிவு பற்றிய விழிப்புணர்வைப் புலப்படுத்துகின்றது.

குடும்பச் சூழலில் உருவாகின்ற ஆரம்பவாசிப்பு, எழுத்து என்பனவற்றின் அளவானது குடும்பத்தின் எழுத்தறிவு மட்டங்களில் தங்கியுள்ளது. அச்சுப்பிரசுரங்களில் அக்கறையற்ற குடும்பத்துப் பிள்ளைகளுடன் ஒப்பிடும் போதும் வாசிப்பில் ஈடுபடும் பெற்றோரைக் கொண்ட குடும்பத்துப் பிள்ளை அதிக நன்மை பெறுகின்றது. குடும்பத்தின் வாசிப்புப் பழக்கத்தின் செல்வாக்கு நீண்டு நிலைக்கக் கூடியது. மூன்று வயதுக்கு முன்பிருந்தே கதை கேட்பதில் ஈடுபாடு கொள்ளும் பிள்ளை பதின்மூன்று வயதில் சிறந்த செவிமடுப்பாளராக வரமுடியும் என்பதற்கு சான்றுகள் உள்ளன. கதை சொல்லல் எவ்வாறு பயிற்சியுடன் விருத்தியாகின்றதோ, அதே போலவே செவிமடுத்தலும் விருத்தியாகின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய குழந்தைகள் பிரசுரங்கள் நிறைந்த உலகிலே வாழ்கின்றார்கள். மொழிவளம் இல்லாத சூழலில் வாழும் குழந்தை முன்பள்ளிகளில் வாசிப்பில் ஈடுபடும் முதியவரைக் காணவேண்டியது அவசியமாகும். அப்போதுதான் வாசிப்பு என்பது ஒரு பயனுள்ள பணி என்பதைக் குழந்தை அறியமுடியும். தொலைபேசி விபரக் கொத்து, நூற்பட்டியல் செய்தித்தாள்கள், குழந்தைக்கதை, கவிதை, நாடக நூல்கள் ஆகியனயாவும் குழந்தைகளின் வாசிப்பில் அக்கறையை விருத்தி செய்யக் கூடிய சாதனங்களாகும்.

குழந்தைகள் வாசிப்பதற்கு ஆயத்தம் பெறும் காலம் திடீரெனத் தோன்றுமென எண்ணி அக்காலம்வரை வெறுமனே பார்த்துக் கொண்டிருக்க முடியாது எழுத்தறிவானது ஒரு நீண்ட காலப்பகுதியில் மிக ஆறுதலாகவே வெளிக்கிளம்புகின்றது என்ற கூற்று ஏற்படுத்திவிடக் கூடாது. வாசிப்புச் சோதனைகளின் பெறுபேற்று அடிப்படையில் குழந்தைகளுக்கு நூல்களை வழங்கிய காலம் மலையேறிவிட்டது. இச்சோதனைகளில் திறமைகாட்டிய பிள்ளைகள் இன்னும் வாசிக்க ஆரம்பிக்காதிருக்க, சோதனைகளில் மிகக் குறைவாகத் திறமை காட்டிய பிள்ளைகள் வாசிப்பில் ஈடுபடக் கூடியவர்களாக இருப்பதை நாம் அறிவோம். இருந்தபோதும் இச்சரியீட்டுப் பட்டியல்களில் உள்ள சில உருப்படிகள், பிற்கால வாசிப்பு அடைவுடன் தொடர்புடையன. எடுத்துக் காட்டாக எதுகை, மோனை, ஒத்த இசை, முதலெழுத்துக்கள், எழுத்தொலிகளும் பெயர்களும் என்பனபற்றி அறிந்திருக்கும். பிள்ளைகள் வாசிப்பில் முன்னேற்றம் காட்டுகின்றனர் என்பதற்கு ஆதாரமாக அடம்ஸ் (Adams - 1990) கொஸ்வானி பிறையண்ட் (Goswani and bryant - 1990) ஆகியோரின் ஆய்வுகள் உள்ளன. எவ்வாறாயினும், வீட்டிலும், பாலர் நிலையங்களிலும், குழந்தைகளுக்கும் கிடைக்கும் முறைசாரா அனுபவங்கள் கற்றலுக்கு உதவியிருக்கும் என்பது உண்மையேயாகும்.

நாம் வாசிப்பையும் எழுத்தையும் வெவ்வேறு திறன்களாகப் பார்க்கின்றோம். ஆனால் பெரயிரோ (Ferreiro) என்பவர் எல்லாக் கூறுகளையும் ஒரே நேரத்தில், ஒரே ஆழத்தில் பகுத்து நோக்கல் கடினமானது எனக் கருதுகின்றார். அவர் "சில கூறுகளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏனையவற்றிலிருந்து தனிமைப்படுத்துதல் மூலம் விருத்திக்கான எழுத்தறிவை விளங்கிக் கொள்ள முடியாது" எனச் சுட்டிக் காட்டுகிறார்.

கதை சொல்லுதல் என்பது எழுத்து வடிவத்தில் உள்ளவற்றைக் குழந்தைகள் நயப்பதற்கும், பிற்காலத்தில் தாமே வாசிப்பதற்கு ஊக்குவிக்கும் முக்கியமாக வழிமுறையாகும். குழந்தைகள் உயிரோட்டமான கற்பனை ஆற்றல் கொண்டவர்கள். கதைகள், குழந்தைகளுக்கு பாசாங்கோடு கூடிய மாயாஜால உலகைக் காட்டுகின்றன. எனவே சிறப்பாக ஒழுங்குபடுத்தப்பட்ட காட்சிக்கு இதமானவகையில் புத்தக மூலைகள், அமைக்கப்படல் வேண்டும். இவ்வாறு புத்தகங்களுடன் தொடர்பு கொள்வதன் மூலம் அச்சிடப்பட்ட எழுத்துக்கள் தொடர்பான அடிப்படை எண்ணக்கருக்களைக் கற்றுக் கொள்கின்றனர்.

நாம் புத்தகங்களின் பக்கங்களை இடமிருந்து வலமாகப் பார்க்கிறோம். இடதுபக்க மேல் மூலையிலிருந்து ஆரம்பித்து மேலிருந்து கீழ் நோக்கி வருகின்றோம். ஆனால் வேறு சில கலாசாரப் பிள்ளைகள், வலமிருந்து இடமாகவோ, கீழிருந்து மேல் நோக்கியோ வாசிப்பதற்கு கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும். வேறு சில குழந்தைகளுக்கு வீட்டில் எழுதும் முறைமை பாடசாலையிலிருந்து வேறுபட்டதனால் இவ்விரு முறைகளையும் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கும்.

எழுத்தறிவு பற்றிய குழந்தையின் கற்றல் குழந்தைக்கு குழந்தை வேறுபடும். அவர்கள் எதிர்கொள்ளும் அனுபவங்களால் இது தாக்க முறுகின்றது. என்பதைச் ரீல், சுல்பி (Teale and sulyzby - 1986) என்போர் குறிப்பிடுகின்றனர். கொஸ்வாமி (Goswami - 1994) என்பவர் பேச்சு வழக்குச் சொற்களின் ஒலிகளைக் கண்டுபிடிப்பதற்கும் கையாளுவதற்குமான ஆற்றலுக்கும் குழந்தைகளின் வாசிப்பு விருத்திக்குமிடையே ஒரு பலமான இணைப்பு இருப்பதை வலியுறுத்துகின்றார். பிறையண்ட், பிறாட்லி (Bryant and bradly - 1985) ஆகியோர் "முன்பள்ளிக் குழந்தைகளின் ஒலியியல் ஆற்றல் அவர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிற்கால வாசிப்புத்திறன் விருத்திக்குக் கட்டியம் கூறும் ஒரு முக்கிய அம்சம்'' என்கின்றனர்.

வாசிப்புத்திறனில் வித்துவம் பெறுவதற்கு வேறு சில குழந்தைகள் நீண்ட காலம் எடுக்கின்றனர். அதே நேரம் சில குழந்தைகள் இயல்பாகவே வாசிப்போராகவும், ஆசிரியரின் உதவி கிடைத்தாலும் கிடைக்காவிட்டாலும் வாசிக்கக் கற்றுக் கொள்பவராகவும் இருக்கிறார்களே இது ஏன்? இவ்விடயம் பற்றி செபீல்ட் ஆரம்ப எழுத்துத்திறன் மன்றம் (Sheffield Early Literacy Association - weinberger - 1996) ஆராய்ந்து இயல்பான வாசிப்பவர் ஆவதற்கு உதவும் சில பொதுவான இயல்புகளை இனம்கண்டது அவை:

i). மொழியிலும் பிரசுரங்களிலும் சிறுவயதிலேயே அமிழ்ந்துவிடல்

ii). முதியோருடனான நேர்இடைவினையும், நூல்களைப் பகிர்ந்து கொள்ளலும்.

iii). விருப்பமான கதைகளை மீண்டும் மீண்டும் வாசித்தல்.

iv). புத்தகத்தைப் போல பேசுதல்.

v). கதையை மனனம் செய்தல் (வாசிப்பில் ஏற்படும் இடர்களுக்கு முக்கிய காரணி கதையின் அமைப்பு பற்றிய அறிவு குழந்தைகளிடம் இல்லாமை.)

vi). வாசிப்பை ஆரம்பிப்பதற்கான முன்னெடுப்புக்களை மேற்கொள்ள குழந்தைகளை ஊக்குவித்தல்.

vii). தனிப்பட்ட நூலக வசதிகளை ஏற்படுத்தல்.

viii). வாசிப்பில் தேர்ச்சி பெறும்வரை மட்டுமின்றி அதற்கப்பாலும் உரத்து வாசிக்க வைத்தல். எழுத்தறிவு விளக்க விருத்திக்கு ஊக்குவித்தலில் இவை அவசியமானது, தமது குழந்தைகளின் வாசிப்பு விருத்தியில் அக்கறை கொள்ளும் பெற்றோருடன் இவை பகிர்ந்து கொள்ளப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெளிக்கிளரும் எழுத்து.

சுல்ஸ்பி (1990) என்பவர் வெளிக்கிளரும் எழுத்தை வழமையாகக் காணப்படும் எழுத்தறிவாக இந்த நடத்தைகள் விருத்தியடைவதற்கு முன்பாகக் குழந்தைகளிடம் காணப்படும் வாசிப்பு, எழுத்துக்கான நடத்தைகள் என வரைவிலக்கணப்படுத்துகின்றார். வெளிக்கிளரும் எழுத்து உருவாகுதல் மிக ஆறுதலாகவே நிகழ்கிறது. சுலஸ்பி இதனை.

i). வழமையான எழுத்தறிவுடையவர் வழமை இயல்பில் வாசிக்கக்கூடிய எழுத்து.

ii). குழந்தை தானே வழமை இயல்பில் வாசிக்கக் கூடிய எழுத்து எனக் குறிப்பிடுகின்றார்.

குழந்தை எழுத முதிர்ச்சிபெறும் பருவத்துக்கு முன்னரே எழுதத் தொடங்குதல் வழமை நிலையை அடைவதற்குமுன் பலவடிவங்களை எடுக்கிறது. கிறுக்கல்கள், வரைதல்கள், சொல், ஒலிசாரா வரிவடிவக் கோவைகள், வழமையான வரிவடிவங்களிலுள்ள எழுத்துக்களைப் பிரதி பண்ணுதல் கண்டு பிடித்த எழுத்துக் கூட்டல், சுருக்கங்கள், எழுத்துக்களின் வினோத அமைப்புக்கள் என்பன இந்த வடிவங்களாகும். பன்னிரண்டு மாதமளவில் குழந்தைகள் திரும்பத் திரும்ப ஏற்படுத்தும் அடையாளங்களைக் கிறுக்க ஆரம்பிக்கின்றனர். இது பெரும்பாலும் சுவர்களிலும் எதிர்ப்பட்ட தளபாடங்களிலும் இடம்பெறும். முதலில் இது வேறுபடுத்தப்படாத கிறுக்கலாக இருக்கும். ஆனால் இது படிப்படியாக வரைதலுக்கான கிறுக்கலாகவும், எழுத்துக்கான கிறுக்கலாகவும் விருத்தியடையும் சில குழந்தைகள் எழுத்தைக் குறிப்பதற்கு மேல் கீழான கோடுகளையும், வட்டவரிக் கோலங்களையும் கீறுகின்றனர்.

ஹார்ஸ்ரே (Harste 1948) யும் சகாக்களும் இந்தக் கிறுக்கல்கள் எழுந்தமாறானவையல்ல எனக் கருதுகின்றனர். "ப" போன்ற நேர்கோட்டு எழுத்துடன் தொடங்கும் பெயரைக் கொண்ட குழந்தை, எழுத்துக்காக நேர்கோட்டு அடையாளங்களைப் பயன்படுத்துகின்றது "ல" என்னும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுத்துடன் தொடங்கும் பெயரைக் கொண்ட குழந்தை ஒரு வட்டக் கோலத்தை பயன்படுத்துகின்றது. குழந்தைகள் அதே அடையாளத்தை வெவ்வேறு பொருட்களுக்குப் பயன்படுத்துகின்றனர். எடுத்துக் காட்டாக கடை வைத்து விளையாடலில் ஒரு குழந்தை கடதாசியில் சில கிறுக்கல் அடையாளங்களை இடலாம். நிச்சயமாக அது வாங்க வேண்டிய பொருட்களின் பட்டியலாகவே இருக்கும். என்னவானாலும் முதியோர்களது அடையாளங்கள் போலக் காணப்படுபவை வரைதல் கோலங்களைப் பிரதியீடு செய்வதாகக் கருதலாம். இந்நிலையில் குழந்தையின் கிறுக்கல் அடையாளங்கள் கருத்தைப் புலப்படுத்துகின்றன. என்னும் முக்கியமான ஒரு கோட்பாட்டைக் குழந்தை பிடித்துக் கொண்டது என்பதை நாம் நினைவில் கொள்ளலாம்.

எழுத்துப் போன்ற இயல்புகள் பொதுவாக குழந்தையின் மூன்று வயதை நெருங்கிய பருவத்திலேயே தோன்றத் தொடங்குகின்றன. அதே நேரம் குழந்தைகள் சில எழுத்துக்களை இனம் காணவும், பெயர்களைக் கூறுவதற்கும், எழுத்து ஒலிகள், சொற்கள் ஆகியவற்றுக்கிடையே வேறுபாடு காண்பதற்கும் கற்றுக் கொள்கின்றனர். இந்த வயதுக் குழந்தைகள் பலரால் கலாசாரங்களுக்கிடையில் இடம்மாறிக் காணவும், இரண்டுக்கும் மேற்பட்ட மொழிகளுக்கிடையிலான வேறுபாடுகளை நயக்கவும் முடிகின்றது.

ஒரு சொல்லை ஆக்குவதற்கான எழுத்துக்களை ஒன்று சேர்க்கும் ஆரம்பத்தின் போது குழந்தையின் பெயரின் முதல் எழுத்து இடம்பெறுகிறது. குழந்தை பல தருணங்களில் தனது பெயரைக் கூறுவதற்கு தனது பெயரின் முதலெழுத்தையே கூறத்தொடங்குகிறது. எடுத்துக் காட்டாக கமலா என்ற பெயர் கொண்ட குழந்தை “”க”” என்னும் எழுத்தைக் கையாள்கிறது. சிலகாலம் கழிந்தபின்னே தனது பெயரைச் சொல்வதற்கு“”க”” என்பது மட்டும் போதாது என்பதை உணர்ந்து கொள்கிறது. இரண்டு மாதங்களின் பின்னரே தனது பெயரை சொல்வதற்கு மூன்று எழுத்துக்களைக் கையாளத் தொடங்குகிறது. நான்கு வயது முடிந்த கையோடேயே குழந்தைகள் கதைகளைக் கூறுவதற்கு எழுத்துக்களைத் தொடுப்பாக வரைவர். அவர்கள் சொல்ல



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விரும்பும் விடயத்துடன இந்த எழுத்துக்கள் எவ்விதத் தொடர்பும் கொண்டிருக்கமாட்டா, ஆயினும் குழந்தையைப் பொறுத்தவரை எழுதுதலேயாகும். குழந்தைகள் வழமையான எழுத்துக்களை நோக்கி படிப்படியாகவே முன்னேறுகின்றனர். இதற்காக கீழ்க் கூறப்படும் உபாயங்களைக் கையாளுகின்றனர்.

i). அச்சொல் ஒலிக்கும் பாங்கில் எழுத்துக்கூட்டல்.

ii). அச்சொல் தோன்றும் பாங்கில் எழுத்துக்கூட்டல்

iii). அச்சொல் கொண்டுள்ள கருத்தின் பாங்கில் எழுத்துக்கூட்டல்.

இந்த உபாயங்களை இனம்கண்டவர்கள் ஹர்ஸ்ரேயும் சகாக்களும் (1984) ஆவர். இந்த உபாயங்கள் படிப்படியாகவே உருப்பெறுகின்றன. மூன்று வயதின் முடிவிலும், நான்கு வயதின் ஆரம்பத்திலும் சில குழந்தைகள் பூனைபோன்ற சில சொற்களை வழமையாக எழுத்துக் கூட்டுவது போல கூறக்கூடியவர்களாகக் காணப்படுகின்றனர். ஆயினும் பள்ளிக்குச் செல்லும் நியமவயதுப் பருவததிற்கு முன்பாகவே சரியாகவே எழுத்துக் கூட்டவும் எழுதவும் தெரிந்து கொண்ட குழந்தைகளும் காணப்படுகின்றன. ஆனாலும் சொற்களைப் பார்த்து எழுதும் பணியில் கணிசமான நேரத்தைப் போக்கும் சில குழந்தைகளும் இருக்கின்றனர். இப்பணியானது எழுதும் குழந்தையின் எழுத்து முறைமை பற்றிய விளக்கத்தையும், அறிவையும் வளர்த்துக் கொள்ளத் துணையாகிறது.

## எழுத்துக்கிளர்தல் மட்டங்கள்

குழந்தைகள் எழுதும்திறன் விருத்திக்குத் துணையாகக் கூடிய பல்வேறு உபாயங்களைப் பயன்படுத்துகின்றனர். இதன் போது எழுத்துத் தொகுப்புக்கள், கிறுக்கல்கள் வழக்கமான எழுத்துக்கூட்டல் என்பவற்றைக் கலந்து கையாள்வதில் இன்பமடைகின்றனர். இப்பணியின் போது குழந்தைகள் ஐந்து மட்டங்களினூடாகச் செல்கின்றனர் எனவும் இது நிகழும் வரை அவர்களை எழுதத் தெரிந்தவர்களாக கருதமுடியாது எனவும் பெறெய்யோ (Ferreiro) வாதிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதத் தெரிந்தவர்களாக அவர்கள் முன்வருகையில் குழந்தைகள் கையாள்கின்ற முதன்மைக் கோட்பாடுகள் ஆறினை கிளே (Clay - 1975) இனம் கண்டுள்ளார் அவை கீழே தரப்படுகின்றன.

**1. மீறும் கோட்பாடு** - ஒரு விடயத்தை தெரிவிப்பதற்கு அதே அடிப்படை அமைப்பைக் குழந்தை கையாளுதல் எடுத்துக்காட்டு. அதைத் தெரிவிப்பதற்காக ஒரு எழுத்தைச் சங்கிலி தொடராகப் பயன்படுத்துதல்.

**2. திசைக்கோட்பாடு** - இக்கோட்பாட்டைக் குழந்தை விளங்கிக் கொள்ளும் வரை எழுத்துக்களையும், குறியீடுகளையும் பக்கத்தில் எங்கெல்லாமோ வரையும். கிளே என்பவர் இதற்கு பின்வருவனவற்றில் தேர்ச்சி பெற வேண்டுமென நம்புகிறார்.

i). இடது மேற்பக்கத்தில் ஆரம்பித்தல்

ii). வலப்புறத்திலிருந்து இடப் புறத்துக்கு சொல்லினூடாக நகர்தல்.

iii). கீழே இடப்பக்கத்துக்கு மீண்டு அடுத்த தொடக்கப் புள்ளியைக் குறித்தல்.

**3. நெகிழ்ச்சிக் கோட்பாடு.**

பெற்றோர் பலரின் எதிர்பார்க்கைக்கு மாறாக கோடுகளையும் எழுத்துக்களையும் எதிர்ப்பக்கம் திருப்புதல். எடுத்துக்காட்டு P யும் B யும் M உம் W உம்.

**4. பிறப்பிக்கும் கோட்பாடு.**

குழந்தை அறிந்து வைத்திருக்கும் குறியீட்டுத் தொகுதியைப் பயன்படுத்தி நீண்ட எழுத்துக்களை உருவாக்குதல்.

**5. பதிவேட்டுக் கோட்பாடு.**

குழந்தை தனது சொந்தக் கற்றலைக் கணக்கிட்டு தனக்குத் தெரிந்த எல்லாச் சொற்களினதும் பட்டியலை எழுதுதல்.

**6. வேறுபடுத்தும் கோட்பாடு.**

வடிவங்கள், எழுத்துக்கள், சொற்களின் கருத்துக்கள் ஆகியவற்றை வேறுபடுத்தி ஒப்பிடுகையில் இக்கோட்பாட்டைக் கையாள்வதாகக் கிளே குறிப்பிடுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதுவதற்கு ஒரு நோக்கம் இருக்கிறது என்பதைக் குழந்தைகள் உணர்தல் அவசியமானது. இதனை அவர்களது விளையாட்டில் காணலாம். ஹர்ஸ்ரேயும் சகாக்களும் (1984) "வழமையாக எழுதுவதற்குப் பேனாக்கள், வரைவதற்கு "கிறயோன்கள்" என்பது மூன்று வயதுக் குழந்தைகளுக்கு தெரியும் எனத் தெரிவிக்கின்றனர். வழமையான பாவனை விளையாட்டு வேளைகளில் எழுதுதலில் பயிற்சி பெறக்கூடிய பல தருணங்கள் குழந்தைகளுக்குக் கிடைக்கின்றன. குழந்தைகள் விளையாடும் இடங்கள் எழுத்துப்பதிவுக்கான சாதனங்களாக முறையாக அமைக்கப்பட்டால் எழுத்துப் பதிவின் செயற்பாடு சார்ந்த அவர்களது நாட்டத்தையும் விளக்கத்தையும் வெளிக்கொணரும் வகையில் தமது ஆராய்வுச் செயல்களில் ஈடுபடுவர். எழுதுகருவிகள், நாட்குறிப்பேடு, தொலைபேசி, பதிவேடுகள், நூல்கள், நூற்பட்டியல்கள், அச்சுப்பொருட்கள் என்பன நன்றாக ஒழுங்கமைக்கப்பட்ட வீட்டு மூலைகள் குழந்தைகளின் எழுத்துத்திறன் வளர்ச்சிக்கு மிக அவசியமாகும். எழுதக் கற்கும் வேளையில் பேச்சுணர்வுகள், அச்சத்திலிருந்து விலகுதல் வேண்டும், என்பதையும் சொற்களுக்கு பதிலாக சொற்களின் விம்பல்களை கருத்திலெடுக்க வேண்டும் என்பதையும், இவ்வாறான விளையாட்டு அமர்வுகளில் குழந்தைகள் விளங்கிக் கொள்கின்றனர். என்பது வயொட்ஸ்கி (Vyotsky 1978) யின் கருத்தாகும்.

விளையாட்டுச்சார்பான வெளிக்கிளரும் கருத்து என்னும் உபாயத்தின் மூலம் மொழிப்பயன்பாட்டில் படைப்பாற்றல் உடையோரையும், தீரச்செயற்பாடுடையோரையும் உருவாக்கலாம். பாலர் நிலையங்களை விட்டு வெளியேறும்போது பெரும்பாலான குழந்தைகள் முதியோருடனும், வேறுகுழந்தைகளுடனும் செயலாற்றல் மிக்க தொடர்பாடலுக்காக மொழியைப் பயன்படுத்தும் ஆற்றலைப் பெற்றிருக்க வேண்டும். தெளிவான பேச்சாற்றல் மிக்க குழந்தைகள் முழுமையான வாக்கியங்களைப் பேசவும், நிபந்தனைக் கூற்றுக்களைப் பயன்படுத்தவும், உரிச்சொற்கள், வினையுரிச்சொற்கள், உருபிடைச் சொற்கள் ஆகியவற்றைத் தனது பேச்சில் கையாளவும் தெரிந்திருப்பர். இவர்களில் பல குழந்தைகள் வாசிப்புத் திறனுடையோராயும், எழுத்தாற்றல் கொண்டோராகவும் உருவாகின்ற நிலைமையிலிருப்பர் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation:
noolaham.org | aavanaham.org

## References


1. Constructing and Reconstructing Child, hood Edited by Allison james and Alan prout, 2001 .

2. Observing and Recording the Behavior of young children by cohen, stern and Balaban, 1998.

3. Young children in Action by Bergen, Reid, Torelli. (Teachers College press) 2002.

4. Child Development in India Health Welfare and Management ,Volumes I and II by R. Kumar. 1999.

5. Training Manual on Integrated Early Child hood care and Development (UNICEF), 1998.

6. Healthy young child :A manual for programs, 4th edition by susan S. Aronson.

7. Considering children's Art : Why and How to value their work by Brenda S. Engel 2002

8. Engaging children's minds : The project Approach by Lilian G. Katz and Sylvia C. Chard. 2001

9. Teaching Languages to young Learners by lynne cameron, 2000.

10. Administration of schools for young children by phyllis in click . 1998

11. Caring for preschool children by Diane Trister dodge, 2001.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியார் பல்கலைக்கழகங்கள்
# தேவை; நோக்கம்; பயன்.

**சி. சிவசேகரம்**

இலங்கையில் உயர் கல்விக்கான தேவையை நிறைவு செய்ய நாட்டில் உள்ள பல்கலைக்கழகங்களில் உள்ள இடங்கள் போதாது என்பது பற்றிக் கருத்து வேறுபாடுகள் குறைவு. இலங்கையின் கல்வி முறையும் உயர் கல்வியும் நாட்டின் சமூக, பொருளாதாரத் தேவைகளை நிறைவு செய்யப் போதுமானவையா என்பது இன்னொரு கேள்வி, திட்டமிடாத ஒரு திறந்த பொருளாதாரச் சூழலுக்குள் இந்த நாடு தள்ளிவிடப்படும் முன்னமே, பல்கலைக்கழகங்களில் பட்டப்படிப்புக்கான இடங்களின் போதாமை ஒரு பிரச்சினையாகிவிட்டது.

உயர் கல்விக்கான தேவை சமூகத்தைப் பொறுத்தவரை கூடிய வருமானமுள்ள, சமூக அந்தஸ்துடன் கூடிய வேலைவாய்ப்புக்களுடன் நெருக்கமான தொடர்புடையதாக இருந்து வந்துள்ளது. இலவசக்கல்வியின் பரவலாக்கலும், தாய்மொழிக்கல்வியும் உயர்கல்விக்குத் தகுதியுடையவர்களது எண்ணிக்கையைக் குறுகிய காலத்திற்குள் பன்மடங்காகக் கூட்டியது. எனினும் உயர் கல்வி மூலம் பெறக் கூடிய உத்தியோகங்களின் தொகை அதே வேகத்திற் கூடவில்லை. இதன் விளைவுகளில் கலைப்பாடங்களில் பட்டம் பெற்றவர்களது வேலையின்மையும் பின்னர் விஞ்ஞானப்பட்டதாரிகளின் வேலையின்மையும் உள்ளடங்கும். தொழில்வாய்ப்புள்ள பட்டப்படிப்பிற்கான விருப்பம் கூடியதன் விளைவாகவே பொறியியல், மருத்துவம் ஆகிய துறைகளை மாணவர்கள் பெரிதும் நாடினார்.

இன்று நாட்டின் யதார்த்தம் என்னவெனில், பட்டதாரிகள் உருவாகும் அளவுடன் ஒப்பிட்டால் அவர்களது படிப்புக்கேற்ற தொழில் வாய்ப்புக்கள் போதிய வேகத்தில் வளரவில்லை. நாட்டின தேசிய பொருளாதாரம் 1978க்குப் பின்பு திட்டமிட்டே சீர்குலைக்கப்பட்டதன் விளைவாக, இன்று பொறியியல், மருத்துவப் பட்டதாரிகளில் பலர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளிநாடுகளுக்குப் போகின்ற காரணத்தினால் மட்டுமே அந்தத் துறைகளில் வேலையின்மை ஒரு பிரச்சினையாக இல்லை. எனினும் இங்கே பொறியியல் உட்பட்ட பல வேறுதுறைகளில் அவர்களது பணிகள் அவர்கள் பெற்ற பயிற்சியின் மிகச் சிறுஅளவையே பயன்படுத்துகின்றனர் என்பதும் உண்மை.

இலங்கையின் தேசியக் கல்வியின் நெருக்கடிக்குத் தேசிய பொருளாதாரத்தின் சிதைவிற்கு அப்பாலான பிரச்சினைகள் கொலனிய யுகத்திலிருந்து தொடருகின்றன. அடிப்படையான சமூக மாற்றம் ஒன்றில்லாமல் தீர்க்க இயலாத பிரச்சினைகளைப் பற்றி இங்கு மேலும் எழுதவிரும்பவில்லை. எனினும் உயர் கல்வி என்பது பதவிகள் மூலம் ஒருவர் சமூக மேநிலையடைவதற்கான ஒரு கருவியாகவே இருந்து வந்துள்ளது. சமூக மேம்பாட்டுக்காகவும், நலனுக்காகவும் உழைத்த அறிஞர்களும், தொழில் வல்லுநர்களும் இருந்துள்ளனர். கடமையுணர்வுடன் பணியாற்றியவர்களின் எண்ணிக்கையும் கணிசமானது. எனினும் கல்வி என்பது சமூக மேம்பாட்டுக்கும், மனித விடுதலைக்குமான கருவியாக அமைவதற்கான சூழ்நிலை இல்லாத போது, கல்வி பற்றிய பார்வை தனிப்பட்டவரின் நலன்களை முதன்மைப்படுத்துவது இயல்பானதே.

கொலனிஆட்சி நீக்கத்தின் பின்பு, தேசிய விழிப்புணர்வின் உந்துதலால் கல்வியின் பரவலாக்கம், தேசியக்கல்வி, தாய்மொழியிற் கல்வி போன்ற முற்போக்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டன. குடியுரிமையும் வாக்குரிமையும் பறிக்கப்பட்ட மலையகத் தமிழரைத் தவிர்த்தால் இலங்கையில் கல்வித் தரம், பொருளியலில் இலங்கையிலும் முன்னேறிய நாடுகளுடன் ஒப்பிடத்தக்கதாக இருந்தது.

கிராமியப் பகுதிகளில் இருந்த நடுத்தர வர்க்கத்தினரில் ஒரு பகுதியினர் 1950 களின் பிற்பகுதியில் பல்கலைக்கழகக் கல்வி மூலம் சமூகமேம்பாடு கண்டனர். தரமான பாடசாலைகள் நாடு முழுவதும் நிறுவப்பட்டதன் விளைவாக, 1950கள் வரை பொதுவாக பெருநகரஞ்சார்ந்த ஆங்கில மொழியாற்றல் உள்ள குடும்பப் பின்னணியில் இருந்து வந்தவர்களின் ஆதிக்கத்துக்குட்பட்டிருந்த தொழில்சார் பட்டப் படிப்புத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துறைகள் சிறுநகரஞ்சார்ந்தவர்கட்கும், பிற்பட்ட நிலையிலிருந்தவர்களில் ஒரு சிறு பகுதியினருக்கும் எட்டக்கூடியதாயிற்று. அதே வேளை, உயர்கல்விக்குத் தகுதி பெற்ற மாணவர்களின் தொகை விரிவடைந்த வேகத்தில் பல்கலைக்கழகக் கல்வி வாய்ப்புக்களோ, பட்டதாரிகட்குரிய வேலை வாய்ப்புக்களோ விருத்தி பெறவில்லை. இது ஒருபுறம் கல்வித் துறையில் அரச நிதி முதலீடு போதாமையாலும், நாட்டின் பொருளாதார வளர்ச்சி போதாமையாலும் ஏற்பட்டது இன்னொரு புறம், நாட்டின் தொழில் வளர்ச்சியோ, கல்வி முறையோ ஒரு தூர நோக்குடன் திட்டமிடப்படாததன் விளைவெனலாம். இதன் துணை விளைவாகவே பேரினவாதம் படித்த நடுத்தர வர்க்கத்தினரிடம் ஆழமாக வேரூன்றியது. தமிழ், முஸ்லிம் தேசியவாதமும் பிரதேச வாதமும் கல்வி, தொழில்வாய்ப்புக்கள் போதாமையைக் காரணங்கொண்டே முனைப்படைந்தன.

1970களில் ஏற்பட்ட நெருக்கடியான பொருளாதாரச் சூழலும் வேலை வாய்ப்பின்மையும் பட்டதாரிகள் வெளிநாடுகளில், வேலை வாய்ப்புக்களைத் தேடிப் போகும் நிலைமையை உருவாக்கின. இப் போக்கு காலத்துடன் வலுவடைந்து வந்தது. வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கள் ஒரு புறம் பட்டதாரிகளின் வேலையின்மையைத் தனிக்கவும், அந்நியச் செலாவணியைக் கொண்டுவரவும் உதவிய போதும், அவை நாட்டின் உயர்கல்வியின் தேவையையும், நோக்கத்தையும் விகாரப்படுத்தின.

1978ம் ஆண்டு திறந்த பொருளாதாரக் கொள்கை ஏற்கப்பட் பின்பு, தேசியத் தொழிற்துறையும், உற்பத்தியும் கடுமையாகப் பாதிக்கப்பட்டன. உற்பத்தியை விட இறக்குமதி வணிகம் இலாபகரமானதாயிற்று. தனியார் துறையின் ஊக்குவிப்பு ஒரு புறமிருக்கத், திட்டமிட்ட முறையில் அரசநிறுவனங்கள் சீர்குலைக்கப்பட்டதன் காரணமாகவும் உயர்கல்வி பற்றி மாணவர்களது பார்வை வக்கிரமானது.

கல்வி என்பது ஒரு ஓட்டப்பந்தயம் மாதிரியான பின்பு, பாடசாலைகள் தமது முக்கியத்தை இழந்து விட்டன. மாணவர்களைப் பரீட்சைகட்காகப் பயிற்றுவிக்கும் ரியூட்டறிகள் இன்று மாற்றுப் பாடசாலைகளாக இயங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடிப்படையான விடயங்கள் பற்றிய தெளிவோ, அறிவோ இல்லாமல் தகவல்களை மனனம் செய்தும் பயிற்றப்பட்ட முறைகளில் விடைகளை எழுதியும் பல்கலைக்கழகம் புகும் மாணவர்களின் கற்கும் முறை, பல்கலைக்கழகக் கல்வி முறைக்கும் பொருந்தாததாக உள்ளது. சுயமாகக் கற்றல், மற்றவர்களுடன் இணைந்து குழுவாகச் செயற்படல் கற்ற விடயங்கட்கிடையில் உள்ள உறவும், கற்றவிடயங்கட்கும், அன்றாட வாழ்வுக்கும் உள்ள உறவும் பற்றிய சிந்தனை என்பன இன்று அரிதாகவே காணக்கிடைக்கின்றன. மொழியறிவு மிகவும் கீழான நிலையிலேயே உள்ளது. கணித அறிவு பலவீனமாகி வருகிறது. இவற்றை மேலும் மோசமாக்கும் விதமாகவே பாடசாலைகளின் உயர் வகுப்புக்களின் கல்வித்திட்டம் தொடர்ந்து மாற்றமடைந்து வந்துள்ளது.

இந்தப் பின்னணியிலேயேதான் வசதிபடைத்த பெற்றோர் தமது பிள்ளைகளை அயல்நாடுகட்கு அனுப்பி உயர்கல்வி கற்பிக்கின்றனர். அண்மைக் காலங்களில் உருவான ஒரு புதிய பணக்கார வர்க்கம் (சர்வதேசப் பாடசாலைகள் என்ற பெயரில் இயங்கும்) தனியார் பாடசாலைகளது பெருக்கத்திற்கு ஆராதரமாக உள்ளது. ஆங்கில மூலம் பாடசாலைக் கல்வி கற்று அயல்நாடுகட்கு சென்று பட்டம் பெற்று வருவதை விட உள்நாட்டிலேயே பட்டம் பெறுவது செலவு குறைந்தது. எனவே ஆங்கிலத்திற் தனியார் பாடசாலைக் கல்வி பெற்ற மாணவர்களதும், பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறாத பிற வசதிபடைத்த குடும்பத்து மாணவர்களது நலன்கருதியே, தனியார் பல்கலைக்கழங்கள் தேவை என்ற கருத்து முன்வைக்கப்பட்டுள்ளது.

இங்கே சமுதாய வர்க்க நலன்களையும், வர்க்கப்பார்வைகளையும் புறக்கணித்து உயர் கல்வி பற்றிய விவாதங்களுட்புகுவதிற் பயனில்லை.

தனியார் பல்கலைக்கழகங்களை நிறுவுவதற்குச் சாதகமாக முன்வைக்கப்படும் வாதங்களுள் முக்கியமானவையாக பின்வருவன கூறப்படுகின்றன.

- ♦ தனியார் பல்கலைக்கழகங்கள் மூலம் கூடுதலான பட்டதாரிகளை உருவாக்க இயலுமாதலால் உயர்கல்வி விரிவாக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அரசாங்கத்திற்கு மேலதிகப் பொருளாதாரச் சுமை இல்லாமலே கல்வித்துறை விருத்தியடைய இயலுமாகிறது.
- அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பல்கலைக்கழகங்களை விட நெகிழ்வான முறையில் இயங்குவதால் சந்தையின் தேவைக்கமைய புதிய பாடநெறிகளைப் புகுத்தவும் அதிகம் வரவேற்பில்லாதவற்றை நீக்கவும் இயலும்.

- தனியார் பல்கலைகழகங்களுடன் அரச பல்கலைக்கழகங்கள் நல்ல மாணவர்கட்காகப் போட்டியிட வேண்டிய ஒரு நிலை உருவாவதால் அரச பல்கலைக்கழகங்களும் கல்வி பற்றிய நவீன அணுகுமுறைகளைப் பயன்படுத்தவும், சந்தை நிலவரங்கட்கு ஏற்பப்பாடநெறிகளை மாற்றியமைக்கவும் வேண்டிவரும்.

தனியார் பல்கலைக்கழகங்கள் வணிக நிறுவனங்களாகவே செயற்படும் என்பது பற்றி எமக்கு மயக்கங்கள் தேவையில்லை. எனவே அவை தரமான சேவையை வழங்க வேண்டுமானால் கூடுதலான கட்டணம் செலுத்தக் கூடிய மாணவர்களே இங்கு கற்ற முடியும். எனவே இதன் ஒட்டுமொத்த விளைவு வெளிநாடுகட்குப் பிள்ளைகளை அனுப்புகிறவர்கட்கு ஒரு சிக்கனமான மாற்று வழியாகவும் சில நடுத்தர வகுப்பினரது பிள்ளைகளுக்கு அரச பல்கலைக்கழகங்களில் இடங் கிடையாத போது தேவையான ஒரு மாற்று வழியாக அமையலாம். எனினும் அதிக கட்டணஞ் செலுத்த வேண்டிய பல்கலைக்கழகங்கள் இவர்களிற் பலருக்குக் கட்டுப்படியாகாதவையே.

கல்வி, உடல்நலம், போக்குவரத்து வசதிகள் போன்றவற்றை அடிப்படையான சமூகத் தேவைகளாகவே பல முன்னேறிய முதலாளிய நாடுகள் இன்னமும் கருதுகின்றன. அமெரிக்கா தவிர்ந்த முதலாளிய நாடுகளிற் பெரும்பாலும் கல்வித்துறை அரச கட்டுப்பாட்டிலேயே உள்ளது. தாராளமயமாக்கல், தனியார்மயமாக்கல் போன்றவை பல்கலைக் கழகங்களை இன்னமும் குறிப்பிடத்தக்களவிற் பாதிக்காவிட்டாலும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல்கலைக்கழகங்களுக்கான நிதி ஒதுக்கீடு சில நாடுகளிற் குறைக்கப்பட்டுள்ளதாற், பல்கலைக்கழகங்கள் நிதி திரட்டப் பல்வேறு உபாயங்களைக் கையாளுகின்றன. எனினும் உயர்கல்வி அரசாங்கத்தின் வழிநடத்தலுக்குட்பட்டே இன்னமும் நடை பெறுகிறது.

இலங்கையில் அரசாங்கங்கள் போருக்காகத் தொடர்ந்து செலவிட்டு வந்த தொகையில் ஒரு சிறு பகுதியைக் கல்வித் துறைகளிற் செலவிட்டிருந்தால் இன்று நமது கல்வித்துறை இவ்வளவு தூரம் நலிவடைந்திராது. அரசாங்கத்தின் நிதித் தட்டுப்பாட்டுக்கான காரணம், நிதிப் பற்றாக்குறையல்ல அரசாங்கத்தின் நிதி எவ்வாறு செலவிடப்படுகிறது என்பதே. முற்றிலும் சந்தைப் பொருளாதாரத்தை ஏற்றுள்ள முதலாளிய நாடுகளே தனியார் பல்கலைக்கழகங்களைப் பெருமளவில் ஊக்குவிக்காத போது, சந்தை தொடர்பான உள்ளூர் வாதங்களை மிகுந்த ஐயத்துடனேயே நோக்கவேண்டியுள்ளது. சந்தை பற்றிய வாதங்கள், எந்தச் சந்தையைப் பற்றிப் பேசுகின்றன என்ற கேள்வியுங்கூடவே எழுகிறது.

உயர்கல்வி என்பது வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான, ஒரு வசதி என்று எண்ணுகிறவர்கள் நம்மிடையே கணிசமாக உள்ளனர். தனது குடிமக்களை பெருந்தொகையாக அயல்நாடுகளில் கூலியுழைப்புக்கு அனுப்புகிற எந்த நாடும் உறுதியான பொருளாதார வளர்ச்சியைக் கண்டதாகக் கூறுவது கடினம். இது பற்றி விரிவாக எழுத இங்கு இடவசதி போதாது. எனினும் இலங்கையோ, பிலிப்பின்ஸோ, பங்களாதேஷோ தமது வேலையில்லாப் பிரச்சினையின் சுமையைக் குறைத்ததற்கும், நுகர்வுப் பொருளாதாரத்திற்கு மேலும் உதவியதற்கும் மேலாகத் தேசிய அளவில் எந்த முன்னேற்றத்தையும் கண்டதாகக் கூறமுடியாது. மாறாகப் பயிற்றப்பட்ட தொழில் வல்லுனர்கள் நாட்டை விட்டு வெளியேறுவதன் விளைவாகத் தேசிய பொருளாதாரமும், தொழில் வளர்ச்சியும் நட்டப்பட்டுள்ளன.

உலகச் சந்தைக்காகப் பட்டதாரிகளை உற்பத்தி செய்வதன் மூலமோ, உலகச் சந்தையின் இடைக்காலத் தேவைகளை நிறைவு செய்வதற்காக உருவான உள்ளூர்த் தொழிற்துறைகட்கு வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயிற்சியை அளிப்பதன் மூலமோ, குறுகிய காலத்தில் வேலைவாய்ப்பு, அதிக வருமானமுள்ள தொழில்கள் போன்றன சமூகத்தில் ஒரு சிறு பகுதியினருக்குக் கிட்டுகின்றன. அதேவேளை அயல்நாடுகளில் பொருளாதார நெருக்கடியோ, ஒரு குறிப்பிட்ட துறையில் முடக்கமோ ஏற்படும் போது இவர்கள் கடும் பாதிப்புக்குள்ளாகின்றனர். என்பதை நான்கு ஆண்டுகள் முன்பு தகவல் தொழில் நுட்பத் துறையில் ஏற்பட்ட சரிவு இந்தியாவில் ஏற்படுத்திய பாதிப்புக்களினின்று நாம் அறியலாம்.

தனியார் பல்கலைக்கழகங்கள் அரச பல்கலைக்கழகங்களுடன் போட்டியிடுவதனால் அடிப்படை வசதிகட்கும் மேலாக திறமை வாய்ந்த விரிவுரையாளர்களையும், பயிற்றுனர்களையும் கொண்டிருக்க வேண்டும். இது இயலாததல்ல. எனினும் ஏற்கெனவே திறமைசாலிகள் நாட்டைவிட்டு வெளியேறிக் கொண்டுள்ள ஒரு சூழலில் இது அரச பல்கலைக் கழகங்களை விடக் கூடிய ஊதியத்தை வழங்குவதன் மூலமோ, பகுதிநேரப் பணிகட்கு அரச பல்கலைக்கழக ஊழியர்களை அமர்த்துவதன் மூலமோ தான் இயலுமாகும். ஏனெனில் வெளிநாடுகளிலிருந்து தகுதியானவர்களைப் பெருமளவில் வரவழைப்பது இயலாததாகும்.

இவ்வாறான வணிகப் போட்டியில் தனியார் பல்கலைக்கழகங்கள் வெற்றி பெறுமானால், அது அரச பல்கலைக்கழகங்களை மிகுந்த நெருக்கடிக்கு உள்ளாக்கும். ஒரு புறம் அரச முதலீடு போதாமை, இன்னொரு புறம் தகுதிவாய்ந்த ஊழியர்களை இழத்தல், இவற்றுக்கும் மேலாக வசதிபடைத்த குடும்பச் சூழலிலிருந்து வருகிற மாணவர்களைக் கொண்ட பல்கலைக்கழகப் பட்டதாரிகட்கு உள்ள வாய்ப்புக்கள் அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகட்கு இல்லாமற் போதல் என்பன குறுகிய காலத்திலேயே அரச பல்கலைக்கழகப் பட்டதாரிகளின் தகுதியைக் குறைக்க வழி செய்யும்.

இந்த நாட்டில் இன்று வணிகத்துறையிலேயே நல்ல வேலை வாய்ப்புக்கள் அதிகரித்து வருகின்றன. ஆங்கிலத்தில் தன்னம்பிக்கையுடன் பேசும் ஆற்றல், தொழில் வல்லமையையும், கல்வித் தகுதியையும் விட விரும்பப்படுகிற ஒரு சூழ்நிலை உருவாகியுள்ளது. இத்தகைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பின்னணியில், போட்டி என்பது வசதிபடைத்த வர்க்கத்தினரது நலன்கட்கும், அரசாங்கத்தால் புறக்கணிக்கப்படக் கூடிய வசதி குறைந்த வர்க்கத்தினரது நலன்கட்குமிடையான போட்டியேயொழிய வேறல்ல. ஆரோக்கியமான போட்டிக்குரிய ஒரு சமூக பொருளாதாரச் சூழலில் நமது நாடு இல்லை. தனியார் பாடசாலைகள், ஏற்கெனவே சர்வதேசப்பாடசாலைகள் என்ற பேரில் நம் நாட்டில் நிலை கொண்டு விட்டன. இதன் கட்டமாகவே தனியார் பல்கலைக்கழகங்களைக் கொண்டுவரத் திட்டமிடப்படுகிறது. சில அயற் பல்கலைக்கழகங்கள் தங்கள் முகவர் நிறுவனங்கள் மூலம் வெளிநாட்டில் ஒரு ஆண்டு அல்லது இரண்டு ஆண்டுகள் படித்து இலங்கையில் மிகுதியைப் படிக்கும் முறையில் திட்டங்கள் வகுத்து இயங்குகின்றன. இந்த விதமான உயர்கல்வி, மலேசியா உட்பட்ட தென்கிழக்கு ஆசிய நாடுகளில் பிரித்தானிய, அவுஸ்ரேலியப் பல்கலைக்கழகங்களால் வணிக நோக்கில் நடைமுறைப்படுத்தப்படுகிறது.

பல்வேறு அயற் பல்கலைக்கழகப் பட்டங்களை உள்ளூர் வேலை வாய்ப்புக்கு உகந்தவை என்று அங்கீகரிப்பதற்கான நெருக்குவாரங்கள் பல துறைகளிலும் உள்ளன. தனியார்மயமாக்கல் விரிவடையும் போது, தனியார் துறையே பெரும்பாலான வேலைவாய்ப்புக்களை வழங்கும் ஒரு சூழ்நிலையில், அயல் நாட்டு அல்லது அயல்நாட்டுப் பல்கலைக்கழக முத்திரை கொண்ட பட்டதாரிகள், தகுதிக்கும் அப்பாற்பட்ட பல காரணங்களால் விரும்பப்படலாம்.

தனியார் பல்கலைக்கழகங்கட்கான வற்புறுத்தல் உள்நாட்டில் உள்ள வசதி படைத்த ஒரு பகுதியினரிடமிருந்தும், வணிக நோக்கில் கல்வியை வழங்கும் அயல் நிறுவனங்களிடமிருந்தும், தேசிய சமூகப் பொருளாதார நோக்கு இல்லாத சில கல்விமான்களிடமிருந்தும் மட்டும் வரவில்லை. அதற்கான மிகப் பெரிய நெருக்குவாரம் இந்த நாட்டுக்கு கடன் வழங்கி இந்த நாட்டைக் தங்களது இருக்கிப் பிடியில் நெரிந்து வைத்துக் கொண்டுள்ள உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம், ஆசிய வங்கி போன்ற அமைப்புக்களிடமிருந்து அவற்றின் ஆலோசகர்கள் மூலம் வழங்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அமைப்புக்களின் ஆலோசனைப்படி நடந்த ஒவ்வொரு மூன்றாமுலக நாடும் மோசமான பின்விளைவுகளை அனுபவித்தது தற்செயலானதல்ல. தமது கல்வி முறை ஏகாதிபத்தியத்திற்கு ஏவலாட்களை உற்பத்தி செய்ய வேண்டுமேயொழியச் சுயாதீனமாகச் சிந்திக்கிற மனிதர்களையும், இந்த நாட்டின் உயர்வுக்குப் பணியாற்றக் கூடிய அறிஞர்களையும், தொழில் வல்லுனர்களையும் உருவாக்க வேண்டியதில்லை என இந்த அமைப்புக்கள் விரும்புவதற்குக் காரணங்களை ஊகிப்பது கடினமில்லை.

எனவே தான் எந்த அரசாங்கமாயினும், இதுவரை கடுமையாகப் புறக்கனிக்கப்பட்டுச் சீரழிந்துள்ள பாடசாலைக் கல்வியை மீள நிலைநிறுத்தவும், பல்கலைக்கழகங்களின் தரத்தை மீண்டும் முன்னைய தரத்துக்கு உயர்த்தவும் உயர் கல்வியை நாட்டின் பொருளாதாரத் தேவைகட்கமையத் திட்டமிட்டுச் செயற்படுத்தவும் வேண்டுமென்று வற்புறுத்துவது கல்வியியலாளர்கள் அனைவரதும் பொறுப்பும் கடமையுமாகும். இலங்கை அரசாங்கம் தனது வருங்காலக் குடிமக்களது கல்விக்குச் செலவிடுகிற தொகை அறவே போதாது. நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கிற ஒரு துறையாகிய கல்வித் துறை பற்றிய முடிவுகள் நாட்டு மக்களின் விருப்பங்களை மனதிற்கொண்டு எடுக்கப்பட வேண்டுமேயொழிய அயல் மூலதனத்தின் முகவர்கள், எத்தகைய நிபுணர்களாக இருப்பினும் அவர்களது பரிந்துரைகளின் வழிநடத்தற் படியல்ல.

**கல்விச் செய்திகள்**

**தீ**வகக்கல்வி வலயத்தில்; வேலணை கல்விக் கோட்டத்தின் கீழ் இயங்கும் வேலணை தெற்கு ஐயனார் பாடசாலை அதிபரின் முறைகேடான சம்பவத்திற்கு எதிராக அப்பாடசாலை ஆசிரியை ஒருவர் யாழ் மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்துள்ளார்.

*-யாழ் நிருபர் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆரம்ப பிள்ளைப்பருவ மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கு

த. கலாமணி

## அறிமுகம்.

இன்று எமது நாட்டில் கல்வியில் போட்டி நிலவுவதை எங்கும் காணக்கூடியதாக உள்ளது. பாடசாலை அனுமதி முதல் பல்கலைக்கழகப் பிரவேசம் வரை போட்டிநிலை வளர்ச்சியுற்றுச் செல்வதனால் எமது சமுதாயம் ஒரு போட்டிச் சமுதாயமாகவே மாறிவருகின்றது. எமது நாட்டின் கல்வி அமைப்பிலுள்ள பரீட்சை முறைகள் கல்வியில் போட்டியை நிறுவுவதற்கு அனுசரணையாகவே உள்ளன. போட்டிநிலை மனித முன்னேற்றத்துக்குத் தூண்டுதலாகவே அமையும். எனினும் ஆரோக்கியத்தையும் போட்டியாக அது உருவெடுக்கும் நிலையில் குறுக்கு வழிகளைப் பலர் நாட எத்தனிப்பதையும் அறியக் கூடியதாக உள்ளது. இப்போட்டிநிலையின் ஓர் உச்சக்கட்டமாகவே ஆரம்பப் பிள்ளைப் பருவக் கல்விக்கும் (Early childhood Education) கூட பிரத்தியேக வகுப்புகள் என்ற நிலைமை இன்று உருவெடுக்கும் சாத்தியப்பாடுகளைப் பலரும் தெரிவிக்கின்றனர். இந்நிலைமைக்கு அடிப்படையாக அமைவது எம்பிள்ளையின் கல்விக்கு நாம் என்ன செய்ய முடியும்? என்ற பெற்றோரின் பின்னணியில் அங்கலாய்ப்பே ஆகும். இந்தப் பின்னணியில் ஆரம்ப பிள்ளைப் பருவ மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கு (Role) எவ்வாறாக அமையும் என எடுத்துக் கூறுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

ஆரம்ப பிள்ளைப்பருவம் (Early Childhood) என்பது வெவ்வேறு நாடுகளின் பாடசாலை அனுமதி வயதைப் பொறுத்து வெவ்வேறு வயதெல்லைகளைக் கொண்டிருக்குமெனினும், பொதுவாக பிறப்பு முதல் முறைசார் கல்வியைப் பிள்ளை பெற்றுக் கொள்ள ஆரம்பிக்கும் வரையான பருவத்தை இது உள்ளடக்கும். முறைசார் கல்வி நிறுவனமான பாடசாலைக்குள் காலடி எடுத்து வைப்பதற்கு முன்னர், முன்பள்ளிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியையும் பிள்ளை பெற்றுக்கொள்கின்றது. முன்பள்ளிக் கல்வியைப் பெற்றுக்கொள்ளாத பிள்ளைகளும், முன்பள்ளிக் கல்வி நிலையங்களுக்கு ஒழுங்காகச் சென்று வராதவர்களும் கூட பாடசாலைக்கு வரத் தொடங்குகின்றபோது "கற்றல்" (learning) எனும் தொழிற்பாட்டை வெற்றிகரமாக முன்னெடுக்கும் ஆற்றலுள்ளவர்களாகவே பிரவேசிக்கின்றனர். இவ்வாறு பாடசாலையில் முதன் முதலாக உள்நுழைகின்றபோதே கற்றலை வெற்றிகரமாக மேற்கொள்ளக் கூடியவகையில் தயார் நிலையிலுள்ளவராகப் பிள்ளைகள் விளங்குவதற்கு பெற்றோரின் வகிபங்கே முக்கியமானது என்பது மிகைப்பட்ட கூற்றன்று.

பிள்ளைகளின் மொழிவிருத்தி வீட்டிலிருந்தே ஆரம்பமாகின்றது, நல்லவீட்டுச் சூழலிலேயே அது வளம் பெறுகின்றது. பிள்ளைகள் பேசத் தொடங்குவதற்கான ஆரம்ப முயற்சிகளை விளங்கிக் கொண்டு அவர்கள் பேசத்தொடங்குவதற்கும் பெற்றோர்களே உதவுகிறார்கள். வயது வந்த ஒருவர் சொல்வதைப் போன்று தமது பிள்ளைகளின் சொற்கள் ஒலிக்காவிடினும் அவர்கள் என்ன கொல்ல முற்படுகிறார்கள் என்பது பெற்றோருக்குத் தெரியும். உதாரணமாக தண்ணீர்க்குடத்தைப் பார்த்து அல்லது குவளை ஒன்றைப் பார்த்து பிள்ளை "ட....ட.......ட" எனும்போதோ அல்லது வேறு ஒலிக்குறிப்புகளை எழும்பும்போதோ, குடிப்பதற்குப் பிள்ளைக்கு ஏதாவது வேண்டும் என்பது பெற்றோருக்கே விளங்கும். பிள்ளைகள் தமது மொழியைப் பிரயோகிப்பதற்கு முயற்சிக்கும் போதும் பெற்றோரே ஊக்கம் அளிக்கின்றனர். பிள்ளைகள் தனியாக விளையாடும் போது தமக்குள்ளாகவோ அன்றேல் கற்பனை செய்த விளையாட்டுத் தோழருடனோ அடிக்கடி பேசுவதையும் பெற்றோரே அவதானிக்க முடியும். அவ்வேளைகளில் குறுக்கீடு செய்யாமல் அவர்களை அவர்பாட்டில் விளையாட விட வேண்டியதும் கூட பெற்றோரின் பொறுப்பாகும்.

வீட்டுச் சூழலில் பிள்ளைகளின் மொழித்திறன் விருத்திக்கான சந்தர்ப்பங்களையும் பெற்றோரே ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். விளையாடுவதற்கான பொம்மைகளையும், வேறு விளையாட்டுப் பொருட்களையும் வாங்கிக்கொடுத்தும்; ஓய்வான வேளைகளில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகளுக்குக் கதைகள் சொல்லியும் தமது பிள்ளைகள் சொல்லும் கதைகளைப் பொறுமையுடன் கேட்டு அவர்களுடன் உரையாடி வரவேண்டியது பெற்றோரின் கடமைகளாகும். தமது பிள்ளைகளுக்காக கதைகளைப் பெற்றோர் வாசிக்கமுடியுமெனின், அக்கதைகளில் இடம்பெறும் புதிய சொற்களுடனும் அச்செழுத்துக்களுடனும் பிள்ளைகள் பரிச்சயமுற முடியும். பெற்றோர் வாசிக்கும் போதும் எழுதும் போதும் அவர்களை அவதானித்து அவர்களைப் போன்றே பிள்ளைகள் செய்ய விரும்புவார்கள். பிள்ளைகளுடன் கதைகளைப் பகிர்ந்து கொள்ளும்போது புதிய சொற்கள் மாத்திரமன்றி, புதிய எண்ணங்களும் (Ideas) கூட பிள்ளைகளுக்கு அறிமுகமாவதற்கு வாய்ப்பு உண்டாகின்றது.

படம் பார்த்துக் கதைசொல்லல் என்பது பிள்ளைகளின் மொழித்திறன் விருத்திக்கு உதவுவதோடு மாத்திரமன்றி, தமது கற்பனைத்திறனையும், படைப்பாற்றலையும் கூட பிள்ளைகள் வளர்த்துக்கொள்ள உதவுகின்றது. பிள்ளைகளுக்குச் சலிப்பைக் கொடுக்காத வகையில், பெரிய எழுத்துக்களில் அச்சடிக்கப்பட்ட படங்களுடன் கூடிய புத்தகங்களை வாங்கிக்கொடுத்து பிள்ளைகளுடன் சேர்ந்து அவற்றைப் படிக்க வேண்டியதும் பெற்றோரின் பொறுப்பாகும். இவ்வாறு கதைகளை வாசித்து வரும் போது தமக்குப்பிடித்தமான ஒரு கதையைப் பல தடவைகள் பெற்றோர் வாசிக்கக் கேட்பது குழந்தைகளுக்கு விருப்பமாக இருக்கும். ஒரே நாளில் பல தடவைகளோ அல்லது ஒவ்வொருநாளும் ஒரு மணித்தியாலத்துக்குக் குறையாமலோ மீண்டும் மீண்டும் ஒரே கதையைப் படிப்பது பெற்றோருக்குக் களைப்பையும் சலிப்பையும் தரலாம். ஆனால் பிள்ளைகள் அக்கதையில் உள்ள சில குறிப்பான சொற்களை அடையாளங்காணத் தொடங்குவதோடு, வாசிப்பின் போது பெற்றோர் ஒரு பக்கத்தைத் தவறவிட்டால் கூட அதைச் சுட்டிக் காட்டவும் கூடும். புத்தகத்திலுள்ள அச்செழுத்துக்கள் உண்மையில் எத்தனையோ சுட்டுகின்றன என்பதைப் பிள்ளைகள் உணரத் தொடங்குவதும் இச்சந்தர்ப்பத்தில்தான் என்பதைப் பெற்றோர் மறந்துவிடக்கூடாது. அது மாத்திரமன்றி, வாசிக்கும் போது ஒரு பக்கத்தின் மேற்பாகத்திலிருந்து கீழ்ப்பக்கம் வரையும் வாசிக்க வேண்டும் என்பதையும், ஒவ்வொரு வரியையும் இடது பக்கத்திலிருந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலதுபக்கம் நோக்கி வாசிக்க வேண்டும் என்பதையும், ஒவ்வொருபக்கமாக ஒன்றைத் தொடர்ந்து மற்றையது என்ற வகையில் வாசிக்க வேண்டும். என்பதையும் கூட பிள்ளைகள் கண்டறிந்து கொள்வதும் இந்நிலையிலேதான் என்பது முக்கியமானதாகும். அத்தோடு இவையாவும் எழுதுதலிலும் கவனத்திற்கொள்ளப்பட வேண்டியவை என்பதனால், களைப்பையும் சலிப்பையும் பொருட்படுத்தாது கதைகளைத் தமது பிள்ளைகளுக்காக வாசித்து வரும்போது, தாமே தமது பிள்ளைகளுக்கு தொடக்கநிலை ஆசிரியர்களாக விளங்குகின்றார்கள் என்பதைப் பெற்றோர் மனங்கொள்ள வேண்டும்.

பிள்ளைகளின் எழுத்து முயற்சிகளும் பெற்றோர் எழுதுவதை அவதானிப்பதன் பேறாகவே ஆரம்பிக்கின்றன. அவர்களின் தொடக்கநிலை எழுத்து முயற்சிகள் கருத்தற்றவையாக வெறும் கிறுக்கல்களாகத் தோன்றும். ஆனால், கிறுக்கல்களான அவை பற்றி பிள்ளைகளிடம் பெற்றோர் கேட்பார்களேயாயின் அவை எவற்றைக் குறிப்பிடுகின்றன என்று பிள்ளைகள் கூறுவார்கள். படிப்படியாக, இக்கிறுக்கல்கள் எழுத்து வடிவங்களை ஒத்ததாக மாறத்தொடங்குவதையும், சொற்களாக உருமாற்றம் பெறத் தொடங்குவதையும் கூட பெற்றோர் அவதானிக்கலாம். பிள்ளைகளின் எழுத்துத்திறன் விருத்தியிலே இவை முக்கியமான படிநிலையாகும்.

கேட்டல், பேசுதல், வாசித்தல், எழுதுதல், ஆகிய நான்கு அடிப்படை மொழித்திறன்களும் வீட்டிலிருந்தே ஆரம்பமாவதால், பிள்ளைகளின் மொழித்திறன் விருத்தியில் பெற்றோரின் வகிபங்கு அளப்பரியது. பிள்ளைகள் கற்றுக்கொள்வதிலே ஆர்வம் உள்ளவர்கள் என்பதும் வெவ்வேறு வழிகளிலே அவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள் என்பதும், தாம் உண்மையாக விரும்புகின்ற செயல்களிலே ஊக்கத்துடனும் வினைத்திறனுடனும் ஈடுபடுவார்கள் என்பதும் பெற்றோர் மாத்திரமன்றி பாடசாலை ஆசிரியர்களும் கூட கவனத்திற் கொள்ள வேண்டியவையே எனவே பிள்ளைகளின் கற்றலுக்கான ஆர்வத்தையும் நாட்டத்தையும் உருவாக்குவதும் பேணுவதும் கூட பெற்றோர்களினதும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியர்களினதும் முக்கிய கடமையாகின்றது. கற்றலானது பல்வேறு வழிகளிலே இடம்பெறக்கூடியது என்பதனால் அதற்கான பல்வேறு சந்தர்ப்பங்களையும் ஏற்பாடு செய்துகொடுப்பதும்ம் அவசியம், தொடக்கத்திலே கருத்தற்றவையாகத் தோன்றும் பேச்சும் எழுத்தும் கருத்துள்ளவையாக மாற்றம் பெறத் தொடங்குவதை விசைப்படுத்த வேண்டியவர்களும் வெற்றோரே.

## பெற்றோரின் வகிபங்கு நிலைகள்

ஆரம்ப பிள்ளைப்பருவச் சிறார்களின் மொழிவிருத்திக்குப் பெற்றோர்கள் செய்ய வேண்டிய சிலவற்றைப் பின்வருமாறு பட்டியலிடலாம்.

1. பிள்ளைகளுடன் சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் கதைத்தல், கதைப்பதற்கான அதிக சந்தர்ப்பங்களை ஏற்படுத்தல்.
2. கதைக்கும் போது பிள்ளைகளால் விளங்கிக் கொள்ள முடியாத சொற்களுக்கு விளக்கம் கூறல்.
3. பிள்ளைகளை வெளியே கூட்டிச்சென்று அவர்கள் காண்பவற்றைப் பற்றி அவர்களுடன் கதைத்தல்.
4. "இது" "அது" என்ற சொற்பிரயோகங்களுக்குப் பதிலாக அப்பொருட்க ளுக்கான பெயர்களை எப்போதும் உரையாடலில் பயன்படுத்தல்.
5. கதைகள் கூறல்
6. பிள்ளைகளுக்குப் பழக்கமான கதைகளை சொல்லத் தொடங்கி பின்பு அவற்றை முடித்து வைக்குமாறு பிள்ளைகளைக் கோரல்.
7. திருத்தமான மொழிப்பிரயோகத்தை எப்போதும் மேற்கொள்ளல்.
8. பிள்ளைகளுடன் சேர்ந்து வாசித்தல்
9. தொழில் முடித்து வந்தபின் அன்றைய தினம் என்ன என்ன எல்லாம் நிகழ்ந்தன என பிள்ளைகளிடம் வினாவுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. பிள்ளைகள் கூறுவனவற்றைப் பொறுமையுடன் செவிமடுத்தல்.

11. பிள்ளைகள் எழுதுவதற்கும், வரைவதற்கும் நிறந்தீட்டுவதற்கும் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்து அவர்களைப் பாராட்டி உற்சாக மளித்தல்.

12. கடைகளுக்கும், கடற்கரைக்கும், நூல்நிலையங்களுக்கும் வேறு இடங்களுக்கும் அழைத்துச் சென்று உரையாடுதல்.

13. பிள்ளைகளுடன் சேர்ந்து சொல்ஆக்க விளையாட்டுக்களை விளையாடுதல்.

14. பெரிய எழுத்துக்களினாலான விளம்பர எழுத்துக்களையும், பத்திரிகைத் தலைப்புகளையும் வாசித்துக்காட்டல்.

15. பிள்ளைகளையும் கூடவே வைத்துக்கொண்டு, பொருட்கள் வாங்கு வதற்கான பட்டியலையோ அல்லது கடிதங்களையோ எழுதுவதன் மூலம் எழுதும் முறையைப் பிள்ளைகள் அவதானிப்பதற்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

16. சிறப்புத் திருநாட்களில் நண்பர்களுக்கு அல்லது உறவினர்களுக்கு அனுப்பும் வாழ்த்து மடல்களில் தங்கள் பெயர்களையும் எழுதுவதற்குப் பிள்ளைகளுக்குச் சந்தர்ப்பம் அளித்தல்.

17. பிள்ளைகளின் வினாக்களுக்குப் பொறுமையாக விடை அளித்தல்

பாடசாலைக்குப் பிள்ளைகள் செல்லத்தொடங்கமுன்னர் வீட்டில் பிள்ளைகள் பெறும் மொழித்திறன்களின் விருத்தியானது பாடசாலைக் கல்வியின் தொடக்கத்திற்கு வளமாக அமையும். பாடசாலைக் கல்வியின் ஆரம்ப நிலைக் கல்வியிலும் (Primary education) கூட பெற்றோரைப் பாடசாலைகள் நன்கு பயன்படுத்திக்கொள்ள முடியும். பாடசாலையில் பிடிமானம் கொண்டோருள் (Stakeholders) மிக முக்கியமானவர்கள் பெற்றோர்களே. தமது பிள்ளைகளின் நல்ல நடத்தை குறித்தும், கல்வி முன்னேற்றம் குறித்தும் பெற்றோர் காட்டும் அக்கறை காரணமாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் கல்வி பயிலும் பாடசாலைகளின் மீது பெற்றோர் கொண்டுள்ள பிடிமானம் பாடசாலையின் விருத்திக்கு வேண்டிய முக்கியமான ஓர் அம்சமாகும்.

இன்று வியாபாரத்திலும் வர்த்தகத்திலும் அபிவிருத்திப் பணிகளிலும் பங்காண்மை (Partnership) குறித்துப் பேசப்படுகின்றதே தவிர "பாடசாலை - வீடு பங்காண்மை" (home school Partnership) பற்றி எவரும் சிந்திப்பதாக இல்லை. பெற்றோரைப் பாடசாலையின் பங்காளிகளாகக் கொண்டு பாடசாலையின் கல்வி அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்களையும் ஈடுபடுத்தி உரிய பயனைப்பெற்றக்கொள்ள வேண்டியது பாடசாலைகளின் இன்றைய தேவையாக உள்ளது. பெற்றோரைப் பாடசாலைக்கல்வி நிகழ்ச்சித் திட்டங்களில் உரியவாறு பயன்படுத்திக் கொள்வதற்கு தூரநோக்கும் நல்ல திட்டமிடலும் அவசியம். பாடசாலை அதிபர்களும் ஆசிரியர்களும் இது குறித்து நன்கு சிந்தித்து பெற்றோரைப் பயன்படத்திக் கொள்வதற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றை ஒரு செயல்நிலைத் திட்டமாகவே (Action Plan) தயாரித்துக் கொள்ளவும் வேண்டும். இவ்வாறான திட்டம் ஒழுங்காக நடைமுறைப்படுத்தப்படுமாயின் மாணவர்களின் மொழித்திறன் விருத்தியில் மாத்திரமன்றி, ஆரம்பகணித அடிப்படைத் திறன்களின் விருத்தியிலும் கூட நல்ல முன்னேற்றத்தை ஏற்படுத்த முடியும்.

## References:

1. Delgado - Gaitan, Concha. (1990). literacy for empowerment: The role of parents in Children's Education, london: falwer Press.

2. Rich, dorothy. (1985). The forgotten facator in School Success: The family washington: Home and School institute.

3. Scott - Jones, D.(1984). family influences on cognitive development and school achievement. Review of research in Education, ii, 259-304



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாடசாலையை வினைத்திறனாக்களில் அதிபர்களது போதனாத் தலைமைத்துவம்.

நிர்மலா நல்லையா

கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளின் ஊடாக மாணவரிடையே நடத்தை மாற்றத்தை ஏற்படுத்துவன பாடசாலைகள். நடத்தை மாற்றம் என்பது கற்றல் காரணமாக மாணவரிடையே நிகழும் அறிவுசார், திறன்சார், மனப்பாங்கு சார் விழுமியம்சார் விருத்தி நிலையாகும். இந்த விருத்தி நிலைகள் கற்றலுடாக, அதாவது மாணவர்கள் தமது சூழலோடும் தமக்குக் கிடைக்கும் தகவல்களோடும் தொடர்பு கொள்வதனூடாகவும் அவற்றை ஆராய்ந்து உள்வாங்குவதன் ஊடாகவும் தமக்குள்ளே உருவாக்கும் மாற்றங்களாகும். இந்த மாற்றங்களை நோக்கியதாக, கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளை வினைத்திறன் படுத்தும் வகையில் அதிபர்களிடம் எதிர்பார்க்கப்படுவதே போதனாத் தலைவர் வகிபங்காகும்.

கற்றற் செயற்பாட்டிற்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுக்கும் வசதிப்படுத்துநராக (Facilitator) ஆசிரியர்கள் கருதப்படுகின்றனர். கற்றல் - கற்பித்தலுக்கு வேண்டிய அறிவுசார் பின்புலம் ஆசிரியர்களிடமே எதிர்பார்க்கப்படுகின்றது. ஆசிரியர்கள் தமது மாணவர்கள் வெற்றிக்கான பொறுப்புக்களை பெருமிதத்துடன் ஏற்றுக் கொள்ளும் நேரத்தில், பின்தங்கிய நிலைக்கு மாணவர்களையும் பெற்றோர், சமூகத்தினரையும் காரணம் காட்டுகின்றனர். ஒரு பிள்ளையின் கற்றற் பின்னடைவிற்கு எனது வகுப்பறை ஒழுங்கமைப்புக் காரணமாக இருந்ததா? என்னாற் பயன்படுத்தப்பட்ட கற்றல் கற்பித்தல் உத்திகள், கற்றல் உபகரணங்கள் பொருத்தமாக அமையவில்லையா? போன்ற சுய மதிப்பீட்டு வினாக்களை ஆசிரியர்கள் கேட்பதேயில்லை.

ஆசிரியர்கள் தங்களைத் தாங்களே சுய பிரதிபலிப்பிற்கு உட்படுத்தவும், தமது கற்றல் -கற்பித்தல் உத்திகளை மாற்றியமைக்கவும் வளங்களை உரிய முறையிற் பயன்படுத்தவும் எல்லா மாணவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்கக் கூடியவர்கள் என்பதனை ஏற்றுக் கொண்டு தனியாள் வேறுபாடு களுக்கேற்பச் செயற்பாடுகளைத் திட்டமிடவும் வழிகாட்டும் பொறுப்பு, அவற்றை மேற்பார்வை செய்யும் பொறுப்பு அதிபர்களுக்குரியது. இப்பொறுப்புக்களின் நிறைவேற்றத்திற்குரியதே போதனாத்தலைவர் வகிபங்காகும்.

போதனாத் தலைமைத்துவமானது அதிபர் தனது அலுவலகம்சார் நிர்வாக முகாமைத்துவக் கடமைகளுக்கப்பால், பாடசாலையில் ஆசிரியர் மாணவர்களுடன் அவர்களது கற்பித்தல் கற்றல் தொடர்பாகக் கலந்துரையாடுதலை, வகுப்பறைக்குச் சென்று கற்றல் கற்பித்தல் நிலைமைகளை அவதானித்தலை, அவர்களது பலம் பலவீனங்களை அறிந்து தேவையான வழிகாட்டல்களை வழங்குதலை, வாண்மைப் படுத்துவர் (Mentor) ஒருவராக, மாதிரி (Model) ஒருவராகத் தம்மை மாற்றிக் கொள்ளுதலை, பாடசாலை நேரத்திற் கூடுதலான நேரத்தை வகுப்பறைக் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளின் வினைத்திறனுக்குப் பயன்படுத்துதலை வலியுறுத்துகின்றது.

அதிபர்களது முகாமைத்துவம்சார் திறன்களும் போதனாத் தலைமைத்துவம்சார் பணிகளைச் சிறப்பாக நிறைவேற்ற உதவுகின்றன. சிறந்த ஒரு முகாமையாளராகப் பணிபுரிய முடியாத அதிபரிடத்து போதனாத் தலைமைத்துவம்சார் பணிகளை எதிர்பார்க்க முடியாது. ஒரு பாடசாலையின் வினைத்திறன்மிக்க அபிவிருத்தியானது அதன் கற்றல் கற்பித்தற் செயற்பாடுகளின் முன்னேற்றம் நோக்கிய சகல செயற்பாடுகளிலும் தங்கியிருக்கும்.

போதனாத்தலைவர் என்ற வகையில் பாடசாலையின் மையச் சக்கரமாக விளங்குபவர் அதிபர். ஒவ்வொரு ஆசிரியரதும் போதனை அளவானது கற்றல் - கற்பித்தற் செயற்பாடுகளின் தரம், மாணவர் சாதனையின் உச்ச எல்லை மற்றும், பாடசாலைத் தொழிற்பாட்டின் வினைத்திறனின் அளவு ஆகியவற்றிற் தாக்கத்தை ஏற்படுத்துபவராக அதிபர் உள்ளார். இதனாலேயே "ஒரு பாடசாலை வினைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திறனுடையதாக இருக்க வேண்டுமெனில் அது அதிபரின் போதனாத் தலைமைத்துவம் காரணமாகவே அவ்வாறு இருக்கும் என Findly and findly (1992) குறிப்பிடுகின்றார். வினைத்திறனுடைய ஒரு பாடசாலையை உறுதிப்படுத்துவதற்கு அதிபர் சில முகாமைத்துவப் பணிகளை மேற்கொள்ள வேண்டுமென்ற போதும் மாணவரின் உயர்வான சாதனைக்கு வழிகாட்டும் செயற்பாடுகள் மீதே அவரது கவனம் இருக்க வேண்டும் என்பது ebben மற்றும் Hughes (1989) ஆகியோரது கருத்தாகும்.

Acheson மற்றும் Smith ஆகியோரின் கருத்தின்படி போதனாத் தலைவர் என்பவர் ஒரு நிர்வாகியாக இருக்கின்றார். போதனாச் செயற்பாடுகளை வலியுறுத்துகின்றார். ஆசிரியர் மாணவர்களுக்கிடையேயான செயற்பாட்டுத் தொடர்பினை வசதியாக்குகின்றார். பாடவிதானத்தையும் இவர் வசதியாக்குகின்றார். (Flath 1989)

Mendez என்பவரது கருத்தின்படி ஒரு பாடசாலையை உருவாக்கி விபரிக்கப் பயன்படுகின்ற மூன்று பிரதான சக்திகளாக பொதுமக்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உள்ளனர். இச்சக்திகள் பாடவிதானமூடாக இடைத்தாக்கம் அடைகின்றன. போதனாத் தலைவரின் பணியானது கற்றல் - கற்பித்தலின் தரத்தை உச்சப்படுத்தும் வகையில் இச்சக்திகளைச் சரியான முறையில் கையாளுவதாகும். (Flath 1989)

Kroeze அவர்கள் போதனாத் தலைமைத்துவச் செயற்பாடுகளை பின்வரும் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தியுள்ளார்.

i). இலக்கு வலியுறுத்தல்-இலக்குகளையும் உயர்வான எதிர்பார்ப்புக் களையும் அமைத்து மாணவர் சாதனை மீது கவனஞ் செலுத்துதல்.
ii). ஒருங்கிணைப்பும், ஒழுங்கமைப்பும் - விளைவுத்திறனுக்கும் வினைத் திறனுக்குமாக உழைத்தல்
iii). அதிகாரமும் சிந்தித்துத் தீர்மானம் மேற்கொள்ளலும்-மூலவளங்களைப் பெற்று மாற்றீடுகளை உருவாக்கி போதனை சார் திட்டத்திற்கு உதவி அதனை மேம்படுத்த வசதி செய்தல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iv). மனித உறவுகள்;- ஆசிரியர்கள், பெற்றோர்கள், சமூகம் மற்றும் மாணவர்கள் ஆகியோரை வினைத்திறனுடன் கையாளுதல்.(Flath 1989)

போதனாத் தலைமைத்துவத்தின் ஓர் அம்சமாக போதனை சார் மேற்பார்வையும் ஆய்வாளர்களால் வலியுறுத்தப்பட்டுள்ளது. இப்பணி சிறப்பார்ந்த கற்றல் கற்பித்தற் செயற்பாடுகள் மற்றும் மாணவர் சாதனைகளுக்குப் பொருத்தமானதென இவர்கள் கருதுகின்றனர்.

போதனாத் தலைவர்களின் செயற்பாடுகள் சிறப்பாக அமைய வேண்டுமெனில் அவர் ஒரு தொழிற்படுகின்ற ஆசிரியராக இருத்தல் வேண்டும். ஐக்கியராச்சியத்திலுள்ள தலைமை ஆசிரியர்கள் போதனாத் தலைமைத்துவத்திற்குப் பங்களிப்புச் செய்கின்ற மிக முக்கிய விடயம் யாதெனில் வாரமொன்றுக்கு ஏறத்தாழ சராசரி 20% நேரத்தைக் கற்பித்தலுக்குச் செலவிட்டமையாகும். நம்பகத் தன்மையை ஏற்படுத்துவதற்காக அதிபர்கள் மாணவர்களுடன் நெருக்கமாகச் செயற்பட்டு பாடவினை தீர்மானங்களுக்கான அடித்தளத்தை நிறுவி ஆசிரியரின் கோணத்தைப் புரிந்து கொள்வதற்கான வழி என்ற வகையிற் கற்பித்தற் தொழில்நுட்பங்களை விருத்தி செய்தல் வேண்டும். மாணவர்களின் கல்வித் தேவைகளை நிறைவேற்றும் வகையிற் செயற்படுதலே பாடசலையின் பிரதான இலக்காகும். (Harden 1988)

போதனாத் தலைமைத்துவத் தொழிற்பாடுகள் வகுப்பறைகளில் போதனைசார் அதாவது கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளிலான வினைத்திறனை மேம்படுத்துவதற்காக அதிபர்கள் கொண்டுள்ள நம்பிக்கைகள், அவர்கள் பயன்படுத்துகின்ற தந்திரோபாயங்கள் மேற்கொள்கின்ற தீர்மானங்கள் ஆகியவற்றுடன் தொடர்புடையனவாக உள்ளன.

போதனாத்தலைவர் என்ற வகையில் அதிபர் ஒருவர் அறிவு அடித்தளம், பணிப்பொறுப்புக்கள், மற்றும் பொருத்தமான ஆற்றல்கள் ஆகிய மூன்று பிரதான விடயங்களிலான ஆற்றல்களைத் தம்மிடையே விருத்தி செய்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவு அடித்தளமானது. பாடசாலையின் வினைத்திறன், கற்பித்தல் பற்றிய ஆராய்ச்சிகள், போதனைசார் செயற்பாடுகளின் முகாமைத்துவ மாற்றங்களை எதிர்கொண்டு அவற்றைப் பரிச்சயப்படுத்தும் நிலை ஆகியவற்றை உள்ளடக்குகின்றது. அறிவு அடித்தளமானது கல்வித்தத்துவங்கள், கருத்துக்களை விளங்கிக் கொள்ளல், அவற்றினூடாகப் பாடசாலையின் அபிவிருத்திக்கு வேண்டிய கொள்கைகளை உருவாக்கல் ஆகியவற்றுடனும் தொடர்புடையது.

பணிப் பொறுப்புக்கள் என்ற வகையில் போதனைசார் செயற்பாடுகளின் மேற்பார்வை மற்றும் மதிப்பீடு, ஆசிரியர்களது வாண்மைத்துவ விருத்தி தொடர்பான நடவடிக்கைகள், குழு அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள், செயற்பாட்டு ஆராய்ச்சி, ஒரு நேர்கணிய பாடசாலைச் சூழலின் அபிவிருத்தி, பாடசாலைக்கும் சமூகத்துக்கும் இடையிலான தொடர்புகளின் உருவாக்கம் ஆகியவற்றின் மீதான அதிபர்களின் கவனம் எதிர்பார்க்கப்படுகின்றது.

இப்பணிப் பொறுப்புக்களைச் சிறப்பாக நிறைவேற்றும் வகையில் ஒவ்வொரு அதிபரும் பொருத்தமான ஆற்றல்களைத் தம்மிடையே விருத்தி செய்தல் வேண்டும். இவ்வாற்றல்களை நபர்களுக்கிடையிலான தொடர்புகள், தொழில்நுட்பரீதியானவை என இரு வகைப்படுத்த முடியும்.

தகவற் தொடர்பு, ஊக்குவித்தல் (Motivation) தீர்மானம் எடுத்தல், பிரச்சினை தீர்த்தல், முரண்பாடுகளை முகாமை செய்தல் ஆகியன நபர்களுக்கிடையிலான தொடர்புகளில் அடங்கும் இலக்குகளை நிர்ணயம் செய்தல், மதிப்பீடு, அவற்றை நடைமுறைப்படுத்தும் வகையிலான திட்டமிடல், ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தல்களை வழங்குதல், அவர்களுக்கு வேண்டிய பின்னூட்டல்களை வழங்கும் வகையில் மேற்பார்வை செய்தல், கற்றல் கற்பித்தலின் முன்னேற்றத்தினை அளவிடும் வகையிலான கணிப்பீட்டு நடைமுறைகள் ஆகியன தொழில் நுட்ப ஆற்றல்களில் அடங்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவற்றை நடைமுறைப்படுத்தும் போது அதிபர்கள் பிரதிபலிப்பு/ மீள்நோக்குச் செயற்பாட்டாளர்களாக (Reflective practioners) தம்மை ஆக்கிக் கொள்ளுதல் வேண்டும். பாடசாலையின் போதனைசார், கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் சார் அம்சங்களை மீள் நோக்குதல் மூலமே மாற்றங்களை ஏற்படுத்த முடியும். இதற்கு போதனா நடவடிக்கைகள் சார் பதிவுகள் பேணல் (Journal Keeping) அவசியமானது. இப்பதிவுகள் ஊடான விஞ்ஞான பூர்வமான மீள்நோக்கின் ஊடாகவே எது உண்மையில் கவனம் செலுத்த வேண்டிய விடயம் என்பதைத் தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

போதனாத் தலைவர் ஒருவரது மீள்நோக்குச் செயற்பாட்டுக்கு வகுப்பறைத் தரிசிப்பு இன்றியமையாதது. அலுவலகத்தில் இருந்தபடி ஏனையோர் மூலம் அறிந்து கொள்பவை நம்பகமான தகவல்களாக அமையும் எனக் கூறமுடியாது. அதிபர்கள் தமது நாளாந்தச் செயற்பாட்டில் வகுப்பறைத் தரிசிப்பிற்குக் கூடுதலான நேரத்தை ஒதுக்குவதுடன் வகுப்பறையில் ஒரு பார்வையாளராக அல்லாது வகுப்பறைச் செயற்பாடுகளில் பங்குபற்றுநராகத் தொழிற்படல் வேண்டும். பிழை கண்டு பிடித்தல் எனும் நோக்கில் அல்லாது முன்னேற்றத்திற்கான வழிகாட்டுநர். வசதிப்படுத்துநர் என்ற வகையில் ஆசிரியர்களதும் மாணவர்களதும் நம்பிக்கையைத் தமதாக்கிக் கொள்ளுமிடத்து சிறந்த அதிபர், ஆசிரியர், மாணவர் தொடர்பு ஏற்படும். கற்பித்தல், கற்றலுக்கான உளரீதியான பாதுகாப்பு உணர்வு ஆசிரியர்களிடமும், மாணவர்களிடமும் உருவாகும்.

பாடசாலையின் தலைவர் என்ற வகையில் பல்பரிமாணங்களைத் தமதாக்கிக் கொள்ளும் அதிபர் ஒருவரது போதனாத் தலைமைத்துவப் பணிகள் வருமாறு.

1. அபிவிருத்திக்கான பரப்பெல்லைகளைத் தீர்மானித்தலும், இலக்குகளை அமைத்தலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. பொதுவான கலைத்திட்டத்தைப் பாடசாலைக் கலைத்திட்டமாக மாற்றியமைப்பதற்கு வேண்டிய வழிகாட்டல்களை வழங்குதல், இணைந்த செயற்பாடுகளை ஒழுங்கமைத்தல்.

3. தேவையான வளங்களைப் பெற்றுக் கொடுத்தல்.

4. போதனை அதாவது கற்றல் - கற்பித்தலின் தரத்தை உறுதி செய்யும் வகையில் இணைந்த செயற்பாடுகளில் தாமும் பங்குபற்றல்

5. வகுப்பறைக் கற்பித்தலில் தாமும் ஈடுபடல்.

6. கற்றல் - கற்பித்தல் தொடர்பாக முறைசார்ந்த வகையில் அல்லாத உரையாடல்களை மேற்கொள்ளல்.

7. வகுப்பறைகளிற் கற்றல் கற்பித்தல் நடைபெறாத நேரத்தைக் குறைப்பதற்கு ஆலோசனை வழங்கல்

8. மாணவர்களிடம் அவர்களது கற்றல் நேரம், கற்றற் பயன் தொடர்பாகக் கலந்துரையாடல்

9. மதிப்பீட்டு அறிக்கைகளைப் பார்வையிடல், கொண்ட முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

10. சிறந்த நபர்களுக்கிடையிலான தொடர்புகளைக் கட்டியெழுப்பல்.

11. வாண்மைப்படுத்துநர் ஒருவராகச் செயற்பட்டு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல்களை வழங்கல்

12. கல்விசார் ஆளணியினரிடையே இணைந்த செயற்பாடுகளை (Col laborative work) ஊக்குவித்தல்.

13. குழுக்கள், தனிநபர்களிடம் மேற்பார்வைப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தமை அவர்களுடாகப் பெற்ற தகவல்களை வகுப்பறைத் தரிசிப்புக்கள் ஊடாக உறுதி செய்தலும்.

14. உயர்வான தரங்களைப் பேணுவதற்கு ஆசிரியர்களைப் பொறுப் புள்ளவர்களாக ஆக்குதல். அவர்களிடையே சகல மாணவர்களும் உயர்மட்டப் பெறுபேறுகளை அடையக் கூடியவர்கள் எனும் நேர்கணிய எதிர்பார்ப்புக்களை உருவாக்குதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15. ஆசிரிய வாண்மைத்துவ விருத்திச் செயற்பாடுகளில் கவனம் செலுத்துதல்

16. கற்றல் - கற்பித்தல் தொடர்பான செயல் நிலை ஆய்வுகளை மேற்கொள்வதற்கான சந்தர்ப்பங்களை உருவாக்கல்

17. மொத்தத்தில் திட்டமிடல், ஒழுங்கமைத்தல் நடைமுறைப்படுத்தல், கண்காணித்தலும் மதிப்பீடும் ஆகிய முகாமைத்துவச் செயலொழுங்குகளின் அடிப்படைக் கற்றல் - கற்பித்தல் இடம் பெறலை உறுதிசெய்தல்.

## References:


1. Findly Bs findly .D (1992) Effective School, The role of the Principal. Contemporary Education, 63 (2)

2. Ubben G.,Hughes. L, (1989) The Elementary Principals Handbook, Boston Allyn and Bacon

3. Flath B (1989) The Principal as instructional leader ATA magazines, (69) 3

4. Harden. G. (1988) The Principal as a leader Practionar, the, Elementory house.


**கல்விச் செய்திகள்**

"பயிற்றப்படாத எவரும் வகுப்பறைக்குள் நுழையக்கூடாது" என்பது கல்வியியலாளரின் வாதமாக அமைகின்றது. அண்மையில் பாடசாலைகளில் நியமனம் செய்யப்பட்ட பட்டதாரிகள் வகுப்பறைச் செயற்பாடுகளிலும், பாடசாலைச் செயற்பாடுகளிலும் பல்வேறு இடர்பாடுகளை சந்தித்து வருவதாகவும், இவர்களுக்கான முறையான முன்பயிற்சித் திட்டம் அவசியம் என அதிபர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

*- யாழ் நிருபன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனிதவள கல்வி முகாமையில் நவீன அணுகுமுறையாக குழுஉளவியல் பிரயோகங்கள்.

பா.தனபாலன்

மனிதவள கல்வி முகாமைத்துவ அபிவிருத்திச் செல்நெறிகளில் பிரயோக உளவியல் நுட்பங்கள் பெருமளவு பயன்படுத்தப்படுகின்றன. அதுவும் பிரயோக உளவியலின் ஒரு கூறான குழுஉளவியல் இன்றைய மனிதத்துவ அணுகுமுறை முகாமைத்துவ வளர்ச்சியில் பெரும் பங்களிப்பை நல்குகின்றது. மனிதன் எப்போதுமே சமூகப்பற்றுடையவன் பிறருடன் சேர்ந்து வாழ - தொழில் செய்ய விரும்புபவன்.

தனி மனிதன் பிறருடன் சேர்ந்து குழுவாக இயங்கும் போது அவனது நடத்தைகள் விருத்தியடைகின்றன. மனிதர்களின் சிந்தனை, உணர்ச்சிகள், செயல்கள் எல்லாம் அவர்கள் குழுக்களின் உறுப்பினர்களாகச் செயற்படும் போது வெகுவாக மாற்றமடைகின்றன. சுயவழிப்படுத்தல், ஆக்கத்திறன், நடத்தைக் கட்டுப்பாடு தொடர்பான புரிந்துணர்வுகள் மனிதவள முகாமையில் குழு உணர்வினூடாக விருத்தியடைகின்றன[1].

குழு என்பதற்கான வரைவிலக்கணத்தை மெக்கைவர் (Maciver) பின்வருமாறு தருகின்றார். "இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒன்று கூடி பொது நோக்கத்தின் அடிப்படையில் செயற்படும் சமூக அமைப்பே குழு எனப்படும்." இக்குழுவில் உள்ள ஒவ்வொருவரது நடத்தையும் ஏனையோர் நடத்தை மீது செல்வாக்குச் செலுத்துவதும், ஏனையோரது செல்வாக்கிற்கு ஆட்படுவதும் குழுவில் காணப்படுகின்ற விசேட இயல்பாகும் என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குழு நடத்தை இயல்புகள்

i). பொது நோக்கமும் இலட்சியமும் (Common goods, Ideals)

ii). ஒத்த மனப்பான்மையும் செயற்பாடுகளும் (Similar behaviour and attitudes)

iii). குழு ஆதிக்கம் (Control of the group)

iv). பரஸ்பர பொறுப்புணர்வு (Mutual Obligation)

v). ஒன்றிய உணர்வு (Sense of oneness)

vi). உறுப்பினர் மீது குழு நடத்தையின் செல்வாக்கு (Influence of the group characteristics)

vii). குழு உறுப்பினரிடையே காணப்படும் உளவியல் தொடர்பு (Psychological relationship between members)

## குழு உளவியலினூடான தந்திரோபாய முகாமை :

அரசாங்க, தனியார், பொது நிறுவனங்கள், பாடசாலைகள் தமது வினைத்திறன்களை அதிகரிக்க அந்தந்த நிறுவனங்களில் கடமையாற்றும் ஊழியர்களிடையே குழுரீதியான ஒற்றுமை உணர்வை ஏற்படுத்தல் முக்கியமானதாகக் கொள்ளப்படுகின்றது. அத்துடன் இந் நிறுவனங்கள் சூழலில் போட்டிகளை எதிர் நோக்குகின்றன. இவற்றில் வெற்றி கொள்ள சரியான நேரத்தில், சரியான தந்திரோபாயம் (Strategy) பயன்படுத்தப்பட வேண்டும். இங்கு தந்திரோயம் என்பது சூழலின் நிலமைகள் - சவால்களுக்கு ஏற்ப நிறுவன வெற்றியைக் கருத்திற் கொண்டு ஒன்றிணைக்கப்பட்ட தொடர்ச்சியான கருத்துக்களும், செயற்பாடுகளும் கொண்ட ஒரு விசேட குழுரீதியான திட்டமாகும். இது சூழல் நிலைமைகளுக்கு ஏற்ப மாற்றமடையும் நிபந்தனைகளையும் கொண்டிருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பிட்ட நிறுவனத்தின் இலக்கை அடைவதில் அச்சுறுத்தலாகவும், தடையாகவுமுள்ள காரணிகளை எதிர்த்து நிற்கக் கூடிய தந்திரோபாய குழு உளவியல்ரீதியான பங்களிப்பு மனிதவள முகாமையில் மனிதத்துவ அணுகுமுறையாக இன்று பெரும் செல்வாக்குச் செலுத்துகின்றது. இதற்கு குழு உளவியல்ரீதியான நுட்பங்களை முகாமையாளர்களும், தலைவர்களும் பின்பற்ற **வேண்டும்**. இதில் தொடர்பாடல் தேர்ச்சி முக்கியத்துவம் பெறுகின்றது. மனித உணர்வுகளின் தனித்தன்மைகள் தொடர்பாடல் தேர்ச்சிகளாக விரிவடைய இது உதவுகின்றது[2]. ஊழியர்களைத் தொடர்பாடல் உளவியல் நுட்பங்களினூடாக ஒன்றிணைத்து புரிந்துணர்வுகளை ஏற்படுத்த வினைத்திறன்களும் அதிகரிக்கின்றன.

முகாமைத்துவத்தின் பல்வேறு மட்டங்களான உள்ளீடுகள் வழங்கல், தகவல்களைப் பெறல், தீர்மானம் எடுத்தல், அறிக்கையிடல், செயலாற்றுகைகள், கட்டுப்படுத்தல், வெளியீடுகள், எதிர்கால அபிவிருத்தி நடவடிக்கைகள் என்பவற்றிற்கு குழு உளவியலூடான தந்திரோபாய முகாமைத்துவத்தைப் பிரயோகிக்க வேண்டியுள்ளது. இப்பிரயோகம் குறித்த நிறுவன ஊழியர்களை ஒன்றாக இணைத்து செயற்திட்டங்களை நிறைவேற்ற "குழு உணர்வினூடான கூட்ட முகாமைத்துவம் வழிகாட்டுகின்றது. நிறுவனங்களின் வெளியீடுகளை மேம்படுத்த கூட்ட முகாமைத்துவம் மிகுந்த பங்களிப்பை வழங்குகின்றது[3]. இதை முகாமையாளர்கள் சிறப்பாகப் பயன்படுத்த வேண்டும்.

## மாதிரிச் செயலாற்றுகை

குறித்த நிறுவன ஊழியர்களை குழுவாக ஒருங்கிணைத்து ஒரு செயற்திட்டததை வெற்றிகரமாக நடாத்த முனையும் ஒரு நிறுவன முகாமையாளர் அல்லது பாடசாலை அதிபரில் கூட்டம் ஒன்றை ஊழியரிடையே நடாத்தும் போது ஏற்படும் இடர்கள் 1வது பாடத்தில் காட்டப்படுகின்றது. ஒவ்வொரு ஊழியரும் ஒவ்வொரு விலங்குகளுக்கு ஒப்பிடப்படுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்படத்தின்படி இடமிருந்து வலது புறமாக அசைவு நிகழ்கையில் ஒவ்வொருவருடைய பண்புகளும் வெளிவருகின்றன.

- **முதலாமவர்** - (நாய்) - ஆக்கிரமிப்பவர், திடீர் எனக் குறுக்கிடுவார்.
- **இரண்டாமவர்** - (குதிரை) பல்வேறு விடயங்களை நூல்களில் படித்தவர். ஆனால் கலந்துரையாடலில் பங்கு கொள்ளமாட்டார்.
- **மூன்றாமவர்** - (குரங்கு) எல்லா விடயங்களிலும் கலந்துகொள்ள ஆர்வம், பொருத்தமற்றவற்றை வாசிக்க முற்படுவார். ஏனையோரது கருத்துக்களை கேட்கவோ குறிப்பெடுக்கவோ மாட்டார்.
- **நான்காமவர்** - (தவளை) புதிதாக ஒரு விடயத்தையும் கூறமாட்டார் சத்தம் செய்தபடியே இருப்பார்.
- **ஐந்தாமவர்** - (ஆடு) கலந்துரையாடலில் பங்களிப்பார். மற்றவர்களை நிமிர்ந்து பார்க்க வெட்கப்படுவர்.
- **ஆறாமவர்** - (காண்டாமிருகம்) மிகப்பருமனுடையவராகவும், தூக்க மயக்கமுடனும் இருப்பதாலும் மற்றவர்களைப் பற்றி அக்கறை இல்லாதவர்.
- **ஏழாமவர்** - (ஒட்டகச்சிவிங்கி) அவரது தலை உயரமாக இருப்பதால்தான் பெரியவர் என்ற எண்ணத்தில் கலந்துரையாடலில் குழுவினருடன் தன்னைச்சமப்படுத்த முயலார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறானவர்களின் நடத்தைகளையும், மனப்பாங்குகளையும் மாற்றத்திற்கு உள்ளாக்க முகாமையாளர் குழு உளவியல் நுட்பங்களையும், செயலாற்றுகைகளையும், செயல்நிலை ஆய்வுகளையும் மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் நவீன இன்றைய மனிதவள முகாமையில் தனிஒருவராக நிறுவனம் சார்ந்த முடிவுகளை எடுப்பது உசிதமானதாக இல்லை. இது பல பிரச்சினைகளையும் ஏற்படுத்தி விடும்[4]. எனவே செயற்திட்டம் அல்லது செயல்நிலை ஆய்வுகள் அடிப்படையில் பின்வரும் குழுஉளவியல் பிரயோகங்களை நடைமுறைப்படுத்த வேண்டும். இவ்வாறான கூட்ட முகாமைத்துவப் பிரச்சினைகளை நீக்கி புதிய பாதையில் செல்ல, வினைத்திறன்களை அதிகரிக்க செயல்நிலை ஆய்வுகள் உதவுகின்றன. இவற்றைப் பிரயோகிக்கும் தேர்ச்சிகளையும் முகாமையாளர்கள் பெற்றிருக்க வேண்டும். இதற்கான குழுஉளவியல் பிரயோக அடிப்படைக்காரணிகளாக ஒத்துணர்வு, கருத்தேற்றம், பின்பற்றல் என்பவை உள்ளன.

## ஒத்துணர்வு(Sympathy) -

ஒரு குழு பணியாளர்களிடையே அதன் முகாமையாளர் பெற்றுள்ள நிறுவனம் சார்ந்த நேர்மயமான மனவெழுச்சி விரைவில் ஊழியர்களிடம் பரவுகின்றது. இது ஊழியரிடையே ஒற்றுமையையும், வலிமையையும் ஏற்படுத்தும். குழுவூக்கத்தின் எழுச்சிக்கூறாக (Affective aspect) ஒத்துணர்வு பர்ணமிக்கின்றது. ஊழியரிடையே மனவெழுச்சி ஒருமைப்பாடு (Emotional Integration) நிறுவன வளர்ச்சிக்கு மிகமுக்கியம். இதனை ஒத்துணர்வு ஏற்படுத்துகின்றது. பிறருக்கு உதவுதல், பிறரைப் பாதுகாத்தல், நல்லவற்றிற்காக ஒன்றிணைதல், தனது நிறுவன வளர்ச்சிக்காக முரண்பாடுகளைத் தவிர்த்து உழைத்தல், உற்சாகமூட்டல் என்பன ஒத்துணர்வின் பிரதிபலிப்புக்களாகவுள்ளன. நல்லது, கூடாது, சரி, பிழை போற்றத்தக்கது. ஏற்றுக் கொள்ளப்படக் கூடியது, பொறுப்புணர்வு, நல்லொழுக்கம், விழுமியங்கள், நீதி என்பவை குழு ஒத்துணர்வினூடு விருத்தியாகி மனச்சாட்சி தோன்றுகின்றது.[5] இது நிறுவன ஊழியர்களை மனிதத்துவ அணுகு முறையில் ஒருமைப்படுத்தும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தேற்றம். (Suggestion)

பிறருடைய அல்லது தான்சார்ந்த குழு நிறுவன முகாமையாளரின் எண்ணங்களையும், கருத்துக்களையும் ஏற்றுக் கொள்ளும் செயல் முறையாக கருத்தேற்றம் உள்ளது. இது குழுவூக்கத்தின் அறிதற் கூறாக (Congnitive aspect) செயற்படுகின்றது. பிரச்சாரம் அல்லது கொள்கைபரப்பல் (Propoganda) விளம்பரங்கள் (Advertisements) கருத்தேற்றத்தை மையமாகக் கொண்டே செயற்படுகின்றன. கருத்தேற்றத்தில் கருத்துக்கூறுபவரின் சுயநலம் அதிகமாகக் காணப்படும். இது குறித்த நிறுவனவளர்ச்சிக்கு மிக அவசியமுமாகும். நிறுவன வளர்ச்சியுடன் ஊழியர்களது நலன்களும் கருத்தேற்ற செயன்முறையில் கவனிக்கப்படவேண்டும். அப்போதுதான் அபிவிருத்தி ஏற்படும். முகாமையாளர் ஊழியரிடையே அன்பு, பரிவு, புரிந்துணர்வு, பரஸ்பர உதவி, உணர்வுகளைப் புரிதல் என்பவை கருத்தேற்றத்தை வலுப்படுத்தும்.

## பின்பற்றல் (Imitation)

முகாமையாளர் அல்லது ஊழியர் ஒருவருடைய நல்ல செயல்களைக் கண்டு நாமும் அவ்வாறே செய்ய முற்படுதல் பின்பற்றலாகும். விரும்பின் பின்பற்றல் (Voluntray Imitation) நடிப்புப் பின்பற்றல் (Dramatic Imitation) இலட்சியப்பின்பற்றல் (Idealistic Imitaion) என இது பலவகைப்படுகின்றது. இலட்சியப் பின்பற்றல் தன் மதிப்பைப் பெற்றவர் பால் மிகுந்த ஈடுபாடாக (Hero worship) பரிணமிக்கின்றது. பின்பற்றலானது குழுவூக்கத்தின் முயற்சிசார் கூறு (Conative ordoing aspect) எனப்படுகிறது. பிரயோக உளவியலறிஞர் நன் (T.P Nunn) பின்பற்றலுக்கான வாய்ப்பு எந்தளவிற்குக் காணப்படுகின்றதோ அந்த அளவிற்கு ஒருவனது தனித்தன்மையும் வளரும் அவ்வளர்ச்சி அவர்சார்ந்த நிறுவனத்தின் வளர்ச்சியாகும் என்கின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறான குழு உளவியல் முகாமைத்துவவிருத்தி செயலாற்றுகைகள். செயல்நிலை ஆய்வுகள், செயற்திட்டங்கள் மூலம் ஊழியர்களுக்கு வழிகாட்டல்கள் மேற்கொள்ளப்படும் போது படம் 1இல் தமது தவறான நடத்தைகளை நீக்கி சிறப்பாக செயற்படும் நிலை இப்படத்தினூடாகப் புலனாகின்றது.



- இப்போது **நாய்** - தன் ஆக்கிரமிப்புத் தன்மையை விட்டு அவதானமாக செவிமடுத்து நற்புறவுடன் புன்னகைத்து செயலாற்றுகின்றது.
- **குதிரை** - தற்போது நிமிர்ந்துள்ளதுடன் தான் படித்துப் பெற்ற அனுபவங்களை குழுவுக்குப் பகிர்ந்தளித்து பயனுடையதாக்குகின்றது.
- **தவளை** - எப்படி எவ் எவ்வேளை அமைதியாக இருக்க வேண்டும் என்பதை அறிந்து புரிந்துணர்வுடன் செயலாற்றுகின்றது.
- **ஆடு** - தன்வெட்கத்தை நீக்கி நம்பிக்கையுடன் பேசவும், குதிரையுடன் வாதாடவும் செய்கின்றது.
- **காண்டா மிருகம்** - தூக்கத்திலிருந்து விழித்து ஏனையவர்களுடன் இணைந்து கருமமாற்றுகின்றது.
- **ஒட்டகச்சிவிங்கி** - மற்றவர்களுடன் இணைந்து அவர்கள் கூறும் விடயங்களைக் குறிப்பெடுத்து ஒத்துழைத்துச் செயற்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது முகாமையாளரும், ஊழியர்களும் நட்புடனும், நகைச்சுவை உணர்வுடனும் ஒருங்கிணைந்து தம்மை நிறுவன வளர்ச்சிக்கு அர்ப்பணிக்கும் குழு உணர்வைப் பெற்றுள்ளனர்.

நிறுவனப்பணிகளை நிறைவேற்றும் ஆற்றல் மட்டுமன்றி, நிறுவனக் குறிக்கோள்களையும் ஏனையவர்கள் ஊடாக அடைய உதவுகின்ற உளவியல் பிரயோகத் திறமைகள் மீதும் முகாமையாளரின் வெற்றி தங்கியுள்ளது. தான் விரும்பிய ஒன்றை தான் விரும்பியபடி மற்றவர்களைக் கொண்டு அவர்களது விருப்புடன் செய்து முடிப்பவரே சிறந்த முகாமையாளர். இதற்குப் பிரயோக உளவியல் தொடர்பான மனிதத்துவ அணுகுமுறைகள் வழிகாட்டி நிற்கின்றன. மேலும் நிறுவன அங்கத்தவர்கள் ஒரு குழுவாகஇயங்கும் போது முகாமையாளர் அதன் தலைவராகச் செயலாற்ற வேண்டும். எந்தக் குழுவுக்கும் ஒரு தலைவர் இருப்பார் அவரது ஆளுமை குழுவின் செயலாற்றுகையில் தங்கியிருக்கும்.

## தலைமைத்துவம் (Leadership)

ஒரு குழுவில் மற்றவர்கள் பின்பற்றுவதற்கு முன்மாதிரியாகத் திகழ்பவர் பெரும்பாலும் அக்குழுவின் தலைவராவார் குழுவில் உள்ளோரின் நடத்தைகளால் பாதிக்கப்படுவதைக் காட்டிலும், தன் நடத்தையால் குழு உறுப்பினர்களின் நடத்தையில் அதிக பாதிப்பை ஏற்படுத்துபவரே தலைவராகச் செயற்படுவார். மெக்கைவர் (Maclver) பேஜ் (Page) ஆகிய சமூக உளவியலறிஞர்கள் தமது சமுதாயம் என்ற புகழ் பெற்ற நூலில் தலைமைபற்றி பின்வருமாறு தெரிவிக்கின்றார். “மற்றவர்களைச் சமாதானப்படுத்தியும், நெறிப்படுத்தியும் பொது நோக்கங்களின் அடிப்படையில் அமைந்துள்ள இலக்குகளை எட்டிடும் ஆற்றலே தலைமைப்பண்பு. இது ஒருவர் வகிக்கும் பதவியாலும் முக்கியமாக அவரது ஆளுமைப் பண்புகளினாலும் அமையப் பெறுகின்றது.”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத்துவரீதியாக முகாமைத்துவப் பணிகளை எவ்வாறு கையாள வேண்டும் என்ற வடிவத்தினை குழுரீதியான கூட்டுச் சேர்க்கைகள் வழங்குகின்றன. இதனூடு ஏனையவர்களினூடாக பணிகளை நிறைவேற்றும் கலையாக முகாமைத்துவம் விபரிக்கப்படுகின்றது.[6] இதனூடாகத் தலைமைத்துவத்தின் செயற்பாடுகள், அது எழுந்த விதம் (Origin of leadership) செயற்படும் துறை, (Field of activities) செயற்படும் விதம், (Style of leadership) தலைவரின் தன்மை (Nature of the leader) என்ற வகையில் விருத்தியாகின்றது. ஊழியரிடையேயான வலிமைகள் (Strengths) பலவீனங்கள் (Weaknesses) என்பவற்றை உணர்ந்து சாதனைகளை ஏற்படுத்த வாண்மைத்துவ பயில்வுகளை தலைமைத்துவம் வழங்க வேண்டும்.[7] இது ஊழியர்களது ஆளுமைகளை விருத்தியாக்கும். தலைமை என்பது ஆளுமையின் ஒரு குணநலனாகவும், அதே சமயத்தில் சூழ்நிலையின் விளைவாக ஏற்படுவதாகவும் அமைகின்றது.

ஒவ்வொரு குறிப்பிட்ட சூழ்நிலையிலும் ஒவ்வொரு குறிப்பிட்ட பண்பு தலைவராக இருப்பவரிடம் மேலோங்கிக் காணப்படும். பின்வருவன ஒரு வெற்றிக்கான தலைவரின் பண்புகளாகவுள்ளன.

i) குழு உணர்வோடு ஒன்றும் தன்மை - (Identity the group) குழு உறுப்பினர்களை ஒருங்கிணைத்து ஒருமுகப்படுத்தல்

ii) குழுவின் பிற உறுப்பினர்களை விட மேம்பட்டுத் திகழ்தல் (Supe riority of the leader over others)

iii) குழு உளப்போக்கை அறிந்தவராக இருத்தல் (Knowledge of group psychology)

iv) துடிப்பாகவும் ஓரளவு நெகிழ்வாகவும் (Dynamic and flexible) கொண்டிருத்தலுடன், பிரச்சினைகளுக்காக தீர்வுகளை விரைவில் செயற்படுத்தல்.

v) பிரச்சினைகளைத் தீர்க்கும் வளங்களை (Resources) ஒருங்கிணைத்து தேவையான மாற்றங்களை தகுந்த நேரத்தில் புகுத்தும் துணிச்சல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

vi) ஒழுக்க நடைமுறைகளில் (Discipline) சீராக்கம்

vii) தனது ஊழியர்களை மனிதத்துவ உளவியல் அணுகுமுறைகளினூடாக திருப்தியுடன் வேலை செய்வதற்கான சூழ்நிலைகளை ஏற்படுத்தல்.

இவ்வாறான குழு உணர்வியல் பிரயோகங்கள் மனிதத்துவ செயலாற்றுகைக்கும், வெற்றிகரமான முகாமைத்துவத்திற்கு வழிகாட்டு கின்றன.

## References:


1. Kakkar, S.B (2001) Educational Psychology Prentice – Hall off India Private Ltd. New Deihi – P. 70
2. Dean J. Josuold. Mary, J. Josvold (1995), Psychology for leaders. Professional Reference and grade Grop – New York, P - 47
3. K.B. Everard and Geoffrey morris (1996), Effective school management, A sage publication company Bonhill street London, P.52.
4. தனபாலன். பா. (2002) கல்வியியலில் விடய ஆய்வு, ரெக்கோவா ஒவ்செற் பிறின்ரேஸ், யாழ்ப்பாணம். பக் - 40.
5. Sivayokan . S, Mahendran . K Daya somasundaram (2003) Child mental Health. Publishers GTZ / Becare Vavuniya, and Shanthiham, Jaffna.
6. ரகுராகவன், க. பத்தரஞ்சன், இரா, (1997) மனிதவள முகாமைத்துவம், யுனைட்டட் வெளியீடு, மட்டக்களப்பு. ப- 5
7. Jack Dunbam (1995), Developing Effective School management by rout ledge, 11 New fetter lane, London, P-95




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாவருக்கும் கல்வி; தெற்காசியாவில்; ஆசிரியர்களுக்கான தேவையும்; வழங்கலும்

## அறிமுகம்

2015ம் ஆண்டளவில், இலக்குகளின் நடவடிக்கை இரண்டுக்கான டக்கார் கட்டமைப்பின் (Dakar Framework) பிரகாரம், முழுமையானதும் இலவசமானதுமான கல்வி மற்றும் சிறந்த தரமுள்ள கட்டாய ஆரம்பக் கல்வி ஆகியவற்றை பெறுவதற்கான வாய்ப்பினை சகல சிறுவர்களும் பெறவேண்டும். புத்தாயிரமாண்டின் எட்டு அபிவிருத்தி இலக்குகளின் ஒரு பகுதியாக சர்வதேச ஆரம்பக் கல்வியைப் பெறுவதும், ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியில் பால்ரீதியான சமனற்ற தன்மையை ஒழிப்பதும் உள்ளன. அத்துடன் வறுமையை ஒழிப்பதற்கான ஒரு முக்கிய தந்திரோபாயமாகவும் கல்வி இனங்காணப்படுகின்றது. பாடசாலையில் சேர்ந்து கொள்வதில் சில முன்னேற்றங்கள் இருந்தாலும் கூட, உலகில் இன்னமும் 115 மில்லியன் சிறுவர்கள் பாடசாலை செல்லாதுள்ளனர். இவர்களுள் 1/3 பகுதியினர் தெற்காசியாவிலும், மேலுமொரு 1/3 பகுதியினர் உபசகாரா, ஆபிரிக்காவிலும் வசிக்கின்றனர். துரித சனத்தொகைப் பெருக்கம் காரணமாக, இப்பிரதேசங்களில் பாடசாலை செல்லாதுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்து வருகின்றது.

டக்காரில் (Dakar) கல்வியின் தரமான அம்சங்களின் மீது விசேட வலியுறுத்தல் இருந்துள்ளது. "தரமான கல்வியின் சகல அம்சங்களையும் முன்னேற்றி, அங்கீகரிக்கப்பட்டதும் அளவிடத் தக்கதுமான கற்றல் விளைவுகள், விசேடமாக எழுத்து, எண் மற்றும் அத்தியாவசிய வாழ்வாதார ஆற்றல்கள் சகலராலும் அடையப்படுதல்" (2000ம் வருட நடவடிக்கைக்கான டக்கார் கட்டமைப்பு சரத்து- 7 V)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் பலவற்றில் கல்வியின் தரம் மேம்பட வேண்டியுள்ளது. இப்பொழுது பல மாணவர்கள் அதே தரத்தில் மீண்டும் கற்கின்றனர். அல்லது வாசிப்பது மற்றும் எழுதுவது எப்படி என்பது போன்ற அடிப்படை ஆற்றல்களைக் கூட கற்பதற்கு முன்னதாக பாடசாலையிலிருந்து இடையில் விலகிவிடுகின்றனர். அத்துடன், கல்வியின் உள்ளடக்கத்தை உள்ளூர்த் தேவைகளுக்கு அதிக பொருத்தமானதாக்கி, அபிவிருத்தியடைந்து வருகின்ற பல நாடுகளில் பாடசாலைக்கும், உள்ளூர்ச் சமூகத்துக்குமிடையே தகவற் தொடர்பினை அபிவிருத்தி செய்யும் அவரச தேவை ஒன்றுண்டு.

செயற்பாட்டு அறிக்கையில் விபரித்தவாறு, பல நாடுகளில் தகைமையுடைய ஆசிரியர்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றது. இச் செயற்பாட்டு அறிக்கையானது ஆபிரிக்காவில் ஆசிரியர்களுக்கான தேவை மற்றும் வழங்கல் பற்றியதாகும் (நில்சன் (Nillson 2003) அதே வேளை, மாணவர்களின் பெறுபேறுகளில் செல்வாக்குச் செலுத்துகின்ற தனியானதும் மிகவும் தாக்கமான காரணியாகவும் ஆசிரியரின் தகைமை உள்ளது. (Gustatsson & Myr berg 2002- குஸ்ராற்சன் மற்றும் மிர்பேர்க்) ஆகையால், தகைமையுடைய ஆசிரியர்களை கவர்ந்து பயிற்றுவித்துப் பேணுவதற்கான ஆற்றல் நாடுகளிடம் இருப்பதும், யாவருக்கும் கல்வி என்ற செயற்பாட்டில் ஆசிரியர்களை ஈடுபடுத்துவதும், டக்கார் மாநாட்டில் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு சிறந்த தரமுள்ள சர்வதேச ஆரம்பக் கல்வியியை சகல நாடுகளாலும் அடையக் கூடியதாக இருப்பதானால், முக்கியமான காரணிகளாகும்.

இச்செயற்பாட்டு அறிக்கையில் ஆசிரியர்களுக்கே முக்கியத்துவம் வழங்கப்படுகிறது. ஆசிரியர் தேவை மற்றும் வழங்கல் இனங்காணப்படும் விதம், ஆசிரியக் கல்வி பற்றிய கருத்து, தகைமையுள்ள ஆசிரியர்களை எவ்வாறு கவர்ந்து தக்கவைப்பது பற்றிய தந்திரோபாயம் மற்றும் EFA செயற்பாட்டில் ஆசிரியர்கள் அங்கீகரிக்கப்படும் விதம் ஆகியன பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை ஆகிய நாடுகளிலிருந்து கிடைக்கின்ற அறிக்கைகளை பகுப்பாய்வு செய்வதன் மூலம் உச்சப்படுத்திக் காட்டப்படும். இச் செயற்பாட்டு அறிக்கையில் இந்நாடுகள் உள்ளடக்கப்படுவதற்கான காரணம், அந்நாடுகளில் அங்கத்துவ ஒழுங்கமைப்புகளை EI (சர்வதேசக்கல்வி) கொண்டிருப்பதனாலாகும். EI க்கு மாலைதீவில் அங்கத்துவ அமைப்புகள் எதுவுமில்லாத போதும், யாவருக்குமான கல்வியை அடைவதில் ஏற்கெனவே சரியான பாதையிற் செல்கின்ற ஒரு நாடாக EFA உலக கண்காணிப்பு அறிக்கையில் (2002) இனங்காணப்பட்டபடியால், எவ்வாறாயினும் இந்நாட்டின் அறிக்கையானது பகுப்பாய்வில் உள்ளடக்கப்பட்டுள்ளது. ஏனைய நாடுகள் அல்லது பிரதேசங்கள் குறிப்பிடப்பட்டால், இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட நாடுகளுடன் ஒப்பிடுவதற்கு மட்டுமேயாகும்.

இச்செயற்பாட்டு அறிக்கையானது, ஆபிரிக்காவில் ஆசிரியர் தேவையும் வழங்கலும் என்ற செயற்பாட்டு அறிக்கையின் (Nilsson 2003) அதே குறிக்கோள்களுடன் எழுதப்பட்டுள்ளது. ஆனால் உப-சகார ஆபிரிக்காவுக்கு பதிலாக தெற்காசியாவிலுள்ள சில நாடுகளின் மீது கவனம் செலுத்தப்படுகிறது.

இவ் அறிமுகப் பகுதியானது குறிக்கோள்களின் ஒரு பின்னணியையும் தெற்காசியாவிலுள்ள கல்வித்துறையின் பொதுவான விளக்கத்தையும், இத்துறை எதிர்நோக்கும் பிரச்சினைகளையும் வழங்கும் நோக்கத்தை கொண்டதாக உள்ளது. இரண்டாவது பகுதியிலிருந்து ஆறாவது பகுதிவரை பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளில் உள்ளடக்கமானது குறிக்கோள்களின் படி விபரிக்கப்பட்டுள்ளது. 7வது பகுதி, இறுதிக் குறிப்புகளை உள்ளடக்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெற்காசியாவில் கல்வி

பாடசாலைச்சேர்வை (enrolment) அளவிடுவதற்கு, மொத்தசேர்வு விகிதம் (GER) தேறிய சேர்வு விகிதம் (NER) அல்லது தரம் 5க்கான நீடித்து நிலைக்கும் விகிதம் என பல்வேறு வழிகள் உள்ளன. கல்வியில், பொருத்தமான வயதுப் பிரிவிலுள்ளவர்களின் உண்மையான எண்ணிக்கையை NER சிறந்த முறையில் காண்பிக்கின்றது. பாடசாலைச் சேர்வுக்கான ஓர் அளவீடாக NER அல்லது GER பயன்படுத்தப்பட்டாலும் கூட, தரவுகள் எப்பொழுதும் தவறானதாக இருக்கும். ஏனெனில் அது முறையாக பதிவு செய்யப்பட்ட மாணவர்களை அளவிடுகின்றதே தரவிர உண்மையில் பாடசாலை செல்லும் மாணவர்களை அளவிடுவதில்லை. உண்மை வரவு பற்றிய கணிப்பீடுகள் வழமையில் குறைவாக அல்லது EFA யின் உலகளாவிய கண்காணிப்பு அறிக்கையின் படியான NER புள்ளிவிபரங்களை விடவும் அதிகளவு குறைவாக உள்ளன. தெற்காசிய பிராந்தியத்தில் தரவுகள் பற்றாக்குறையாகவும், ஒரு சில நாடுகள் மிகச் சரியான எண்ணிக்கைகளை வழங்குவதாக உள்ளன. இது இப்பிராந்தியத்தில் கல்வித் துறையிலுள்ள நிலைமையில் அதிக நம்பகமற்ற தோற்றப்பாட்டை வழங்குவதாக உள்ளது. EFA யின் கருத்தரங்கு அறிக்கையின் படி (2002) இத்தரவுகள் நம்பகமற்றவையாகவும், சில சமயங்களில் ஓர் அரசியற் காரணத்துக்காக வழங்கப்படுவதாகவுமுள்ளன.

EFA யின் உலகளாவிய கண்காணிப் அறிக்கையின் படி (2002) தென்மேற்கு ஆசியாவிலுள்ள ஒட்டுமொத்த GER, 1990 இல் 92 ஆகவும், 1999இல் 99 ஆகவுமுள்ளது. வெவ்வேறு நாடுகள் மற்றும் மாவட்டங்களிடையே ஒரு வித்தியாசமும், நகர மற்றும் கிராமப்புறங்கள் இடையேயும் பால்ரீதியாகவும் வித்தியாசம் உள்ளது. EFA அறிக்கையின் படி (அட்டவணை 2,4) பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் நேபாளத்தில் GER மிகவும் உயர்வாக உள்ளது. இவை 100 சதவீதத்துக்கும் கூடுதலான GER ஐ கொண்டுள்ளன. பாகிஸ்தானில், GER 70 - 100



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சதவீதத்துக்கிடையே கணிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகள் தரவுகளைக் கொண்டிருக்கவில்லை. UNESCO வின் புள்ளிவிபர ஆண்டறிக்கையிலுள்ள தரவுகள் அட்டவணை 1இல் வழங்கப்பட்டவாறு ஓரளவு வித்தியாசமாகவுள்ளன.

அட்டவணை 1: 2000 இல் ஆரம்ப GER, 2000 இல் ஆரம்ப NER வீதமும் ஆகியவையும்.

| நாடு | 2000இல் முக்கிய GER,% | | | 2000இல் முக்கிய NER,% | | |
|---|---|---|---|---|---|---|
| | மொத்தம் | பெண் | ஆண் | மொத்தம் | பெண் | ஆண் |
| பங்களாதேஷ் | 100 | 101 | 100 | 89 | 90 | 88 |
| இந்தியா | - | - | - | - | - | - |
| மாலைதீவு | 131 | 131 | 131 | 99 | 99 | 99 |
| நேபாளம் | 118 | 108 | 128 | 72 | 67 | 77 |
| பாகிஸ்தான் | 74 | 54 | 93 | 66 | 48 | 83 |

(மூலம் UNESCO வருடாந்த புள்ளி விபர ஆண்டறிக்கை,)

ஒரு பிள்ளை பாடசாலைக் கல்வியை ஆரம்பித்தாலும் கூட, வாசிக்க, எழுதுதல் போன்ற அடிப்படை ஆற்றல்களை கற்கும் வகையில் போதுமானளவு நீண்டகாலத்துக்கு அப்பிள்ளை தொடர்ந்து கற்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. பல பிள்ளைகள், தரங்களில் ஒரு தடவை அல்லது பல தடவைகள் கற்கநேருகின்றது. இது பல சந்தர்ப்பங்களில் இடை விலகலுக்கு வழி வகுக்கின்றது. பாடசாலையில் நீடித்து நிலைக்கும் விகிதமானது, முதலாம் தரத்தில் சேர்க்கப்பட்டு, தரப்பட்ட ஒரு தரம் வரை பாடசாலையில் தங்குகின்ற மாணவர்களின் வீகிதாகாரமானது. 5ம் தரத்தில் நீடிக்கும் விகிதமானது, விசேடமாக முக்கியமானதாக கருதப்படுகின்றது. ஆனால் இப்பிராந்தியத்திலுள்ள பெரும்பாலான நாடுகளுக்கு துரதிஷ்டவசமாக கிடைக்கக் கூடியதாக இல்லை. இந்தியாவில், நீடிக்கும் விகிதமானது (Survival rate) ஆண்டுகளுக்கு 62.0 சதவீதமாகவும், பெண்களுக்கு 1998/1999 வருடத்தில் 56.7 சதவீதமாகவுமிருந்தது. (EFA 2002)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EFA யின் உலகளாவிய கண்காணிப்பு அறிக்கையின்படி ஆரம்ப பிள்ளைப்பராய கவனிப்பு மற்றும் கல்வியில் சில பால்ரீதியான சமனற்ற தன்மைகளிலிருந்த போதும், பிள்ளைகள் வளரும் போது, அவர்களை பாடசாலைக்கு அனுப்புவதில் உயர்வான சந்தர்ப்பச் செலவுகள் ஏற்படுகின்றன. விசேடமாக, வேலைக்காக வீடுகளில் பெண்பிள்ளைகள் தேவைப்படுகின்றனர். தெற்கு மற்றும் மேற்கு ஆசியா, ஆராபிய நாடுகள் மற்றும் உப-சகார ஆபிரிக்காவில், பொது விதியாக பையன்களுக்கு ஆதரவாக இன்னமும் சமனற்ற தன்மைகள் உள்ளன. உதாரணமாக, பாகிஸ்தானில் பெண்பிள்ளைகளுடன் ஒப்பிடுகையில் கல்வியில் பையன்களுக்கு ஆதரவு வழங்கப்படுகிறது. பெண் பிள்ளைகளுடைய சேர்வு விகிதங்கள், பையன்களுடையதிலும் 2/3 பங்காக உள்ளது. அப்படியிருந்தபோதும் கூட, பெண்பிள்ளைகளை விட அதே வகுப்பில் மீண்டும் பையன்கள் கற்பதுடன், பையன்களை விட 5ம் தரம் வரை பெண்பிள்ளைகள் நீடிப்பதும் கூடுதலாக காணப்படுகின்றது.

இப்பிரதேசத்தில் வயது வந்தவர்களிடையே கல்வியறிவற்றவர்கள் (15 வயதுக்கு மேற்பட்டவர்கள்) மிகவும் உயர்வான விகிதாசாரத்திலுள்ளனர். உலகத்திலுள்ள 8.62 மில்லியன் கல்வியறிவற்ற மக்களில் 1/3 பகுதிக்கு கூடுதலானவர்கள் இந்தியாவில் வசிக்கின்றனர். 2000ம் வருடத்தில் இந்தியாவின் வயது வந்தோரின் மொத்த சனத்தொகையில் 34 சதவீதத்தினரும், பாகிஸ்தானில் 5 சதவீதத்தினரும், பங்களாதேஷில் 6 சதவீதத்தினரும், கல்வியறிவற்றவர்களென கருதப்படுகின்றனர். துரித சனத்தொகை வளர்ச்சியின் காரணமாக 2015ம் ஆண்டில் இவ் எண்ணிக்கையானது மேலும் கூடுதலாக இருப்பதுடன் இந்தியாவில் 35 சதவீதத்தினரும், பாகிஸ்தானில் 7 சதவீதத்தினரும் பங்களாதேஷில் 8 சதவீதத்தினரும் 2015 இல் கல்வியறிவற்றவர்களாக இருப்பர் என நம்பப்படுகின்றது. (EFA- 2000 ) பல நாடுகளில், விசேடமாக பெண்களிடையே கல்வியறிவின்மை விகிதம் உயர்வாக உள்ளது. உதாரணமாக பாகிஸ்தானில், பெண்களுக்கான கல்வியறிவின்மை விகிதம் 72 சதவீதமென கணிப்பிடப்பட்டுள்ளது. (EFA- 2000 Box 2.11)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி முறையில் பெருமளவு சமூக மற்றும் பிராந்திய சமனற்ற தன்மை காணப்பட்டுள்ளது. 1991ம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டின் படி இந்தியாவில் கேரளாவில் நகர்ப்புற ஆண்களிடையே கல்வியறிவு வீதம் 96 சத வீதமாகவுள்ளது. இந் மாநிலத்தில் சர்வதேச ஆரம்பக்கல்வி பெரும்பாலும் அடையப்பட்டுள்ளது. ராஜஸ்தானில் கிராமியப் பெண்களிடையே கல்வியறிவு 5 சதவீதமாக உள்ளது. உதாரணமாக இலங்கையில் பெண்கள் சராசரியாக 6.4 வருடங்களும், ஆண்கள் 8.0 வருடங்களும் பாடசாலை சென்றுள்ளனர். இந்தியாவில் பெண்களின் கல்வியறிவு, உப-சகாரா பிரதேசத்திலும் பார்க்க குறைவாக உள்ளது.

பல பாடசாலைகளில் மூலவளங்கள் மிகவும் அரிதாகவே உள்ளன. மலசலகூட, நீர்வசதி போன்ற அடிப்படை வசதிகளில்லா திருப்பது பாடசாலைச் சேர்வில் தாக்கத்தை, விசேடமாக பெண்கள் சேர்வில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. உலகிலேயே மிக வறிய நாடுகளான 14 நாடுகளில் உள்ள ஆரம்பப் பாடசாலையில் மேற்கொள்ளப் பட்ட மதிப்பீடானது, அட்டவணை 2 இல் காட்டப்பட்டது போன்று இப்பிராந்தியத்தின் சில நாடுகளில் பிள்ளைகளுக்கான வேறுபட்ட கற்றல் நிலைமைகளை காண்பிக்கின்றது.

**அட்டவணை 2**

தெற்காசிய நாடுகள் சிலவற்றில் கல்வி மூலவளங்களின் பற்றாக்குறை.

| நாடு | சராசரி வகுப்பின் அளவு (தரம்1) | பாவிக்கக் கூடியகரும் பலகை அற்ற வகுப்பறை% | வீட்டில் புத்தகங்கள் இல்லாத மாணவர் களின் % | வெவ்வேறு மொழி பேசும் மாணவர் களின் % | நீர் வசதியற்ற பாடசாலை மாணவர்% | பாவிக்க முடியாத மலசலகூடம் உள்ள பாடசாலை% |
|---|---|---|---|---|---|---|
| பங்களாதேஷ் | 57 | 47 | 1 | 0 | 23 | 48 |
| மாலை தீவு | 25 | 51 | - | - | 10 | 48 |
| நேபாளம் | 40 | - | 93 | 34 | 28 | 54 |

மூலம் : Schleicher, An dreas & Siniscalco, Maria Teresa & Postleth waite, Neville The Conditions of Primary School. மிகக் குறைவான அபிவிருத்தியடைந்த நாடுகளில் ஒரு முன்னோடி ஆய்வு. UNESCO மற்றும் UNICEF க்கான அறிக்கை (செப்ரெம்பர் 1995)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EFA யின் உலகளாவிய கண்காணிப்பு அறிக்கையில் (2000), 2015ம் ஆண்டளவில் EFA யின் மிக முக்கிய EFA இலக்குகள் மூன்றினை இந் நாடுகளால் அடைய முடியுமா என்பது பற்றிய பகுப்பாய்வுகள் உள்ளன. இந்த மூன்று இலக்குகளும் பின்வருமாறு

i). ஆரம்பக்கல்வியில் தேறிய சேர்வு

ii). வயது வந்தோரின் கல்வியறிவு விகிதம்.

iii). ஆரம்பக் கல்வியின் மொத்த சேர்வில் பால்ரீதியான சமத்துவம் பற்றிய நாட்டின் முன்னேற்றம்.

பகுப்பாய்வுகளின் படி, மாலைதீவு மூன்று இலக்குகளையும் ஏற்கெனவே அடைந்துள்ளது. ஆனால், இந்தியா, நேபாளம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளால் 2015 அளவில் இவ் இலக்குகள் எதனையும் அடைய முடியாதுள்ளது என்ற ஆபத்துள்ளது. பங்களாதேசிலும் இலங்கையிலும் ஓர் இலக்காவது தவறவிடப்படும் ஆபத்து உள்ளது. வயது வந்தோருக்கான கல்வியறிவை அடைய முடியாத ஆபத்தை இலங்கை எதிர்நோக்குகின்றது. பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள் வயது வந்தோருக்கான கல்வியறிவை அடையமுயாத கடுமையான ஆபத்தை எதிர் நோக்குகின்றது. அத்துடன் இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் ஆகிய நாடுகள், ஆரம்பக்கல்வியில் பால்ரீதியில் சமமான தேறிய சேர்வினை அடைவதில் குறைவான சாத்தியப்பாட்டை எதிர்நோக்குகின்றன.

கல்வி முன்னேற்றத்தை அளவிடுவதில் இது மிகவும் நம்பகமற்ற முறையாகவுள்ளது. கல்வித்தரம் குறித்து இது எதனையும் கூறுவதில்லை. கல்வித் துறையின் அபிவிருத்தியில் நாடுகளின் பலமானதும் பலமற்றதுமான பகுதிகள் குறித்த சில விபரங்களையாவது இது வழங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கல்வியின் தரத்தில் செல்வாக்குச் செலுத்தும் காரணிகள்.

1990 கள் வரை, கல்விரீதியான பொருளாதாரத்தால் வழங்கப்பட்ட ஆணித்தரமான முடிவு யாதெனில் கல்வியில் பொருளாதர முதலீடுகள், மாணவர்களின் பெறுபேறுகளில் எவ்வித விளைவையும் கொண்டிருப்பதில்லை என்பதாகும்.

வகுப்பின் அளவும், ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான விகிதாசாரமும் கல்வியில் நிதி முதலீடுகளின் மீதான விளைவுகளை அளவிடுவதற்கு பயன்படுத்தப்படுகின்ற இரு மாறிகளாகும். சிறிய அளவுடைய வகுப்புகள் மாணவர்களின் கல்வி அடைவுமட்டத்தில் அனுகூலமாக இருக்கின்றன என்பதாக, Gusteisson & Myr berg (2002) ஆகியோர் தெரிவிக்கின்றனர்.

ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான விகிதாசாரமானது நாடுகளிடையேயும், உள்ளேயும் வேறுபடுகின்றன. ஆசிரியருக்கும் மாணவருக்கிடையிலான விகிதாசாரத்தையும், 1990/1991 மற்றும் 1999/2000 பாடசாலை ஆண்டுகளுக்கிடையேயுள்ள மாற்றத்தையும் தேசிய மட்டத்தில் காட்டுகின்றது. இப்புள்ளிவிபரங்களின் படி, ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான மிக உயர்வான விகிதம் பங்களாதேஷுக்கு அடுத்ததாக பாகிஸ்தானில் காணப்படுகின்றது. இந்தியாவிலும் நேபாளத்திலும் 1990/1991 இலிருந்து முன்னேற்றமிருந்த போதும் கூட, பாகிஸ்தானிலுள்ள நிலைமையானது மோசமடைந்துள்ளது. இப்புள்ளிவிபரங்களின்படி, இத்தேசிய புள்ளிவிபரங்கள் தேசங்களுக்கிடையே பெரும் சமனற்ற தன்மையை காண்பிக்கின்றன.

EFA யின் உலகளாவிய கண்காணிப்பு அறிக்கை குழு (2002) படி, மாணவர்களின் சாதனைக்கான ஏனைய முக்கிய காரணிகள் பெற்றோரின் வருமானமும் பின்னணியுமாகும். இவை சகல நாடுகளிலும் மாணவர்களின் செயற்திறனில் செல்வாக்குச் செலுத்துகின்றன. பாடசாலை உபகரணங்கள் கிடைத்தல், பாடசாலை உட்கட்டமைப்பு மற்றும் சுகாதார விடயங்கள், செல்வந்த நாடுகளில் விட அபிவிருத்தியடைந்து வருகின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடுகளில் மாணவர்களின் கற்றல் சாதனைகள் மீது பெரும் விளைவுகளை ஏற்படுத்துகின்றன. அறிவுறுத்தல் நேரமானது மாணவர்களின் பெறுபேறுகள் மீது செல்வாக்குச் செலுத்தும் பிறிதொரு காரணியாகும். செல்வந்த நாடுகளிலுள்ள மாணவர்களுக்கு கூடுதலான அறிவுறுத்தல் நேரம் கிடைக்கின்றது. சகலதரங்களையும் சேர்த்துப் பார்க்கும் போது, உயர் வருமான நாடுகள் ஆரம்பக்கல்வியில் வறிய நாடுகளை விட 400 மணித்தியாலங்கள் கூடுதலான கற்பித்தல் நேரத்தை ஒதுக்குகின்றன.

அட்டவணை 3: 1990/1991 மற்றும் 1999/2000 வருடத்தில் ஆரம்பக் கல்வியில் ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையேயான விகிதம்.

| நாடுகள் | 1990/1991 | 1999/2000 |
|---|---|---|
| பங்களாதேஷ் | 63 | - |
| இந்தியா | 47 | 43(தேசிய கணிப்பீடு) |
| மாலைதீவு | - | 24 |
| நேபாளம் | 39 | 38 |
| பாகிஸ்தான் | 43 | 55 |
| இலங்கை | 29 | - |

மூலம் - EFA உலகளாவிய கண்காணிப்பு அறிக்கை - 2002. யாவருக்கும் கல்வி. உலகம் சரியான பாதையில் செல்கின்றதா (பரிஸ் - 2002)

## தரமான கல்விக்கான தகைமை பெற்ற ஆசிரியர்கள்

மிகவும் முக்கியமான உள்ளீடு யாதெனில் உலக வங்கியின் படி கற்பதற்கான வாய்ப்பு ஆகும். (இந்தியாவில் ஆரம்பக்கல்வி என குறிப்பிடப்படுகிறது) Sustafsson & Myrberg (2002) ஆகியோரின் ஆய்வு மதிப்பீட்டின்படி, கல்வியின் தரத்தில் செல்வாக்குச் செலுத்துகின்ற காரணிகள் பலவுண்டு. இவற்றுள் மாணவர்களின் கற்றல் சாதனைகளின்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது பலமான விளைவினை ஏற்படுத்துவது ஆசிரியரின் தகைமையாகும். தரமான கல்வியினை உறுதிசெய்வதில் தகைமையுள்ள ஆகிரியர்கள் முக்கிய பங்கினை வகிக்கின்றனர். கற்பித்தலுக்கு தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் தேசியரீதியாக தீர்மானிக்கப்படுகின்றன.

தகைமைகளிடையே மேலும் வேறுபாடு உண்டு. அதாவது தகைமை பெறுவது மற்றும் தகுதி பெறுவதுமாகும். தேவையான தகைமைகள், தேசிய தேவைகளுக்கு ஏற்றவாறு ஓர் ஆசிரிய சான்றிதழை பெறுவதாக இருக்கலாம். ஆனால், தேவையான தகைமைகள், குறிப்பிட்ட பணிக்கு பொருத்தமற்றதாக இருக்குமாயின், ஆசிரியர் தகுதியைப் பெறாது தகைமை பெற்றவராக இருக்கக் கூடும். ஆசிரியக் கல்வியானது ஆசிரியர்களை அத்தொழிலுக்கு தயார்படுத்தி, கற்பிக்கும் ஆற்றலுக்கு போதுமான திறமைகளை, அறிவையும் வழங்குவதாக இருக்க வேண்டும்.

குறிப்பிட்ட ஒரு மட்டத்துக்கு கல்விசார் அறிவு முக்கியமானதாக இருந்தபோதும் அதற்கு அப்பால், மாணவர்களின் கற்றல் சாதனைகளுக்கான அதிகரித்த முக்கியத்துவத்தை வழிமுறையியல் (Methodology) கொண்டுள்ளது. அதற்கும் மேலாக, கல்வியின் முக்கியத்துவம் பற்றிய ஆய்வுகள் முழுமையான ஆசிரிய கல்வியுடனான ஆசிரியர்களுக்கும் சிறந்த பெறுபேறுகளுக்குமிடையேயான தெளிவான ஒரு தொடர்பினைக் காட்டுகின்றது. EFAயின் உலகளாவிய கண்காணிப்பு அறிக்கை குழுவினரும் (2002) கல்வியின் கற்றல் விளைவுக்கு ஆசிரிய தகைமை அத்தியாவசியமெனவும், கைத்தொழில்மயமாக்கப்பட்ட நாடுகளைவிட அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் இது அதிகளவு முக்கியம் வாய்ந்ததெனவும் தெரிவிக்கின்றது.

இதற்கும் மேலாக PISA வின் (Programme for the International student Assessment) 2000ம் வருடத்தின் மதிப்பீடானது, பாடசாலையின் மிகப் பெறுமதிமிக்க மூலவளங்களுள் தகைமையுள்ள ஆசிரியர்கள் இருப்பதாக இனங்கண்டுள்ளது. விசேடத்துவம் வாய்ந்த ஆசிரியர்களையுடைய பாடசாலைகள், உயர்வான ஆசிரிய ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாடு மற்றும் ஆசிரிய, மாணவர்களிடையேயுள்ள சிறந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் ஆகியனவும் மாணவர்களின் கற்றல் சாதனைகளின் மீது நேர்கணியமான ஒரு செல்வாக்கினைக் கொண்டுள்ளன. மேலும் ஆசிரியத் தொழிலானது பின்லாந்தில் (Finland) மிக முக்கியமான தொழில்களில் ஒன்றாகவும், பாடவிதானத்துள் கல்விப் பணியை ஒழுங்கமைப்பதற்கான கணிசமானளவு தீர்மானம் எடுக்கும் அதிகாரத்தை கொண்டுள்ள கல்விசார் வல்லுநர்களென ஆசிரியர்கள் நோக்கப்படுகின்றனர்.

ஆசிரியர்களின் அறிவினை மேம்படுத்துவதால் மாணவர்களின் கற்றல் விளைவு மேம்படுகின்ற சாத்தியமுள்ளது. வகுப்பறை நிலைமைகளுக்கு (Pre-service) சேவைக்கு முந்திய கல்வி ஆசிரியர்களைத் தயார்ப்படுத்துவதில்லை. இவ்வகுப்பறைகளில் ஆசிரியர்கள் பல-தர வகுப்புகளையும், உயர்வான ஆசிரிய - மாணவ விகிதத்தையும் சந்திப்பார்கள். சில ஆசிரியர்களுக்கு அவர்கள் கற்பிக்க வேண்டிய பாடம் குறித்து அதிக விளக்கம் இருப்பதில்லை. ஏனெனில், அவர்கள் குறுகிய காலப்பகுதியில் அப்பாடத்தைக் கற்றமையினாலாகும். ஒரு பாடத்தில் எந்தளவுக்கு ஆசிரியருக்கு அதிக அறிவு இருக்கின்றதோ அந்தளவுக்கு மாணவர் கற்றல் மீது நேர்க்கணிய விளைவு ஏற்படுகின்றது. சிறுவர்களின் அபிவிருத்தி பற்றி ஆசிரியர்கள் அறிந்து கொள்வதற்கான அரிதான வாய்ப்புகளும் சேர்ந்து, கல்வியின் தரம் குறைவடைந்ததற்கான விளக்கத்தை அளிக்கின்றன.

சிறந்த கற்பித்தலானது சிறந்த கற்றலுக்கு வழிவகுக்கின்றது. மாணவர்கள் எந்தளவுக்கு செயற்பாடுகின்றனர் என்பதற்கு எவ்வித கவனமும் செலுத்தாத ஆசிரியர்களின் மாணவர்களை விட மாணவர்களின் முன்னேற்றத்தைக் கண்காணித்து அவர்களுக்கு பின்னூட்டலை வழங்கும் ஆசிரியர்களின் மாணவர்கள் அதிகம் கற்கின்றனர். (Primary Education in India 1997, p 98)

கல்வியின் உள்ளடக்கத்தை அதிகளவு சிறுவர்மையப்படுத்தப் பட்டதாகும் வகையில் சீர்திருத்தம் செய்ய வேண்டிய அவசியமிருக்கின்றது என்பது கில்போனின் (Kilborn - 1999) கருத்து ஆகும். ஆனால்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீர்திருத்தத்துக்கு முன்னதாக கற்பித்தல் முறைகள், கலாசார சந்தர்ப்பத்துடன் ஒப்பிடுகையில் உள்ளூர் மற்றும் நாட்டின் தேவைகளுக்கான காரணங்கள் குறித்த ஆராய்ச்சி நிகழவேண்டும். சீர்திருத்தத்துக்கு பொறுப்பனவர்கள் ஆசிரியர்களது தகுதியைப் பற்றி அறிந்திருப்பதுடன், ஆசிரியர்களதும் பாடசாலையினதும் இயலளவின் படி தேவைகளை ஒழுங்கமைக்கத் தெரிந்தவர்களாக இருக்க வேண்டும். ஆசிரியரது தேவை மற்றும் தகுதி குறித்து, ஒரு சீர்திருத்தத்தை நடைமுறைப்படுத்துவதற்கு முன்னதாக பெரும்பாலும் போதுமான அறிவு இருப்பதில்லை. ஆசிரியர்கள் தமது சொந்தக் கல்வியிலிருந்து வழிமுறைகளைப் பயன்படுத்துகின்றனர். இந்த வழிமுறைகள் கலாசார சந்தர்ப்பத்தைப் பொறுத்ததாக இருக்கிறது. பல சந்தர்ப்பங்களில் ஒரு புதிய வழிமுறை எவ்வாறு மேற்கொள்ளப்படும் என்பதை ஆசிரியர்கள் கற்றுக் கொண்டபோதும், அது ஏன் சிறந்ததென்பதை அறியாதுள்ளனர். மாணவர்களது கற்றல் செயற்பாடுகள் குறித்து போதுமான அறிவை ஆசிரியர்கள் கொண்டிராது, அவர்கள் எந்தளவுக்கு அறிந்துள்ளனர் என்பதைக் கண்டறிய எவ்வித வழிமுறைகளும் இல்லாதுவிட்டால், தனித்தனியான வழிமுறைகளுக்கான சாத்தியமிருக்காது.

## குறிக்கோள்கள்.

எழுத்தறிவு, எண்ணறிவு மற்றும் அத்தியாவசிய வாழ்க்கைத் திறன்களுடனான முழுமையான ஆரம்பக்கல்வியை மாணவர்கள் பெறவேண்டுமெனில், கல்வியின் தரம் அத்தியாவசியமாகும். அத்துடன் மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்கான மிக முக்கிய காரணியாக ஆசிரியரின் தகைமை உள்ளது. ஆசிரியத் தொழிலானது தகைமையுடைய ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை கவர்ந்து தக்க வைப்பதற்கு, கவர்ச்சியுடையதாக இருக்க வேண்டும். அத்துடன் கல்வியின் தரத்தினை அபிவிருத்திசெய்யும் செயற்பாட்டில் ஆசிரியர்கள் ஈடுபட வேண்டிய தேவையுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இச் செயற்பாட்டு அறிக்கையின் முக்கிய நோக்கம் யாதெனில் டக்கார் மாநாட்டுக்கு முன்னதாக இந்திய உபகண்டத்திலிருந்து தயாரிக்கப்பட்ட அறிக்கைகள் சிலவற்றைப் பகுப்பாய்வு செய்வதாகும். இக்குறிக்கோள்கள் ஆசிரியர்கள் பற்றிய கருத்தினையும், தகைமை பெற்ற ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களை எவ்வாறு கவர்ந்து பேணுவது என்ற தந்திரோபாயங்களையும் பகுப்பாய்வு செய்வதாகும். பங்களாதேஷ், இந்தியா, மாலைதீவு, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கையின் அறிக்கைகள் பின்வரும் வினாக்களிலிருந்து பகுப்பாய்வு செய்யப் படுகின்றன.

- இந்த நாட்டு அறிக்கைகளில் ஆசிரியர் தேவையும், வழங்கலும் எவ்வாறு பிரதிபலிக்கப்பட்டுள்ளது?
- கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கான ஒரு வழியாக ஆசிரியர் தகைமை பற்றிய கருத்து யாது?
- தகைமையுடைய ஆசிரியர்களை எவ்வாறு கவர்ந்து தக்கவைப்பது பற்றிய எத் தந்திரோபாயங்கள் நாட்டு அறிக்கைகளில் சாத்திய மாகவுள்ளன.
- EFA செயற்பாட்டில் ஆசிரியர்கள் எவ்வாறு பிரதிபலிக்கப் பட்டுள்ளனர்?

டக்காரிலிருந்தான ஒரு கூட்டுக்கடப்பாடானது 2015ம் ஆண்டளவில் சிறந்த தரமுடைய ஆரம்பக்கல்வியை அடைவதாகும். பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கையில் மிகக் கூடிய அதிகரிப்பு சம்பந்தப்பட்டிருப்பது அல்லாது புதிய ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதையும் இது குறிப்பதாகவுள்ளது.

## தென்கிழக்காசியாவில் ஆசிரியர்களின் தட்டுப்பாடு.

யுனெஸ்கோவின் (UNESCO) 2000ம் வருட உலக கல்வி அறிக்கையின்படி 1997 இல் உலகத்தில் முன்பள்ளி, ஆரம்பப்பாடசாலை, இடைநிலைப் பாடசாலை மற்றும் கிளைநிலை மட்டங்களில் கிட்டத்தட்ட 59 மில்லியன் ஆசிரியர்கள் இருந்தனர். இவர்களில் அநேகமாக 25 மில்லியன் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களாக இருந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகிலுள்ள ஆசிரியர்களில் மூன்றில் இரண்டு பகுதியினர் அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் வாழ்ந்து பணியாற்றி வருகின்றனர். 1990க்கும் 1997க்கும் இடைப்பட்ட காலப்பகுதியில் சராசரி 9 சதவீதத்துடன் ஆரம்ப ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் கூட, இந்த வளர்ச்சியானது சனத்தொகை வளர்ச்சியினால் மறைக்கப்படுகின்றது. ஆரம்பப்பாடசாலை செல்லும் வயதுடைய சிறார்களின் எண்ணிக்கையும் 1990-1995க்கு இடையில் சராசரி 9 சதவீதத்தால் அதிகரித்தது. இது லத்தின்அமெரிக்காவில் 3.5 சதவீதமாகவும், உப-சகாரா ஆபிரிக்காவில் 16 சதவீதத்துக்கு கூடுதலாகவும், தெற்காசியாவில் 8.3 சதவீதமாகவும் அதிகரித்தது. இடைநிலைப் பாடசாலை (Secondary) ஆசிரியர்களின் எண்ணிக்கை, ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கையை விட அதிகரித்தது. இது அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகளில் சராசரி 14.3 சதவீதத்தால் அதிகரித்தது. அதேவேளை இடைநிலைப் பாடசாலை செல்கின்ற இளைஞர்களின் எண்ணிக்கையும் 6.0 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனால் மொத்த இடைநிலைப் பாடசாலை இளைஞர் எண்ணிக்கையில் அநேகமாக அரைப்பகுதி 1995இல் பாடசாலைக்கு செல்லாதிருந்தனர். (இடைநிலை பாடசாலை செல்கின்ற வயதுடைய 527 மில்லியன் மாணவர்களில் 228 மில்லியன் மாணவர்கள்) இடைநிலைப் பாடசாலை ஆசிரியர்களுக்கு அதிகரித்த தேவை இருக்குமென்பதை இது குறிப்பதாக உள்ளது. அதிக எண்ணிக்கையான பிள்ளைகள் ஆரம்பக் கல்வியை பூர்த்திசெய்து இடைநிலைக் கல்வியை தொடர விரும்பும்போது இந்நிலை ஏற்படும். (Siniscalco 2002)

தெற்காசிய நாடுகளில் ஆசிரியர்களின் எண்ணிக்கை பற்றிய தரவுகள் பெறமுடியாதுள்ளன. இந் நாடுகள் சிலவற்றில் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் குறித்த தரவுகள் கிடைக்கக்கூடியதாக இருந்தபோதும்; ஆசிரியர்களின் தகைமை பற்றிய தரவுகள் போதுமானதாக இல்லை. அத்துடன் சர்வதேச ஆரம்பக்கல்வியின் டக்கார் இலக்கினை அடைவதற்கு தேவையான ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களின் உண்மையான எண்ணிக்கை பற்றிய மதிப்பீடுகளும் இல்லாதுள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1999ம் ஆண்டில் தெற்காசியாவின் சில நாடுகளில் ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை மற்றும் ஆரம்பப் பாடசாலை ஆசிரியைகளின் எண்ணிக்கை ஆகியவற்றை அட்டவணை 4 காட்டுகின்றது.

**அட்டவணை 4:**

ஆரம்பப் பாடசாலை ஆசிரியர்கள், 1999

| நாடு | ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களின் எண்ணிக்கை | ஆரம்பப்பாடசாலை ஆசிரியைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| பங்களாதேஷ் | 309593 | 59896 |
| இந்தியா | 3135253 | 1384744 |
| மாலைதீவு | 3051 | 1820 |
| நேபாளம் | 99382 | 23608 |
| பாகிஸ்தான் | 332022 | 115234 |

மூலம் - UNESCO புள்ளிவிபர ஆண்டறிக்கை

கற்பித்தலுக்கு தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் தேசியரீதியாக தீர்மானிக்கப்படுவதனால் அவை நாட்டுக்கு நாடு வேறுபடுவதுடன், ஆசிரியர்களது தகைமைகளை ஒப்பிடுவது கடினமாகின்றது.

தேசிய நியமங்களுக்கமைவாக ஆரம்பக்கல்வியை கற்பிப்பதற்கு தேவையான ஆகக் குறைந்த ஒழுங்கமைக்கப்பட்ட ஆசிரியப்பயிற்சியை (Pre- Service or in - service) பெற்ற ஆசிரியர்களே,ஆரம்பப் பாடசாலைகளிலுள்ள பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் ஆவர். (Cavicchioni 2002)

ஆனால் தேவைப்பட்ட தகைமைகள் குறைவாக இருந்த போதும். பல ஆசிரியர்கள் கற்பிப்பதற்கான தேசிய தகைமைகளை அடைவது இல்லை. ஆசிரியர்களின் தகைமைகள் பற்றிய தரவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போதுமானவையாக இல்லாத போதும் அட்டவணை 5இன் பிரகாரம் (1995ம் ஆண்டிலிருந்தான தரவுகள்) நேபாளத்திலுள்ள ஆசிரியர்களில் 25% சதவீதத்துக்கும் கூடுதலானோர் ஆசிரிய சான்றிதழ்களைக் கொண்டிருக்கவில்லை. மாலைதீவில் ஆசிரியர்களில் 30% சத வீதமானோரிடம் இச் சான்றிதழ் இருக்கவில்லை. அத்துடன் மேலும் 22% சதவீதமானோருக்கு வேறு எவ்வித தேசியரீதியாக இனங்கானப்பட்ட கற்பித்தலுக்கான சான்றிதழ் இருக்கவில்லை. இதே போன்ற நிலைமையே பங்களாதேஷிலும் காணப்பட்டது. இங்கு 18%சத வீதத்துக்கும் கூடுதலான ஆசிரியர்களிடம் எவ்விதமான சான்றிதழ்களும் இல்லாதிருந்தன. அல்லது ஆசிரியத் தொழிலுக்கு பொருத்தமான வேறு முறையான தகைமைகளோ அவர்களிடம் இருக்கவில்லை.

**அட்டவணை 5:**

தொழில்ரீதியான பயிற்சியற்ற முழுநேர ஆசிரியர்களின் சராசரி வீதம்.

| நாடு | ஆசிரிய சான்றிதழ் | ஏணையவை | எதுவுமில்லை |
|---|---|---|---|
| பங்களாதேஷ் | 80.8 | 0.9 | 18.3 |
| மாலைதீவு | 70.4 | 7.1 | 22.4 |
| நேபாளம் | 74.6 | 22.3 | 3.1 |

மூலம் - ILO/UNESCO நிபுணர்கள் குழுவின் அறிக்கை

கல்வியில் பால்ரீதியாக பெருமளவு சமனற்ற தன்மைகளைக் கொண்டிருக்கும் நாடுகள் மிகக் குறைந்த விகிதாசாரத்தில் ஆசிரியர்களைக் கொண்டிருக்கும் நாடுகளாகவுமுள்ளன. அதிகளவு பெண் பிள்ளைகள் (மாணவிகள்) பாடசாலைக்கு சமூகமளிப்பதற்கு ஏதுவாக இருப்பவர்கள் ஆசிரியைகள். ஒர் ஆண் ஆசிரியரை விட ஆசிரியை ஒருவர் இருக்கின்ற பாடசாலைக்கு தமது பெண் பிள்ளைகளை பெற்றோர்கள் அனுப்புகின்ற வாய்ப்பு அதிகமாக உள்ளது. ஆனால் அந்த நாடுகளில் ஆசிரியைகளை ஆட்சேர்த்து தக்க வைப்பதற்கு ஒரு நீங்காத பிரச்சினை உள்ளது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசியாவில் ஆசிரியைகளின் வீதத்தில் பெருமளவு வித்தியாசமிருந்த போதும், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் இந்தியாவில் ஆசிரியைகள் மிகக் குறைவாகவே உள்ளனர். எனினும், நேபாளத்திலும் பாகிஸ்தானிலும் 1990ம் ஆண்டிலிருந்து ஆசிரியைகளின் வீதம் அதிகரித்து வந்துள்ளது. தரவுகள் கிடைக்கக் கூடியதாகவுள்ள இந்த நாடுகளில் தகைமையுடைய ஆசிரியர்களின் பற்றாக்குறை நிலவுகின்றது. உதாரணமாக நேபாளத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களில் அரைப்பகுதிக்கும் குறைவானோரே கற்பிப்பதற்கு தகைமையுடையவர்களாக இருப்பதடன், அட்டவணை 6 இன்படி ஆண்களை விட குறைவான பெண்களே தேவையான தகைமைகளைப் பெற்றுள்ளனர்.

**அட்டவணை 6:**

ஆரம்பக்கல்வியில் ஆசிரியர்கள், ஆசிரியைகளின் வீதம்.

| நாடு | 1990 | 1998 | பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் மொத்தத்தின்% (1998) | | |
|---|---|---|---|---|---|
| | | | இருகாலரும் | ஆண் | பெண் |
| பங்களாதேஷ் | 19 | 19 | - | - | - |
| இந்தியா | 29 | 34 | - | - | - |
| மாலைதீவு | - | 60 | 67 | 70 | 65 |
| நேபாளம் | 14 | 23 | 46 | 50 | 35 |
| பாகிஸ்தான் | 27 | 38 | 56 | 57 | 56 |

மூலம்: ஆசிரிய தொழில்பற்றிய ஒரு புள்ளிவிபரம் UNESCO / ILO (2002)

EFA யின் உலகளாவிய கண்காணிப்பு (2002) அறிக்கையின் படி நேபாளத்திலும் இந்தியாவிலும் ஆசிரியப் பயிற்சியானது பெண்களுக்காக திருத்தியமைக்கப்படவில்லை. இப் பயிற்சிக்காலமானது மிக நீண்டதாக காணப்படுகிறது. அதிகளவு ஆசிரியைகளை ஆட்சேர்ப்பதற்கான பல தந்திரோபாயங்களுள் தொலைக்கல்வி, உள்ளூர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளகப் பயிற்சி மற்றும் கல்வி ஒலிபரப்பு ஆகியன உள்ளடங்குகின்றன. ஆனால் ஆசிரியைகள் அதிகமாக இருப்பது மட்டும் போதாது, ஆசிரியப் பயிற்சியில் ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியைகளுக்கு பால்ரீதியான சீராக்கல்கள் தேவையாக உள்ளன.

சினிஸ்கல்கோ( Siniscalco 2002) தெரிவிப்பதாவது; ஒரு நாட்டில் ஆசிரியர்களின் வயதுக் கட்டமைப்பானது கல்வியின் தரத்தில் ஒரு விளைவை ஏற்படுத்துகின்றது என்பதாகும். அபிவிருத்தியடைந்து வருகின்ற நாடுகள் பலவற்றில் 30 வயதுக்குட்பட்ட குறைந்த அனுபவமுள்ள ஆசிரியர்களின் விகிதாசாரம் மிகவும் உயர்வாக உள்ளது.

## கல்வியில் HIV/AIDS ஆகியவற்றின் விளைவுகள்

கல்வித்துறை என்பது மனித மூலவளத்தில் தங்கியிருக்கின்ற ஒரு துறையாகும். ஆகையால் HIV/AIDS ஆகியவற்றின் விளைவுகள் கல்வியில் மோசமான பாதிப்புகளை ஏற்படுத்துகின்றன. அதிகம் பாதிக்கப்படுகின்ற வயதுப் பிரிவினராக மாணவர்களும், அநேகமான மரணங்கள் சம்பவிக்கின்ற வயதுப் பிரிவினராக ஆசிரியர்களும் உள்ளனர். 2001ம் ஆண்டளவில் உலகெங்கிலும் 40 மில்லியன் மக்கள் HIV/ AIDS உடன் வாழ்ந்தனர். இவர்களுள் 2.7 மில்லியன் சிறுவர்கள் 15 வயதுக்கு குறைவானவர்களாக இருந்தனர். (உலக வங்கி 2002) இந்தியாவில் இந்நோயினால் பீடிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கையானது ஒரு சதவீதத்துக்கும் குறைவாக காணப்பட்ட போதும், தென் ஆபிரிக்காவுக்கு அடுத்ததாக HIV யுடன் வாழ்கின்ற அதிகளவு மக்களைக் கொண்ட நாடாக இந்தியா உள்ளது.

HIV தொற்றுள்ள அநேகமானோர் அவர்களின் நோய்த் தொற்றுக்குப் பின்பு பல வருடங்களுக்கு சுகதேகிகளாக காணப்பட்டாலும் அவர்களது நோய் எதிர்ப்புச் சக்தியானது படிப்படியாக அழிக்கப்பட்டு நோயாளியாவதற்கு வழி வகுக்கின்றது. தொற்று ஏற்பட்ட ஆசிரியர்களால் அவர்களது சுகநல காலப்பகுதியின் போது பெரும்பாலும் கற்பிக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடிந்த போதும், நோய்க்காலப் பகுதியின் போது பாடசாலைக்கு சமூகமளிப்பதில்லை. நோயின் இறுதிக் கட்டத்தின் போது இவ்வாறான நிலை அடிக்கடி ஏற்படுகின்றது. உலக வங்கியின் மதிப்பீட்டின் படி, தொற்று ஏற்பட்ட ஆசிரியர் ஒருவரால் அவர் AID சினால் மரணிக்கும் வரை மொத்தமாக 260 நாட்களுக்கு கற்பிக்க முடியாத சாத்தியமுள்ளது. அத்துடன் நோய்வாய்ப்பட்ட உறவினர்களைக் கவனிப்பதற்கும், மரணவீடுகளுக்கு செல்வதற்கு செலவிடப்படும் நேரமானது பாடசாலைகளில் ஆசிரியர்களின் வரவில் பாதகமான விளைவுகளை ஏற்படுத்துகின்றது.

EFA யின் இலக்குகளை வென்றெடுத்து அடைவதற்கு பாரிய தடையாக தகைமையும் அனுபவமுள்ள ஆசிரியர்கள் பற்றாக் குறையாகவுள்ள ஒரு நிலைமையில், பாடசாலைகளில் உள்ள நிலைமைகளில் மோசமான விளைவுகளை HIV/AIDS ஏற்படுத்துகின்றது. தொற்றுக்குட்பட்ட ஆசிரியர்கள் பலரால் கற்பித்தலைத் தொடர முடிவதில்லை. வழமையாக தொற்றுக்குட்பட்ட ஓர் ஆசிரியரைப் பதிலீடு செய்வதற்கு ஒரு சில சாத்தியப்பாடுகளே உள்ளன. அத்துடன் பாடசாலைப் பிள்ளைகள் பலர் கற்பித்தலின்றி விடப்படுகின்றனர். இந்நிலைமையானது, EFA யின் இலக்குகளை அடைவதிலிருந்து நன்கு விலகியுள்ள நாடுகளில் பெரும்பாலும் மோசமாக உள்ளது. (EFA-2002)

AIDS என்னும் உயிர்க் கொல்லி நோயானது கல்வியிலும், மனித அபிவிருத்தியிலும் செய்யப்பட்ட பல தசாப்தங்களின் முதலீட்டை அழித்தொழித்துவிடுகிறது. அதே வேளையில் மனித நடத்தையை மாற்றி ஆபத்துக்களைக் குறைப்பதற்கு சிறந்ததும் அதிக செலவில்லாததுமான வழி, நோய்வராது தடுப்பதற்கான கல்வியாகும். சகல மக்களையும் பாடசாலை சென்றடையாத போதும் அநேகமான பிள்ளைகளையும், குடும்பங்களையும் சமூகங்களையும் சென்றடைகின்ற ஒரு நிறுவனமாக அது விளங்குகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியர்களின் அதிகரித்த தேவையை குறிக்கும் காரணிகள்.

இந்நாட்டு அறிக்கைகளில் துரித சனத்தொகை வளர்ச்சி ஆசிரியருக்கும் மாணவர்களுக்குமிடையேயுள்ள உயர்வான விகிதம், தகைமையுடைய ஆசிரியர்களின் பற்றாக்குறை ஆகிய மூன்று காரணிகள் கூறப்பட்டுள்ளன. சனத்தொகையில் இளம்வயதினர் அதிகளவில் இருப்பதுடன், அவர்களுட் பலர் பாடசாலை செல்கின்ற வயதினராகவு முள்ளனர். இது அதிகளவு ஆசிரியர்களை ஆட்சேர்க்க வேண்டிய தேவையை குறிப்பதாகவுள்ளது. அவ்வாறு செய்தால் தான் சிறந்த தரமுள்ள சர்வதேச ஆரம்பக்கல்வியை அடைய முடியும்.

### துரித சனத்தொகை வளர்ச்சி.

பல நாடுகளில் துரித சனத்தொகை வளர்ச்சியின் காரணமாக கல்விக்கான அதிகரித்த தேவை ஏற்படுகின்றது. சனத்தொகையில் இளம் வயதினர் அதிகளவில் இருப்பதுடன், அநேகமான சிறுவர்கள் ஆரம்பக் கல்வியை ஆரம்பித்து நிறைவு செய்வதன் காரணமாக இடைநிலைக் கல்விக்கான தேவை படிப்படியாக அதிகரிக்கும். இவ்வாறான ஒரு தேவையை சந்திப்பதற்கு ஆசிரியர்களை பெரும் எண்ணிக்கையில் ஆட்சேர்க்க வேண்டியுள்ளது.

துரித சனத்தொகை வளர்ச்சியின் ஆசிரிய ஆட்சேர்ப்பின் மீதான தாக்கம் பங்களாதேஷ், மாலைதீவு மற்றும் இந்தியா, ஆசிய நாடுகளின் அறிக்கைகளில் பொருத்தமானதாக காணப்படுகின்றது. ஆனால் நேபாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய நாடுகளின் அறிக்கைகளில் இது பொருத்தமாக காணப்படவில்லை.

ஒவ்வொரு வருடமும் 4 வயதையுடைய 3.12 மில்லியன் சிறுவர்கள் 5 வயதுடையவர்களாவதுடன், 5 வயதையுடைய 5.53 மில்லியன் சிறுவர்கள் 6 வயதையடைகின்றனர். கல்விக்கான வசதிகளை அரசும், தனியார்துறையும் உருவாக்க வேண்டும். இதில் ஆசிரியர்களை ஆட்சேர்த்தலும் அடங்குகின்றது. (பங்களாதேஷ் நாட்டு அறிக்கை -2000)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பங்களாதேஷில் சனத்தொகையின் துரித அதிகரிப்பானது கல்வி முறைமீது மிகப் பெரிய அழுத்தத்தைக் கொடுப்பதால் ஆரம்ப மட்டத்திலுள்ள பெருந்தொகையான மாணவர்களின் கல்வித்தரத்தினை மேம்படுத்துவத்தில் இந்நாடு பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது. (பங்களாதேஷ் நாட்டு அறிக்கை - 2000)

மாலைதீவு நாட்டு அறிக்கையிலும் பாடசாலையில் முதலீடுகளை மேற்கொள்வதற்கான அதிக தேவை இனங்காணப்பட்டுள்ளது. இங்கு சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் பாடசாலை செல்லும் வயதினராக இருப்பதால் பாடசாலைக் கட்டடங்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்வி உபகரணங்களுக்கான தேவை அதிகமாகவுள்ளது. ஆரம்ப பாடசாலையில் மாணவர்கள் அதிக எண்ணிக்கையில் சேர்க்கப்படுவதால் இடைநிலைக்கல்விக்கான தேவையுமுள்ளது.

இந்தியநாட்டு அறிக்கையின் புள்ளிவிபரமானது கடந்த தசாப்தத்தின்போது (1990-1997) ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களின் அதிகரிப்பு, ஆசிரியர்-மாணவர் விகிதத்தில் ஒரு மாற்றத்துக்கு வழிவகுக்கவில்லை என்பதைக் குறிப்பதாக உள்ளது.

இதற்கு மாறாக இலங்கை நாட்டு அறிக்கையானது (2000) ஆசிரியர்கள் தொடர்பாக இலங்கை எதிர்நோக்குகின்ற மிகவும் மோசமான பிரச்சினை வேலைவாய்ப்பு அல்லவெனவும் ஆனால் ஆசிரியர்களை சகல இடங்களுக்கும் பணியாற்றச் செய்வதாகும் எனத் தெரிவிக்கின்றது.

## ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான உயர்வான விகிதம்

ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையிலான உயர்விகிதத்தை குறைப்பதற்கு அதிக ஆசிரியர்கள் ஆட்சேர்க்கப்பட வேண்டும். தரமான கல்விக்கு இந்த உயர்வான விகிதம் ஒரு தடையாக உள்ளது.

நாடுகளிடையேயும், நாடுகளுக்குள்ளும் பாரிய வேறுபாடுகள் உண்டு. உதாரணமாக பங்களாதேஷில் ஆசிரியர்களுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாணவர்களுக்குமிடையேயுள்ள விகிதம் உயர்வாக இருந்த போதும் 1991-1998 க்கு இடையே 1-61 என்ற விகிதம் 1-59 ஆக சற்றுக் குறைவடைந்தது. அரச பாடசாலைகளில் இந்த நிலைமையானது 1-76 என்ற விகிதத்தில் மேலும் மோசமாக உள்ளது. ஆனால் தனியார் பாடசாலைகளில் 1-43 என்ற விகிதம் காணப்படுகின்றது. வகுப்பறை நிலைமைகளை மேம்படுத்துவதற்காக அதிகளவு ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான திட்டமொன்றை அரசு ஆரம்பித்துள்ளது. அத்துடன் ஓய்வு பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்குப் பதிலாக புதியவர்களை நியமித்து ஆசிரிய-மாணவ விகிதத்தை 1-50 ஆக கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பாகிஸ்தான் நாட்டு அறிக்கையின் படி, சில கிராமப் பகுதிகளைத் தவிர ஏனைய பகுதிகளில் தகைமையுடைய ஆசிரியர்களின் பற்றாக்குறை இருக்கவில்லை. ஆனால், 1990-1998க்கு இடையில் ஆசிரியர் - மாணவ விகிதமானது 1-37 இலிருந்து 1-49 ஆக உயர்வடைந்துள்ளதென்பதை இந்த அறிக்கையின் புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. பாடசாலைகளிலுள்ள ஆசிரியைகளைப் பொறுத்தவரை இந்த விகிதமானது 1-43 இலிருந்து 1-54 ஆக உயர்வடைந்துள்ளது.

**தகைமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறை.**

கல்வியின் தரத்தினை மேம்படுத்துவதற்கு தகைமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறையை இந் நாடுகளின் பெரும்பாலான அறிக்கைகள் இனங்கண்டுள்ளன. Pre-Service கல்வி மற்றும் In-Service பயிற்சி ஆகிய இரண்டினையும் மேம்படுத்தி ஆசிரியக் கல்வியை முன்னேற்றுவதற்கான அபிலாசைகள் உள்ளன.

பல ஆசிரியர்கள் தகைமையற்றவர்களாக உள்ளனர். இதேவேளை புதிய ஆசிரியர்களை ஆட்சேர்த்து பயிற்றுவிக்க வேண்டிய தேவை உள்ளது. தகைமையற்ற ஆசிரியர்களால் கல்வியின் தரத்தின் மீது ஏற்படுகின்ற தாக்கமானது பங்களாதேஷ், இந்தியா, இலங்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளில் ஒரு தடையாக இருப்பது அறிக்கைகளிலிருந்து தெரியவருகின்றது. எனினும் நேபாளம் மற்றும் பாகிஸ்தானில் இவ்வாறான நிலைமையிருப்பதாக தெரிவிக்கப்படவில்லை.

பங்களாதேஷ் நாட்டு அறிக்கையில் (2000) பல பாடசாலைகளில் ஆசிரியர்களின் பற்றாக்குறை மோசமாக இருப்பதாகவும், ஆசிரியத் தொழிலுக்கு போதுமானளவு தயார்ப்படுத்தாமை ஒரு பிரச்சினையாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. தேசியரீதியில் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களுள் 68% சதவீதத்தினர் தேவையான கல்வித்தகைமையையும் 70% சதவீதத்தினர் கல்வியில் ஒரு சான்றிதழைக் கொண்டிருந்த போதும். கிராமப் பகுதிகளை விட நகரப்பகுதிகளில் தகைமையுள்ள ஆசிரியர்கள் அதிகமாக உள்ளனர். இவ் அறிக்கையின் படி இந்நாட்டில் தகைமையுள்ள ஆசிரியர்களும், பாடசாலைக் கட்டடங்களும் பற்றாக்குறையாக இருப்பதும் இவ் ஒழுங்குமுறையின் தோல்விக்கு வழிவகுக்கும். சகல பிள்ளைகளுக்கும் தரமான கல்வியை வழங்குவதற்கு இந்த நாட்டினால் முடியாதுள்ளது. ஏனெனில் தகுதியுடைய ஆசிரியர்கள் குறைவாக இருப்பதனாலாகும்.

மாலைதீவில் ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்களில் 63% சதவீதத்தினர் தகைமையுடையவர்களாக இருப்பதாகவும் இவர்களில் அநேகமானோர் பல்கலைக்கழக மாணவர்களெனவும் இந்நாட்டு அறிக்கையில் (2000) கூறப்பட்டுள்ளது. மாலே (மாலைதீவின் தலைநகர்) யிலுள்ள பாடசாலைகளுக்கும் கடல் ஏரியைச் சுற்றியமைந்துள்ள (atolls) பாடசாலைகளுக்குமிடையே பெரும் வேறுபாடுகளுண்டு. மாலேயிலுள்ள பாடசாலைகளில் சிறந்த தகைமையுள்ள ஆசிரியர்கள் உள்ளனர். ஆசிரியர்களில் 14% சதவீதத்தினர் தகைமையற்றவர்களாக உள்ளனர். சில பாடசாலைகளில் தகைமையுள்ள ஆசிரியர்கள் ஒரு போதும் கற்பித்ததில்லை. இங்குள்ள குடித்தொகை முழுவதினதும் குறைவான கல்வி மட்டம் காரணமாக ஆசிரியர்களும் தகைமை குறைந்தவர்களாகவே காணப்படுகின்றனர். ஆசிரியப் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பதற்கு போதுமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வியறிவுடையவர்கள் அங்கு காணப்படவில்லை. நேபாளத்தில் அநேகமாக ஆரம்பப்பாடசாலை ஆசிரியர்கள் யாவரும் அடிப்படை பிரவேசத் தகைமைகளைக் கொண்டுள்ளனர்.

இலங்கையில் ஆசிரியர்களின் தகைமைகள் ஒரு பெரிய பிரச்சினையாக இருப்பதாக தெரியவில்லை. ஆசிரியர்களில் 20% சதவீதமானோர் தொழில்ரீதியாக பயிற்றப்படவில்லை. அதேவேளை 27% சதவீதமான ஆசிரியர்கள் பல்கலைக்கழகப் பட்டதாரிகளாக இருக்கின்றனர். ஏனையோர் பயிற்றப்பட்ட அல்லது அங்கீகரிக்கப்பெற்ற ஆசிரியர்களாக உள்ளனர்.

## தேசியரீதியில் சமனற்ற தன்மைகள்

நாட்டின் தரவுகளை கவனமாக பகுப்பாய்வு செய்கின்ற தேவை உள்ளது. தேசியத்தரவுகள், நகர மற்றும் கிராமப் பகுதிகளிடையேயுள்ள பாரிய சமனற்ற தன்மைகளை மறைப்பதாக உள்ளன.

உதாரணமாக, ஆசிரியர் - மாணவர் விகிதமானது சாதகமாக 1-24 (1995) இருந்தபோதும் இது மாலைதீவின் பூகோள நிலைமையில் பெரிதும் தங்கியுள்ளது. கடலோரிப் பகுதிகளிலுள்ள தீவுகளில் சனத்தொகை குறைவாகவும், தலைநகரில் சனத்தொகை செறிவாகவுமுள்ளது. (மாலைதீவு அறிக்கை -2000)

நேபாளத்தின் அறிக்கை, தகைமையுள்ள ஆசிரியர்களின் தட்டுப்பாட்டை இனங்காணாத போதும்; 1997இல் ஆசிரியர் மாணவர் விகிதமானது 1-26 இலிருந்து 1-46 ஆக உயர்ந்தது. தனியார் பாடசாலைகளில் இந்த விகிதமானது 1-26க்கும் குறைவாக உள்ளது. அரச பாடசாலைகளில் 1-50 வரை உயர்வாக இருந்துள்ளது.

தகைமையுள்ள ஆசிரியர்களைப் பொறுத்தவரை பிரதேசங்களுக்கிடையே பெரும் வேறுபாடுகள் உள்ளன. இந்திய நாட்டு அறிக்கையின்படி (2000) தகைமையுள்ள ஆசிரியர்களின் வீதம் 1990



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல் 85 சதவீதமாக இருந்து 1997இல் 87 சதவீதமாக அதிகரித்தது (ஆசிரியைகளுக்கு அதிகரிப்பு 29 சதவீதத்திலிருந்து 34 சதவீதமாக இருந்தது) ஆனால் மாநிலங்களுக்கிடையே பெரும் வேறுபாடுகள் உள்ளன. உதாரணமாக கர்னாடகாவிலும், டில்லியிலும் ஆசிரியர்கள் யாவரும் தகைமை பெற்றிருந்த போதும் ஏனைய பிரதேசங்களில் நிலைமை மோசமாக இருந்துள்ளது. தொலைவிலுள்ள கிராமியப்பகுதிகளில் பணியாற்றுவதற்கு ஆசிரியர்கள் தயங்குவதால் மாணவர்களின் இடைவிலகல் அதிகரித்துக் காணப்பட்டது.

தகைமையுள்ள மற்றும் பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் தட்டுப்பாடு ஆரம்பப்பாடசாலை மட்டத்தில் இருக்கவில்லையென பாகிஸ்தான் நாட்டு அறிக்கையில் (2000) தெரிவிக்கப்பட்ட போதும், 100 சதவீதமான ஆசிரியர்கள் கல்விரீதியில் தகைமையுடையவர்களாகவும் தொழில்ரீதியாக பயிற்றப்பட்டவர்களாகவும் உள்ளனர். இந்நாட்டின் பின்தங்கிய கிராமப்பகுதிகளில் ஆரம்பக்கல்வி ஆசிரியர்களில் அரைப்பகுதிக்கும் கூடுதலானோர் தகைமையற்றவர்களாகவும், ஆசிரியைகளில் 25% சதவீதத்தினரே கற்பிப்பதற்கான ஆகக் குறைந்த தகைமைகளைக் கொண்டிருக்கின்றனர். கிராமியப் பகுதிகளிலுள்ள ஆசிரியர்களின் வீதமானது அதிக ஆசிரியர்கள் சிறந்த வசதிகளையுடைய நகர்ப் பகுதிகளுக்கு நகர்ந்ததன் காரணமாக குறைவடைந்துள்ளது. தனியார் பாடசாலைகளிலுள்ள ஆசிரியர்கள் சிறந்த கல்வித் தகைமைகளைக் கொண்டிருந்த போதும் அவர்களிற் பலருக்கு தொழில்ரீதியான தகைமைகள் இருக்கவில்லை.

## ஆசிரியத் தொழில் பற்றிய கருத்து.

செயற்பாட்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அநேகமான நாடுகளில், ஆசிரியர்களுக்கு ஒரு வருடத்துக்கு குறைவான பயிற்சியே வழங்கப்படுகிறது. பல ஆசிரியர்கள் தகைமையற்றவர்களாகவும், வகுப்பறையில் பிரவேசிப்பதற்கு முன்னதாக சில வாரப் பயிற்சியை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமே கொண்டுள்ளனர். மாணவர்களின் கற்றல் சாதனையே மேம்படுத்துவதற்காக ஆசிரியப் பயிற்சியின் உள்ளடக்கத்தை முன்னேற்ற வேண்டிய தேவை உள்ளது.

## ஆசிரியர்கள் பற்றிய கருத்து

கல்வியின் தரத்தினை மேம்படுத்த வேண்டிய தேவை சகல நாடுகளினதும் அறிக்கைகளிலும் இனங்காணப்பட்டுள்ளது. அத்துடன் மாணவர்களில் கற்றல் அடைவுகளுக்கு தகைமையுள்ள ஆசிரியர்களின் முக்கியத்துவம் இவ் அறிக்கைகளில் பெரிதும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் சில சமயங்களில் கல்வியின் குறைவான தரத்துக்கு ஆசிரியர்கள் மீது பழி சுமத்தப்படுகிறது. "இந்நாட்டில் கற்பித்தலின் தரம் திருப்திகரமானதாக இருக்கவில்லை. ஏனெனில் ஆசிரியர்களின் தரம் எதிர்பார்க்கப்படும் அளவுக்கு உயர்வாக இல்லை" (பங்களாதேஷ் நாட்டு அறிக்கை - 2000)

மாலைதீவு நாட்டு அறிக்கையில், போதுமான பயிற்சியில்லாததன் காரணமாக ஆசிரியர்களுக்கு போதுமான அறிவு இல்லாததால் குறைவான பெறுபேறுகளைக் காணக்கூடியதாக இருக்கின்றது. மாணவர்கள் தமது சொந்த மொழியில் சிறந்த புள்ளிகளைப் பெற்ற போதும்; ஆங்கிலத்திலும் கணிதத்திலும் குறைவாகவேயுள்ளனர். இது, பிரச்சினை மாணவர்களில் இல்லை என்பதைக் குறிப்பதாக உள்ளது. ஆசிரியர்களே ஆங்கிலத்தில் மிகவும் குறைவாக உள்ள ஒரு நிலைமையில், அடைவுப் பெறுபேறுகள் மிகவும் திருப்திகரமானதாக இருக்க முடியாது. (மாலைதீவு நாட்டு அறிக்கை - 2000)

பாகிஸ்தானில் ஆசிரியர்கள் பற்றிய மிகவும் நம்பிக்கையற்ற ஒரு கருத்து நிலவுகின்றது. பாகிஸ்தான் நாட்டு அறிக்கையின்படி, ஆசிரியர்களின் தகுதியின்மை இன்னமும் தீர்க்கப்படாத பிரச்சினையாக உள்ளது. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களுக்கு சிறுவர் உளவியல் பற்றிய அறிவு போதுமானதாக இல்லை. அத்துடன் ஆசிரியர்களின் தண்டனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்கும் முறைகள் மாணவர்களிடையே சுய-கௌரவம் பாதிப்படையக் காரணமாகின்றன. ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் குறைவான ஒழுக்க முறைகளும், கடுமையான மனப்பாங்கும், மாணவர்கள் குறைவாக சேர்வதற்கும், இடைவிலகலுக்கும் காரணமாகின்றன. மேலும், ஊக்குவிப்புகள் மற்றும் மேற்பார்வை ஆகியவை இல்லாததால், பெரும்பான்மையான ஆசிரியர்களுக்கு கல்வியின் வளர்ச்சி நோக்கிய இலட்சியமற்றவர்களாக உள்ளனர். ஆசிரியர்களின் அர்ப்பணிப்பின்மையால், கல்வியின் தரம் சீர்கெடுவதுடன் கற்றல் அடைவுமட்டம் பிள்ளைகளிடையே குறைவாகவுமுள்ளது. (பாகிஸ்தான் நாட்டு அறிக்கை - 2000)

ஆசிரியர்களுடைய குறைவான அர்ப்பணிப்புக்கான காரணங்கள் குறித்து இவ் அறிக்கையில் கலந்துரையாடப்படவில்லை. ஆசிரியக் கல்வியை முன்னேற்றுவதற்கான தந்திரோபாயங்கள் இருந்த போதும் கூட, ஆசிரியர்களை அவர்களது தொழிலுக்கு தயார்ப்படுத்தி அவர்கள் சிறந்த பணியாற்றும் வகையிலான திருப்திகரமான வேலை நிலைமைகளை உருவாக்குவது அரசின் பொறுப்பாகுமா என்பது பற்றி தெளிவாகக் கூறப்படவில்லை.

சில நாடுகளின் அறிக்கையில் ஆசிரியர்களின் வரவின்மை குறித்து விபரிக்கப்பட்டுள்ளது. உதாரணமாக நேபாளநாட்டு அறிக்கையின் படி ஆசிரியர்கள் 80% சதவீதவரவினைப் பேணுவதாகவும் மாணவர்களின் வரவு 90% சதவீதமாகவும் கணிப்பிடப்பட்டுள்ளது. ஆனால், ஆசிரியர்களின் குறைவான வரவுக்கான காரணங்கள் குறித்து விளக்கமளிக்கப்படவில்லை.

மேலும் பாகிஸ்தானில் தொலைவிலுள்ள கிராமப்புற ஆரம்பப் பாடசாலைகளில் வரவின்மை உயர்வாக இருப்பதாகவும், விசேடமாக பெண்கள் பாடசாலைகளில் வரவின்மை உயர்வாக உள்ளதாகவும் அறிவிக்கப்படுகிறது. இக்கிராமப் புறங்களில் வெளிமாவட்ட ஆசிரியர்கள் தமது ஆசிரியத் தொழிலை புதிதாக ஆரம்பிக்கின்றனர். ஒரு சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருட பணி அனுபவத்தின் பின்பு இவர்கள் பெரும்பாலும் நகர்ப் புறங்களுக்கு அல்லது தமது குடும்பங்களுக்கு சமீபமாக மாற்றலுக்கு விண்ணப்பிக்கின்றனர். இந்நிலைமைக்கு அரசியற் தலையீடு காரணமாகுமென இவ் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது. புதிய பாடசாலைகளை திறந்து வைத்தல்,ஆசிரியர்களின் ஆட்சேர்ப்பு மற்றும் ஆசிரியர்களை கல்வி நிர்வாகிகளையும் தூரஇடங்களுக்கு மாற்றுதல் போன்ற விடயங்களில் அரசியற் தலையீடு உள்ளது. இந்நிலைமையை மேம்படுத்துவதற்கு அரசியற் தலையீடு இருக்கக்கூடாதென இவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்திய நாட்டு அறிக்கையின் படி, பாடசாலைகளில் குறைவான தரமான கல்விக்கு ஆசிரியர்களை மட்டும் குறைகூறக்கூடாது. போதுமான கல்வியும், ஆதரவுமின்றி நன்கு செயற்படுவதற்கான வாய்ப்புகள் ஆசிரியர்களுக்கு குறைவாகவேயுள்ளன.

## ஆசிரியர்களின் கல்வி

கல்வியின் தரத்தை முன்னேற்றுவதற்கு ஆசிரியர்களின் கல்வியை அபிவிருத்தி செய்து பலப்படுத்துவது முக்கியமானதென இனங்காணப்பட்டுள்ளது. உதாரணமாக பங்களாதேஷ் நாட்டு அறிக்கையில் தகைமையுள்ள, பயிற்றப்பட்ட ஆசிரியர்களும், மேற்பார்வையாளரும் EFA இன் இலக்குகளை அடைய வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றனர். தொடர்ச்சியான பயிற்சி மற்றும் மீள்பயிற்சி மூலம் நன்கு ஊக்குவிக்கப்பட்ட ஒழுக்கக்கட்டுப்பாடுடைய தொழில்ரீதியாக தகுதியுடைய ஆசிரியர்களை உருவாக்குவது அவசியமெனக் கருதப்படுகின்றது.

இதேபோன்று இந்திய நாட்டு அறிக்கையிலும் கல்வியின் தரத்தை மேம்படுத்துவதற்காக ஆசிரியக்கல்வியை முன்னேற்ற வேண்டிய தேவை இனங்காணப்பட்டுள்ளது. திரும்பத் திரும்பப் படித்து விடயங்களை மனப்பாடம் செய்யும் முறை இன்னமும் கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முக்கிய அம்சங்களாக இருக்கின்றது. கற்பித்தலில் மாற்றத்தைக் கொண்டு வந்து உள்ளூர் சந்தர்ப்பத்துக்கு கற்பித்தலை சீரமைப்பதற்கு ஆசிரியர்கள் உதவவேண்டும். ஆகையால் கற்பித்தல் கற்றல் சாதனங்கள், கல்விச் செயல்முறைகள் மற்றும் சிறுவரை - மையமாகக் கொண்ட அறிமுகம் ஆகியன மிக உயர்வான முன்னுரிமையைப் பெற்றுள்ளன.

### கற்பித்தலுக்கான ஆகக் குறைந்த தகைமைகள்

கற்பித்தலுக்கு தேவையான ஆகக் குறைந்த தகைமைகள் தேசியரீதியாக தீர்மானிக்கப்படுகின்றன. ஆசிரியக் கல்விக்கென உத்தியோகரீதியாக இனங்காணப்பட்ட ஒழுங்குமுறையொன்று நேபாளத்திலோ அல்லது இலங்கையிலோ காணப்படாத போதும் இப்பிரதேசத்திலுள்ள அநேகமான நியமங்களுக்கு சமமானதாக அங்கு கடைப்பிடிக்கப்படுகின்ற செயல்முறைகள் உள்ளன. ஆசிரியக் கல்வியென்பது வழமையில் 10 அல்லது 12ம் தரத்தைப் பூர்த்தி செய்து 10 அல்லது 12 மாதப் பயிற்சியை பெறுவதாக உள்ளது.

## தகைமையுள்ள ஆசிரியர்களைக் கவர்ந்து பயிற்று விப்பதற்கான தந்திரோபாயங்கள்.

தமைமையுள்ள ஆசிரியர்களைக் கவர்ந்து தக்கவைப்பதற்கான சுயவிருப்பை ஆசிரியத் தொழில் கொண்டிருக்க வேண்டும். கற்பிப்பதற்கு தேவையான தகைமைகளைப் பெறுவதற்கான சாத்தியப்பாடுகளுடனான சூழல், மற்றும் சிறந்த வேலை நிலைமைகள் ஆகியன ஆசிரியர்கள் தமது கடமைகளை நிறைவேற்றுவதற்கு அனுசரணையாக இருக்க வேண்டும்.

சிறந்த தரமுள்ள சர்வதேச கல்வியை அடைவதற்கு போதியளவு தகைமையுள்ள ஆசிரியரை எவ்வாறு கவர்ந்து பயிற்றுவிப்பதற்கான பல்வேறு தந்திரோபாயங்களை நாட்டு அறிக்கைகளில் காணக்கூடியதாக உள்ளது. ஆசிரியர்களுக்கான வேலை நிலைமைகளை மேம்படுத்தல், ஆசிரியக் கல்வியை அபிவிருத்தி செய்தல், ஆசிரியைகளின் எண்ணிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கையை அதிகரித்தல் போன்ற பல அணுகுமுறைகளை அநேகமான நாடுகள் முயன்று பார்க்கின்றன. கல்வி முறையின் விளைவுத் திறனை எவ்வாறு அதிகரிப்பது, தகைமையுள்ள ஆசிரியர்கள் கிடைக்காதிருக்கும் போது கையாளக்கூடிய மாற்றீடான அணுகுமுறைகள் பற்றிய தந்திரோபாயங்களும் உண்டு. பாடசாலைகள், அரசசார்பற்ற நிறுவனங்கள் மற்றும் அரசுகளுக்கிடையே நெருக்கமான ஒத்துழைப்பை விருத்திசெய்வதன் மூலம் கல்வியின் தரத்தை முன்னேற்றி ஆசிரியர்களின் தொழில்சார் அபிவிருத்தியை வசதிசெய்வது பற்றிய கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

## தகைமையுள்ள ஆசிரியர்களைக் கவர்ந்து பயிற்றுவிப்பதற்கான தந்திரோபாயங்கள்

சகல நாடுகளும் தந்திரோபாயங்கள் பலவற்றையும், தகைமையுள்ள ஆசிரியர்களின் பற்றாக்குறையை தீர்ப்பதற்கான வழிகளையும் தெரிவிக்கின்றன. இத் தந்திரோபாயங்கள் வெவ்வேறு உப-பிரிவுகளில் தனித்தனியாக வழங்கப்பட்டுள்ளன. அவ் உப-பிரிவுகளில் பின்வருமாறு வேலை நிலைமைகள், ஆசிரியக் கல்வி, பயனுறுதித்தன்மை, தகைமையற்ற ஆசிரியர்கள், ஒத்துழைப்பு மற்றும் பால்ரீதியிலான சமநிலை.

## வேலை நிலைமைகள்

இத்தொழிலுக்கு அதிகளவு ஆசிரியர்களைக் கவர்ந்து ஏற்கெனவே வேலையிலுள்ளவர்களைத் தக்க வைப்பதற்கு, ஆசிரியர்களின் வேலை நிலைமைகளையும் ஊதியங்களையும், முன்னேற்றுவது அவசியமாகும். இத்தந்திரோபாயம் நாட்டு அறிக்கைகள் சிலவற்றில் இனம்காணப்பட்டுள்ளது.

இலங்கை அரச (2000) கஷ்டப்பிரதேச பாடசாலைகளில் பணியாற்றுவதற்கான ஊக்கத்தை அதிகரிப்பதற்காக ஆசிரியர்களுக்கான பொதியை திட்டமிடுகின்றது. இவ் ஆசிரியப் பொதியில் கடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழங்குவதற்கான முன்னுரிமை, புலமைப் பரிசில்கள், பயிற்சி வாய்ப்புகள் மற்றும் வதிவிடம் வழங்கல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை வழங்குதல் இப் பொதியில் அடங்குகின்றன. அத்துடன் கஷ்டப் பிரதேசங்களில் கடமையாற்றும் ஆசிரியர்களினது ஒவ்வொரு மூன்று வருடகாலப் பகுதிக்கும் மேலதிகமாக ஒரு வருடம் சேர்க்கப்பட்டு பதவியுயர்வுக்கு வழி வகுக்கப்படுகிறது. மேலதிக சம்பள அதிகரிப்பு அனுமதிக்கப்பட்டு அவர்களது வருடாந்த விடுப்பு உரிமையில் 25 சதவீதத்தை அடுத்தடுத்து 3 வருடங்களில் இவ்ஆசிரியர்கள் பெற்றுக்கொள்வர். மாலைதீவு நாட்டு அறிக்கையிலும் (2000) ஆசிரியர்களின் குறைவான ஊதியம் அடையாளம் காணப்பட்டு, தொலைவிடங்களில் கடமையாற்றகின்ற ஆசிரியர்களுக்கு ஊதியச் சீராக்கல், போனஸ் மற்றும் வீட்டு வசதிகள் வழங்குவதற்கு திட்டமிடப்படுகின்றது. பதிவு செய்யப்பட்ட அரசசார்பற்ற பாடசாலைகளும் ஆசிரியர்களின ஊதியங்கள் மற்றும் துணைத் தேவைகளுக்கான உதவிகளைப் பெறவுள்ளன.

அடிப்படை உபகரணம் மற்றும் வகுப்பின் அளவு குறித்த தேசிய ஒழுங்குவிதிகள் இந்திய நாட்டு அறிக்கையின்படி (2000), கற்பித்தல் மற்றும் கற்றல் மீது செல்வாக்குச் செலுத்துவதாக உள்ளன. இந்தியாவில் சகல ஆரம்பப்பாடசாலைகளுக்கும் பாடசாலை உபகரணங் களின் ஒரு நியமத் தொகுதி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் 100க்கும் அதிகமான மாணவர்களைக் கொண்ட ஆரம்பப்பாடசாலைக்கு மூன்றாவது ஆசிரியர் ஒருவரும் நியமிக்கப்படுவார். பாடசாலையின் உட்கட்டமைப்பினை முன்னேற்றுதல், ஆசிரியக் கற்றலுக்கான உபகரணங் களை தயாரித்தலும் வழங்குதலும், கல்வி ஆளணியினரின் இயலளவைக் கட்டியெழுப்புதல் ஆகியன அவசியமென இந்திய அரசு கண்டறிந்துள்ளது.

நேபாளத்தில் (2000) ஆசிரியர்களுக்கு போதுமானதும் பொருத்தமானதுமான பயிற்சியும், வகுப்பறை ஆதரவும் அளிக்கப்பட்டு ஆசிரியர்களுக்கான உசாத்துணை வாசிப்பு நூல்கள் விருத்திசெய்யப்பட்டு வழங்கப்படும். அத்துடன் பாடநூல்களும், தொடர்புடைய ஆசிரிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வழிகாட்டல் நூல்களும், பாடசாலை ஆண்டு ஆரம்பித்து இரு வாரங்களுள் வழங்கப்படும். ஆரம்பப் பாடசாலைப் பாடவிதான விடயங்கள் பிரதான சுதேச மொழிகளுக்கு மொழிபெயர்க்கப்பட்டு, பல-தர ஒழுங்கமைப்புக்கு பொருத்தமான வழிமுறைகளும் விடயங்களும் அபிவிருத்தி செய்யப்படவுள்ளன. பாகிஸ்தானின் நாட்டு அறிக்கையின் படி (2000), பாடவிதானங்கள், பாடநூல்கள், கற்பித்தல் வழிமுறைகள், மதிப்பீட்டு உத்திகள், நடைமுறைத் தேர்ச்சிகளை வலியுறுத்தும் ஆசிரியர்களுக்கான பயிற்சி ஆகியன ஆசிரியர்களுக்கு அவர்களின் வினைத்திறனை அதிகரிக்க உதவுகின்றன.

இத்திட்டங்கள் பலவற்றில் ஆசிரியர்களுக்கு அதிகாரமளித்தல் இனங்காணப்பட்டுள்ளது. உதாரணமாக இலங்கையின் நாட்டு அறிக்கையில் (2000) ஆசிரியர்கள் தமது வகுப்பறைத் தேவைகளுக்கு பொருந்தும் வகையிலான தமது சொந்த மதிப்பீட்டுக் கருவிகளை விருத்தி செய்வதற்கு வழிகாட்டப்பட வேண்டுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆசிரியர்களுக்கிடையே இயலளவு கட்டியெழுப்பப்படுவதை ஊக்குவிப்பதை பிரதானமாக கவனத்திற் கொண்டு ஒரு பன்முகப்படுத்தலை இந்தியா மேற்கொண்டுள்ளது. அதிகளவு மாணவனை - மையமாகக் கொண்ட கல்வியூட்டலின் முக்கியத்துவ திட்டங்கள் பலவற்றில் வலியுறுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக ஆசிரியரின் ஆக்கத்திறன் மற்றும் வகுப்பறை ஒழுங்கமைப்பின் சுயாதீனம் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்ற ஆசிரியருக்கு அதிகாரமளிக்கும் திட்டமொன்று உண்டு. (இந்தியநாட்டு அறிக்கை, 2000) 80-85 சதவீதமான பாடசாலைகள் பல்-தரக் கற்பித்தலை பயன்படுத்தும் போது இது ஒரு பெரும் சவாலாக காணப்படுகிறது. ஆசிரியர்களைக் கவர்ந்து தக்க வைப்பதற்கான இன்னொருவழி இத்தொழிலினுள் சாத்தியப்பாடுகளை விருத்தி செய்வதாகும். இத் தந்திரோபாயம் நாட்டு அறிக்கைகள் பலவற்றில் இனங்காணப்பட்டுள்ளன. உதாரணமாக பாகிஸ்தானில் (2000), ஆசிரியர்கள் தமது வினைத்திறனை முன்னேற்றுவதற்கான ஓர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுங்குமுறையானது நிறுவனமயமாக்கப்படும். ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் மற்றும் நடுத்தர மட்டங்களிலுள்ள ஆசிரியர்களுக்கான தெளிவான தொழிற்கட்டமைப்பானது பதவிஉயர்வு வாய்ப்புகள் உள்ளடக்கியிருப்பதுடன், தொழில்ரீதியான நடத்தையை மீளாய்வு செய்து நியமங்களை விதிப்பதாக உள்ளது. மாலைதீவுகள் (2000), நல்லாசிரியர்களை இனங்கண்டு அவர்களுக்கு வெகுமதியளிப்பதன் மூலம் ஆசிரியர்களின் தரத்தினை மேம்படுத்துவதற்கான தந்திரோபாயங்களை அபிவிருத்தி செய்துள்ளது. அத்துடன் போனஸ் வழங்குவதன் மூலமாக சுய - கற்றலுக்கு ஆசிரியர்களை ஊக்கவிப்பதன் மூலமும் தந்திரோபாயங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆசிரியர்களின் வினைத்திறன்களை முன்னேற்றுவதற்கு ஆசிரியர்களுக்கு ஆதரவை வழங்குவதுடன், பதவியுயர்வு முறையையும் நேபாளம் நிறுவதற்கு நோக்கம் கொண்டுள்ளது. பயிற்றப்படாத ஆசிரியர்களை கற்பிக்க அனுமதிக்காது சகல ஆசிரியர்களும் வேலை வாய்ப்புப் பெறுவதற்கு முன்னதாக 10 மாத பயிற்சியை பெற்றிருக்க வேண்டுமென்பதை உறுதிப்படுத்துதல் ஆகியவற்றை நிச்சயப்படுத்தி, தொழில் சார் அனுபவத்தை அங்கீகரிப்பதற்கான ஆசிரியரை மதிக்கும் ஒழுங்குமுறையை அறிமுகப்படுத்தி, மீண்டெழும் ஆசிரியப் பயிற்சியில் பங்குபற்றுதல் ஆகியவற்றை இத் தந்திரோபாயம் கொண்டுள்ளது. (Nepal country Report - 2000).

**ஆசிரியர்கல்வி**

தேவையான ஆகக் குறைந்த கல்விசார் மற்றும் தொழில்சார் தகைமைகளுடன் புதிய உள்ளூர் ஆசிரியர்களை ஆட்சேர்த்தலானது நீண்டகால நோக்கில் மட்டுமே சாத்தியமாகும். ஆசிரியக்கல்வி முறையின் முன்னேற்றம் மற்றும் இயலளவின் அதிகரிப்பு ஆகியவற்றிலேயே இதன் வெற்றி தங்கியுள்ளது. இதேவேளை, தற்போதுள்ள ஆசிரியர்களின் தகுதிகளை முன்னேற்றுவதற்கு உள்ளகப்பயிற்சித் தேவைகள் பலப்படுத்தப்பட வேண்டும். பங்களாதேஷ் (2000) போன்ற சில நாடுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆசிரியப்பயிற்சிக்கான பாடவிதானத்தை மீளாய்வு செய்து, ஆரம்பப் பயிற்சி நிறுவனங்களில் போதனாசிரியர்களின் பயிற்சியை வழங்குவதன் மூலம் ஆசிரியக் கல்வியின் தரத்தை மேம்படுத்தக் கூடியதாக இருக்கும். தகைமையுள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையான இந்த நிலைமையை, தற்போதுள்ள ஆசிரியப்பயிற்சி நிறுவனங்களை அதிக தீவிரமாக பயன்படுத்துவதன் மூலமும், புதிய பயிற்சி நிறுவனங்களை நிர்மாணிப்பதன் மூலமும் மேம்படுத்த முடியும்.

மாலைதீவுகளில் (2000), கற்பித்தலில் புதுமையான வழி முறைகளைப் பயன்படுத்துவதற்கு கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கமளிக்கப்படும். நேபாளத்தில் (2000) வானொலி, மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகள் விருத்தி செய்யப்பட்டு ஆசிரியர்களுக்கான உள்ளகப் பயிற்சி போன்று ஒழுங்காக ஒலி, ஒளிபரப்புச் செய்யப்படும். இந்த நாட்டு அறிக்கையின் படி கற்பித்தல் வழி முறைகள் மீது அதிக கவனம் செலுத்தப்படும். கற்பித்தல் வழிகாட்டல்கள் பல்-தரக்கற்பித்தல் நுட்பங்களை உள்ளடக்கியதாக இருக்கும். மாலைதீவு, பாகிஸ்தான் மற்றும் நேபாளம் ஆகிய நாடுகளில் ஆசிரியர் தொலைக் கல்வி பலப்படுத்தப்படும். இதில் அதிகளவு விடயஅறிவு மற்றும் சிறுவர்கள் எவ்வாறு விளங்கிக் கொள்கின்றனர் என்பது போன்ற விடயங்கள் உள்ளடக்கப்படும். இந்தியாவில் (2000), பாடசாலை ஆசிரியர்களை சென்றடையும் வகையில் தொலைக்கல்வியில் நவீன தொழினுட்பம் பயன்படுத்தப்படும். தற்போதுள்ள ஆசிரியர்களுடன் மாலைதீவு செயற்பட்டு இவர்களின் தரத்தினை மேம்படுத்த வேண்டும்.

இதனை அடைவதற்கு நீண்ட காலம் செல்லும். இதே வேளை பயிற்றப்படாத ஆசிரியர்களை தகைமை பெறச் செய்ய உதவுவதற்காக ஆசிரியர்களின் உள்ளகக் கல்வியை தொடர்வதில் அதிக முக்கியத்துவம் வழங்கப்படும், இதனால் பிராந்தியரீதியிலான சமனற்றதன்மை அகற்றப்படும். வெளிநாட்டு ஆசிரியர்களை ஆரம்பக்கல்வியில் பதிலீடு செய்வது அரசின் கொள்கையாக இருந்துவருகின்றது. இப்பொழுது ஏனைய தரங்களுக்கும் இக் கொள்கை விஸ்தரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேபாளத்தில் (2000), ஆசிரியர்களை தொடர்ச்சியாக அபிவிருத்தி செய்வது, முன்சேவைப் பயிற்சி, உள்ளகப் பயிற்சி, மற்றும் ஆசிரியர்களுக்கான தொழில்சார் ஆதரவு ஒழுங்கு முறையூடாக வலியுறுத்தப்படும். வருடமொன்றுக்கு வகுப்பு அடிப்படையிலான ஆகக் குறைந்தது 10 நாள் பயிற்சியை சகல ஆரம்பப்பாடசாலை ஆசிரியர் களுக்கும் வழங்குவது அரசின் இலக்காக உள்ளது. இப்பொழுது ஆரம்பக்கல்வி ஆசிரியர்களின் 50 சதவீதத்தினர் உள்ளகப் பயிற்சியை பெற்றுள்ளனர்.

## விளைவுத்திறன்

கல்விமுறையின் விளைவுத்திறனை அதிகரிப்பதற்கான பல்வேறு தந்திரோபாயங்கள் நாட்டு அறிக்கையில் காணப்படுகின்றன.

நாட்டு அறிக்கையின் படி பங்களாதேஷ் வசதிகளை விரிவாக்கி, மேலதிக ஆசிரியர்களை பணிக்கமர்த்தி சகல ஆசிரியர்களையும் கற்பித்தலில் ஈடுபடுத்துவதன் மூலம் தரமான ஆரம்பக் கல்வியைப் பெறுவதற்கான சமவாய்ப்பினை உறுதிசெய்யவுள்ளது.

நாட்டு அறிக்கைகள் பலவற்றில் விளைவுத்திறனை அதிகரிப் பதற்கான ஒரு வழியாக பல்தரக்கற்பித்தல் உள்ளது. இந்தியாவில் தற்போதுள்ள கல்வி நிலைமையை கையாளுவதற்கான வழி முறைகளை ஆசிரியர்கள் கொண்டிருப்பர். (இந்திய நாட்டு அறிக்கை - 2000)

ஆசிரியர்களின் சிறந்த பங்கீடு மற்றும் உச்சப் பயன்பாட்டை உறுதி செய்வதற்காக, ஆரம்பக்கல்வியை அதிகரித்தளவில் வழங்குவதற்கான வாய்ப்பினை உருவாக்குதல் இன்னொரு தந்திரோபாயமாகும். அத்துடன் ஆசிரியர்களின் வரவின்மையை கட்டுப்படுத்துவதற்கு கண்டிப்பான நடவடிக்கையும் மேற்கொள்ளப்படும்.

பாகிஸ்தானில் (2000), ஆசிரியர்களின் பங்கீடு மற்றும் வழங்கலில் அதிகரித்த அரசியற் தலையீடு இருந்து வருகின்றது. இப்பொழுது, கல்வியாண்டின் போது ஆசிரியர்களின் மத்தியில் இடமாற்றங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கொள்ளப்படக் கூடாதென கேட்கப்பட்டுள்ளது. அரசியற் தலையீட்டை தவிர்த்து இடமாற்றங்களைக் குறைப்பதற்கு உள்ளூர்ப் பாடசாலைகளுக்கு உள்ளூர் ஆசிரியர்கள் பெரும்பாலும் ஆட்சேர்க்கப்படுவர்.

**தகைமையற்ற ஆசிரியர்கள்.**

மாணவர்களின் கற்றல் சாதனைகளுக்கு தகைமையுள்ள ஆசிரியர்கள் முக்கியமானவர்கள் எனக் கருதப்பட்ட போதும், தகைமையற்ற ஆசிரியர்களும் அடிக்கடி பயன்படுத்தப்படுகின்றனர். இந்தியாவில் தகைமையுள்ள ஆசிரியர்கள் கிடைக்காத போது பதிலீடாக தகைமையற்ற ஆசிரியர்களை பயன்படுத்துகின்ற திட்டங்கள் இருந்து வந்துள்ளன. ஆசிரியர்களின் வரவின்மையை கையாளுவதற்காக ராஜஸ்தானிலுள்ள குக்கிராமங்களில் நிறுவப்பட்ட ஷிக்ஸம கர்மி திட்டமானது "வெறுங்கால் (Barefoot) ஆசிரியர்கள்" என்ற எண்ணக்கருவை அறிமுகப்படுத்தியது. பாடசாலைக்கு சமுகமளிக்காத ஆரம்பக்கல்வி ஆசிரியருக்கு பதிலீடாக ஓர் "உள்ளூர் கல்விப் பணியாளர்"செயற்படுகின்றார். "வெறுங்கால் ஆசிரியருக்கு, பின்னாலுள்ள கருத்து யாதெனில், உள்ளூர் அடித்தளத்துடன் சென்றடைய முடியுமென்பதாகும். "வெறுங்கால் ஆசிரியர்" ஒரு சமூகப் பணியாளராக" பணியாற்ற வேண்டும். இந்தியாவின் நாட்டு அறிக்கையின் படி (2000), முறையான ஆசிரியப்பயிற்சி இல்லாத நிலை தீவிர உள்ளகப் பயிற்சி யினால் ஈடுசெய்யப்படும்.

தரம் குறைவாக இருந்தாலும் கூட, இருக்கின்ற ஆளணியினரை மாலைதீவு ஆரம்பப் பாடசாலையில் கற்பிப்பதற்காக ஆட்சேர்த்துள்ளது. ஆனால் அறிக்கையின்படி (2000), இந்நிலையை மாற்றுவதற்காக, வெளிநாடுகளிலிருந்து ஆசிரியர்களை ஆட்சேர்த்து இவ்வாறான கல்வியில் இப்பொழுது தகைமை பெறுகின்ற அதிக எண்ணிக்கையான மாலைதீவு மக்களுக்கு அதிக வெளிநாட்டுப் பயிற்சியை வழங்குவதற்கு தீர்க்கமான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. இந்நாட்டுக்கு தேவையான உயர்மட்ட மனிதசக்தியை உருவாக்குவதற்கு பொருளாதார ரீதியில் ஒரு துணை ஒழுங்கு முறையை பேணுவதற்கு இந்நாடு போதுமானளவு பெரிய நாடாக இருக்கவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒத்துழைப்பு

ஆசிரியத் தொழிலை மேலும் கவர்ச்சிகரமாக வைத்திருப்பதற்கான ஒரு தந்திரோபாயம் புதிய பங்காளிகளை நிறுவுவதாகும். பங்களாதேஷில் (2000), அரசசார்பற்ற நிறுவனங்களும் ஏனைய சமூகமட்ட அமைப்புகளும் ஆசிரியர்களுக்கான ஊதியங்களை வழங்குவதற்கு ஆதரவு வழங்குவதற்கு ஊக்குவிக்கப்படவுள்ளன. இந்தியாவில் (2000), அண்மைக் காலங்களில் அரச அமைப்புகள் மற்றும் ஆசிரியப் பயிற்சியில் கள அனுபவத்துடன் கூடிய அரச சார்பற்ற நிறுவனங்களுக்குமிடையே ஒரு பங்குடமையை ஆசிரிய உள்ளகப் பயிற்சித்திட்டங்கள் அபிவிருத்தி செய்துள்ளன.

ஒத்துழைப்பினை விருத்தி செய்வதற்கான இன்னொரு வழி, இலங்கையில் "பாடசாலைக் குடும்பம்" என்ற எண்ணக்கருவாகும். இவ் எண்ணக்கருத்தின் படி, ஒன்றுக்கொன்று அருகருகேயமைந்துள்ள சில பாடசாலைகள் (3-5), பாடசாலைகளின் ஒரு குடும்பமாக ஒழுங்கமைக்கப்படும். இங்கு அதிபர்களுள் ஒருவர் தலைவராக இனங்காணப்படுவார். ஆரம்பப்பாடசாலைகளின் ஆசிரியர்கள் மற்றும் அதிபர்களுக்கான வாய்ப்புகளை வழங்குவதன் மூலம் கலந்துரை யாடலுக்கான ஒரு மேடையை அமைத்து அனுபவங்களைக் பகிர்ந்து கொள்வதற்கு தரமான உத்தரவாதமாக இக்குடும்பம் பயன்படுகின்றது. (இலங்கை நாட்டு அறிக்கை, 2000)

## பால்ரீதியிலான சமநிலை

பெண்பிள்ளைகள் பாடசாலையில் சேர்ந்து கொள்வதை அதிகரிப்பதற்கான ஒரு வழி ஆசிரியைகளை ஆட்சேர்த்துக் கொள்வதாகும். பல நாடுகளில் ஆசிரியத் தொழிலுக்கு அதிகளவில் பெண்களை ஆட்சேர்த்துக் கொள்வதற்கான தேவை நன்கு இனங்காணப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதாரணமாக பங்களாதேஷில்,(2000), கீழ் வகுப்புகளுக்கு கற்பிப்பதற்கு ஆசிரியைகள் மிகவும் உகந்தவர்களெனக் கருதப்படுகிறது. ஆனால் நாட்டு அறிக்கையின் படி, ஆசிரியைகள் வழமையாக தமது சொந்தக் குடும்பத்தினருடன் வாழவே விரும்பகின்றனர். தொலைவிடங்களுக்கு சென்று பணியாற்ற இவர்கள் விரும்புவதில்லை. இந்தியாவில் ஆசிரியைகளுடன் ஒப்பிடும் போது, ஆசிரியர்கள் (ஆண்) உயர்வான கல்வித் தகைமைகளைக் கொண்டுள்ளனர்.நாட்டு அறிக்கையின் படி (2000), உயர்கல்வியை பெறுவதற்கு பெண்களுக்கு நேரம் கிடைப்பதில்லை. ஆண்களுக்கு அதிக நேரம் கிடைக்கையில், இவர்கள் வீட்டு வேலை மற்றும் குழந்தைப் பராமரிப்புப் பணிகளில் அதிக நேரத்தை செலவிட்டு வருகின்றனர்.

பாகிஸ்தானில் (2000), பெண்கல்விக்கு அதிக முன்னுரிமை வழங்கப்பட்ட போதும், வயதுவந்தோருக்கான கல்வியறிவு விகிதத்தில் பால்ரீதியிலான அதிகளவு வேறுபாடுகள் தொடர்ந்து நிலையாகவே உள்ளன. தகைமையும் அனுபவமுள்ள ஆசிரியைகளின் பற்றாக்குறை, மகளிர் பாடசாலைகளுக்கான அடிப்படைப் பௌதீக வசதிகள் கவனிக்கப்படாமை, பொருத்தமற்ற பாடவிதானம், பயனுறுதித் தன்மையற்ற கற்பித்தல் ஆகியவற்றால் பெண் பிள்ளைகள் பாடசாலைக்கு செல்வதற்கான தூண்டலை பெறுவதில்லை. இதனால் மகளிரிடையே கல்வியறிவின்மை காணப்படுகிறது. ஆசிரியைகளை உள்ளூரில் ஆடசேர்த்து, அவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு அரசு முயன்று வருகின்றது.

பங்களாதேஷ், நேபாளம் போன்ற சில நாடுகள் தகைமையுள்ள ஆசிரியைகளைப் பெற்றுக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றன. நேபாளத்தில், ஆசிரியைகளின் விகிதாசாரத்தில் அதிகரிப்பானது, கோட்டாக்களின் (quotas) உதவியுடன் 20% சதவீதத்திலிருந்து 30% சதவீதமாக உயருமென நம்பப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வொரு ஆரம்பப்பாடசாலைக்கும் நேபாள அறிக்கையின் படி ஓர் ஆசிரியையாவது நியமிக்கப்படுவார். பாகிஸ்தானில் (2000), ஆசிரியப் பயிற்சிக்கு விண்ணப்பிக்கும் பெண்களுக்கு வயதெல்லை மற்றும் தகைமைகள் தளர்த்தப்பட்டுள்ளன. புதிதாக ஆட்சேர்க்கப்பட்டு ஆசிரியர்களுள் 60% சதவீதமானவர்கள் பெண்களாக இருப்பர். இது பங்களாதேஷ் அரசின் இலக்காக உள்ளன. ஆசிரியைகளின் தேவை இருக்கும் வரை மகளிருக்காக தகைமைகள் தளர்த்தப்பட்டிருக்கும்.

புலமைப்பரிசில்களைப் பயன்படுத்துவது ஆசிரியைகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கான இன்னொரு தந்திரோபாயமாகும். முதலில் இடைநிலைக் கல்வியை மகளிர் பூர்த்தி செய்ய வேண்டும். மகளிரின் உயர் கல்வியை ஊக்குவிக்கும் ஒரு வழியாக, இடைநிலைப் பாடசாலைக்கு செல்லும் மகளிருக்கு கல்விக் கட்டண விலக்களிப்பினை பங்களாதேஷ் அரசு பயன்படுத்துகின்றது. (பங்களாதேஷ் நாட்டு அறிக்கை, 2000) நேபாளத்தில் இடைநிலைப் பாடசாலைக்குச் செல்லும் மகளிர் பட்டம் பெற்ற பின்பு குறிப்பிட்ட பகுதியில், குறிப்பிட்ட காலப் பகுதிக்கு செயலாற்றுவர் என்ற நிபந்தனையின் பேரில் புலமைப்பரிசில்களைப் பெறுகின்றனர். வசதியற்ற சமூகத்து மகளிர் தமது சமூகத்தினுள் ஆசிரியைகளாக வருவதை இது ஊக்குவிப்பதாக இருக்கின்றது. ஆனால், ஆசிரியப் பயிற்சிக்கு அதிகளவு மகளிரை சேர்த்துக் கொள்வது மட்டும் போதுமானதன்று. ஆசிரியப் பயிற்சியின் பாடவிதானத்திலும், பாடநூல்களிலும் பால்ரீதியிலான வேறுபாடுகள் நீக்கப்பட வேண்டும்.

எல்லைச் சுவர்கள், மலசல கூடங்கள் மற்றும் நீர் வசதிபோன்ற அடிப்படை வசதிகளை வழங்குவதால் பாடசாலைகளுக்கு பெண்பிள்ளைகள் செல்லும் சாத்தியம் அதிகரிக்கப்படுகிறது. பாகிஸ்தானில், ஆசிரியைகளின் வேலைவாய்ப்பினை 70% சதவீதமாகவும், மகளிர் கல்லூரிகளை 60% சதவீதமாகவும் அதிகரிப்பதற்காகவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கல்விக்கான ஒதுக்கீடுகள்**

மொத்த தேசிய உற்பத்தியின் (GNP) ஒரு சதவீதம் என்ற வகையில் கல்விக்கான அரச செலவீனமும், கல்விக்கு அரசு செலவிடும் தொகையும் அட்டவணை 7 இல் காண்பிக்கப்பட்டுள்ளது. கல்விக்கான பாதீட்டினுள் உப துறைகளாக இச் செலவீனம் பங்கிடப்படவில்லை. உதாரணமாக பாகிஸ்தானின் (2000) அறிக்கையில், கல்வியறிவு மற்றும் ஆசிரியர் கல்விக்கான பாதீடு இன்னமும் மிகக்குறைவானதாகவேயுள்ளது. மாலைதீவில் (2000) கல்விக்கான செலவீனம், கல்வியின் அதிகரித்த தேவையை சமாளிக்கும் வகையில் உயர்ந்து செல்கின்றது. பாடசாலை செல்லும் வயதினரின் துரித அதிகரிப்பு மற்றும் இடை நிலைக்கல்விக்கு அதிகரித்த மாற்றம் ஆகியவற்றின் விளைவாக இச் செலவீனம் அதிகரித்துச் செல்கின்றது. இதே வேளை, அரசின் பாதீட்டு மூலகங்கள் மற்றும் தேவையான சமூகத்துறை உட்கட்டமைப்பு முதலீட்டுக்குமிடையேயுள்ள இடைவெளியை நிரப்புவதற்கான வெளிவாரி உதவி / வழங்குநர் நாடுகளின் ஆதரவுகள் வீழ்ச்சியடைவதை மாலைதீவில் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அறிக்கைகளில் உயர்வான எதிர்பார்ப்புகள் இருந்த போதும் பாதீட்டுத் தெரிவிப்புகள் இவற்றை எப்பொழுதும் பிரதிபலிப்பவையாக அமைவதில்லை.

**அட்டவணை 7**

கல்விக்கான தேசிய ஒதுக்கீடு

| நாடு | கல்விக்கு செலவழிக்கப்பட்ட GNP% | கல்விக்கான அரச செலவீனம் % |
|---|---|---|
| பங்களாதேஷ் | 2.5% | 15.7% |
| இந்தியா | 4.1% | 12.7% |
| நேபாளம் | 3.7% | 14.1% |
| மாலைதீவுகள் | - | - |
| பாகிஸ்தான் | 1.8% | 7.8% |
| இலங்கை | 3.1% | - |

மூலம் : மனித அபிவிருத்தி அறிக்கை- 2003



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாவருக்குமான கல்விச் செயற்பாட்டில் (EFA) ஆசிரியர்கள் அங்கீகரிக்கப்படுதல்.**

சீர்திருத்தங்கள் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு பேணத்தக்கவையாக இருக்கு வேண்டுமாயின், ஆசிரியர்கள் EFA செயற்பாட்டின் முக்கிய பங்காளிகளாக இனங்காணப்பட வேண்டிய தேவை உள்ளது.

டாக்கரில் (Dakar) கல்வி அபிவிருத்திக்கான தந்திரோபாயங்களை உருவாக்கி கண்காணிப்பதில் குடிமக்கள் சமூகத்தை ஈடுபடுத்தி பங்குபற்றச் செய்வதை உறுதிப்படுத்துவதற்கு நாடுகள் இணக்கம் தெரிவித்தன. (Dakar Framework for Action - 2000, article 8 iii). மேலும் தரமான கல்வியை வளர்ப்பதில் ஆசிரியர்கள் அத்தியாவசிய மாணவர்களெனவும், அவர்கள் உள்நாட்டிலும் சர்வதேசரீதியிலும் பங்குபற்ற வேண்டுமெனவும், அவர்களின் தொழில்வாழ்க்கை மற்றும் கற்பித்தற் சூழல்களைப் பாதிக்கின்ற தீர்மானங்களில் பங்குபற்ற வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. (Dakar Framework for action 2000, article 69).

இந்தியா, ஹைதரபாத்தில் நடைபெற்ற ஒரு EFA கருத்தரங்கு பற்றிய அறிக்கையில்; அரச மட்டத்திலுள்ள ஆசிரிய தொழிற்சங்கங்கள் (கர்நாடாகா மற்றும் ஆந்திரப் பிரதேசம்) டாக்கார் மாநாட்டில் நடைபெற்ற விடயங்கள் குறித்து அறியாதிருந்தார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டு அறிக்கைகளில் கல்விச் செயற்பாடுகளில் குடிமக்கள் சமூகத்தின் முக்கியத்துவம் குறித்து தெரிவிக்கப்பட்ட போதும், ஆசிரியர்கள் இச் செயற்பாட்டில் முக்கிய பங்காளிகளென அரசுகள் குறிப்பிடுவதில்லை. நேபாளம் இதற்கு ஒரு விதிவிலக்கு ஆகும்.

"நீண்டகாலத்துக்கு பேணத்தக்க தன்மையை உறுதிப் படுத்துவதற்கு சமூகப் பங்குபற்றுதலும், உடமையும் அத்தியாவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் பங்குதாரர்களுடன் கலந்தாலோசிக்கப் படக்கூடிய உறுதியான திட்டங்களை அரசு உருவாக்க எண்ணியுள்ளது."

சமூகத்தினை ஈடுபடுத்துவதற்காக கிராமிய கல்விச் செயற்குழுவொன்று நிறுவப்படுவதில் ஆசிரியர்கள் செயலூக்கத்துடன் சம்பந்தப்பட வேண்டுமென நேபாளநாட்டு அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளது.

## முடிவுக்குறிப்புகள்

ஆசிரியர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு நாடுகள் முயற்சிகளை மேற்கொண்ட போதும், சனத்தொகை வளர்ச்சியானது, அதிக சனத்தொகையுடைய சில நாடுகளில்; சர்வதேச ஆரம்பக் கல்வியின் கேள்விகளை நிறைவேற்றுவதற்கான சாத்தியங்களை குறைத்து வந்துள்ளது. துரிதமாக அதிகரித்து வருகின்ற இளம் வயதுச் சனத்தொகையானது மேலும் கூடுதலாக ஆசிரியர்களை ஆட்சேர்க்க வேண்டிய நிலையை ஏற்படுத்துவதாக உள்ளது. ஆசிரியருக்கும் மாணவருக்குமிடையேயுள்ள உயர்வான விகிதாசாரங்களும், பெரும்பாலான நாடுகளில் தகைமையற்ற ஆசிரியர்கள் பலர் காணப்படுவதும் இம் முயற்சிகள் தீவிரப்படுத்தப்படுவதன் தேவையை வெளிப்படுத்துபவையாக உள்ளன.

ஆபிரிக்க நாட்டு அறிக்கைகளுடன் ஒப்பிடுகையில் ஆசியாவின் அறிக்கைகளில் ஆசிரியர்களை ஆட்சேர்ப்பதற்கான தேவையானது குறைவாகவே வெளிப்படுத்தப்பட்டுள்ளது. இதற்கான காரணங்களை இவ் அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட விடயங்களை வைத்து இனங்காண்பது கடினமானதாக இருந்த போதும், ஆசிய நாடுகளில் ஆசிரியர்கள் குறைவான அந்தஸ்தை உடையவர்களாகவும் மாணவர்களின் பெறுபேறுகளில் அதிகளவு முக்கியம் வாய்ந்தவர்கள் அல்லவெனவும் ஊகிக்கக்கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசியத் தரவுகளை வித்தியாசமான கோணங்களிலிருந்து பகுப்பாய்வு செய்ய வேண்டியிருப்பதுடன், உள்நாட்டு சந்தர்ப்பத்தின்படி விளக்கப்படவேண்டியுமுள்ளது. தேசியரீதியாக, பெரும் வேறுபாடுகள் இப்பதுடன், சிறந்த கல்வியை பெறுவதற்கான நல்வாய்ப்புக்களை பெறுவதற்கு ஒருவர் நகரப்புற மாணவனாகவும், தனியார் பாடசாலைக்கு செல்பவராகவுமிருக்க வேண்டும். தனியார் பாடசாலைக்கும் அரச பாடசாலைக்குமிடையேயுள்ள பெரும் வேறுபாடுகள் காரணமாக, நீண்ட கால நோக்கில் பாரதூரமான விளைவுகள் ஏற்படமுடியும்.

அதிக செல்வந்தப் பெற்றோர்கள் தமது பிள்ளைகளை தனியார் பாடசாலைகளிற் சேர்ப்பார்களாயின் அவர்கள் அரச பாடசாலைகளுக்கு பணம் செலுத்த விரும்பாத ஆபத்துக்கள் உள்ளன. இது மேலும் சமனற்ற தன்மைகளை அதிகரிக்கச் செய்கின்றது. சமனற்ற ஒரு கல்வித் துறையானது, ஆண்களுக்கும் பெண்களுக்குமிடையிலும் வெவ்வேறு பிரதேசங்களுக்கிடையிலும் மேலும் சமனற்றதன்மைகளை ஏற்படுத்துகின்ற சாத்தியமும் உள்ளது.

குறைவான தரம் நீடிக்கும் வரையில், மாணவர்கள் அடிப்படைத் தேர்ச்சிகளற்று பாடசாலையை விட்டு வெளியேறுவர். பகுப்பாய்வுக்குட்பட்ட நாடுகளில் ஆசிரியக் கல்வியானது முன்னேற்றமடைந்து சில நாடுகளின் அபிலாசையானது உள்ளீட்டை விருத்தி செய்து, சிறுவர்களை அதிக மையமாகக் கொண்டு உள்ளூர்ச் சந்தர்ப்பங்களுக்கு பொருத்தமாக அமைகின்றது. ஆனால் ஆசிரியக் கல்வியை மேம்படுத்துவதற்கு உயர்வான அபிலாசையிருந்த போதும், மேலதிக பாதீட்டு ஒதுக்கீடுகள் அறிக்கைகளில் காணப்படவில்லை. அத்துடன், ஆரம்பக்கல்வியை கற்பிப்பதற்கு தேவையான ஆகக் குறைந்த உத்தியோகரீதியிலான தகைமைகள் நேபாளத்திலோ அல்லது இலங்கையிலோ காணப்படாதிருப்பது, ஆசிரியத் தொழிலானது குறைவான ஒர் அந்தஸ்தை கொண்டிருப்பதை எடுத்துக் காட்டுவதாக உள்ளது. ஆசிரியர்களின் வேலை நிலைமைகள் குறித்து அறிக்கைகளில் அதிகம் கூறப்படாதிருப்பது, ஆசிரியர்களின் குறைந்த அந்தஸ்தினை மேலும் வெளிப்படுத்துவதாக இருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகளவு ஆசிரியர்களை எவ்வாறு ஆட்சேர்த்து கல்வியின் தரத்தினை முன்னேற்றலாம் என்பதற்கான நீண்ட கால மற்றும் குறுங்காலத் தீர்வுகள், தந்திரோபாயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. ஆசிரியக் கல்வியை மேம்படுத்தல், ஆசிரியர்களாக மகளிர் வருவதை வசதிப்படுத்தல், இலங்கையிலுள்ள ஊக்குவிப்புப் பொதி, ஆசிரியர்களுக்கு அதிகாரமளித்து, பாடவிதானம் மற்றும் உபகரணங்களை அபிவிருத்தி செய்தல் ஆகியன நீண்ட காலத் தீர்வில் அடங்குகின்றன. இயலளவைக் கட்டியெழுப்புகின்ற முயற்சிகள் அவசியமானவையாக இருந்த போதும், அடுத்த சில வருடங்களுள் பெறுபெறுகளை வெளிப்படையாக அறிய முடியாதிருப்பதுதான் பிரச்சினையாக உள்ளது. ஆசிரியர்களை அதிக விளைவுத்திறனுடன் பயன்படுத்துதல், பல்தர வகுப்புகளை அறிமுகப்படுத்துதல், மற்றும் தகைமையற்ற ஆசிரியர்களைப் பயன்படுத்துதல் ஆகியன குறுங்காலத் தீர்வுகளாகவும் தந்திரோபாயங் களாகவுமுள்ளன. இது தரத்தினில் ஓர் எதிர்கணிய விளைவினை ஏற்படுத்தும். அத்துடன் இக் குறுங்கால தந்திரோபாயங்களுக்கான நீண்ட கால விளைவுபற்றி அறிக்கைகளில் பகுப்பாய்வுகள் இல்லாதுள்ளன.

ஆசிரியர்களின் செயலூக்கமுள்ள பங்களிப்பு மற்றும் பங்குடமையின்றி எந்தவொரு கல்விச் சீர்திருத்தமும் வெற்றிபெறுமெனக் கூறிவிட முடியாது. (Dakar framework for Action 2000 - article 69)

**கல்விச்செய்தி**

**க**ல்வி நிர்வாகமட்டங்களில் நிலவும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு வெளிப்படையான அறிவித்தல்கள் எதுவும் இன்றி இரகசியமாகவே பதவிகள் வழங்கப்படுவதாக தகுதியிருந்தும் விண்ணப்பிக்க முடியாத கல்வித்துறையைச் சேர்ந்த பணித்துறையில் விசனம் தெரிவித்துள்ளனர்.

*- யாழ் நிருபன் -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கல்வியியலாளன்" இதழில் இடம்பெறும் கட்டுரைகளுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்புடையவர்கள். இது கல்வியியல் வெளியீட்டு நிலையத்தினதோ அல்லது கல்வியியலாளன் இதழாசிரியரினதோ, வெளியீட்டுக் குழுவினரதோ கருத்தாக அமையாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



**பேராசான்**
**கலாநிதி க. சிவராமலிங்கம்பிள்ளை**

யாழ் இந்துவின் தலைவனாய் - நின்று
அறிவொளி காட்டி சீர்திருத்தி
சான்றோர்களை உருவாக்கி - சால்புறச் செய்து
கல்விப்புலம் உருவாக வழிகாட்டி

சிந்தும் குறுநகைகள் செழிப்புற வீசி
சிந்தை கலங்காது சிரத்தையோடு பேசி
கவின் பெறச்செய்து, வாழ்வு பெற ,வழிகாட்டி
வளம் பெற வைத்த வித்தகரே!

தமிழ்க் கல்விச் சமூகத்தின் வழிகாட்டியாகவும், முகாமையாளராகவும், ஆராய்ச்சியாளராகவும், இலக்கிய கலாநிதியாகவும், சமூகவியலாளராகவும், நண்பராகவும் கல்வியியலாளராகவும், நடைமுறையில் வாழ்ந்து காட்டிய பேராசான் எண்ணங்கள் கல்விப்புலத்தில் என்றும் நிலைபெற்று நிற்கும்.

- திரு.ப.கணேசலிங்கம் -

ISSN 1800 - 1378

KALVIYIYALLAN

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Sreeraam Printers, Kantharmadam, Jaffna 0777 064377